
சந்திரவதனா
4
எஸ்.பாலசுப்பிரமணியன்

# சந்திரவதனா

(நான்காம் பாகம்)

எஸ். பாலசுப்பிரமணியன்

அருந்ததி நிலையம்
19, கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்,
சென்னை - 600 017.

# சந்திரவதனா

## (நான்காம் பாகம்)



## 36

சொக்கநாதன் இளவரசி சந்திரவதனாவை அவசரமாக ஏறிட்டுப் பார்த்துச் சொன்னான்.

''மதுரை மகாலைப் பார்த்ததும் அச்சுத ரகுநாதம்மா என்ன சொன்னாள்? திரும்பவும் ஒரு முறை சொல்.''

''அரண்மனையா இது? எங்கள் வீட்டு ஜலதாரைக்குக் கூட இது இணையாகாது என்றாளாம்.''

''மதுரை அரண்மனையை நீ பார்த்திருக்கிறாயா?''

''இல்லை. ஆனால் பார்த்தவர்கள் என்னிடம் வியந்து சொல்லி இருக்கிறார்கள். மிகப் பிரமாண்டமாக இருக்கும் என்று. தஞ்சை அரண்மனையைவிடப் பெரியது என்றுகூடச் சொன்னார்கள்.''

''தஞ்சை மட்டுமல்ல சந்திரா. தமிழகம் முழுவதும் தேடினால்கூட அதற்கு ஈடான அரண்மனையை நீ பார்க்க முடியாது. அதன் கலையழகையும், பிரமாண்டமாக எழுந்து நிற்கும் தோற்றத்தையும் பார்க்கும் பொழுது இதனைக் கட்டி முடிப்பதற்காக எவ்வளவு கோடி பணம் செலவாகி இருக்கும்? எத்தனை வேலையாட்கள் இதற்காகப் பாடுபட்டிருப்பார்கள்? கட்டி முடிக்க எத்தனை ஆண்

டுகள் ஆகி இருக்கும் என்ற பிரமிப்பை நமக்கு ஏற்படுத்தும்.

இப்பொழுது அதெல்லாம் எதற்கு...''

''குறுக்கே பேசாதே! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். உண்மையிலேயே உங்கள் அரண்மனையைவிடப் பெரிய அரண்மனையை யாருக்காகத் திருமலை நாயக்கன் கட்டினான்? அச்சுத ரகுநாதம்மாவிற்காக! அவள் மீது வைத்திருந்த அளப்பரிய காதலுக்காக இல்லையா. சொல் சந்திரா சொல்.''

''இ... இருக்கலாம்.''

''இருக்கலாம் என்ன இருக்கலாம். அதுதான் உண்மை. அந்த மகாலைப் பார்த்தால் திருமலை மன்னனின் காதலின் பிரமாண்டம் தெரியும். ஆனால், அச்சுத ரகுநாதம்மா அதனைப் பார்த்துவிட்டு என்னச் சொன்னாள்? உங்கள் வீட்டு ஜலதாரைக்கு சாக்கடைக்குக்கூட சமமாகாது என்று! எவ்வளவு கேவலமான வார்த்தைகள்! காதலை அடியோடு அழிப்பது மட்டும் இன்றி, முகத்தில் காறி உமிழ்ந்ததுபோன்ற அவமானமான வார்த்தைகள் இல்லையா? இதைக் கேட்டால் யாருக்குத்தான் கோபம் வராது?''

''அதற்காகப் பெண் என்று பாராமல் குத்திக் கொலையா செய்வார்கள்? இரக்கமற்ற அரக்கர்களுக்குத் தான் இப்படி ஓர் ஈனச் செயல்புரிய மனம் வரும்.''

''உன் அப்பனுக்கு இருக்கும் ஈனப்புத்திதானே உனக்கும் இருக்கிறது.''

''என்ன சொன்னீர்கள்?'' என்றாள் கோபமாக.

''உன் அப்பன் விஜயராகவ நாயக்கனைப்போல் ஈனப் புத்திக் கொண்டவன் உலகில் யாரும் இல்லை. அவன் மகளான உனக்கும் அதே ஈனப்புத்தித்தானே இருக்கிறது'' என்றான் இளக்காரமாக.

இதைக் கேட்டவுடன் இளவரசி அளவுக்கு மீறிய ஆத்திரத்துடன் அவன் கையை உதறியவாறு எழுந்து நின் றாள்.

''வார்த்தையை அடக்கிப் பேசுங்கள். வேறு யாராவது இப்படிப் பேசி இருந்தால் அவர்கள் நாக்கைத் துண்டித்து இருப்பேன். இங்கிருந்து போய்விடுங்கள். என் கண்ணில் விழிக்காதீர்கள்'' என்று ஆத்திரத்துடன் கத்தியவாறு நகர முற்பட்டாள்.

சொக்கநாதன் அவளது கையைப் பற்றி இழுத்து, மறுபடியும் தன்னருகே உட்கார வைத்தான்.

''நான் வேண்டும் என்றேதான் இந்த வார்த்தைகளைக் கூறினேன் சந்திரா! மிகச் சாதாரணமான இந்த வார்த்தை களே உன்னைக் கோபம் அடையச் செய்துவிட்டன. எனது நாக்கைத் துண்டிக்கும் அளவுக்கு உன் ஆத்திரம் எல்லை கடந்திருக்கும் இன்னும் நான் சற்று அதிகம் பேசி இருந் தால் இல்லையா?''

இளவரசி பேசாமல் இருந்தாள். சொக்கநாதன் சம்பந் தம் இல்லாமல் பேசிக் கொண்டிருப்பது அடியோடு அவ ளுக்குப் பிடிக்கவில்லை. எரிச்சலாகவும் இருந்தது.

''பெண்ணான உனக்கே ஓர் ஆணின் மீது இவ்வளவு கோபம் வந்தது என்றால், ஒரு பெண்ணுக்காக, அவள் காதலுக்காக, அவள் கண்டுகளித்துப் பாராட்ட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகக் கஷ்டப்பட்டு எழுப்பிய ஓர் அரண்மனையைத் தங்கள் வீட்டுச் சாக்கடைக்குக்கூட ஈடா காது என்று அந்தப் பெண் குதர்க்கமாக கேவலமாகச் சொன்னால், எந்த ஆண்மகன்தான் பொறுத்துக் கொள் வான் சொல்?''

சொக்கநாதன் சொற்களில் ஊடுருவி இருந்த உண்மை இளவரசியைத் தடுமாற வைத்தன.

''அச்சுத ரகுநாதம்மாவின் இந்த அக்கினி வார்த்தைகள் அன்றுதான் முதன் முறையாகத் திருமலை நாயக்கன் மீது வீசப்பட்டிருப்பதாக நினைக்காதே சந்திரா. அவள் திருமணமானவுடன் தாய் வீடான தஞ்சை அரண்மனையில் இருந்து மதுரை வந்த நாள் முதலாக மதுரை மன்னனை, தன் கணவனைக் கொஞ்சமும் மதிக்காமல் தாய் வீட்டுப் பெருமையைப் பேசிப் பேசித் தலைகுனிய வைத்திருக்கிறாள். அப்படி இருந்தும் திருமலை மன்னன் உன் தாத்தா ரகுநாத நாயக்கனின் பெருந்தன்மைக்காகவும், அச்சுத ரகுநாதம்மாக்காகவும், பல ஆண்டுகளாக அவளது இளக்காரமான பேச்சுக்களைப் பொறுத்துப் பொறுத்து வந்திருக்கிறான். கடைசியில் பல பேர் மத்தியில் தான் கட்டிய மகாலைச் சாக்கடையைவிட மோசமானது என்று கேவலப்படுத்தியது அவனது தன்மானத்தையும் அடியோடு சிதைத்து விட்டதால்தான், ஆத்திரத்தில் அவளை அந்த இடத்திலேயே குத்திக் கொன்றுவிட்டானாம். அதற்குப் பிறகு கூட அந்தச் செயலை நினைத்துப் பலமுறை வருந்தினானாம்.''

''என்னவோ பக்கத்தில் இருந்து பார்த்தது போலச் சொல்கிறீர்களே?''

''பக்கத்தில் இருந்து பார்த்தவர்கள் பலமுறை சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''அப்படியானால் மதுரையைச் சேர்ந்தவரா நீங்கள்? உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் யார்?'' சற்று பயத்துடன் கேட்டாள்.

''அந்த விஷயத்திற்கு அப்புறமாக வருகிறேன். இப்பொழுது நான் சொன்னதை நன்றாகக் கேட்டாய் அல்லவா? இந்தச் செயலுக்கு யார் பொறுப்பு? திருமலை நாயக்கனா இல்லை திமிர் பிடித்த அச்சுத ரகுநாதம்மாவா? சொல் சந்திரா.''

''ஒருவகையில் பார்த்தால் இருவர் மீதும் தப்புத்தான் இருக்கிறது. அச்சுத ரகுநாதம்மாவும் அப்படிச் சொல்லி இருக்கக் கூடாது. திருமலை நாயக்கனும் அதற்காக அவளைக் கொலை செய்யும் அளவுக்குப் போயிருக்கக் கூடாது. அதைவிட அவளுடன் வாழமாட்டேன் என்று தஞ்சைக்கே திருப்பி அனுப்பி இருக்கலாம்.''

''ஆத்திரம்! அது மனிதனை எந்த நேரத்தில் எப்படி இயக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது. சற்று நேரத்திற்கு முன் நீயே எப்படி நடந்து கொண்டாய் சொல்.''

சந்திரவதனா பேசாமல் தலைகுனிந்தாள்.

''நீ சொல்வதுபோல் அவளைத் தஞ்சைக்கு வாழா வெட்டியாக திருப்பி அனுப்பாததற்குக் காரணம், திருமலை மன்னன் அவள்மீது வைத்திருந்த காதல். தாய்வீட்டுப் பெருமையை எவ்வளவு காலம் பேசுவாள். திருந்தி விடுவாள். அவளோடு இன்பமாய் வாழலாம் என்று கனவு கண்டிருந்தார். அது கருகிய பிறகு அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அத்தகைய காதல் உள்ளம் கொண்டவரைக் கொலைகாரனாக்கியது அந்தப் பெண்ணின் இளக்காரமான வார்த்தைகள்தான் என்பதை நீங்கள் ஏன் நினைத்துப் பார்க்க மாட்டேன் என்கிறீர்கள்?''

''சரி. அதை விடுங்கள். நம் விஷயத்திற்கு வாருங்கள்.''

''அதற்குத்தான் வந்திருக்கிறேன். மதுரை மீது பகைக்கு இரண்டே காரணங்கள்தானே கூறினாய்.''

''பச்! மறுபடியும் அதற்கே போகிறீர்களே?''

''ஒன்று வேலைக்கார பரம்பரை என்பது. அதனை உனது தாத்தா ரகுநாத நாயக்கன் காலத்திலேயே அந்த எண்ணம் மாறிவிட்டது. ஒருவருக்கொருவர் மணம் முடித்

துக் கொள்ளும் அளவுக்கு அவர் காலத்திலேயே நெருங்கி விட்டீர்கள். அடுத்தது அச்சுத ரகுநாதம்மாவின் கொலை. இதில் இரண்டு பக்கங்களிலும் தவறு இருக்கிறது என்று நீயே ஒத்துக் கொள்கிறாய். இப்படி இருக்கும்பொழுது இன்னும் எதற்கு மதுரை அரசிடம் உங்களுக்கு இவ்வளவு பகை?''

''போதும் திரும்பத் திரும்ப அதைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். மதுரை மடையர்களைப் பற்றிப் பேசுவதற்காக நான் இங்கு வரவில்லை. உங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காகத்தான் வந்தேன்.''

''பொறு சந்திரா.''

''என் பொறுமையை மிகவும் சோதிக்கிறீர்கள்! இனி யாவது சொல்லுங்கள் உங்களைப் பற்றி!''

''இனி ஒரே ஒரு கேள்வி?''

''அந்த மதுரை மடையனைப் பற்றித்தானே! இனி எதுவும் என்னிடம் கேட்காதீர்கள்! நீங்கள் யாரென்று சொல்லுங்கள்.''

''பொறுமையை இழக்காமல் இந்த ஒரே ஒரு கேள் விக்கு மட்டும் பதில் சொல் போதும். அதன்பிறகு என் னைப் பற்றிய முழு விவரங்களையும் கூறுகிறேன்.''

''சரி. கேளுங்கள்'' என்றாள் சந்திரவதனா. கண்களை மூடி, நீண்ட பெருமூச்சு ஒன்றை எரிச்சலுடன் விட்டபடி.

''மதுரை அரசர்கள் மீது நீங்கள் கொண்ட பகைக்கு நீ சொன்ன இந்த இரண்டு காரணங்களுமே தவறானவை என்று ஓரளவு உனக்குப் புரிந்துவிட்டது என்று நினைக்கி றேன்.''

''இல்லை. அப்படி ஒரு தோற்றத்தை நீங்கள் உண்டு பண்ணிவிட்டீர்கள்.''

''அப்படியானால் நீ அதற்கு மறுப்புக்கூறித் தகுந்த காரணம் சொல். நான் ஏற்றுக் கொள்கிறேன்.''

''அந்த அளவுக்கு எனக்கு சிந்திக்கத் தெரிய வில்லை.''

''அப்படியானால் இப்போதைக்கு நான் சொல்லியதை நீ ஏற்றுக் கொள்கிறாய் இல்லையா? சொல் சந்திரா ஏன் தயங்குகிறாய் சரிதானே?''

''சரி'' என்றாள் எரிச்சலுடன்.

''அப்படி இருக்கும்பொழுது மதுரையில் தற்போது மன்னனாக இருக்கும் சொக்கநாத நாயக்கன் என்ன தவறு செய்தான்? என்ன அநீதி உங்களுக்கு இழைத்தான்? அவன் பெயரைக் கேட்டாலே வெறுக்கும் அளவுக்கு அவன் உனக்கு அப்படி என்ன கொடுமை செய்துவிட்டான்?''

''ஒன்றும் செய்யாவிட்டாலும் அந்தப் பரம்பரையில் வந்தவன் என்பதற்காக அவனை வெறுக்கிறேன்.''

''அவனை நீ பார்த்திருக்கிறாயா?''

''இல்லை. அவனைப் பார்ப்பதையே வெறுக் கிறேன்.''

''வேடிக்கையாக இருக்கிறது உன் பேச்சு! அவன் உனக்கோ உங்கள் குடும்பத்திற்கோ ஊசிமுனை அளவுகூட அநீதி இழைத்ததில்லை. அவனை நீ பார்த்ததுகூட இல்லை. ஆனால் அவனை நீ வெறுக்கிறாய்! அவன் எப்படிப்பட்டவன் என்றுகூடத் தெரியாது. அப்படி இருந் தும் அவனை வெறுக்கிறாய்! சிந்தனா சக்தி இல்லாத, சிற்றில் கட்டி விளையாடும் சிறுமியின் பேச்சைப்போல உள்ளது நீ சொல்வது.''

சந்திரவதனா கோபத்துடன் அவனை முறைத்துப் பார்த்தாள்.

''நீங்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லுங்கள். அவன் எங்கள் குடும்பப் பகைவன். அவனை வெறுப்ப தற்கு எனக்குக் காரணங்கள் சொல்லத் தெரியாமல் இருக்க லாம். இருந்தாலும் அவனை நான் வெறுக்கிறேன்.''

''உனக்கு வேடிக்கையாக இல்லை. நீ சொல்வது?''

''இல்லை, இல்லை, இல்லவே இல்லை. அந்த மதுரைமடையன் மக்குநாதனை நான் அடியோடு வெறுக்கிறேன்'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்ன சந்திரவதனா, திடீரென்று அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''எங்கள் இனப் பகைவனுக்காக இவ்வளவு தூரம் பரிந்து பேசுகிறீர்களே, நீங்கள் யார்? மதுரையைச் சேர்ந்தவரா, மதுரை மன்னனிடம் வேலை பாப்பவரா இல்லை, மதுரை அரசனுக்கு உறவா? சொல்லுங்கள் யார் நீங்கள்?''

''நான் மதுரையைச் சேர்ந்தவன்தான் சந்திரா. அதுமட்டுமல்ல, தகுந்த காரணமின்றி உன் மனதிற்குள் இவ்வளவு வெறுப்புக்கு ஆளாகி இருக்கும் மதுரை மடையன் மக்குநாதனாகிய, அதே சொக்கநாத நாயக்கன் நானேதான்.''

''ஆ'' என்று திகலுடன் அலறிய சந்திரவதனா அவனிடமிருந்து ஓர் அடி விலகி உட்கார்ந்து நெஞ்சில் கைவைத்தபடி சிலையெனச் சில விநாடிகள் அதிர்ச்சியில் ஆழ்ந்திருந்தாள்.

பிறகு சற்றுச் சுதாரித்து அவனை மீண்டும் ஏறிட்டுப் பார்த்தாள். அவள் மூளைக்குள் என்னென்னவோ சிந்தனைகள் ஊடாடின.

மறுவிநாடி கலகல என்று சிரித்தபடி, சொக்கநாதன் நெஞ்சில் விளையாட்டாகக் குத்தியவாறு சொன்னாள்.

''உங்கள் விளையாட்டிற்கு ஓர் எல்லையே இல்லையா? என்னைப் பயமுறுத்துவதற்காக, இப்படியா பொய் சொல்வது? ஒரு நிமிடம் என் இதயமே நின்றுவிட்டது போல் இருந்தது.''

''இல்லை சந்திரா. நான் சொன்னது முழுக்க முழுக்க உண்மை. மதுரை மன்னனாகிய சொக்கநாத நாயக்கன் நான்தான். என்மீது ஆணை, உன்மீது ஆணை, என் தாய்

நான்தான். என்மீது ஆணை, உன்மீது ஆணை, என் தாய் மீது ஆணை. இதோ கர்ப்பக்கிருகத்தில் சாட்சியாக இருக்கும் துர்க்கை அம்மன் மீது சத்தியமாகக் கூறுகிறேன் நான் சொன்னது அத்தனையும் உண்மை.''

இதைக் கேட்டதும் இளவரசிக்கு மறுபடியும் பீதி எழ, தன்னை மறந்து அவனிடமிருந்து விலகி, எழுந்து நின்றாள். கண்களில் நீர் பெருகத் தொடங்கியது.

''ஏமாந்து விட்டேனே, ஏமாந்து விட்டேனே...'' என்று அவள் வாய் முனகத் தொடங்கியது.

''சந்திரா, உன்னை ஏமாற்ற நான் நினைக்கவில்லை. உன்னை வஞ்சிக்கவும் நான் எண்ணவில்லை. உன்னைப் பார்த்த நாளில் இருந்தே உன்மீதுள்ள காதலில் தவிக்கிறேன். உனக்காக எந்த எதிர்ப்பு வந்தாலும் நான் சமாளிக்கிறேன் கண்ணே! உன்னைப் பிரிந்து என்னால் உயிர் வாழ முடியாது சந்திரா'' என்றவாறு அவள் கையைப் பிடித்தான் சொக்கநாதன்.

மறுகணம் கோபத்துடன் அதை உதறிய இளவரசி ''தொடாதீர்கள். உங்களை நான் வெறுக்கிறேன். இன்னும் அதிகமாக வெறுக்கிறேன்'' என்றவாறு வேகமாக வெளியேறினாள் அந்த இடத்தைவிட்டு.

சொக்கநாதன் அவளைப் பின்தொடர எண்ணிய பொழுது வாசற்பக்கம் இருந்து தளபதி ரங்கப்ப நாயக்கன் கோயிலுக்குள் நுழைந்து கொண்டிருப்பது தெரிந்தது.

இளவரசி அவசரமாக தளபதியை நெருங்கி, கர்ப்பக்கிருகத்தின் பக்கம் கை நீட்டிப் பேசுவது தெரிந்தது.

இதனைக் கர்ப்பக்கிருகத்திற்குள் அம்மன் சிலைக்குப் பின்புறம் ஒளிந்து பார்த்தவாறு உட்கார்ந்திருந்த வெங்கட கிருஷ்ணனும், பார்த்துத் தனது உடைவாளின் மீது கை வைத்தான்.

# 37



தளபதி ரங்கப்ப நாயக்கன் தற்செயலாகத்தான் துர்க்கை அம்மன் கோயிலருகே வந்து கொண்டிருந்தான்.

தலைநகரில் மன்னன் தங்காத நாட்களில் தஞ்சை நகரின் காவல் பொறுப்பு தளபதிக்கு அதிகம் என்பது மட்டுமின்றி சமீபத்தில் ஒரு திருடனால் ஏற்பட்ட தலை குனிவான சம்பவத்திற்குப் பிறகு மன்னனிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற அக்கறையினாலும் ரங்கப்ப நாயக்கன் தலைநகரைச் சுற்றி, அந்நியர் நடமாட்டம் இருக்கிறதா என்ற நோக்கத்துடன் வந்து கொண்டு இருந்தான்.

அவனுடன் வலிமையான வீரர்கள் பத்துப்பேர் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

துர்க்கை அம்மன் கோயிலுக்கருகே வந்தபொழுது தஞ்சை அரண்மனையைச் சேர்ந்த பல்லக்கு ஒன்று வாசலில் வைக்கப்பட்டு இருப்பதையும், வீரர்கள் நால்வர் காவல் புரிவதையும் பார்த்து பல்லக்கில் வந்தது யார் என்று அறியும் பொருட்டு, தனது வீரர்கள் பின் தொடர கோயில் வாசலுக்கு விரைந்து வந்தான்.

தளபதியைப் பார்த்ததும் பல்லக்குத் தூக்கிகள் வேக மாக எழுந்து நிற்க, காவல் வீரர்கள் ஓடோடி வந்தனர்.

அவர்களிடம் விசாரித்தபொழுது இளவரசி சந்திரவ தனா தனியாக அங்கு வந்திருப்பது தெரிய வந்தது. அவளது காவலில் தனக்கு அக்கறை இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்கு இதுவே நல்ல தருணம் என்று நினைத்தான். தன்னுடன் வந்த வீரர்களை வாசலில் நிற்க வைத்துவிட்டு, ரங்கப்ப நாயக்கன் மட்டும் கோயிலுக்குள் நுழைந்தான்.

முன் மண்டபத்தை கடந்து சந்நிதி அருகே அவன் காலடி வைத்த அதே சமயம்தான் இளவரசி சந்திரவதனா, சொக்கநாதனைப் பார்த்து 'உங்களை இன்னும் அதிகமாக வெறுக்கிறேன்' என்று சொல்லிவிட்டு சந்நிதியைக் கடக்க முயலும் நோக்கத்தில் வேகமாக வந்து கொண்டிருந்தாள்.

அவள் முற்றிலும் எதிர்பாராத விதமாக தளபதி அந்த இடத்தில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் திடுக் கிட்டாள். அதே சமயத்தில் இளவரசியைத் தடுத்து நிறுத்தி, அவளைச் சமாதானம் செய்யும் நோக்கத்தில் அவளைப் பின்தொடர முயன்ற, அர்ச்சகர் வேடத்தில் இருந்த சொக்கநாதனும் தளபதியைப் பார்த்தவுடன் திடுக் கிட்டான்.

பின்னர் அவசரமாகக் கர்ப்பக்கிருகத்திற்குள் நுழைந்து கொண்டு அம்மனை அலங்காரம் பண்ணியவாறு ஓரக்கண்ணால் வெளியே நடப்பதைப் பார்த்தவாறு இருந் தான்.

அம்மன் சிலைக்கு பின்புறம் பதுங்கியவாறு இருந்த அவன் நண்பன் வெங்கடகிருஷ்ணன் அம்மனின் கைக ளுக்கு இடையே தெரிந்த இடைவெளி வழியாக, தளபதி யின் நடவடிக்கைகளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந் தான்.

தளபதி ரங்கப்ப நாயக்கன் இளவரசியைப் பார்த்தச் சகஜமாகச் சிரித்தபடி ''என்ன மருமகளே, கோயிலுக்குத் தனியாக சாமி கும்பிட வந்தாயா?'' என்றான்.

வேறு சமயமாக இருந்திருந்தால் அவனிடம் எரிந்து விழுந்திருப்பாள். அப்போதுள்ள மனநிலைமையில் அவள் பதில் ஏதும் சொல்ல முடியாமல் தலையை மட்டும் தான் ஆட்ட முடிந்தது.

''மன்னர் ஊரில் இல்லாததால், நகரின் எல்லைப்புறக் காவலைக் கண்காணிப்பதற்காக இந்தப் பக்கம் வந்தேன். உன் சிவிகையைப் பார்த்ததும் ஓடோடி வந்தேன். இன்ன மும் பூஜை முடியவில்லையா? உள்ளே புழுக்கமாக இருக் கிறது என்று வெளியே வந்துவிட்டாயா? கண்கள்கூடக் கலங்கி இருக்கிறதே!'' என்றான்.

அப்போதுதான் தன் கண்களில் வழிந்த நீரைக்கூடத் துடைக்காமல் வந்ததை அறிந்த இளவரசி, அவசர அவசர மாகக் கண்களைத் தன் முந்தானையால் துடைத்தாள்.

''அர்ச்சகர் இருக்கிறாரா, இல்லையா?'' என்று எகத் தாளமாகக் கேட்டான்.

''இருக்கிறார். அதோ உள்ளே அலங்காரம் பண்ணிக் கொண்டு இருக்கிறார் பாருங்கள்'' என்று மெதுவான குரலில் கூறியவாறு கையை மட்டும் சந்நிதியை நோக்கி நீட்டிக் காட்டினாள்.

இவர்கள் இருவரும் பேசிய வார்த்தைகள் கர்ப்பக்கிரு கத்தில் இருந்த சொக்கநாதனுக்கும், வெங்கடகிருஷ்ண னுக்கும் தெளிவாகக் கேட்காவிட்டாலும், இளவரசி இவர் கள் இருக்கும் இடம் நோக்கித் தளபதியிடம் சுட்டிக்காட்டு வதை மட்டும் பார்க்க முடிந்தது.

சொக்கநாதன் யார் என்று தெரிந்ததும் இளவரசி அளவுக்கு மீறிய வெறுப்பில் தனது தளபதியிடம் அவ

னைப் பிடிப்பதற்குத்தான் சொல்கிறாள் என்ற தவறான நினைப்பிற்கு இருவரும் வந்தனர்.

தளபதியும் அவனைச் சார்ந்த வீரர்களும் அவனைப் பிடிக்க ஓடி வந்தால் எப்படி சமாளிப்பது என்ற சிந்தனை அவனுக்குள் ஓட ஆரம்பித்தது. அவன் நண்பன் வெங்கட கிருஷ்ணனோ, தன் உடைவாளின் மீது கை வைத்தவாறு தயாராகக் காத்திருந்தான்.

இவை எதையுமே அறியாத தளபதி ரங்கப்ப நாயக்கன் ''வா மருமகளே, உள்ளே செல்வோம். அம்மனின் அலங்காரம் முடிந்துவிட்டது போல் தோன்றுகிறது'' என்றான்.

இளவரசிக்கு உள்ளே செல்லவும் பிடிக்கவில்லை. அர்ச்சகர் வேடத்தில் இருக்கும் சொக்கநாதனைப் பார்ப்பதற்கே அவளுக்கு வெறுப்பாக இருந்தது. ஏமாந்து விட்டோமே, ஏமாந்து விட்டோமே என்று அவள் நெஞ்சு குமுறியது. மறுபடியும் அவன் முகத்தில் விழிப்பதற்கே வெறுப்பும், வேதனையும் சேர்ந்து எழுந்தது.

கோயிலை விட்டு வெளியேறவும் பயமாக இருந்தது. சாமி கும்பிட வந்துவிட்டு, பூஜை முடியாமல் நடுவில் கிளம்பிச் சென்றால் தளபதிக்குச் சந்தேகம் வரும். என்ன செய்வது என்று புரியாமல் சற்று நேரம் குழம்பினாள்.

''என்ன மருமகளே யோசிக்கிறாய்? சாமி கும்பிட வந்துவிட்ட பிறகு சந்நிதிக்குள் புழுக்கமாக இருக்கிறதென்றோ, கண்கள் கரிக்கிறது என்றோ கலங்கி சுகம் தேட நினைக்கக் கூடாது. இதெல்லாம் அம்மன் நமக்கு அளிக்கும் சோதனைதான். அதனால் மனதை திடப்படுத்திக் கொண்டு உள்ளே வா'' என்றான் தளபதி.

''ஆம்... அம்மன் சோதனைதான் இது...'' என்று தன்னை அறியாமல் புலம்பியவாறு கோயிலுக்குள் திரும்பவும் நடக்க ரங்கப்ப நாயக்கன் அவளைப் பின் தொடர்ந்தான்.

ஒன்றும் புரியாதவாறு நின்று கொண்டிருந்த சொக்க நாதனைப் பார்த்துச் சிரித்தவாறு பேசத் தொடங்கினான் தளபதி.

''என்ன அர்ச்சகரே, அம்மனின் அலங்காரம் முடிந்து விட்டதா? பாவம் இளவரசி! சிறுகுழந்தை பாருங்கள்! இங்கு இருக்கும் புழுக்கத்தைத் தாங்க முடியாதவளாய்க் கண்கள் கலங்கி வெளியே வந்துவிட்டாள்.''

இதைக் கேட்ட பிறகுதான் சொக்கநாதனுக்கும், வெங் கடகிருஷ்ணனுக்கும் நிம்மதியாக இருந்தது.

''அலங்காரம் முடிந்துவிட்டதா, இல்லை இன்னும் அதிக நேரம் ஆகுமா?'' என்று தளபதி மறுபடியும் கேட்டான்.

''இதோ முடிந்துவிட்டது தளபதியாரே! எதிர்பாராமல் வந்த தங்கள் வரவை எண்ணிச் சற்றுப் பதறிவிட்டேன். அதனால்தான் பதிலளிக்கத் தாமதமாகிவிட்டது. மன்னிக்க வும்'' என்று பணிவாகச் சொன்னான் சொக்கநாதன்.

'என்னைக் கண்டால் இந்த நாட்டு மக்கள் எல்லோருக் கும் பயம்தான். பார்த்தாயா இளவரசி' என்பது மாதிரிப் பெருமையாய் சந்திரவதனாவைப் பார்த்துவிட்டு, ''பூஜையை ஆரம்பித்து விடலாமா?'' என்றான்.

''இதோ இளவரசியார் கொண்டு வந்த மாலை என் கையில் இருக்கிறது. அதனை அம்மன் கழுத்தில் போட்டு முடித்தவுடன் பூஜையை ஆரம்பிக்க வேண்டியதுதான்.''

சொக்கநாதன் சொன்ன வார்த்தைகளின் உள்ளர்த்தம் அவளுக்குப் புரிந்தாலும், அவள் தலை குனிந்தவாறே இருந்தாள். அவன் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பதற்கே அவளுக்கு வெறுப்பாக இருந்தது. அந்த இடத்தைவிட்டுச் சீக்கிரம் சென்றுவிட மனம் பரபரத்தது.

·சொக்கநாதன் அம்மன் கழுத்தில் மாலையை அணி வித்துவிட்டு பூஜையை ஆரம்பித்தான்.

இளவரசியும், தளபதியும் கண்களை மூடிக் கைக ளைக் கூப்பிய நிலையில் இருந்தாலும் இருவர் மனதிலும் அம்மனைப் பற்றிய நினைவுகளை மறந்து, வேறு எண் ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

இத்தகைய அருமையான வாய்ப்பை அச்சுதப்பன் தவற விட்டுவிட்டானே. மன்னரோ ஊரில் இல்லாத நேரம். இளவரசியோ தனிமையில் சாமி கும்பிட வந்திருக் கிறாள். இப்படிப்பட்ட சமயத்தில் காவலுக்கு வரும் சாக்கில் இளவரசியுடன் பேசிப் பழகி, அவள் மனதைத் தன் பக்கம் மாற்ற முயல்வது எளிதாக இருந்திருக்கும். என்ன செய்வது? என் மகன் அச்சுதப்பன் அவ்வளவு புத்திசாலியாக இல்லையே என்று தளபதி நினைத்தான்.

ஏமாந்து விட்டேனே! யாரை இனப்பகைவன் என்று விவரம் தெரிந்த நாள் முதலாக வெறுத்து வந்த அதே சொக்கநாதன் மீது அவர் யார் என்று தெரியாமலே காதல் புரிந்து விட்டேனே! பாவி? பாவி? என்னை இப்படி ஏமாற்றி விட்டாரே! என் மனது இப்படிக் கதறும்படியாக வஞ்சித்துவிட்டாரே! என்ன செய்வேன்? இவரைப் பார்ப் பதற்கே வெறுப்பாக இருக்கிறது. இவரை நினைப்பதற்கே வேதனையாக இருக்கிறது.

சொக்கநாதன் பூஜையை முடித்து அம்மனுக்குக் கற்பூர ஆரத்தி காட்டினான். ஒரு கையால் மணி அடித்து ஓசை எழுப்பினான்.

இதனால் விழித்துப் பார்த்த இளவரசி சொக்கநாதனின் தோற்றம் அவள் கண்களில் விழ, 'இந்தப் பாவி மனிதர் என்னை இப்படி வஞ்சிப்பார் என்று தெரியாமல் ஏமாந்து விட்டேனே' என்று அவள் மனம் குமுறிக் கண்களில் அருவியாகக் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

அப்பொழுது தற்செயலாக அவள் பக்கம் திரும்பிப் பார்த்த தளபதி, இளவரசியின் கண்களில் இருந்து நீர் சொரிவதைப் பார்த்து 'அடடா! எவ்வளவு பக்தி இவளுக்கு' என்று எண்ணி மனதிற்குள் வியந்தான்.

கற்பூர ஆரத்தி காட்டியதும் அந்தத் தட்டினை அப்படியே ஏந்தியவாறு சொக்கநாதன் அவர்கள் அருகில் வந்தான். தளபதி மிகவும் பக்தி சிரத்தையாக ஜோதியைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டான்.

அடுத்து இளவரசிக்கு நேர் எதிரில் ஜோதியை நீட்டினான். கை கூப்பிய நிலையில் இருந்த சந்திரவதனா, சொக்கநாதனை ஏறிட்டுப் பார்க்காமல் தலை குனிந்தவாறு இருந்தாலும், அவனது அருகாமை அவளுக்கு அதிக வெறுப்பைத் தந்தது. அவன் அளித்த அதிர்ச்சி அவள் மனதைப் பிசைந்தது. அழுகை பீறிட்டுக் கிளம்பியது.

கற்பூர ஜோதி தன் எதிரே காட்டப்பட்டு இருப்பதை உணர்ந்து ''ஹ்ஹூம், ஹ்ஹூம்' என்று லேசான சப்தத்துடன் குமுறி, உள்ளிலிருந்து பீறிட்டுக் கிளம்பும் அழுகையை அடக்கப் படாதபாடு பட்டாள். அதேசமயம் கண்களில் வழிந்த அருவி குறையாது பெருகி வடிந்தது.

இதைப் பார்த்துச் சொக்கநாதன் திகைக்க, தளபதி அவளைப் பார்த்து ''மருமகளே என்ன ஆயிற்று? உனக்கு?

ஏன் இப்படிக் கண் கலங்குகிறாய்? கற்பூர ஜோதியை எடுத்து ஒற்றிக் கொள்'' என்றான்.

இளவரசி உடனே சமாளித்து ''ஒன்றுமில்லை ஒன்று மில்லை'' என்றவாறு கற்பூர ஜோதியைக் கையால் தொட் டுக் கண்களில் ஒத்திக் கொண்டாள்.

அடுத்து குங்குமப் பிரசாதத்தினை எடுத்து இளவரசி அருகே வந்த சொக்கநாதன், ''பிரசாதம் பெற்றுக் கொள் ளுங்கள் இளவரசி'' என்றவாறு குங்குமத்தைக் கையில் எடுத்து அவளிடம் நீட்டினான்.

சந்திரவதனா வேண்டா வெறுப்பாக கை நீட்டினாள்.

''இந்த அம்மன் அருளால் உனக்கு எல்லாமே நல்ல விதமாக நடக்கும். கலங்காதே'' என்றவாறு அவள் கையைத் தொட்டுக் குங்குமத்தை வைத்தான்.

அவனது தீண்டல் அவளுக்குள் நெருப்பைத் தொட்டதுபோல் இருந்தது. குங்குமத்தைத் தனது நெற்றி யில் இட்டுக் கொள்ளாமல் கையில் சற்று நேரம் வைத்தி ருந்துவிட்டு யாரும் பார்க்காத நேரத்தில் வெறுப்புடன் கீழே எறிந்தாள்.

இளவரசி கொண்டு வந்த பூஜைத் தட்டுகளை சொக்க நாதனிடமிருந்து தளபதி பெற்றுக் கொள்ள இருவரும் மெதுவாகச் சந்நிதியைவிட்டு, வெளியேறத் தொடங்கி னார்கள்.

''என்ன மருமகளே, திடீர் என்று அப்படிக் கண் கலங்கிவிட்டாய்? உன் மனதிற்குள் அப்படி என்ன வேதனை?'' என்றான் தளபதி.

''அப்படி எதுவும் இல்லை மாமா! எனக்கு எந்தக் குறையும் இல்லை! அம்மனின் மீது நான் கொண்ட அளவுக்கு மீறிய பக்தியில் என்னை அறியாமல் மனம் குமுறிவிட்டேன். அவ்வளவுதான்!''

இந்த வயதில் இவளுக்கு இவ்வளவு பக்தியா என்று மனதிற்குள் வியந்தான் ரங்கப்ப நாயக்கன்.

''மாமா! எனக்கு ஓர் உதவி செய்வீர்களா? நீங்களும், உங்கள் வீரர்களும் எனக்குத் துணையாக அந்தப்புரம் வரை வந்து விட்டுவிட்டு அதன்பிறகு உங்கள் காவற்பணியைத் தொடருங்கள்!'' என்றாள்.

''இது என் கடமை மருமகளே! கவலைப்படாதே.''

அம்மனைக் கும்பிட்டவுடன் நல்ல பலன் உடனே கிடைத்திருக்கிறதே. இளவரசி இவ்வளவு மாறிவிட் டாளே என்று மகிழ்ந்தான் தளபதி!

சொக்கநாதன் அவளைப் போகும் வழியில் மடக்கிப் பேச முயலலாம் என்ற அச்சத்தில் அதனைத் தடுப்பதற்கா கத்தான் அப்படிக் கேட்டுக் கொண்டாள் என்று தளபதி எப்படி அறிவான்?

இளவரசியோடு அனைவரும் கோயிலை விட்டு வெகுதூரம் சென்றுவிட்ட பிறகு, வெங்கடகிருஷ்ணன் வேகமாகச் சொக்கநாதன் அருகே வந்தான்.

''என்ன சொக்கநாதா, இளவரசி உன்னை ஒரேயடி யாக வெறுத்துப் பேசிவிட்டுப் போகிறாள்?''

''ஒரேயடியாக வெறுத்திருந்தால் தளபதியிடம் என் னைக் காட்டிக் கொடுத்திருப்பாள். அவள் சமாளித்ததும், அவள் கண்ணீரும் என்மீது அவள் கொண்டுள்ள காதல் இன்னும் மறையவில்லை என்று உணர்த்துகிறது. அடுத்து அந்தப்புரத்திலேயே அவளைச் சந்திக்கிறேன்.''

"அதில் ஆபத்து...."

"எத்தனை ஆபத்து இருந்தாலும் நான் சந்தித்தே ஆகவேண்டும். இதுவே என் கடைசி முயற்சி" என்றான் சொக்கநாதன் தீர்மானமாக.

அன்று மாலையில் மன்னார்தாசனும், அக்கிராஜுவும் தனியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"சந்திரவதனாவின் காதலனை நான் கையும் களவுமாகப் பிடிக்காதவரை எனக்குத் தூக்கம் வராது ராஜு."

"அவன் மிகவும் சாமர்த்தியசாலியாக இருக்கிறானே!"

"யானையை நேரடியாக வேட்டையாடிப் பிடிப்பது கடினம் என்றால் கபடமாகத் தான் பிடிக்க வேண்டும். குழிவெட்டி, தெரியாமல் மூடி, அந்த இடத்திற்கு யானையை வரவழைத்துக் குழிக்குள், வீழ்த்துவதுபோல் செய்ய வேண்டியதுதான்."

"புரியவில்லை."

"சந்திரவதனாவின் காதலன் எப்பொழுது வருவான் என்று காத்திருக்கக் கூடாது. அவனாக ஓடிவந்து நாம் விரித்த வலையில் சிக்குமாறு செய்யப்போகிறேன்."

"எப்படி?"

"கூடிய விரைவில் சொல்கிறேன்" என்றான் மன்னார் தாசன் தீவிரமாகச் சிந்தித்தபடி.

# 38



தஞ்சை அந்தப்புரத்தில் இளவரசி சந்திவதனாவின் அந்தரங்க அறையில் அமைச்சர் மகள் மதுரவாணியும், இளவரசி சந்திரவதனாவும் மௌனமாக அமர்ந்திருந்தனர்.

மதுரவாணி, இளவரசியின் முகத்தையே ஆவலோடு ஏறிட்டுப் பார்த்தாள். சந்திரவதனாவோ குனிந்த தலை நிமிராமல் எங்கோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு மதுரவாணி இளவரசியின் அந்தரங்க அறைக்கு வந்திருக்கிறாள். அதிலும் அவளை அவசரமாக வரச் சொல்லி இளவரசிதான் சேடிப் பெண் ஒருத்தியிடம் செய்தி அனுப்பி இருந்தாள்.

மதுரவாணிக்கு இளவரசியைத் தேடிப் போய்ப் பேச வேண்டும் என்ற ஆசை நேற்றில் இருந்தே ஏற்பட்டிருந்தது. இவ்வளவு நாள் இளவரசி தன்னுடைய காதலைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் மதுரவாணிக்கு எரிச்சலும், ஏக்கமும் தோன்றும். தன்னுடைய காதல் நிறைவேறவில்லையே என்ற வேதனை உள்ளுக்குள் அரிக்கும்.

ஆனால் பௌர்ணமி தினமான நேற்று உய்யான வனத்தில் மதுரவாணி தனது ஆசைக்காதலனான மன்னார் தாசனுடன் மனம் ஒன்றி மகிழ்ந்திருந்தது அவளை இரவில் நீண்ட நேரம் தூங்கவிடவில்லை.

இளவரசியிடம் போய்ப் பேச வேண்டும். அவள் தன்னுடைய காதலனைப் பற்றிப் பேசும்பொழுது, மனதிற் குள் தன் காதலனுடன் பேசியதை நினைத்து மகிழ வேண் டும். அவள் தனது காதலனுடன் இன்புற்று இருந்தவிதம் சொல்வாளேயானால், அதேபோன்று தானும் மன்னார்தாச னுடன் இன்புற்றுக் களிக்க எதிர்வரும் நாட்களில் முயல வேண்டும்.

இந்த எண்ணத்தில்தான் அவள் இளவரசியுடன் தானே சென்று பேசப் போகவேண்டும் என்று நினைத்தபொழுது இளவரசியே அவளை வரச் சொன்னதாகச் செய்தி வந்த பொழுது, மகிழ்ச்சி பொங்க ஓடோடி வந்தாள்.

ஆனால், இளவரசியின் போக்கோ வந்தில் இருந்தே புதிராக இருக்கிறது. அவளை மகிழ்ச்சியுடன் வந்து வர வேற்கவில்லை. அவளுடைய அந்தரங்க அறைக்குள் கூட்டி வந்த பிறகும், அவளிடம் எதுவுமே பேசாது, தலை குனிந்து உட்கார்ந்தவாறு இருந்தாள்.

''என்னடி சந்திரா, ஏதோ ஒரு முக்கியமான விஷயம் பேசவேண்டும் என்று சொன்னாயாம். ஆனால் வந்ததில் இருந்தே பார்க்கிறேன். ஒரு மாதிரியாகவே இருக் கிறாயே?'' என்றாள் மதுரவாணி.

''எனக்கு எல்லாமே வெறுப்பாக இருக்கிறதடி! இந்த உலகில் வந்து நான் ஏன் பிறந்தேன் என்று வேதனையாக இருக்கிறதடி!'' என்றாள் இளவரசி விரக்தியான குரலில்.

''அப்படி உனக்கு என்ன நடந்துவிட்டது? உன் ஆசைக் காதலன் முத்துவைச் சந்தித்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டது என்று சோக கீதம் பாடுகிறாயா?''

''அந்தப் பாவியால் ஏற்பட்ட விளைவுகளை எண் ணித்தான் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறேன் வாணி! அதனை நினைக்க நினைக்க என் அடிவயிறு எல்லாம் கலங்குகிறதடி'' என்று வெடிக்கும் குரலில் ஆத்திரத்துடன் கூறினாள்.

''அப்படி என்ன நடந்துவிட்டது?' என்று புரியாத பாவனையுடன் கேட்டாள் மதுர்வாணி.

''ஏமாந்து விட்டேனடி... அந்தப் பாவியிடம் அடியோடு ஏமாந்து என் வாழ்க்கையை நாசமாக்கி விட்டேனடி'' என்று முகத்தில் அறைந்தவாறு அழத் தொடங்கினாள் இளவரசி!

மதுரவாணி இதைக் கேட்டுத் திடுக்கிட்டு, இளவரசியை கூர்ந்து பார்த்தவாறு இருந்தாள். அவள் மனதில் வேறு ஏதேதோ எண்ணங்கள் ஓடின.

பிறகு இளவரசியை அவள் அதிர்ச்சியுடன் ஏறிட்டுப் பார்த்து ''அடிப்பாவி! அந்த அளவுக்கு உன் காதலனுடன் அன்னியோன்யமாகவா இருந்திருக்கிறாய்?'' என்றாள்.

இதைக் கேட்டுத் திடுக்கிட்ட இளவரசி, மதுரவாணி எந்த அர்த்தத்தில் இப்படிக் கேட்கிறாள் என்று புரிந்து, ''சீச்சீ! நீ நினைக்கிற மாதிரி இல்லையடி! நல்லவேளை அந்த அளவுக்குப் போகவில்லை. போகவும் மாட்டேன்'' என்றவாறு மறுபடியும் அழுதாள்.

''பிறகு எதற்கடி இப்படி அழுகிறாய்?''

''அந்தப் பாவியின் சுயரூபம் நேற்றுத்தானடி தெரிந்தது. அதிலிருந்து என் நெஞ்சே பிளந்துவிட்டது போல் இருக்கிறதடி! இப்படி நான் ஏமாறுவேன் என்று எதிர்பார்க்கவில்லையே.... கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லையே...'' கேவினாள்.

''என்னடி சொல்கிறாய்? புரியம்படியாகச் சொல்!''

''முத்து என்ற பெயரில் வந்த மோசக்காரர் யார் என்று தெரியுமா?''

''உன் ஆசைக்காதலன்... மன்னித்துக் கொள்... காதலர்.''

''இனி அந்த வார்த்தையை என் காதுகளில் உச்சரிக் காதே! சிரித்துக் கொண்டே என் கழுத்தை அறுத்துவிட்ட அந்தப்பாவி யார் தெரியுமாடி?''

''தெரியாது. எனக்கெப்படித் தெரியும்? நீதான் சொல் லேன்!''

''மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன்தான் முத்து என்ற பெயரில் வந்து என்னை மோசம் செய்துவிட்டார்'' என்று சொல்லியவாறு தன் முகத்தில் மறுபடியும் அறைந்து கொண்டு அழுதாள் இளவரசி.

இதைக் கேட்டவுடன் திகைத்துப் போய்ச் சிலையென உட்கார்ந்துவிட்டாள் மதுரவாணி. இந்தச் செய்தி அவள் முற்றிலும் எதிர்பார்க்காத ஒன்று! இதன் பின்விளைவு களை நினைக்கையில் அவள் மனதில் திகில் எழுந்தது.

''நிஜமாகவா? உனக்கு எப்படியடி தெரிந்தது?''

இளவரசி இதற்குப் பதில் கூறாமல் முகத்தைக் கரங்க ளால் மூடியபடி அழுது கொண்டிருந்தாள்.

மதுரவாணி அவள் கரங்களை அவசரமாக விலக்கி ''சந்திரா சொல்லுடி. உனக்கு எப்படி இது தெரிந்தது?'' என்றாள்.

''அவர் வாயாலேயே சொன்னார். அதுவும் அம்மன் சிலை முன் சத்தியம் செய்து சொன்னார்'' என்றவாறு நடந்த விஷயங்களை விரிவாகக் கூறினாள்.

மதுரவாணி கேட்டுக் கிறுகிறுத்துப் போய்விட்டாள்.

''நீ அடிக்கடி என்னைக் கேலி செய்வாயே வாணி. மதுரைச் சொக்கநாதன்தான் இங்கு வந்து உன்னைக் கொத் திக் கொண்டு போகப் போகிறார் என்று! அப்பொழுதெல் லாம் உன்மீது நான் கோபப்பட்டிருக்கிறேன்! கடைசியில் அது உண்மையாகப் போகும் என்று கனவிலும் நான் எதிர்பார்க்கவில்லையடி.''

''நான்கூட விளையாட்டுக்குத்தான் உன்னைச் சீண்டி வேடிக்கைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் அடிக் கடி அப்படிக் கூறுவேன். அது சத்தியமாக நடந்துவிடும் என்று கனவில்கூட நான் நினைத்ததில்லை சந்திரா.''

''நீ அடிக்கடி சொல்வாயே, மதுரை மன்னனுக்கு இணையான அழகும், வீரமும், புத்திசாலித்தனமும் நிறைந்தவர்கள் இந்த அவனி எங்கும் இல்லை என்று! முத்து என்ற பெயரில் அவரை நான் சந்தித்தபொழுது, அந்தச் சொக்கநாதனை விட உயர்ந்தவர் இதோ இருக்கி றாரே என்றுதான் நினைத்தேனே ஒழிய, இருவரும் ஒருவ ராகத்தான் இருப்பார்கள் என்று நினைத்துப் பார்க்கத் தவறிவிட்டேன் வாணி! அதுமட்டுமல்லாமல் புத்தி கெட் டுப் போய் அவரை காதலித்துத் தொலைத்து, அவருடன் எப்படி எல்லாம்... எப்படி எல்லாம் கூடி மகிழ்ந்து... ச்சீ.... நினைக்க நினைக்க வெறுப்பாக இருக்கிறதடி... வேதனையாக இருக்கிறதடி.''

மதுரவாணி சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு, ''சரி, இனி என்ன செய்யப் போகிறாய்?'' என்றாள்.

''அந்த மனிதரை அடியோடு மறந்துவிட்டதுமின்றி அவர் மீதுள்ள வெறுப்பு என் உள்ளத்தின் ஆழம்வரை வேரூன்றிவிட்டது.''

''ஏன் இப்படி வெறுத்துப் பேசுகிறாய் வாணி? சொக்க நாதன் ஆண்மை, வீரம், அழகு, விவேகம் அனைத்திலும் சிறந்தவர் என்று நான் கேள்விதான் பட்டிருக்கிறேன். ஆனால், நீயோ அவை அனைத்தும் உண்மை என்று நேரிடையாகவே பார்த்துப் பழகி அறிந்திருக்கிறாய்.''

''அதனால்தானடி என் புத்தியைச் சிதறடித்துவிட்டு இப்படிப் பரிதவிக்கிறேன்.''

''நீயும் சிறந்த அழகு படைத்தவள். ஒரு நல்ல பெண்ணுக்குரிய அனைத்துக் குணநலன்களும் கொண்ட

வள். புத்திசாலியாகவும் இருக்கிறாய். உனக்கு எல்லா வகையிலும் ஏற்றவர் மதுரை மன்னர்தான். நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் இணையான உன்னதமான மணமக்களாக திகழ்வீர்கள்.''

''அது ஒருக்காலும் நடக்காது. நடக்கவும் கூடாது. என் தந்தைக்குத் தெரிந்தால் என்னை அணு அணுவாக வெட்டிச் சிதைத்து விடுவார். எங்கள் குடும்பமே என்னைக் கேவலமாகப் பார்க்கும். இப்படி ஒரு தலைகுனிவை ஏற்படுத்தியதால் என் இறப்பை எல்லோரும் விரும்புவார்கள்.''

''உன் தமையன் மன்னார்தாசனிடம் சொல்லிப் பாரேன்.''

''அவர் மட்டும் என்ன தேவலோகத்தில் இருந்து குதித்தவரா? என் தந்தைக்குப் பிறந்தவர்தானே? இந்நாட்டின் எதிர்கால வாரிசுதானே! பரம்பரை பரம்பரையாக இருந்துவரும் பகை உணர்ச்சி அவருக்கு மட்டும் இருக்காதா என்ன? என் விஷயம் தெரிய வந்தால் என்னைக் கொல்லவரும் முதல் ஆள் அவராகக் கூட இருக்கலாம்.''

''நீ அளவுக்கு அதிகமாகக் கற்பனை செய்து உன்னையே நீ வருத்திக் கொள்கிறாய்!''

''கற்பனை அல்ல வாணி! நிஜம்! உனக்கு ராஜ குடும்பம் வளரும் சூழ்நிலை தெரியாது! பால்குடி மாறிய பருவத்தில் இருந்தே, மதுரை மன்னர்கள் மீது வெறுப்பையும் சேர்த்துச் சோற்றுடன் ஊட்டி வளர்த்தார்கள் எங்களை! சிறு குழந்தைகள் பிடிவாதம் செய்தால் 'சொன்னபடி கேள். இல்லாவிட்டால் பேய் வந்து உன்னைப் பிடித்துக் கொள்ளும்' என்று பெற்றோர் சொல்வதை நீ கேட்டிருப்பாய். ஆனால் இளம் வயதில் என்னை அவர்கள் 'மதுரைக்காரன் வந்து தூக்கிக் கொண்டு போய்விடுவான்' என்று மிரட்டி மிரட்டியே சாப்பிடச் சொல்வார்கள். கடைசியில் அந்த மதுரைக்காரரே என்னைத் தேடி வந்து மோசம் செய்துவிட்

டார் பார்த்தாயா?'' என்றவாறு முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

'சரி. மற்றவர்கள் வெறுப்பது இருகட்டும். நீ இனி மேல் என்ன செய்யப் போகிறாய்? அதைச் சொல்.''

''நான் அவரை அடியோடு வெறுக்கிறேன்.''

''நிஜமாகவா?''

''சத்தியமாக வெறுக்கிறேன். என்னை ஏமாற்றிய அவர்மீது ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.''

''ஓஹோ! அவ்வளவு வெறுப்பும் ஆத்திரமும் சொக்க நாதன் மீது ஏற்பட்ட உனக்கு தளபதி கோயிலுக்குள் நுழைந்தவுடன் சொக்கநாதனைப் பற்றி சொல்லிக் காட்டிக் கொடுத்திருக்க வேண்டியதுதானே? திரும்பவும் கோயிலுக் குள் வந்து பூஜை முடியும்வரை பேசாமல்தானே இருந்தி ருக்கிறாய்! அப்பொழுதே நீ அவரைப் பிடித்துக் கொடுத்தி ருந்தால், மதுரை மன்னன் கதை அப்பொழுதே முடிந்திருக் கும். உன்னை ஏமாற்றியதற்குத் தகுந்த தண்டனை அவருக் குக் கிடைத்திருக்கும். நீயும் இப்படிப் புலம்ப வேண்டியது இருக்காது. அதை ஏன் நீ செய்யவில்லை?''

இதற்குப் பதில் சொல்லத் தடுமாறிய இளவரசி, ''அது... அவர் என்னைக் காதலித்ததைத் தவிர வேறு எந்தக் குற்றமும் செய்யவில்லையே என்ற மனிதாபிமானத்தில் தான் காட்டிக் கொடுக்கவில்லை'' என்றாள்.

''மனிதாபிமானமில்லை சந்திரா. உன் மனதில் இன்ன மும் அவர் மீதுள்ள காதல் மறையவில்லை என்றுதான் அர்த்தம்.''

''இல்லை, இல்லை, சத்தியமாக இல்லை. அவர் மீதுள்ள காதலை நான் அடியோடு அழித்துவிட்டேன். அவரை நான் முற்றிலும் வெறுக்கிறேன்.''

''சரி. அவரை நீ வெறுக்கிறாய். இந்தக் கல்யாணமும் நடைபெறவில்லை என்று வைத்துக் கொள். அப்புறம் உன் எதிர்காலம்?''

இளவரசி தலைகுனிந்தவாறு இருந்தாள்.

''உன் பெற்றோர் பார்க்கும் வேறொரு மாப்பிள்ளையைக் கல்யாணம் செய்யத் தயாராகிவிட்டாயா? இதுவரை சொக்கநாதனுடன் பழகி இன்புற்று முத்தங்கள் பரிமாறி, காதலில் திளைத்த நீ அதேபோல் வேறு ஒருவருடன் இருக்கலாம் என்று முடிவு எடுத்துவிட்டாயா? உன்னால் அது முடியுமா?''

இளவரசி இதற்குப் பதில் சொல்லாமல் முகத்தை மூடிக் கொண்டு கேவிக் கேவி அழத் தொடங்கினாள்.

மதுரவாணி அவளை இரக்கத்துடன் சற்று நேரம் பார்த்தாள். பிறகு அவளது கரங்களை விலக்கிவிட்டு மறுபடியும் கேட்டாள்.

''அழாமல் பதில் சொல் சந்திரா. அடுத்தவனுடன் வாழ்வது என்று முடிவு செய்துவிட்டாயா?''

''இல்லை... நான்... அதனால்தான் நான் ஏன் பிறந்தேன் என்று அழுது கொண்டிருக்கிறேன்.''

''இனி அழுது பிரயோஜனமில்லை சந்திரா. வாழ்வதற்கு யோசி! இவ்வளவு தூரம் நடந்த பிறகு சொக்கநாதனுடன் சேர்ந்து வாழ முயற்சி செய்! அப்புறம் விதி வழி நடக்கட்டும்!''

''முடியாது. என்னால் என் தந்தையிடம் சொல்ல முடியாது. எனக்கு இதில் விருப்பம் இல்லை. எல்லோரையும் எதிர்த்து எங்கள் இனப்பகைவனைத் திருமணம் செய்ய என்னால் முடியவே முடியாது.''

''உன்மீது சொக்கநாதன் கொண்டுள்ள காதலை நினைத்துப் பார். ஒரு நாட்டிற்கே மன்னனாக இருந்தும்,

பகைவர் நாட்டிற்குள் தன்னந்தனியாக நுழைந்து, அவரு டைய உயிரைக்கூடப் பொருட்படுத்தாமல் உனக்காக அவர் பட்ட பாட்டிற்கு எல்லாம் காரணம் என்ன? உன்மீது கொண்டுள்ள காதல் ஒன்றுதானே! நேற்றுக்கூட அவர் தன்னைப் பற்றிய உண்மையைக் கூறாமல், உன்னை வலுக்கட்டாயமாகவோ இல்லை உன் சம்மதத்துடனோ உன்னை அனுபவித்துவிட்டு அகன்றிருக்கலாம். இல்லா விட்டால் உன்னை மதுரைக்கே தூக்கிக் கொண்டு போயி ருக்கலாம். அதை விடுத்து தன்னைப் பற்றிய உண்மையைச் சொல்லி, உன்னுடைய காதலுக்காகக் கெஞ்சி இருக்கி றாரே, அந்த உன்னதமான மனிதரையா நீ வெறுக்கிறாய்?''

''ஆமாம்; ஆமாம்... அவரை வெறுக்கிறேன். வெறுக் கிறேன்'' மஞ்சத்தை ஆத்திரத்துடன் குத்தியவாறு கூறி னாள்.

''சொக்கநாதன் திரும்பவும் உன்னை வந்து சந்திக்கா மல் விடமாட்டார். அப்பொழுது என்ன செய்வாய்?''

''வரட்டும். காவலரிடம் பிடித்துக் கொடுக்கிறேன். அதன் பிறகாவது என் வேதனைக்குத் தீர்வுக் கிடைக்கட் டும்.''

''இல்லை சந்திரா. நீ இப்பொழுது மனக்கலக்கத்தில் இருக்கிறாய். நான் சொன்னதை நிதானமாக யோசித்து ஒரு முடிவுக்கு வா. நான் ஒரு வாரம் கழித்து சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டு மதுரவாணி வெளியேறத் தொடங்கி னாள்.

அதற்குச் சில நாட்கள் கழித்துத்தான் சந்திரவதனா வின் காதலனைப் பிடிக்க மன்னார்தாசன் தனது திட்டத்தி னைச் செயல்படுத்தத் தொடங்கினான். சொக்கநாதனும் அதனை அறியாமலே அந்த வலையில் விழுவதற்காக வந்து கொண்டு இருந்தான்.

# 39



இளவரசர் மன்னார்தாசன் அந்தப்புரத்திலுள்ள தனது தங்கை சந்திரவதனாவின் அறைக்குள் நுழையும்பொழுது அவள் ஒரு சேடிப் பெண்ணிடம் சலவை செய்ய வேண்டிய துணிகளை கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''வாருங்கள் அண்ணா!'' என்று அவனை வரவேற்ற இளவரசியின் குரலிலும் சரி, முகத்திலும் சரி உற்சாகம் இல்லாதது மட்டுமின்றி, சற்று சோகபாவம் காணப்பட்டது.

மன்னார்தாசன் அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தான். சேடிப் பெண் துணிகளை எடுத்துக் கொண்டு நகர்ந்ததும், சந்திரவதனா அவன் எதிரில் வந்து நின்றாள்.

''என்ன அண்ணா, காலை நேரத்தில் என்னைத் தேடி வந்திருக்கிறீர்கள்? தந்தை ஏதாவது சொல்லிவிட்டாரா?'' என்றாள்.

''இல்லை. வேறு ஒரு விஷயமாக வந்தேன். முதலில் உட்கார்.''

சந்திரவதனா அவன் எதிரில் இருந்த மற்றோர் ஆசனத்தில் அமர்ந்தாள்.

''அந்தப்புரத்தில் நிறைய மராமத்து வேலைகள் செய்ய வேண்டி இருக்கின்றன சந்திரா! இந்தக் கட்டிடம் செவப்ப நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது. அதன்பிறகு இதுவரை எந்தவிதமான மராமத்து வேலைகளோ, பழுது பார்க்கும் பணிகளோ நடைபெறாததால் கட்டிடத்தின் பலம் பாதிக்கப்பட்டு வருகிறது. அதனை நமது காலத்தில் நல்ல முறையில் செய்ய வேண்டும் என்று தந்தை ஆசைப் பட்டு அந்தப் பணியினை என்னிடம் ஒப்படைத்திருக்கி றார்.''

''நல்ல விஷயம்தான். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

''இவ்வளவு பெரிய கட்டிடத்தில் ஒரே நேரத்தில் அத்தனை அறைகளையும் பழுது பார்ப்பது முடியாத காரியம். அந்தப்புரத்திலுள்ள அத்தனை பெண்களையும் வேறோர் இடத்தில் அதுவரை மாற்றி இருக்கச் செய்வதும் இயலாத ஒன்று. அதனால் ஒவ்வோர் அறையாகச் செய்ய லாம் என்று முடிவெடுத்து இருக்கிறேன்.''

''நல்ல முடிவுதான்.''

''முதலில் உன் அறையில் இருந்து துவங்கலாம் என்று இருக்கிறேன்.''

சந்திரவதனா இதனைக் கேட்டவுடன் குழம்பினாள்.

''அது ஏன் அண்ணா? கீழ் இருந்தோ, இல்லை உச்சியில் இருந்தோ துவங்காமல் ஆறாவது மாடியில் இருக்கும் என்னுடைய அறையில் இருந்து உங்கள் பணிக ளைத் துவங்க இருக்கிறீர்கள்!''

''அது வேறு ஒன்றும் இல்லை சந்திரா! ஜோஸ்யம் பார்த்தபொழுது ஆறாவது மாடியில், மூன்றாம் அறையில் முதலில் துவங்கினால் பணி சிறப்பாக இருக்கும் என்று தெரிந்தது. அது உன்னுடைய அறைதானே!''

இதைக் கேட்டவுடன் அவனை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள் இளவரசி!

''உங்களுக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லை என்று கூறுவீர்களே! நீங்கள் எப்படி ஜோஸ்யரிடம் சென்று....''

''நான் போகவில்லை சந்திரா! நம் தந்தைதான் பார்த்து, நமது குலகுருவின் ஆசியுடன் இந்த விஷயத் திற்கு அனுமதி பெற்று, அதன்பிறகு அந்தப் பொறுப்பை என்னிடம் கொடுத்தார்.''

''சரி! நான் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்.''

''உனக்குத் தேவையான பொருட்கள் அத்தனையை யும் இங்கிருந்து எடுத்துக் கொண்டு சில நாட்கள் வேறு இடத்தில் தங்க வேண்டும்.''

''எங்கு? என் தாயின் அறைக்கா?''

''நமது ராஜகுடும்பத்து வழக்கப்படி, வயது வந்த பெண் இளவரசி என்ற அந்தஸ்துடன் தனி அறையில்தான் இருக்க வேண்டும். அதனால் நமது அன்னையரின் அறை யிலோ, அல்லது இங்குள்ள மற்றைய அந்தப்புரத்து மகளிர் களுடனோ சேர்ந்து இருக்கக் கூடாது.''

''வேறு எங்கு செல்வது?''

''நமது அரண்மனைக்கும் அந்தப்புரத்திற்கும் இடை யில் எனது மாளிகைக்குச் சற்றுத் தள்ளி, விருந்தினர்களுக் காக ஒரு சிறிய கட்டிடம் அமைக்கப்பட்டிருக்கிறதே. அங்கு நீ தங்குவதற்காக நல்ல முறையில் ஏற்பாடு செய்தி ருக்கிறேன்.''

சந்திரவதனா சற்றே யோசித்தபொழுது, அவள் கண்க ளில் லேசாகத் திகில் எழுந்தது.

''நீங்கள் சொல்லும் அந்தக் கட்டிடம் மதிற்சுவருக்கு மிக அருகாமையில் இருக்கிறதே, அதுதானே?''

''அதேதான் சந்திரா!''

''அது... அது... அதற்குப் பாதுகாப்புக் குறைவாகத் தோன்றுகிறதே! அந்நியர் எவரும் மிக எளிதாக அந்த மாளிகை அருகே வரும் வாய்ப்பு அதிகமே!''

''அதனைப் பற்றி நீ கவலைப்படாதே சந்திரா! விருந்தினர்களுக்காகக் கட்டப்பட்டதால் இத்தனை காலம் அசட்டையாக இருந்தோம். இனி நீ தங்கப்போகும்பொழுது அப்படி இருப்போமா? காற்றுக்கூட எங்கள் காவலை மீறி நுழைய முடியாதபடி ஆக்கிவிடுவோம். கவலைப் படாதே!''

இருந்தாலும் காற்றுக்கூடப் புகமுடியாத இடத்தில் சொக்கநாதன் புகுந்துவிடுவாரே! அதனை நினைக்கும் பொழுதுதான் அவளுக்குப் பயமாக இருந்தது.

சொக்கநாதன் கண்டிப்பாகத் தன்னைத் தேடி வருவான் என்று ஒவ்வோர் இரவும் அவள் கலங்கிக் கொண்டுதான் இருந்தாள். அவன் நினைவு அவளை வெறுப்பின் எல்லைக்குக் கொண்டு சென்று சித்திரவதை செய்து கொண்டிருந்தது.

''இல்லை அண்ணா... எனக்குப் பயமாக இருக்கிறது.''

''ஏன் இவ்வளவு பயப்படுகிறாய் சந்திரா! இந்த நாட்டின் இளவரசிக்கு, அதுவும் என் அன்பான தங்கைக்கு, ஆபத்து நேரும்படியாக செய்து விடுவேனா? பாதுகாப்பு ஏற்பாடுகளை நீயும் பார். ஏதாவது குறை இருந்தால் சொல். நமது காவலர்கள் அனைவரையும் அங்கு நியமிக்கிறேன்.''

இளவரசிக்கு லேசாகத் திருப்தி ஏற்பட்டது. இந்த ஏற்பாடு இன்னொரு பக்கம் அவளுக்கு நிம்மதியையும் தர ஆரம்பித்தது.

சந்திரவதனா இந்த இடத்தில் இருந்து மாறப்போவது சொக்கநாதனுக்குத் தெரியாது. அதனால் அவன் அரை இருட்டில் பழைய இடத்தில் தேடி ஏமாந்து செல்லலாம். இல்லாவிட்டால் இங்குள்ள காவலர்களிடம் மாட்டிக் கொள்ளலாம். அதன்பிறகு அவரால் ஏற்படும் தொல்லைகள் அறவே நின்றுவிடும்.

''நீங்கள் சொன்னால் சரி அண்ணா! நான் என்றைக்கு அந்தக் கட்டிடத்திற்கு மாற வேண்டும்?''

''நாளைக் காலையில்! அதற்கான ஏற்பாடுகளை இன்றே நீ செய்ய ஆரம்பிக்கலாம். உனக்கு ஏதாவது தேவைப்பட்டால் எனக்குச் சொல்லிவிடு. நாளை காலை தேவையான ஆட்களுடன் நானே உன்னை அங்கு கூட்டிச் செல்கிறேன்.''

''சரி அண்ணா'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

அந்தப்புரத்திலிருந்து மன்னார்தாசன் வெளியேறி விருந்தினர் மாளிகைக்கு வந்தான். உள்ளே அக்கிராஜு பணியாட்களை ஏவிக் கொண்டிருந்தான்.

''என்ன அக்கிராஜு இன்னும் வேலை முடியவில்லையா?''

''இதோ, இதுதான் கடைசி வேலை. சற்று நேரத்தில் முடிந்துவிடும்'' என்றான் அக்கிராஜு.

சற்று தூரத்தில் பணியாட்கள் வேலை முடித்து நகர்ந்ததும், அவர்கள் இருவர் மட்டும் தனியாகப் பேசத் தொடங்கினர்.

''என்ன மன்னாரு. நாளைக்காலை முதல் இளவரசி யார் இங்கு தங்குவதற்கு ஒப்புக் கொண்டாரா?'' என்றான் அக்கிராஜு.

''ஒரு வழியாக ஒப்புக் கொண்டாள். ஆனால் ஒரு விஷயம் எனக்கு நெருடலாகத் தெரிகிறது.''

''என்ன விஷயம்?''

''விருந்தினர் மாளிகை என்றதுமே அவள் கண்களில் பயம் தெரிந்தது. இந்த இடம் பாதுகாப்பற்றது. அந்நியர் எவரும் எளிதில் நெருங்குவதற்கு வாய்ப்பு அதிகம் என் பதை அறிந்தால் அவள் காதலன் அவளை வந்து பார்ப்ப தற்கு இன்னும் வசதியாக இருக்குமே என்று நினைத்து மகிழ்ச்சி அடையாமல், உண்மையிலேயே பயமடைந்து பேசினாள். அதுதான் எனக்குப் புதிராக இருக்கிறது. அது ஒருவேளை நடிப்பாக இருந்தால், அவளைப் போன்று ஒரு கைதேர்ந்த நடிகையை இந்த அவனி எங்கும் பார்க்க முடியாது ராஜு!''

''சரி அது இருக்கட்டும். இளவரசி இங்கு தங்கப் போகும் விஷயம் பற்றி மன்னரிடம் அனுமதி பெற்று விட்டாயா?''

''ஆம். ஜோஸ்யர் சொன்னதாக அவரிடமும் பொய்யு ரைத்தேன். அவரும் நம்பிவிட்டார். துலாபுருஷதான நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் என்னுடன் அதிகம் பேசுவ தில்லை. இருந்தாலும் அந்தப்புரக் கட்டிட மராமத்து பற்றி இதற்கு முன்பே கூட அவர் என்னிடம் பேசி இருந்ததால், இதற்கு மறுப்புச் சொல்லவில்லை. சரி.. வா. கட்டிடத்தை ஒரு முறை சுற்றி வருவோம்.''

இருவரும் விருந்தினர் மாளிகையைச் சுற்றிவரத் தொடங்கினர்.

''மதிற் சுவருக்கு மிக நெருக்கமாக இந்தக் கட்டிடம் இருக்கிறது. சுவரின் மேலே படர்ந்திருக்கும் மரக்கிளை வழியாகக் கட்டிடத்தின் சாளரத்திற்குள்ளே எளிதாக யாரும் குதித்துவிடலாம். இல்லையா? இளவரசியின் காத லன் வருவதற்கு வசதியாக இந்த இடத்தில் காவலையும் குறைத்து விடுவோமா?'' என்றான் ராஜு.

''கூடாது. அந்தத் திருடர்கள் மிகவும் புத்திசாலியான வர்கள். இந்த இடம் அவர்களுக்கு இவ்வளவு வசதியாக இருப்பது மட்டுமின்றி காவலரும் இல்லாமல் இருப்பது தெரிந்தால் நிச்சயம் சந்தேகப்படுவார்கள். யானைக்கு வெட்டிய குழியை மூடாமல் விடுவார்களா? குழியை மூடவேண்டும். அதே நேரம் மூடப்படும் பொருள் வலு வற்றதாக இருக்க வேண்டும்.''

''எப்படி?''

''இந்த இடத்தைச் சுற்றி நிறையக் காவலர்களை நியமிக்க வேண்டும். அதே சமயம் திறமை குறைந்தவர்க ளாக இருக்க வேண்டும். கண்விழித்துக் காவல் புரிவதில் இயலாதவர்களாக குடிகாரர்களாகப் பார்த்து இந்த இடத் தில் அவர்களை நிறுத்தி, அவர்கள் பின்னரவில் குடிப்பதற் கும் ரகசியமாக ஏற்பாடு செய்.''

''புரிகிறது மன்னாரு! அப்படி இருந்தால்தான் அந்தத் திருடர்களுக்கும் சந்தேகம் ஏற்படாது. இளவரசியாருக்கும் ஐயம் எழாது. அது சரி. காவலர்களும் சரியில்லை. உன்னு டைய மாளிகையும் இங்கிருந்து சற்றுத் தூரத்தில் இருக்கி றது. அங்கிருந்து நாம் பார்த்தால் இந்த இடத்தில் நடப்பது எதுவும் இருட்டில் தெரியாது. பிறகு எப்படி நாம் அந்தத் திருடர்களைப் பிடிப்பது? நாமாகச் சந்தேகப்பட்டு அங்கி ருந்து ஓடி வருவதற்குள் திருடர்கள் மரக்கிளை வழியாக மிக எளிதாகத் தப்பித்து ஓடி விடுவார்களே!''

''அதைப் பற்றிக் கவலைப்படாதே! அவர்களை நாம் எளிதாகப் பிடிக்க ஒரு வழி இருக்கிறது. வா காட்டு கிறேன்.''

மறுபடியும் விருந்தினர் மாளிகைக்குள் நுழைந்தனர்.

''இதோ இதுதான் இளவரசியின் படுக்கை அறை இல்லையா? மதிற்சுவரில் இருந்து மரக்கிளையைத் தொற்றி ஏறி, மாளிகை வந்து, சாளரத்தின் வழியாக எளிதாக இங்கு வந்து சேர்ந்துவிடலாம் நன்றாகப் பார்த்துக் கொள்.''

அக்கிராஜு நன்றாகப் பார்த்துவிட்டுத் தலையசைத் தான்.

''சந்திரவதனாவும் அவள் காதலனும் நெருக்கமாகப் பேசினால் ஒன்று மஞ்சத்திலோ, அல்லது இதோ இருக்கும் ஆசனங்களிலோ அமர்ந்து பேசவேண்டும். அதற்கு எதிரில் இருக்கும் சுவரில் வரைந்த ஓவியங்களைப் பார் புரியும்.''

''ராமனின் பட்டாபிஷேக ஓவியம்! அதில் என்ன?''

''ராமனின் தலைக்கு மேல் அரும்பையர் இருவர் பூச் சொரிகிறார்களே, அவர்கள்தான் நமக்கு உதவப் போகிறார் கள்.''

''எப்படி? ஒன்றும் புரியவில்லை.''

''வா காட்டுகிறேன்.'' என்றவாறு அக்கிராஜுவைக் கூட்டிக் கொண்டு மன்னார்தாசன் மறுபடியும் வெளியே வந்தான். விருந்தினர் மாளிகையை ஒட்டிச் சுவரோடு சுவராக இருந்த மற்றொரு கட்டிடத்திற்குள் நுழைந்தார்கள்.

அந்தக் கட்டிடத்தின் சுவரை ஒட்டி மரத்தாலாகிய ஆளுயரம் கொண்ட அலமாரி ஒன்று இருந்தது. அதனைத் திறந்தான். உள்ளே நான்கு பேர் நிற்கும்படியான வசதி யுடன் காணப்பட்டது.

அதனுள் நுழைந்து தனது குறுவாளை எடுத்து மரப் பலகையை நெம்பினான். தலையளவுப் பலகை கையோடு வந்தது. அதன் மறுபுறம் அரம்பையின் முகம் வரைந்து காணப்பட்டது.

''பார்த்தாயா! இந்த ஓட்டையால் நமது தலையை நுழைத்து அங்கு நடப்பது அனைத்தையும் பார்க்கலாம். அந்த அறையின் இருட்டில் சுவரில் இருந்த ஓவியத்தின் தலை மட்டும் நிஜமாகக் காணப்படுவது யாருக்கும் தெரியாது.''

ஆச்சரியம் அடைந்த அக்கிராஜு ''அற்புதம்!'' என்றான்.

''அதுமட்டுமல்ல! இந்த அலமாரியை ஓசையின்றி நகர்த்தி அந்த அறைக்குள் நுழைந்துவிடலாம். இதோ இப்படி!''

மன்னார்தாசன் அருகில் இருந்த விசையைச் சுற்ற அலமாரியின் மரப்பலகை ஓசையின்றித் திறந்தது. அடுத்த அறையின் பட்டாபிஷேக ஓவியம் இரண்டாக பிரிந்து வழிவிட்டது.

''சில சந்தேகமான விருந்தினர்களைக் கண்காணிப்பதற்காக இது கட்டப்பட்டது. இப்பொழுது சந்திரவதனாவின் காதலனைக் கையும் களவுமாகப் பிடிப்பதற்கு இது நமக்கு உதவப் போகிறது. நாம் இருவரும் பத்து வீரர்களுடன் தினமும் இந்த இடத்திற்கு இரவில் வந்து மறைந்து இருக்க வேண்டும். அரம்பையர் முகத்தில் நமது முகம் வைத்துப் படுக்கை அறையைக் கண்காணிக்க வேண்டும்.

சரியான தருணம் பார்த்து இதனைத் திறந்து கொண்டு அனைத்துக் காவலர்களுடன் நுழைந்து அவனைப் பிடித்து விட வேண்டும். எப்படி?''

''ஆகா! அற்புதமான திட்டம்! நிச்சயம் வெற்றி நமதே!''

''அப்புறம் இன்னொரு விஷயம்! இளவரசி சந்திரவதனா விருந்தினர் மாளிகையில் அவள் அறையின் மராமத்து முடியும் வரை தங்கி இருக்கப் போகும் விஷயம் தஞ்சை நகர் முழுக்கத் தெரிய வேண்டும். பெண்கள் மூலமும், உளறுவாயர்கள், குடிகாரர்கள் மூலமாக நாளையே நகர் முழுக்கப் பரவும்படி ஏற்பாடு செய். இந்தச் செய்தி அந்தத் திருடர்களுக்கு நாளையே எட்ட வேண்டும்.''

அவர்கள் நினைத்த மாதிரியே அந்தச் செய்தி நாளை அல்ல அதன் மறுநாள்தான் சொக்கநாதன் காதுகளில் வந்து விழுந்தது.

# 40



தஞ்சை இளவரசி சந்திரவதனா தங்கி இருக்கும் அந்தப்புரத்தின் அறை பழுது பார்க்கப்பட்டுப் புதுப்பிக்க இருப்பதால், அந்த வேலைகள் முடியும் வரை அவள் விருந்தினர் மாளிகையில் குடியேற்றப்பட்டு இருக்கிறாள் என்ற விவரம் சொக்கநாதன் காதுகளில் விழுந்தபொழுது அவன் எல்லையற்ற மகிழ்ச்சியில் மூழ்கத் தொடங்கினான்.

துர்க்கை அம்மன் கோயிலில் கடைசியாக இளவரசியைச் சந்தித்து, இதயம் கனத்துத் திரும்பிய நாளில் இருந்து, இந்தச் செய்தி அவனுக்குக் கிடைக்கும்வரை சொக்கநாதன் சோகநாதனாகத்தான் இருந்தான்.

'உங்களை முன்னிலும் அதிமாக வெறுக்கிறேன்' என்றதும், 'ஏமாந்துவிட்டேனே... ஏமாந்துவிட்டேனே' என்ற புலம்பலும் அவன் மூளைக்குள் மாறி மாறி ஒலித்து வேதனைப்படுத்திக் கொண்டிருந்தன.

நான் யார் என்று தெரிந்ததும் சந்திரவதனாவுக்கு முதலில் அதிர்ச்சியாகத்தான் இருக்கும். இருப்பினும் என் மீது கொண்டுள்ள காதலுக்காக அவள் மனம் மாறிவிடும் என்று நினைத்தேன்! முன்னைவிட வெறுக்கிறேன் என்றல்லவா சொல்லிவிட்டுப் போய்விட்டாள். இனி அவள் மனம் மாறுமா?

இதையே மாறி மாறி மனதிற்கு புலம்பிச் சித்திர வதைப் பட்டுக் கொண்டிருந்த சொக்கநாதன் தனது நண்பனிடம் கூடச் சரியாகப் பேசவில்லை. வெங்கடகிருஷ்ணன் அவனை ஆறுதல்படுத்து முகமாகச் சொல்லிய வார்த்தைகளைக்கூடக் காதில் விழாதது மாதிரி, எங்கோ பார்த்தபடி இருப்பான்.

வெங்கடகிருஷ்ணனுக்கு அவனைப் பார்க்கையில் பரிதாபமாக இருந்தது. எதற்கும் அஞ்சாத எவ்வளவு பெரிய வீரன் ஒரு பெண்ணின் காதல் இவனை என்ன பாடு படுத்திவிட்டது!

அவள் வெறுத்ததற்காக உலகையே வெறுத்தது போலல்லவா இருக்கிறான்! காதலுக்குத்தான் எவ்வளவு சக்தி இருக்கிறது!

சொக்கநாதன் மனம் ஒரு பக்கம் சோகமாக இருந்தாலும் மற்றொரு பக்கம் இளவரசியை மறுபடியும் சந்திக்க வேண்டும். அவள் மனதை மாற்ற முயல வேண்டும் என்று துடித்துக் கொண்டே இருந்தது.

இரவும் பகலும் அரண்மனையையும் அந்தப்புரத்தையும், கவனமாகக் கண்காணித்து வந்தார்கள். மன்னார் தாசன் காவல் பொறுப்பினை ஏற்ற பிறகு அந்தப்புரத்திற்குள் நுழைவது என்பது மிகக் கடினமாக இருந்தது.

எந்த வழியில், எப்படி இளவரசியைத் தனிமையில் சந்திக்கலாம் என்று ஒவ்வொரு விநாடியும் தவித்துக் கொண்டிருந்த சொக்கநாதன் காதுகளில் இந்தச் செய்தி வந்து விழுந்தபொழுது மழைத்துளி விழுந்த பாலைவனப் பயிரை போலப் புத்துயிர் பெற்றான்.

அன்று இரவே வெங்கடகிருஷ்ணனுடன் விருந்தினர் மாளிகையின் அமைப்பையும் காவலையும் ரகசியமாக நோட்டமிடத் தொடங்கினான்.

தொடர்ந்து இரண்டு நாட்கள் உற்றுக் கவனித்தார்கள்.

விருந்தினர் மாளிகை என்ற அந்தச் சிறிய கட்டிடம் அரண்மனைக்கும், அந்தப்புரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில், இரண்டு மதிற் சுவர்கள் இணையும் மூலைக்கு அருகில் அமைந்திருந்தது. அதுமட்டுமல்ல, மதிற்சுவரில் இருந்து சுமார் இருபதடி தூரமே இருந்தது.

விருந்தினர் மாளிகையை ஒட்டி இருந்த பிரமாண்ட மான மரத்தின் கிளை ஒன்று மதிற்சுவருக்குச் சற்று மேலே வளர்ந்து காணப்பட்டது. மதிற்சுவரில் ஏறி, மிக எளிதாக அந்தக் கிளையில் தொற்றிவிடலாம்.

அடுத்தபடியாகக் காவல் வீரர்களைப் பார்த்ததில் அவன் மனதில் மகிழ்ச்சி இன்னும் பெருகியது.

இரவுப் பணிக்காக அமர்த்தப்படும் காவலர்களைத் திங்கள் ஒருமுறை மாற்றுவது தஞ்சை அரசின் வழக்கம் என்பது அவன் அறிந்ததுதான்.

இம்முறை காவலுக்கு அமர்த்தப்பட்டவர்கள் அர்த்த ஜாமம் வரை ஒழுங்காகக் காவல் புரிந்துவிட்டு, அதன் பிறகு கள்ளைக் குடித்துவிட்டுக் கண் அயர்வதையும் கவனித்தான்.

இனி இளவரசி தங்கி இருக்கும் விருந்தினர் மாளி கைக்குள் நுழைவது எளிது என்று அவன் மனம் குதூலிக்கத் தொடங்கியது.

ஒரு நாட்டின் இளவரசி, அதிலும் இந்த நாடே வியக்கும் பேரழகு கொண்டவள். மன்னரின் செல்லப் பெண் இத்தகைய இடத்தில் தங்க வைக்கப்பட்டிருப்பதை யும், இந்த இடத்தில் பணிபுரியும் அசட்டையான காவல் வீரர்களின் தகுதியையும், அந்தப்புரத்தில் இருந்து இளவரசி மட்டும் தனியாக தங்க வைக்கப்பட்டு இருக்கும் நிலையையும் சொக்கநாதன் சற்று ஆழமாகச் சிந்தித்துப்

பார்த்து இருந்தால் அவன் மனதில் நிச்சயம் சந்தேகம் எழுந்திருக்கும்.

ஆனால் அவனை எந்நேரமும் வாட்டிக் கொண்டிருக்கும் காதல் விரக்தி சொக்கநாதனைச் சரிவரச் சிந்திக்க விடவில்லை.

அடுத்த நாள் இரவு அர்த்த ஜாமத்திற்குப் பிறகு அந்தப்புரக் காவலர் தூங்கியதும் இளவரசி தங்கி இருக்கும் மாளிகைக்குள் புகுந்துவிட இருவரும் முடிவு செய்தனர்.

அந்த இரவும் கவிழத் தொடங்கியது.

முதல் ஜாமம் முடிந்து இரண்டாம் ஜாமம் துவங்கும் நேரத்தில் இளவரசி சந்திரவதனா விருந்தினர் மாளிகையில் உள்ள் படுக்கை அறையில் மஞ்சத்தின் மீது படுத்துக் கிடந்தாள்.

மனதில் சொக்கநரதனைப் பற்றிய எண்ணங்கள் புரளத் தொடங்கின. வேதனையும், விரக்தியும் அவளை வாட்டி எடுக்கும் வேலையில் இறங்கின.

பகல் முழுவதும் அவளுக்குப் பிரச்சினைகள் இல்லை. அவளது அன்னையரின் அறைகளிலோ அல்லது அந்தப் புரத்துத் தோழியர் அறைகளிலோ சென்றிருந்து பேசிக் கொண்டிருப்பாள். இல்லை ஏதாவது விளையாட்டுக்களில் ஈடுபட்டு இருப்பாள்.

அப்பொழுதுகூடச் சொக்கநாதன் நினைவும், அவனால் இவ்வளவு மோசமாக ஏமாற்றப்பட்டு விட்டோமே என்ற வேதனையும் உள்ளுக்குள் எழுந்தாலும் மற்றவர்கள் பேச்சிலும், விளையாட்டின்மீது வலிய ஏற்படுத்திக் கொண்ட உற்சாகமும் ஓரளவு அதனை மறக்க வைக்கும்.

ஆனால் இரவு நேரத்தில் முழுக்க முழுக்கத் தனிமையில் இருக்கும்பொழுது அந்த நினைவுகள் முழு வேகத்தில்

விஸ்வரூபத்தில் அவளை விழுங்கி வேதனைக்குள் ஆழ்த்திக் கொண்டிருந்தன.

தன்னுடைய மாளிகையை விட்டு வேறு ஒரு புது இடத்தில் தங்கி இருப்பது வேறு அவள் மனதைப் பாதித்து இருந்தது. பழகாத சூழ்நிலை அவள் தூக்கத்தை அணுக விடாமல் செய்து கொண்டிருந்தது. இந்த இடத்திற்கு வந்திருக்கச் சம்மதித்திருக்கக் கூடாது என்று மனதிற்குள் புலம்பினாள்.

அந்த அறையைச் சுற்றித் தூக்கம் வராத அவளது கண்கள் சுற்றிப் பார்க்கத் தொடங்கின.

நல்ல விசாலமான அறை. அவள் படுத்திருக்கும் மஞ்சத்திலிருந்து சற்றுத் தள்ளி நான்கு பேர் உட்கார்ந்து பேசுவதற்காக ஆசனங்கள் போடப்பட்டிருந்தன.

அதற்கு நேர் மேலே உள்ள சுவரின் கூரையில் அலங்காரமான சரவிளக்கு ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதில் ஏற்றப்பட்டிருந்த தீபங்களின் வெளிச்சம் அந்த ஆசனங்கள் மீதும், அவள் படுத்திருக்கும் படுக்கையின் மீது தெளிவாக வீசிக் கொண்டு இருந்தது.

ஆனால் அவற்றின் வெளிச்சம் அவள் படுக்கைக்கு நேர் எதிரில் உள்ள சுவரில் வரையப்பட்டு இருந்த ராமர் பட்டாபிஷேக ஓவியத்தின் மீது மட்டும் சுத்தமாக விழாமல் இருள் படிந்து காணப்பட்டது.

அங்கு தங்குபவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நோக்கத்துடன் மிகச் சாமர்த்தியமாக, அத்தகைய ஒரு வசதியுடன் அந்தச் சரவிளக்கு செய்யப்பட்டுச் சுவரின் கூரையில் இருந்து தொங்கவிடப்பட்டிருந்தது.

ஒருவேளை அந்தச் சரவிளக்குகள் முற்றிலுமாக அணைக்கப்பட்டு விட்டால்கூட வேறு ஒரு வகையில் அந்த அறைக்குள் வெளிச்சம் சன்னமாக விழும்படியாகச் சாமர்த்தியமாக ஏற்பாடு செய்து இருந்தனர்.

அதாவது அந்த விருந்தினர் மாளிகைக்கு மிக அருகாக, அந்தப் படுக்கை அறையின் சாளரத்திற்குச் சற்று வெளியே உள்ள இடத்தில் கம்பம் ஒன்று நடப்பட்டு, இரண்டு தீப்பந்தங்கள் அதில் பொருத்தப்பட்டிருக்கும். இரவு முழு வதும் அவை எரிந்து கொண்டே இருக்கும்.

அரண்மனை அந்தப்புர வளாகங்களில் இரவு நேரங்க ளில் ஏற்றப்படும் விளக்குக் கம்பங்களில் அவையும் ஒன்று. அதனால் விருந்தினர் நினைத்தால்கூட அவற்றை அணைத்துவிட முடியாது.

சாளரங்களில் கதவுகள் இல்லாததால் அந்தத் தீப்பந் தங்களின் வெளிச்சம் படுக்கை அறை முழுவதும் சன்ன மாக வீசிக் கொண்டுதான் இருக்கும். ஆனால் தூங்குபவர்க ளுக்கு இடையூறாக இருக்கும் அளவுக்கு எரிச்சலான வெளிச்சமாக இல்லாதிருக்கும். அதேசமயம் அந்தப் படுக்கை அறைக்குள் இருப்பவர்களை அடையாளம் கண்டு கொள்ளும் அளவுக்குப் போதுமானதாகவும் அமைந்திருக்கும்.

ஆனால் இளவரசி சந்திரவதனாவோ அந்தச் சரவிளக் குகளில் ஒன்றைக்கூட அணைக்க மனமின்றிப் படுத்துக் கிடந்தாள்.

அதுபோக அவளுடைய மஞ்சத்திற்கு அருகில் சிறிய கைவிளக்கு ஒன்றைக்கூட ஏற்றி வைத்திருந்தாள்.

அதற்குக் காரணம் இருந்தது.

அவள் முதன் முதலாக இந்த மாளிகைக்குக் குடி வந்த அன்று இரவு சரவிளக்குகள் அத்தனையையும் அணைத்து விட்டுத்தான் படுத்தாள். அன்று அவள் பட்டபாடு! அப் பப்பா!

சொக்கநாதன் நினைவுகள் அவளைத் தூங்கவே விட வில்லை. கடுப்புடன் கண்களை இறுக மூடியவாறு படுத் துக் கிடந்தாள்.

முணுக் என்று எங்கோ ஒரு சிறிய சப்தம் கேட்டாலும் விழித்துக் கொள்வாள். அந்த அறைக்குள் தென்படும் இருட்டுப் பகுதியில் யாரோ நின்று கொண்டிருப்பதுபோல் தோன்றும்.

அவசரமாக எழுந்துபோய் அந்த இடத்தைப் பார்ப் பாள். அது ஏதாவது திரைச்சீலையின் நிழலாகவோ, அல் லது ஏதாவது மரச்சாமானாகவோ இருக்கும்.

இதுவரை பழகாத புதிய அறையாகையால், அதில் இருக்கும் ஆசனங்களும், தட்டு முட்டுச் சாமான்களும் அவளுக்கு அத்துபடியாகாததால், அரைகுறை இருட்டில் எதைப் பார்த்தாலும் யாரோ ஒளிந்து கொண்டிருப்பது போல் தோன்றும்.

சொக்கநாதன் எந்த நேரமும் தன்னைத் தேடிக் கொண்டு வரலாம் என்று அவள் மனம் திகில் அடைந்து போய் இருந்ததால், சிறிய சப்தம் கூட அவளை மிரளச் செய்தது. விழித்துப் பார்த்தால் கரிய நிழல்கூட அவளை அரளச் செய்தது.

அன்று இரவு முழுவதும் இப்படிப்பட்ட அவஸ்தை யில் அவள் தூங்காமல் கழித்ததால் அதன்பிறகு வந்த இரவுகளில் இளவரசி அந்த அறையில் உள்ள சரவிளக்கு கள் எதையும் அணைக்காததோடு, மஞ்சத்தின் அருகே சிறிய கைவிளக்கு ஒன்றையும் ஏற்றி வைத்தே படுத்தாள்.

இதனைப் பட்டாபிஷேக ஓவிய ஓட்டை வழியாக நோட்டமிட்டுக் கொண்டிருந்த மன்னார்தாசனுக்கு முத லில் குழப்பமாக இருந்தது.

ஒருவேளை விளக்கு வெளிச்சத்தை வைத்துத் தனது காவலன் அவள் இருக்கும் இடத்தைத் தெரிந்துக் கொள்ளட்டும் என்ற ரகசிய நோக்கமாக இருக்குமோ? என்று சந்தேகித்தான். அதுவும் ஒருவகையில் நல்லதுதான் என்று நினைத்து மகிழ்ச்சி அடைந்தான்.

இளவரசிக்குள் மறுபடியும் சொக்கநாதன் நினைவுகள் வாட்டத் தொடங்கின. படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்தாள். சுற்றிலும் ஒருமுறை நன்றாகப் பார்த்தாள்.

பிறகு எழுந்து சென்று அந்த மாளிகையில் கதவுகள் நன்றாகச் சாத்தப்பட்டு இருக்கின்றதா என்று அசைத்துப் பார்த்துவிட்டு, மறுபடியும் மஞ்சத்தில் வந்து படுத்தாள்.

'எப்படியும் அவர் என்னைத் தேடி வரத்தான் செய்வார். நல்லவேளையாக நான் இந்த இடத்திற்கு மாறி வந்தது அவருக்குத் தெரியாது. அண்ணன் பொறுப்பேற்ற பிறகு அந்தப்புரத்தின் காவற்பணியும் சிறப்பாக இருக்கிறது'.

அவர் ஏதாவது சாகசம் செய்து உள்ளே நுழைந்தால் கூட என்னுடைய பழைய அறைக்குள்தான் போவார். அங்கு என்னைக் காணாமல் ஏமாந்து போவார்.

அதன்பிறகு நான் தங்கி இருக்கும் அறை பற்றிய விவரங்கள் அவருக்கு முழுமையாகக் கிடைப்பதற்குள், என்னுடைய அறை பழுது பார்க்கப்பட்டு அங்கு சென்று விடுவேன். அவர் இங்கு வந்து பார்த்து ஏமாறலாம்.

ஒருவேளை எதிர்பாராதவிதமாக இங்கே வந்துவிட்டால்? வரட்டும். நானே காவலர்களை அழைத்து அவரை ஒப்படைக்கிறேன். ஒரேயடியாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படட்டும்.

இந்த எண்ணத்தில் இளவரசி தூங்க முயற்சித்தாள்.

## சந்திரவதனா

இரவின் இரண்டாம் ஜாமத்தில் பாதி கழிந்த பிறகு தஞ்சை அரண்மனையும் அந்தப்புரமும் சுறுசுறுப்பு குறைந்து உறக்கத்தில் நுழையத் தொடங்கியது.

மன்னார்தாசனும், அக்கிராஜுவும் தங்கள் நம்பிக் கைக்குரிய பத்து வீரர்களுடன் விருந்தினர் மாளிகையை ஒட்டிய கட்டிடத்திற்குள் ரகசியமாக நுழைந்து கதவடைத்தனர்.

அதன் கடைசி அறையான பட்டாபிஷேக ஓவியத்தின் பின் பக்கச் சுவரில் பதிந்திருந்த அலமாரிக்குள் நுழைந்து அரம்பை ஓவியத்தை நெம்பி எடுத்து, அந்த ஓட்டை வழியாக மன்னார்தாசன் உற்றுப் பார்த்தான்.

அங்கே படுக்கை அறையில் இளவரசி கண்களை மூடிப்படுத்திருப்பது தெரிந்தது. மறுபடியும் ஓவியத்தை ஓட்டையில் பதித்துவிட்டு, அந்த இடத்தில் அவனும் அக்கிராஜுவும் உட்கார்ந்து கொண்டனர்.

நடுராத்திரி கழிந்தவுடன் சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் அந்தப்புரத்து மதிற்சுவர் ஓரமாக வந்தனர்.

காவல் வீரர்கள் குடித்துவிட்டு ஓரிடத்தில் கண்ணயர்ந்து இருப்பது தெரிந்தது. திருப்தியுடன் மதில் மீது கயிறு வீசி இருவரும் ஏறினர். சுவரின் உச்சியில் பதுங்கியவாறு விருந்தினர் மாளிகை முழுவதும் நோட்டமிட்டனர்.

அதன் வாயிலில் காவல் காக்கும் வீரர்கள் உட்கார்ந்தவாறு உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. மாளிகையைச் சுற்றிலும் வேறு ஆட்கள் நடமாட்டமோ, மறைந்து இருப்பது மாதிரியோ எதுவும் இல்லை என்று சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிந்தது.

பின்னர் இருவரும் மதிற்சுவரின் மேலே தெரிந்த கிளையைப் பற்றி ஏறி, அதன் வழியாக விருந்தினர் மாளிகையின் சாளரம் வரை வந்தனர்.

வெங்கடகிருஷ்ணனை அந்த மரத்தின் கிளை மீதே பதுங்கி இருக்குமாறு சொல்லிவிட்டுச் சொக்கநாதன் மட்டும் சாளரத்திற்குள் குதித்தான்.

இளவரசி இப்பொழுதுகூடத் தூங்காமல் வெறுமனே கண்களை மூடிப்படுத்திருந்ததால் இந்தச் சிறு ஓசை கேட்டுத் திடுக்கிட்டுக் கண் விழித்தாள்.

அதேசமயம் பட்டாபிஷேக ஓவியத்தின் பின்புறத்தில் பதுங்கி இருந்த மன்னார்தாசனும், அக்கிராஜுவும் சொக்கநாதன் அறைக்குள் குதித்த ஓசை கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து, அரம்பையர் ஓவியத்தை ஓசையின்றி நெம்பி எடுத்து, அதற்குள் தங்கள் தலைகளை நுழைத்துக் கொண்டு உள்ளே நடப்பதைக் கவனிக்கத் தொடங்கினர்.

# 41



விருந்தினர் மாளிகையை ஒட்டி இருந்த மரக்கிளை வழியாகக் கட்டிடத்தின் சாளரத்தின் மீது வந்து இறங்கிய சொக்கநாதன், அதிலிருந்து கீழுள்ள தரையின் உயரம் சற்று அதிகமாக இருந்ததால், அவன் எவ்வளவோ கவனமாக இருந்தும் அந்தச் சத்தம் இரவின் அமைதியில் பலமாகவே கேட்டுவிட்டது.

மனப்போராட்டத்தில் தூக்கம் வராமல் கண்களை மூடிப்படுத்துக் கிடந்த சந்திரவதனா திடுக்கிட்டு கண் விழித்தாள்.

சாளரத்தின் அருகே இருந்து ஆண் உருவம் ஒன்று அவளை நோக்கி வருவது தெரிந்தது. அவசரமாக எழுந்து உட்கார்ந்தாள்.

''யாரது?'' என்று அதட்டலாக அவள் குரல் வெளிப் பட்டாலும், உள்ளுக்குள் திகிலாக இருந்தது.

அதற்குள் அவளது மஞ்சத்தருகே நெருங்கிவிட்ட சொக்கநாதன் ''நான்தான் சந்திரா! கத்தாதே!'' என்றான் அவசரமாக.

அறையின் கூரையில் இருந்து தொங்கிய அனைத்துச் சரவிளக்குகளும் எரிந்து கொண்டிருந்ததாலும், அவளது

மஞ்சத்தின் அருகே வைக்கப்பட்டிருந்த கைவிளக்கு வேறு அதிகமான வெளிச்சத்தை வீசியதாலும் இருவரும் ஒருவரை ஒருவர் நன்றாக அடையாளம் கண்டு கொள்வதற்குப் போதுமானதாக இருந்தது.

இளவரசிக்குத் திகில் மறைந்து கோபமும், வெறுப்பும் ஏழ, ''எதற்காக இங்கே வந்தீர்கள்? மரியாதையாக வந்த வழியே போய்விடுங்கள்'' என்று உரத்த குரலில் சொன்னாள்.

''என் உயிர் இங்கே இருக்கும்பொழுது நான் வேறு எங்கு போக முடியும் கண்ணே?'' என்றவாறு அவளருகே நெருங்கி அவள் கையைப் பற்றினான்.

மறுவிநாடி மின்னல் தாக்கியது போலப் பட்டென்று அவனது கையைச் சினத்துடன் உதறினாள்.

''இனி என்னைத் தொடாதீர்கள்! அந்த அருகதை உங்களுக்கு இல்லை. மரியாதையாக வெளியே போகிறீர்களா இல்லையா?''

''ஏன் கண்ணே என்மீது இவ்வளவு கோபப்படுகிறாய்? அன்று கோயிலில் இருந்து நீ அழுதுகொண்டு சென்ற நாளில் இருந்து நான் பசி, தாகம் எதுவும் இன்றி உன் நினைவில் பைத்தியம் போல் இருக்கிறேனே! என் மனதை ஏன் வதைக்கிறாய்?'' இரைஞ்சிக் கேட்டான்.

''எதுவும் பேசாதீர்கள்? உங்களைப் பார்ப்பதையே நான் வெறுக்கிறேன். இப்பொழுது நீங்கள் போகிறீர்களா, இல்லை காவலர்களை அழைக்கட்டுமா?'' கடுஞ்சினத்துடன் கூறினாள்.

இதைக் கேட்டவுடன் சொக்கநாதனின் கண்கள் லேசாகக் கலங்கியது. நின்று கொண்டிருக்கும் அவளது காலருகே மண்டியிட்டு அவளது வலது கரத்தைப் பற்றினான்.

இளவரசி ஆத்திரத்துடன் அவனது கையை உதற முயன்றாள். சொக்கநாதன் அவள் உதற முடியாதபடி கெட்டியாக அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு இரைஞ்சும் குரலில் சொன்னான்.

''நீ என்னை இவ்வளவு தூரம் வெறுத்த பிறகு, இனி நான் உயிர் வாழ்வதில் அர்த்தமே இல்லை. தாராளமாக காவலர்களைக் கூப்பிடு. நான் உன் கையைவிடப் போவ தில்லை. காவலர்கள் வந்து என்னைக் கொன்றுவிட்டுப் பிறகு உன் கையை என்னிடமிருந்து விடுவிக்கட்டும்'' என்றவாறு அவள் கரத்தினை இறுகப் பற்றித் தன் கன்னத் தில் வைத்தவாறு கூறினான்.

சற்று நேரம் பிரமை பிடித்தவள் போலிருந்த சந்திர வதனா, பிறகு அவனிடமிருந்து தனது கையை விடுவிக்க முடியாதவளாய், அப்படியே அவனருகில் தரையில் உட் கார்ந்து குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

சொக்கநாதன் அறைக்குள் குதித்ததுமே, பக்கத்து அறைக்குள் பதுங்கி இருந்த மன்னார்தாசனும், அக்கிராஜு வும் பட்டாபிஷேக ஓவியத்தில் இருந்த அரம்பையர் தலைகளை நெம்பி எடுத்து, அதன் வழியாகத் தங்களது தலைகளை நுழைத்து அந்த அறைக்குள் நடந்து கொண்டி ருக்கும் அத்தனை நிகழ்ச்சிகளையும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அறைக்குள் வெளிச்சம் அபாரமாக இருந்ததால் சொக்கநாதனைப் பார்த்ததுமே மன்னார்தாசனுக்கு அடை யாளம் துல்லியமாகத் தெரிந்தது.

இவன்தான் எனக்குச் சாதகமாக என் தந்தையிடமே அன்று மிகத் துணிச்சலாகப் பேசியவன்! இவனைத்தான் அன்று அந்தப்புரத்திற்குள் நுழைந்த பொழுது கையும் களவுமாகப் பிடித்தேன்! இவனேதான்! சந்தேகமே இல்லை!

இவன்தான் என் தங்கையின் காதலன் என்று நான் அனுமானித்தது எவ்வளவு சரியாகப் போய்விட்டது!

ஆனால் இவன் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவன்? இவன்மீது சந்திரவதனா எப்படி மையல் கொண்டாள்?

இப்பொழுது இவர்கள் பேசுவதைப் பார்க்கும் பொழுது இவர்களுக்குள் ஏதோ ஊடல் என்று மட்டும் புரிகிறது. என்ன காரணத்திற்காக என்று தெரிய வில்லையே!

மன்னார்தாசன் மனதிற்குள் இத்தகைய குழப்பம் எழுந்தபோதிலும் அவன் மூளை சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியது.

பட்டாபிஷேக ஓவியத்திலிருந்து தலையை மெதுவாக எடுத்து, அருகில் இருந்த அக்கிராஜுவைச் சுரண்டினான். ராஜுவும் தலையை எடுத்து இளவரசன் காதருகே தலை யைத் தாழ்த்தினான்.

''ராஜு, இவன்தான் அவன்! புரிகிறதா?'' கிசுகிசுத் தான்.

ராஜு தலையை ஆட்டினான்.

''இவன் மட்டும் தனியாக வந்திருக்கமாட்டான். நிச்ச யம் இவனது தோழன் வெளியே மறைந்திருப்பான். என்ன ஆயிற்று நமது வீரர்களுக்கு? இதுவரை ஒன்றும் கேட்க வில்லையே?''

''சற்றுப் பொறு. அநேகமாக...'' என்று அக்கிராஜு சொன்ன அதே நேரத்தில் தூரத்தில் இருந்து ஆந்தை கத்தும் ஓசை துல்லியமாகக் கேட்டது.

''அதோ... அவர்களது சத்தம்... இன்னொருவனைப் பார்த்து விட்டார்கள் என்று நிச்சயமாகிவிட்டது. இன்னும் சற்று நேரத்தில் அவனைப் பிடித்து விடுவார்கள்.''

மன்னார்தாசனின் திட்டப்படி தனது தங்கையின் காதலனுடன் வரும் நண்பன் நிச்சயமாகச் சாளரத்தின் அருகிலோ அல்லது சாளரத்தில் ஒட்டி இருக்கும் மரக்கிளையிலோதான் பதுங்கி இருக்க முடியும் என்பதால், அவனைப் பிடிப்பதற்காக சமயோசிதமான ஏற்பாடு ஒன்றை செய்திருந்தான்.

தேர்ந்தெடுத்த வீரர்கள் நால்வரை சாளரத்தை ஒட்டி இருக்கும் மரக்கிளைக்கு நேர் மேலே இருக்கும் மற்றொரு கிளை மீது படுத்திருந்து பார்க்கும்படியும், வேறு நால்வரைச் சாளரத்தில் இருந்து தூரத்தில் இருக்கும் ஒரு புதருக்குள் மறைந்திருக்கும்படியாகவும் சொல்லி இருந்தான்.

மரக்கிளையின் மேலே மரமோடு மரமாகப் பல்லி போல ஒட்டிக் கொண்டு படுத்திருந்த நால்வரும் கறுப்பு நிற உடை அணிந்து, உடல் முழுவதும் கரி பூசிக் கொண்டிருந்ததால், அவர்கள் பதுங்கி இருந்தது, சொக்கநாதன் கண்களிலோ இல்லை வெங்கடகிருஷ்ணன் கண்களிலோ படவே இல்லை.

சொக்கநாதன் சாளரத்தின் வழியாக உள்ளே சென்றுவிட்டதும் வெங்கடகிருஷ்ணன் மட்டும் மரக்கிளையில் பதுங்கி இருப்பதைப் பார்த்து, அவர்களில் ஒருவன் ஆந்தைபோல் குரல் எழுப்பினான்.

ஆந்தைக் குரல் கேட்டதும் வெங்கடகிருஷ்ணன் திடுக்கிட்டுத் தனக்கு நேர் மேலே இருக்கும் கிளையை ஏறிட்டுப் பார்த்தான். அதேநேரம் அந்த வீரர்கள் மேலிருந்து அவன் மீது பாய்ந்து மரத்தோடு மரமாக அழுத்தினார்கள்.

'ஹ் ஹ்க்க்' என்ற ஒரு சத்தம் மட்டும்தான் வெங்கடகிருஷ்ணனிடமிருந்து எழுந்தது. அதன்பிறகு அவன் தொண்டையில் இருந்து குரலே எழாதபடி அவர்கள் அவன் மீது கெட்டியாக அழுத்திக் கொண்டனர்.

பின்னர் ஒருவன் அவன் வாய்க்குள் துணியைத் திணித்து இறுக்கினான். மற்றும் இருவர் அவன் கைகளை கட்டி மரத்தில் இருந்து மெதுவாகக் கீழே இறக்கி, மன்னார்தாசன் மறைந்து இருக்கும் கட்டிடத்திற்குள் இழுத்துச் செல்லத் தொடங்கினர்.

**சொ**க்கநாதன் தனக்கு அருகில் உட்கார்ந்தவாறு குலுங்கி குலுங்கி அழுது கொண்டிருக்கும் இளவரசியினைப் பரிதாபமாகப் பார்த்தான். அவன் கண்களும் லேசாகக் கசிந்தன.

அவள் கரத்தை விடுவித்துவிட்டுத் தன் கையை உயர்த்தி அவள் கண்களில் இருந்து வழியும் நீரை துடைத்தான்.

''என்னைத் தொடாதீர்கள்'' என்று சினத்துடன் அவனது கையைத் தட்டிவிட்டாள்.

''என்னை ஏன் இப்படி வதைக்கிறாய் சந்திரா? நான் செய்த சிறு தவறைப் பெரிதுபடுத்தி நீயும் வேதனைப்படுவது மட்டுமல்லாமல் என் மனதையும் நோகடிக்கிறாய்!''

''நீங்கள் செய்தது சிறு தவறா? ஹூம்! மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம்! அதற்குப் பதில் அன்றே என்னை மதயானையிடம் சாக விட்டிருக்கலாம். இப்படி ஏமாற்றி என் கழுத்தை அறுத்து விட்டீர்களே!'' மறுபடியும் கேவிகேவி அழுதாள்.

''உன்னை ஏமாற்ற நான் ஒருநாளும் நினைக்கவில்லை கண்ணே...''

''இனி மீண்டும் கண்ணே மணியே என்று காதல் வார்த்தைகளை என்னிடம் பேசாதீர்கள்!'' எரிச்சலுடன் சொன்னாள்.

''உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வேன் கண்ணே? அதைவிடச் செத்துப்போ என்று சொல். உன் கண் எதிரேயே சாகிறேன்! என்மீது கோபப்படாமல் கேள் சந்திரா!'' என்றவாறு அவள் கரத்தைப் பற்றித் தன் இதழில் வைத்து முத்தமிட்டான்.

சந்திரவதனா மறுபடியும் கையை உதறினாள். சொக்கநாதன் அவள் உள்ளங்கையைக் கெட்டியாகப் பிடித்து, அதன்மீது தன் கையை வைத்து அழுத்தினான்.

''சத்தியமாக உன்னை ஏமாற்ற நான் ஒருநாளும் நினைத்ததில்லை கண்ணே! கங்கைகொண்ட சோழ புரத்தில் உன்னை முதன் முதலாகப் பார்த்தபொழுதே என் உயிர் என்னைவிட்டுப் பிரிந்து போய்விட்டது சந்திரா! அதுவரை நீ என்னை வெறுத்ததை விடப் பலமடங்கு அதிகமாக உன்னை நான் வெறுத்து வந்தேன். சிறு வயதில் இருந்தே அப்படிப்பட்ட வெறுப்பில்தான் என்னை வளர்த்து வந்தார்கள்.''

''அதனால்தான் என்னை இப்படி ஏமாற்றிக் கழுத்தை அறுத்து இருக்கிறீர்கள்!'' என்றாள் எரிச்சலுடன்.

இந்த வார்த்தைகள் மன்னார்தாசனைக் குழப்ப ஆரம்பித்தன. இளம் வயதில் இருந்தே என் தங்கையை வெறுத்ததாகச் சொல்கிறானே! யார் இவன்?

தொடர்ந்து உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினான்.

''மறுபடியும் மறுபடியும் அதே வார்த்தைகளைக் கொட்டி என்னை துன்புறுத்தாதே சந்திரா! என் தாயின் மீது ஆணையாக உன்னை நான் ஏமாற்ற வேண்டும் என்று கனவிலும் நான் எதிர்பார்க்கவில்லை. உன்மீது இருக்கும் வெறுப்பு மட்டும் மாறாமல் இருக்குமானால்; அன்று

மதயானையிடமிருந்து உன்னை மனிதாபிமானத்திற்காகக் காப்பாற்றிவிட்டு அதன்பிறகு மறுபடியும் உன்னைச் சந் திக்க முயன்று இருக்கவே மாட்டேன்.''

ஓஹோ. இவன்தான் மதயானையிடமிருந்து என் தங் கையை காப்பாற்றியவனா! கதை அங்கிருந்து துவங்கி இருக்கிறதா? மன்னார்தாசன் பிரமித்தான்.

''உன்னைத் துன்புறுத்த வேண்டும் என்று நான் நினைத்திருந்தால் மயக்கத்தில் கிடந்த உன்னை அப்படியே தூக்கிக் கொண்டு போயிருக்கலாம். அதை விடுத்து உன் காதலை யாசித்து என் உயிரை எப்படி எல்லாம் பணயம் வைத்தேன். சிந்தித்துப் பார் சந்திரா! என்மீது நீ காதல் கொண்ட பிறகு, எனக்காக நீ எதுவும் செய்யத் தயாரான பிறகு உன்னை நான் ஏமாற்ற நினைத்திருந்தால், உன்னை நன்றாக அனுபவித்துவிட்டு அல்லது உன்னைக் கர்ப்ப மாக்கி விட்டு, நான் யார் என்று நீ அறியாதவாறு நான் மறைந்திருந்தால் உனது நிலைமை என்ன ஆகி இருக்கும் என்று யோசித்துப் பார்.''

இதைத்தானே மதுரவாணியும் சொன்னாள் என்று சிந்தித்துப் பார்த்தது சந்திரவதனாவின் நெஞ்சம்.

''நீங்கள் யார் என்று முதலிலேயே தெரிந்து இருந்தால் சத்தியமாக உங்களை நான் காதலித்தே இருக்க மாட்டேன்.''

சந்திரவதனாவின் இந்த வார்த்தைகள் மன்னார் தாசனை மேலும் குழப்பின. காதலித்தபிறகு கூட என் தங்கை இவ்வளவு வெறுப்பு அடையும் அளவுக்குக் காரண மான இவன் யார்?

''அதனால்தான் நானும் சொல்லவில்லை. என்னைப் பார்க்காமலே என்மீது எவ்வளவு வெறுப்புக் கொண்டிருக்

கிறாய் என்று தெரிந்தபோது என்மனம் எவ்வளவு வேதனை அடைந்தது தெரியுமா? இதற்குக் காரணம் நாமல்ல சந்திரா! நமது குடும்பங்களில் பரம்பரையாக நிலவி வந்த பகை உணர்ச்சி! அதனால்தான் நான் யார் என்று சொல்லாமலேயே உன் காதலைப் பெறுவது என்று முடிவு செய்தேன். நீ என்மீது உண்மையான காதல் கொண்ட பிறகு, உன் மனம் என்மீது மையல் கொண்ட பிறகு, நான் யார் என்று தெரிந்தாலும் என்மீதுள்ள காதல் கரையாது என்று நினைத்தேன்.''

''இல்லை, இல்லை. உங்களை நான் வெறுக்கிறேன். அடியோடு வெறுக்கிறேன்'' முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

சொக்கநாதன் இதயம் கத்திக் குத்துப்பட்டதைப் போலத் துடித்தது. ''சரி சந்திரா, நீ இவ்வளவு தூரம் என்னை வெறுத்த பிறகு இனி நான் உன்னைக் கட்டாயப் படுத்தப் போவதில்லை. உன்னை விட்டு விலகி விடுகி றேன். ஆனால், நிச்சயம் நீயின்றி இவ்வுலகில் நான் வாழப் போவதில்லை. நாளையே நான் செத்துப் போனேன் என்ற சேதி உன்னை வந்தடையும். அதன்பிறகு நீ வேறு யாரையா வது திருமணம் செய்து மகிழ்ச்சியாக இரு. ஒருவனைக் காதலித்துவிட்டு, வேறு ஒருவனைத் திருமணம் செய்யும் அளவுக்கு நிலையற்ற ஒரு பெண்ணைக் காதலித்த எனக்கு சாவு ஒன்றுதான் தகுந்த தண்டனை.''

''இல்லை, இல்லை. நான் வேறு ஒருத்தரையும் மணம் செய்ய மாட்டேன். நானும் செத்துப் போகிறேன்'' என்று குலுங்கி அழுதாள்.

''இரண்டு பேரும் வீணாக எதற்குச் சாகவேண்டும் சந்திரா? உன்னை நான் எப்பாடுபட்டாவது திருமணம் செய்ய முயற்சிக்கிறேன்.''

''நமது திருமணம் ஒருக்காலும் நடக்காது. மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கனான உங்களுக்கு என்னை மணம் செய்து கொடுக்க என் தந்தை உயிரே போனால் கூடச் சம்மதிக்க மாட்டார்.''

இதைக் கேட்டவுடன் மன்னார்தாசன் எல்லையற்ற அதிர்ச்சிக்கு ஆளானான்! அவன் கை வாளின் பிடியில் அழுத்தமாகப் படிந்தது. தன் நண்பனைச் சுரண்டிச் சைகை செய்தான்.

சொக்கநாதன் இளவரசியின் கரத்தைப் பற்றி, ''நமது பெற்றோரின் சம்மதத்தை எப்பாடுப்பட்டாவது நான் பெற முயற்சிக்கிறேன் கண்ணே! நீ மட்டும் என்னை வெறுக்காதே'' என்றான்.

''இல்லை, இல்லை. உங்களை நான் வெறுக்கிறேன். மரியாதையாகப் பேய்விடுங்கள். இல்லையேல் காவலரை அழைப்பேன்'' என்று சந்திரவதனா இந்த வார்த்தைகளை முடிக்கும்பொழுது பட்டாபிஷேக ஓவியம் இரண்டாகப் பிளந்தது.

''தேவையில்லை சந்திரா. உன்னை ஏமாற்றிய இந்தப் பாவியை நானே மேலுலகுக்கு அனுப்புகிறேன்'' என்றவாறு மன்னார்தாசன் தனது வீரர்களுடன் சொக்கநாதனைச் சூழ்ந்து கொண்டான்.



# 42

இராமனின் பட்டாபிஷேக ஓவியம் இரண்டாகப் பிளந்தவுடன் இளவரசன் மன்னார்தாசன், அக்கிராஜு மற்றும் அவர்களைச் சேர்ந்த வீரர்கள் பத்துப் பேர் உருவிய வாட்களுடன் ஓடிவந்து சொக்கநாதனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

எதிர்பாராத இந்த நிகழ்ச்சியைப் பார்த்ததும் இளவரசி சந்திரவதனாவின் இதயத்திற்குள் அதிர்ச்சி மட்டுமின்றி, எல்லையற்ற திகிலும் சூழ்ந்து கொண்டது.

திமு திமு என்று ஓடிவரும் வீரர்களைப் பார்த்ததும் சொக்கநாதன் ஒரு கணம் திகைத்துப் பிறகு சுதாரித்து எழுந்து, தனது வாளை உருவ முயற்சிப்பதற்குள் மன்னார் தாசனின் வீரர்கள் அவன் மீது பாய்ந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள்.

இரண்டு வீரர்கள் சொக்கநாதனின் கைகளைப் பின்புறமாக வளைத்து கயிற்றினால் இறுகக் கட்டினார்கள். இளவரசியும் பயத்துடன் நெஞ்சில் கை வைத்தவாறு எழுந்து நின்றாள்.

சாளரத்தின் அருகே உள்ள மரக்கிளையில் பதுங்கிக் கிடக்கும் தனது நண்பன் வெங்கடகிருஷ்ணன் இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்துவிட்டு ஏதாவது சாகசம் புரிந்து

தன்னைக் காப்பாற்ற முயல்வான் என்று எதிர்பார்த்த சொக்கநாதன் அடுத்த விநாடி அங்கு தென்பட்ட காட்சி யைப் பார்த்ததும் ஏமாற்றத்திற்கு ஆளானான்.

கையையும், வாயையும் கட்டிய நிலையில் வெங்கட கிருஷ்ணனை நான்கு வீரர்கள் அருகே இழுத்து வந்தனர். சொக்கநாதன் முகத்தில் தோல்விக் களை தெரிய ஆரம்பித் தது.

மன்னார்தாசன் சிரித்தபடி சொக்கநாதன் அருகில் வந்து அவன் முகத்தைத் தன் கையால் தூக்கிப் பிடித்தான்.

''என்ன நண்பரே, அன்று என்னுடன் வந்து தங்கு மாறு உங்களை வலிய அழைத்தும் மறுத்துவிட்டீர்கள். இன்று யாரும் அறியாமல் என் தங்கையுடன் தங்க வந்தி ருக்கிறீர்களே, இது நியாயமா?'' என்று கேலியாகக் கேட் டான்.

சொக்கநாதன் தலையைத் தாழ்த்திக் கொண்டான். மன்னார்தாசன் தனது தங்கையைத் திரும்பிப் பார்த்தான். சந்திரவதனா பயத்துடன் அவர்களைப் பார்த்துக் கொண்டி ருந்தாள்.

''பயப்படாதே சந்திரவதனா! உன்னை ஏமாற்றிய இந்தப் பாவிக்கு தகுந்த தண்டனை நான் வழங்குகிறேன்.''

''அண்ணா... இது... இவர்...''

''இவன்தானே நமது இனப்பகைவன் சொக்கநாத நாயக்கன்! மதுரையை அரசாளும் நமது வேலைக்காரன்! இவனைப் பார்க்க வேண்டும் என்று நான் பலகாலம் நினைத்துக் கொண்டிருந்தேன். இவனாகவே நமது வலை யில் வந்து மாட்டி இருக்கிறான். அவ்வளவு சுலமாக இவனை விட்டுவிடுவேனா?''

''நாவை அடக்கிப் பேசு மன்னார்தாசா! எனது கைக ளைக் கட்டிப் போட்டுவிட்டுப் பேடியைப் போல வீறாப் புப் பேசுகிறாயே, வெட்கமாக இல்லை! எனது கைகளை

அவிழ்த்துவிட்டுப் பார். யார் வேலைக்காரன் யார் வீரன் என்பதைப் புரிய வைக்கிறேன்.''

''குற்றம் செய்த உன்னைக் கட்டிப் போடுவதை விட்டுவிட்டுக் கொஞ்சவா முடியும்?''

''குற்றம் என்ன செய்தேன்? கொள்ளை அடித்தேனா இல்லை கொலை செய்தேனா?''

''கொள்ளை கொலை இரண்டையும்தான் நீ செய்து இருக்கிறாய்.''

''என்ன பிதற்றுகிறாய்?''

''பிதற்றவில்லை சொக்கநாதா, நீ செய்த கொலையும், கொள்ளையும் என்னவென்று உனக்கே நன்றாகத் தெரியும்.''

''புரியும்படியாகச் சொல்.''

''ஒன்று அறியாத அப்பாவியான என் தங்கையின் மனதைக் கொள்ளை அடித்தது முதல் குற்றம். இளம் வயதில் இருந்தே உன் பெயரைக் கேட்டாலே வெறுப்ப டைந்து வந்த என் தங்கையின் இதயத்தை நீ யார் என்று சொல்லாமல் ஏமாற்றிக் காதலிக்க வைத்ததன் மூலம் அவள் இதயத்தையே சாகடித்திருக்கிறாயே! இது கொலை இல்லையா?''

''ஒரு பெண்ணைக் காதலிப்பது தஞ்சை நாட்டில் இவ்வளவு பெரிய குற்றமாகக் கருதப்படுவது வியப்பாக இருக்கிறது!'' என்றான் இகழ்ச்சியுடன்.

''எங்களது வேலைக்காரப் பரம்பரையைச் சேர்ந்த நீ எங்கள் நாட்டிலுள்ள ஒரு சாதாரணப் பெண்ணைக் காத லிப்பதற்குக்கூட அருகதை இல்லாதவன்! அப்படி இருக் கும்பொழுது எனது தங்கையையே, இந்த நாட்டின் இளவ ரசியையே காதலித்தது மன்னிக்க முடியாத குற்றம்.''

''மடத்தனமாக இருக்கிறது உன் பேச்சு மன்னார்தாசா! எந்தப் பெண்ணையும் காதலிப்பதறகு ஆண் என்ற ஒரு தகுதி போதும்.''

''அது மற்றவர்களுக்கு! வேலைக்காரப் பரம்பரையில் வந்த உனக்கல்ல.''

இதைக் கேட்டதும் சொக்கநாதன் கோபத்தை அடக்க மாட்டாதவனாய், தன் தோளைப் பிடித்திருந்த வீரர்கள் மீது தொங்கியவாறு கால்களை எவ்வி மன்னார்தாசனை உதைக்க முயன்றான்.

இதை எதிர்பார்த்த மன்னார்தாசன் லாகவமாக விலகியவாறு சொக்கநாதனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்தான்.

''இந்த நாட்டின் இளவரசனை மரியாதை இன்றிக் கால்களால் உதைக்க முயன்றதற்கு உன் கால்களை வெட்டிப் போட வேண்டும்.''

''அண்ணா... இவர்... வந்து'' என்று பயத்துடன் ஏதோ சொல்ல முயன்ற சந்திரவதனாவைக் கைகளால் அமர்த்தினான் மன்னார்தாசன்.

''நீ பயப்படாதே சந்திரா! உன்னை ஏமாற்றிய இந்தப் பதருக்கு இப்பொழுதே தகுந்த தண்டனை வழங்குகிறேன்.''

''நீ யார் எனக்குத் தண்டனை வழங்குவதற்கு? உங்கள் நாட்டில் முறையான நீதிமன்றம் இருந்தால், அதன் முன் என்னை நிறுத்து. நான் செய்த குற்றங்களை மக்கள் முன்னிலையில் எடுத்துச் சொல். நான் தண்டனைக்கு உரியவன் என்று அவர்கள் மத்தியில் நிரூபிக்கப்படுமானால் மகிழ்ச்சியாக அதனை ஏற்றுக் கொள்கிறேன்.''

''உன்னைப் போன்ற வேலைக்கார நாய்களுக்கு நீதிமன்றத் தீர்ப்பு தேவைப்படாது! நான் இந்த நாட்டின் இளவரசன்! என் தீர்ப்பு ஒன்றே போதுமானது!''

''உன்னை நான் புத்திசாலி என்று நினைத்தேன் மன்னார்தாசா! நீயும் உன் தந்தையைப்போல மூளையில் துருப் பிடித்துப் போய் இருக்கிறாய் என்று இப்பொழுதுதானே தெரிகிறது! குற்றமற்ற என்மீது, பரம்பரைப் பகை ஒன்றையே வைத்து நீ முடிவெடுப்பது வியப்புக்குரிய விஷயமாக இருக்காது!''

''நீயா குற்றமற்றவன்! உன் குற்றங்களை வரிசையாகச் சொல்கிறேன். கேட்டுக் கொள். அந்நியனான நீ அந்தப்புரத்தில் அகால வேளையில் நுழைந்தது மட்டுமின்றி, எங்களது தளபதியையும் அவரது மைந்தனையும் அசிங்கமான முறையில் ஏமாற்றியது ஒன்று. பின்னர் என் கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவித் தப்பித்து இரண்டு, என் நண்பனை மயக்கம் வரும் வரையில் அடித்துப் போட்டது மூன்று. சற்று நேரத்திற்கு முன்பாக என்னைக் கால்களால் மிதிக்க முயன்றது நான்கு. இவை எல்லாவற்றையும் விட என் தங்கையின் நெஞ்சத்தைக் கொள்ளை அடித்தது ஐந்து. அவளை ஏமாற்றி அந்த மென்மையான இதயத்தைக் கொலை செய்திருக்கிறாயே, அது ஆறாவது குற்றம். இத்தனைக் குற்றங்களுக்கும் உனக்கு என்ன தண்டனை தெரியுமா?''

சொக்கநாதன் இதைக் கேட்டு இகழ்ச்சியாக அவனைப் பார்த்துப் புன்னகைத்தான். இளவரசி சந்திரவதனா தனது அண்ணனைப் பயத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

''மரண தண்டனை!'' என்றான் மன்னார்தாசன் அதிகாரமாக.

இதைக் கேட்டவுடன் சந்திரவதனா அதிர்ச்சியுற்று ''அண்ணா நான் சொல்வதைக் கேள்'' என்றாள்.

''நீ என்ன சொல்ல வருகிறாய் என்று எனக்குத் தெரியும் சந்திரா! நாளைக் காலையில் இவனுக்கு மரண தண்டனை நிறைவேற்றுவதற்குள் ஏதாவது சாகசம் செய்து

தப்பி விடுவான் என்றுதானே பயப்படுகிறாய்? பயப்ப டாதே! இன்றே, இப்பொழுதே உன் கண் முன்னாலேயே இவர்கள் தலையை வெட்டி, ஈட்டிகளில் குத்தி அந்தப்புர வாசலில் நட்டு வைக்கிறேன். உம். இழுத்து வாருங்கள் சொக்கநாதனை!''

''அண்ணா, அண்ணா.... நான் சொல்வதைக் கேள்'' என்று பதட்டப்பட்டச் சந்திரவதனாவைப் பற்றிக் கவ லையே படாமல் மன்னார்தாசன் முக்காலி ஒன்றை எடுத்து வைத்து, அதன்மீது சொக்கநாதன் தலையைப் பதித்து வைக்குமாறு கட்டளை இட்டான்.

சொக்கநாதனை நான்கு வீரர்கள் இழுத்து வந்து அந்த முக்காலிக்கு அருகில் மண்டியிட்டு படுக்க வைத்தார்கள். ஒருவன் சொக்கநாதனின் தலையை முக்காலி மீது வைத்து அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான்.

இதனைப் பார்த்து வெங்கடகிருஷ்ணன் ஆத்திரத்து டன் தன்னைப் பிடித்துக் கொண்டிருந்த வீரர்களை உதற முயன்றான். அந்த வீரர்கள் இன்னும் இறுக்கமாக அவ னைப் பிடித்துக் கொண்டார்கள்.

மன்னார்தாசன் தனது வாளை உறையில் இருந்து உருவினான்.

மறுவிநாடி இளவரசி சந்திரவதனா பதறிப் போய் தனது அண்ணனின் காலருகே விழுந்து, அவன் காலைப் பிடித்துக் கொண்டு கதறத் தொடங்கினாள்.

''வேண்டாம் அண்ணா! அவரைக் கொல்லாதீர்கள்! என்னைக் காதலித்ததைத் தவிர அவர் வேறு எந்தக் குற்றமும் செய்யவில்லை. அவரை உயிரோடு விட்டு விடுங்கள். இனி அவர் இந்தப் பக்கமே வரமாட்டார்'' கெஞ்சிக் கெஞ்சிப் பதறிப் பதறி அழுதாள்.

''இவனை உயிரோடு விடுவதா? உன்னை ஏமாற்றிய இந்தப் பாவியை கொன்றால்தான் எனக்கு நிம்மதி!'' என்றவாறு ஆத்திரத்துடன் தனது வாளை ஓங்கிச் சொக்க நாதனை வெட்ட முயன்றான்.

''அப்படியானால் புத்தி கெட்டுப் போய் இவரைக் காதலித்த என்னையும் சேர்த்தே கொன்று விடுங்கள்'' என்றவாறு சொக்கநாதன் மேல் விழுந்து அவன் தலையை மறைத்துத் தனது தலையையும் சேர்த்து வைத்துக் கொண் டாள்.

''எழுந்திரு சந்திரா! நீ எதற்குச் சாகவேண்டும்? உனக்கு நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து, நானே உன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்கிறேன். எழுந்திரு'' என் றான் எரிச்சலுடன்.

''என் தலைவிதி நமது இனப்பகைவரைக் காதலித்துத் தொலைத்துவிட்டேன். இனி வேறு ஒருவருடன் என்னால் வாழ இயலாது. அதனால் முதலில் என்னைக் கொன்று விடுங்கள்'' என்றவாறு சொக்கநாதனை நன்றாக மறைத்த வாறு படுத்துக் கொண்டாள்.

''ஹூம்! உன் தலைவிதி நீ இப்படித்தான் சாகவேண் டும் என்றால் நான் என்ன செய்ய முடியும்? உங்கள் இருவர் தலையையும் என் வாள் ஒரே நேரத்தில் துண்டிக் கட்டும். எங்களை அவமானத்திற்கு உள்ளாக்கிய நீ இருப் பதைவிட இறப்பதே மேல்!''

மன்னார்தாசன் வாளை ஓங்கியதைப் பார்த்ததும் சந்திரவதனா பதறிப் போய்த் தன் கண்களை இறுக்கி மூடியவாறு, சொக்கநாதனின் தலையோடு தலையாக அழுத்திக் கொண்டாள்.

இதோ இன்னும் சற்று நேரத்தில் எங்கள் இருவரின் கதையும் முடிந்துவிடும் என்று கண்களை மூடிக் கொண்டி ருந்த சந்திரவதனா நேரம் சற்றுக் கடந்ததும், எதுவுமே

நடக்காததால் மெதுவாகத் தனது கண்களைத் திறந்து பார்த்தாள்.

மன்னார்தாசன் அவளைப் பார்த்துப் புன்னகை புரிந்த வாறு தனது வாளை உறைக்குள் திணித்துக் கொண்டிருந் தான். குழப்பத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். இருப்பினும் தனது தலையைச் சொக்கநாதனிடமிருந்து அவள் அகற்றவில்லை.

மன்னார்தாசன் கண்களால் சைகை செய்ய அக்கி ராஜுவைத் தவிர மற்ற வீரர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறினார்கள்.

''எழுந்திரு சந்திரா! எனது அருமைத் தங்கையையும் அவளது ஆசைக் காதலனையும் என் கையால் ஒரு போதும் கொல்லமாட்டேன்.''

மன்னார்தாசனின் இந்த வார்த்தைகளைக் கேட்டபிற கும் குழப்பம் அகலாமல் மெதுவாக எழுந்து நின்றாள் சந்திரவதனா. வெங்கடகிருஷ்ணனின் கட்டுக்களை அக்கி ராஜுவும், சொக்கநாதனைப் பிணைத்திருந்த கயிற்றினை மன்னார்தாசனும் அவிழ்த்துப் போட்டனர்.

''என்னை மன்னித்துவிடு சொக்கநாதா! உன் வீரத்தி னையும், எனது தங்கை உன்மீது கொண்டுள்ள காதலின் ஆழத்தினையும் அறிந்து கொள்வதற்காக உன்னை மிகவும் அவமானப்படுத்திவிட்டேன்'' என்றவாறு சொக்கநாத னின் தோளைத் தட்டிக் கொடுத்தான் மன்னார்தாசன்.

''பரவாயில்லை மன்னார்தாசா! நானும் சற்று அதிகப் படியாகவே நடந்து கொண்டேன். உன்னிடம் நானும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.''

''வெறும் மன்னிப்பு பற்றாது சொக்கநாதா! எனது தங்கையை நீ மணம்புரிந்து என் பெற்றோரின் கால்களில் விழுந்து வணங்க வேண்டும்!''

''நிஜமாகவா அண்ணா சொல்கிறாய்?'' என்று அதிர்ச்சியும், வியப்பும், மகிழ்ச்சியும் கலந்து கண்களில் நீர் வழியக் கேட்டாள் சந்திரவதனா.

''உண்மைதான் சந்திரா! நீ யாரையோ காதலிக்கிறாய் என்று நான் ஆரம்பத்திலிருந்தே ஐயமுற்றேன். அறியாத வயதில் பருவக் கோளாறில் உனக்குத் தகுதியில்லாத யார் மீதோ மையலுற்று இருப்பாயோ என்று கூட அச்சமாக எனக்கு இருந்தது. பிறகு இவர்களது சாகசம் எனக்குப் பிரமிப்பினை அளித்தாலும், ஒரு பக்கம் நடத்தை கெட்ட திருடர்களாய் இருப்பார்களோ என்ற கலக்கமும் ஏற்பட்டது. உன் காதலன் யார் என்று இப்பொழுழுது தெரிந்த பிறகு, உனக்குப் பொருத்தமான மாப்பிள்ளையைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறாய் என்று திருப்தியாக இருக்கிறது சந்திரா. இனி உங்கள் திருமணத்திற்கு நான் சாதகமாக இருப்பேன்.''

''நமது தந்தை இவரைத் திருமணம் செய்யச் சம்மதிப் பாரா?''

''அதுதான் எனக்கும் சந்தேகமாக இருக்கிறது சந்திரா. சொக்கநாதன் சொன்னது மாதிரி அவருக்கு மூளையே துருப்பிடித்துத்தான் போயிருக்கிறது. அது அவ்வளவு சுலப மாக மாறும் என்று தோன்றவில்லை.''

''அப்படியானால் என்ன செய்வது மன்னார்தாசா?'' என்று வருத்தமாகக் கேட்டான் சொக்கநாதன்.

''முயற்சி செய்து அவர் மனதை மாற்ற முயல்வோம். அதற்கு உனது ஒத்துழைப்பும் வேண்டும் சொக்கநாதா!''

''என்ன செய்ய வேண்டும் சொல். அதன்படியே செய்கிறேன்.''

''இனி இப்படி மறைந்து வந்து என் தங்கையைச் சந்திக்கக் கூடாது. முதலில் உனது தலைநகருக்குச் சென்று,

உன் தாயின் சம்மதத்தினைப் பெற்று முறைப்படி என் தங்கையை மணந்து கொள்ளத் தூது அனுப்பு. அதன் விளைவைப் பார்த்த பிறகு மீதியை யோசிக்கலாம்...''

''சரி மன்னார்தாசா! உன் சம்மதம் ஒன்றே எனக்குப் பெரும்பலம் தருகிறது. சந்திரா, கவலைப்படாதே வெகு சீக்கிரம் தூது அனுப்புகிறேன்'' என்றவாறு அவள் கண்க ளில் வழிந்த நீரைத் துடைத்தான்.

''ஊஹூம்! அவளைத் தொடுவது எல்லாம் திருமணத் திற்குப் பிறகுதான்'' என்ற மன்னார்தாசனின் வார்த்தைக ளைக் கேட்டதும் சிரித்தவாறு இருவரும் விலகி நின்றனர்.

''நான் இப்பொழுதே என் நாட்டிற்கு செல்கிறேன்'' என்றவாறு வெங்கடகிருஷ்ணனை அழைத்துக் கொண்டு சாளரத்தை நோக்கி நடந்த சொக்கநாதனை தடுத்து நிறுத்தி னான் மன்னார்தாசன்.

''திருட்டு வழி வேண்டாம் சொக்கநாதா! நானே உங்கள் இருவரையும் பத்திரமாக அந்தப்புரத்திற்கு வெளியே அழைத்துச் சென்று வழி அனுப்பி வைக்கிறேன். என்ன சந்திரா, சரிதானா?''

மறுபடியும் அனைவரும் சிரிக்க இளவரசி சந்திர வதனாவிடம் கண்களாலே விடை பெற்றான் சொக்கநாதன்.

அதன்பிறகுதான் எத்தனை அதிர்ச்சியான சம்பவங்கள் அடுக்கடுக்காக நடக்கத் தொடங்கின!

# 43



மதுரை அரண்மனையின் அந்தப்புரத்திற்குள் அழகுற அமைந்திருந்த மலர்வனத்தின் மறைவான பகுதி ஒன்றில் சொக்கநாதனும், முத்துநகையும் தனிமையில் உட்கார்ந்திருந்தனர்.

முத்துநகை தனது நெஞ்சில் சுழன்ற ஆசை அனைத்தையும் கண்களில் தேக்கி சொக்கநாதன் முகத்தையே கூர்ந்து பார்த்தவாறு இருக்க, சொக்கநாதன் கண்களோ தொலைதூரத்தை வெறித்துக் கொண்டிருந்தன

''அத்தான்... அத்தான்...'' என்று முத்துநகை பொறுமை இழந்தவளாய் அவன் தோளைத் தொட்டு உலுப்பினாள்.

உடனே நிதானத்துக்கு வந்த சொக்கநாதன் ஒருமுறை சிலிர்த்து ''என்ன... என்ன முத்துநகை?'' என்றான்.

''என்ன ஆயிற்று அத்தான் உங்களுக்கு? தஞ்சையில் இத்தனை நாட்கள் இருந்துவிட்டு வந்திருக்கிறீர்களே அங்கு இளவரசியைச் சந்தித்தீர்களா, அவளிடம் உங்களைப்பற்றி உண்மைகளைக் கூறினீர்களா என்று கேட்ட

தற்கு பதிலே சொல்லாமல் எங்கோ வெறித்தவாறு இருக்கி றீர்களே, அப்படி என்ன சிந்தனை அத்தான்?''

''வேறு ஒன்றும் இல்லை முத்துநகை! என் வாழ்க்கை யில் இதுவரை இரண்டே இரண்டு பெண்களைச் சந்தித்து இருக்கிறேன். இருவருமே எவ்வளவு அற்புதமான பெண் கள்! ஒருத்தி, நான் இன்னொரு பெண்ணையும் விரும்புகி றேன் என்று தெரிந்தும், அந்தக் காதலைச் சேர்த்து வைக்க எவ்வளவு ஆவலாக இருக்கிறாள் என்பது நான் சென்ற பிறவியில் செய்த பெரும் பேறு...''

''அது ஒன்றும் அற்புதம் இல்லை அத்தான். ஒருவகை யில் சுயநலம்தான். உங்கள் சந்தோஷம்தானே என் சந்தோ ஷம்? என்னைப் புகழ்வது இருக்கட்டும். தஞ்சை இளவ ரசி பற்றிச் சொல்லுங்கள்.''

''சந்திரவதனா என்மீது கொண்டுள்ள காதலின் தீவிரத் தினை நான் அன்றுதான் உணர்ந்துகொண்டேன் முத்து நகை...'' என்றவாறு ஆரம்பத்தில் இருந்து நடந்த நிகழ்ச்சி கள் அனைத்தையும் கோவையாகச் சொல்லத் தொடங்கி னான் சொக்கநாதன்.

கேட்டு முடித்தவுடன் பிரமித்துப் போய்விட்டாள் முத்துநகை.

''உங்களைக் காதலித்ததன் மூலம் அவளை எவ்வளவு இக்கட்டான நிலைமைக்கு ஆளாக்கி இருக்கிறீர்கள் அத் தான்! எப்பாடுபட்டாவது அவளை நீங்கள் திருமணம் செய்தே ஆகவேண்டும்! அவளது அண்ணன் உங்களுக்குச் சாதகமாக இருப்பதால் ஒரு பிரச்சினை தீர்ந்தது இல்லையா?''

''மன்னார்தாசன் விஷயம் பிரச்சினையே இல்லை முத்துநகை! அவன் சம்மதிக்காவிட்டால்கூட விஜயராகவ நாயக்கன் எங்கள் திருமணத்திற்கு இசைந்துவிட்டால்

அவன் மறுப்பு எதுவுமே எடுபடாது. இப்பொழுது எங்கள் திருமணத்திற்கு இடைஞ்சலாக இருப்பது எனது தாயும் அவளது தந்தையும்தான். இருவர் மனமும் மாறினால் ஒழிய எங்கள் திருமணம் நடப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.''

''முதலில் அத்தையின் மனதை மாற்றுங்கள். அதன் பிறகு தஞ்சை இளவரசன் சொன்னது போன்று சந்திரவத னாவை மணம் செய்ய அரசு முறைத் தூது அனுப்புங்கள். அதன்பிறகு பார்க்கலாம்.''

''உன் அத்தையின் மனதை மாற்றுவது அவ்வளவு சுலபமாக இருக்காதோ என்று அச்சமாக இருக்கிறது கண்ணே!''

''பேசுவதற்கு முன்பே எதற்கு விரக்தியாகப் பேசுகிறீர் கள்?''

''விரக்தி இல்லை! தஞ்சை மீது அவர்கள் வைத்துள்ள பகையின் ஆழம் அறிந்து பயப்படுகிறேன். இருந்தாலும் அதை மாற்றித்தான் ஆகவேண்டும்.''

''அதற்கு என்னாலான உதவிகளையும் நான் செய்கி றேன் அத்தான்.''

''ஆம். உன் உதவியும் எனக்குத் தேவைப்படும். இன்று மாலை நீ அத்தையிடம் பேசிக் கொண்டிரு. அதன்பிறகு நான் அங்கு வருகிறேன். சந்திரவதனா பற்றி அவரிடம் பேசுகிறேன். அவர் மனதை எப்படியாவது மாற்ற எனக்குச் சிரமம் ஏற்படும்பொழுது நீ எனக்குச் சாதகமாக அவரிடம் பேசுவாயா?''

''கண்டிப்பாகச் செய்கிறேன் அத்தான்.''

சொக்கநாதன் மகிழ்ச்சியுடன் அவள் கைகளைப் பற் றித் தனது கன்னத்தோடு சேர்த்துக் கொண்டான்.

மனதை மயக்கும் மனோகரமான மாலைப் பொழுதில் சொக்கநாதன் தனது தாயின் அறையைத் தேடிச் சென்றான். மகனைப் பார்த்ததும் மகிழ்ச்சியுடன் வரவேற்றுத் தன்னருகில் அமர வைத்தாள் மகாராணி வையாம்பிகாதேவி.

சொக்கநாதன் சொன்னபடியே அவன் வருவதற்கு முன்பே அங்கு அத்தையுடன் பேசிக் கொண்டிருந்த முத்து நகை, சொக்கநாதன் உள்ளே நுழைந்ததுமே அவனைப் பார்த்து வெட்கப்பட்டவள்போல் பக்கத்து அறைக்குள் ஓடி ஒளிந்து கொண்டாள்.

''என்ன சொக்கநாதா, மெய்யாகவே நீ என்னைப் பார்க்கத்தான் வந்தாயா, இல்லை என்னைப் பார்க்க வருவதைப்போல முத்துநகையைத் தேடி வந்தாயா?'' என்று சிரித்தவாறு கேட்டாள் அவன் தாய்.

''போங்கள் அம்மா! உங்களுக்கு எப்பொழுதும் கேலிதான்! உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பற்றிப் பேசுவதற்காக வந்தேன்.''

''என்ன விஷயம்? தென்பகுதி பாளையக்காரர்கள் வரி கொடுப்பதில் சாக்குப் போக்குச் சொல்கிறார்களா? இத்தனை நாட்கள் நீ அங்கு இருந்தும் அவர்கள் பிரச்சினை தீரவில்லையா?''

''எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. காரணம், நான்தான் அங்கு செல்லவில்லையே!''

''அங்கு நீ செல்லவில்லையா? அங்கு போவதாகத் தானே என்னிடம் கூறினாய்? வேறு எங்கு சென்றாய்.''

''தஞ்சாவூருக்கு!''

''என்னது தஞ்சாவூருக்கா?'' அதிர்ச்சியுடன் கேட்டாள்.

''ஆம் அன்னையே! தங்களிடம் முதலில் பொய்யுரைத்ததற்கு என்னை மன்னிக்க வேண்டுகிறேன்'' என்றவாறு அவளது காலருகே மண்டியிட்டு வணங்கி எழுந்தான்.

''உன் திடீர்ப் பணிவு எனக்குப் பயமாக இருக்கிறதே! சொல்லுடா, எதற்காக தஞ்சாவூருக்குச் சென்றாய்?''

''நான்தான் ஏற்கனவே தங்களிடம் சொல்லி இருக்கிறேனே. போரே இல்லாமல் இரு நாடுகளும் இணைய வேண்டும் என்ற எனது லட்சியம் பற்றி!''

''அதற்கும் நீ இப்பொழுது எனக்குத் தெரியாமல் தஞ்சாவூர் சென்று வந்ததற்கும் என்னடா சம்பந்தம்?''

''என்னுடைய லட்சியத்தில் மூன்றில் ஒரு பங்கு நிறைவேறிவிட்டது. அடுத்த பங்கு உங்களுடையதுதான். நீங்கள்தான் கருணை காட்ட வேண்டும்.''

''கருணையா? யார்மீது? விஜயராகவ நாயக்கன் மீதா?''

''இல்லை. அவனது மகள் இளவரசி சந்திரவதனா மீது!''

''என்னது, விஜயராகவ நாயக்கன் மகள் மீது நான் கருணை காட்ட வேண்டுமா? என்னடா சொல்கிறாய்? புரியும்படியாகச் சொல்.''

''தஞ்சை இளவரசி சந்திரவதனாவை உங்கள் ஆசியுடன் நான் மணந்து கொண்டால் தஞ்சையும் மதுரையும் போரே இல்லாமல் இணைந்து விடுமல்லவா?''

இதைக் கேட்டவுடன் ராணி வையாம்பிகாதேவி எல்லையற்ற அதிர்ச்சிக்கு ஆளாகி சற்று நேரம் பேச்சற்று இருந்தாள். உள்ளுக்குள் ஆத்திரம் கனலாகத் தெறிக்க ஆரம்பித்தது.

'இதற்கு விஜயராகவ நாயக்கன் ஒத்துக் கொண்டானா? எனக்குத் தெரியாமல் உன்னை வரவழைத்து, ஏதோ மந்திரம் பண்ணி உன் மனதை அவன் மாற்றிவிட்

டானா? ஆசை வார்த்தைகள் பேசி உன்னை அடியோடு மயக்கிவிட்டானா?'' ஆத்திரத்துடன் வெடித்தாள்.

''விஜயராகவ நாயக்கனுக்கு இந்த விஷயமே தெரியாது அம்மா! அவன் என்னை மயக்கவும் இல்லை ஏமாற்றவும் இல்லை. நான்தான் அவன் மகள் மனதை மாற்றி என்னைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்கச் செய்தேன். ஒன்றும் அறியாத அவள் மனதை மயக்கிக் காதல் புரியும்படி செய்தது நான்தான்.''

''அடப்பாவி! என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டாயே! இதற்காகவா நான் உன்னை பொத்திப் பொத்தி வளர்த்தேன்? உன் தந்தை இறந்து இவ்வளவு காலம் நான் உனக்காக உயிரோடு இருந்ததற்கு இதுவா நான் கண்ட பலன்? உன் தந்தையின் சிதையில் நான் உடன்கட்டை ஏறாமல் போய்விட்டேனே! இந்த வார்த்தைகளைக் கேட்பதற்கா நான் தவமிருந்து உன்னைப் பெற்றேன்'' நெஞ்சு உடைய கண்களில் நீர் பெருகிக் கதறினாள்.

''அம்மா... அம்மா... நீங்கள் இவ்வளவு தூரம் கலங்கும்படியாக அப்படி என்னம்மா நடந்துவிட்டது?''

''என்ன நடந்துவிட்டதா? இதைவிட வேறு என்னடா நடக்க வேண்டும்? எந்த ஊரின் பெயர் உன் காதுகளில் கூட விழக்கூடாது என்று இருந்தேனோ அந்த ஊருக்கே சென்று இருக்கிறாய்? எந்த நாட்டின் சம்பந்தமே வேண்டாம் என்று நமது பரம்பரையே வெறுத்து வந்ததோ அந்த நாட்டின் இளவரசியோடு காதல் புரிந்து வந்தது மட்டுமின்றி என்னிடமே அதைப் பெருமையாகச் சொல்கிறாய்! இதைவிட என் கழுத்தை நீ அறுத்து இருக்கலாம். அதில் கூட எனக்கு இவ்வளவு வேதனை தெரியாது!''

''ஏனம்மா பெரிய பெரிய வார்த்தைகளை எல்லாம் சொல்லுகிறீர்கள்? தாங்கள் வேதனைப்பட வேண்டும் என்று ஒருநாளும் நான் நினைத்ததில்லை.''

''நீ செய்த இந்தக் காரியத்திற்கு வேதனைப்படாமல் மகிழ்ச்சி அடையவா முடியும்?'' சீற்றமுடன் கேட்டாள்.

''நீங்கள் இன்னும் பழைய பகையிலேயே ஊறிப் போய் இருக்கிறீர்கள். நீங்கள் நினைப்பது மாதிரி இல்லை அம்மா. தஞ்சை இளவரசி ரொம்ப நல்ல பெண்! மிகவும் அழகானவள்.''

''இப்படித்தானடா திருமலை மன்னரும் நினைத்து ஏமாந்து போனார். பாம்பின் அழகைப் பார்த்துப் பரவச முற்று உன் பாட்டனார் பட்டபாட்டை பலமுறை உன்னி டம் சொல்லியும் அந்தப் பாதகமான செயலை நீயும் செய்துவிட்டாயே, பாவி... பாவி.''

''இல்லையம்மா. நீங்கள் நினைப்பதுபோல் இல்லை அம்மா. திருமலை மன்னரின் மனைவி அச்சுத ரகுநாதம்மா போல் சந்திரவதனா திமிர் பிடித்த பெண் இல்லை அம்மா. அப்பாவி! நல்ல குணம் உடையவள். உங்களுக்கு ஏற்ற மருமகளாய் அவள் இருப்பாளம்மா.''

''திரும்பத் திரும்ப அதையே சொல்லி என் நெஞ்சைப் பிளக்கிறாயே சொக்கநாதா! குலத்தளவே ஆகுமாம் குணம்னு சொல்லுவாங்க. தஞ்சை நாயக்கர்கள் பரம்ப ரையே திமிர் பிடித்தது.''

''ஒட்டுமொத்தமாக அப்படிச் சொல்ல முடியாது அம்மா.''

''சொக்கநாதா, நீ அறியாப்பிள்ளை, அனுபவம் பற் றாது. இளங்கன்று பயம் அறியாது. பெரியவர் சொல்வ தைக் கேள். அழகான பெண்களுக்கே திமிர் அதிகம் இருக்கும். அதிலும் பரம்பரையாகவே திமிரும் இரத்தத் தில் சேரும்பொழுது, அதனைத் தாங்க நம்மால் முடியாது மகனே. திருமலை மன்னன் கட்டிய இந்தப் பிரமாண்ட மான அரண்மனையைப் பார். இதன் அற்புத அழகில் அச்சுத ரகுநாதம்மாவின் இரத்தச் சேறு ஒட்டி அசிங்கப்பட்

டதை நீ நன்றாக அறிந்துமா இப்படி ஓர் அசட்டுத்தனமான காரியத்தைச் செய்தாய்? திருமலை மன்னனின் புகழைத் தஞ்சைப் பெண்ணின் கொலை களங்கப்படுத்திக் கொண்டு இருப்பதை மறந்துவிட்டாயா? இல்லை மதி இழந்து விட்டாயா?''

''ஒருமுறை நடந்தால் மறுமுறையும் அதேதான் நடக்கும் என்பது என்ன நிச்சயம்?''

''கழுத்தை அறுத்தால் செத்து விடுவார்கள் என்று பார்த்த பிறகும், மறுமுறையும் அதே மாதிரி நடக்காது என்று நினைத்து என்னுடைய கழுத்தை அறுத்துப் பாரேன்.''

''ஏனம்மா இப்படிக் குதர்க்கமாகப் பேசுகிறீர்கள்? நீங்கள் ஒருமுறை அவளைச் சந்தித்துப் பேசினால் நிச்சயம் அவள் நல்ல குணத்தை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.''

''நான் உயிரோடு இருக்கும்வரை தஞ்சை மண்ணை மிதிக்க மாட்டேன். தஞ்சை நாயக்கர் வாரிசுகள் இந்த அரண்மனையில் காலடி எடுத்து வைக்கவும் அனுமதிக்க மாட்டேன்.''

''இதுதான் உங்கள் இறுதியான முடிவா?''

''ஆம், இறுதி முடிவுதான். என் உயிர் இறுதி ஆகும் வரை இதே முடிவுதான்.''

''அப்படியானால் என் உயிர் இறுதி ஆகட்டும். மனதுக்குப் பிடித்த பெண்ணுடன் வாழ முடியாத இந்த உயிர் உங்கள் எதிரிலேயே போகட்டும்'' என்றவாறு தன் இடுப்பில் இருந்த வாளை உருவித் தனது வயிற்றுக்குள் சொருக முயன்றான்.

''சொக்கநாதா!'' என்று பதறிப் போய் ராணி வையாம்பிகா சொக்கநாதனின் வாளை பிடித்த கரத்தின் மீது விழுந்து பற்றினாள்.

அதேநேரம் ''ஐயோ அத்தான்'' என்று அலறியவாறு பக்கத்து அறையில் இருந்து முத்துநகை ஓடிவந்து அவன் கால்களைப பிடித்துக் கொண்டாள்.

சொக்கநாதன் கையில் இருந்த வாளைத் திருகி அவனிடமிருந்து பிடுங்கிய தாய் ''சண்டாளா... பாவி... உன்மீது இவ்வளவு அன்பு வைத்திருக்கும் பெண்ணை மோசம் செய்துவிட்டு நமது எதிரியின் மகளுக்காக உயிரைவிடப் பார்க்கிறீயே... தாயே... மீனாட்சி...'' என்றவாறு அந்த வாளின் பிடியில் முகம் புதைத்து அழத் தொடங்கினாள்.

''முத்துநகையை நான் மோசம் செய்ய நினைத்ததே இல்லை அம்மா. உங்கள் சம்மதத்தோடு தஞ்சை இளவரசியையும், முத்துநகையையும் ஒரே பந்தலில் மணம் புரியத் தான் திட்டமிட்டு இருக்கிறேன்.''

''இரக்கமற்ற பாவி! இவள் முன்னிலையிலேயே இதைச் சொல்கிறாயே, இவள் மனம் என்ன பாடுபடும் என்று சிந்தித்தாயா?''

''இல்லை அத்தை! இந்த விஷயம் எனக்கு முன்பே தெரியும்.''

''என்ன? இந்த விஷயம் ஏற்கனவே உனக்குத் தெரியுமா?''

''அதுமட்டுமல்ல, தஞ்சைக்குச் செல்வதற்கு முன்பு என்னிடம் சொல்லிவிட்டுத்தான் சென்றார். சென்று வந்த பிறகும் அங்கு நடந்த முழுவதையும் காலையிலேயே என்னிடம் சொல்லிவிட்டார்.''

இதைக் கேட்டவுடன் இடிந்து போய் அருகில் இருந்த ஆசனத்தில் தொப் என்று விழுந்தாள் ராணி வையாம்பிகா தேவி.

சொக்கநாதனும், முத்துநகையும் அவளது இரு பக்கமும் அவளது காலருகே உட்கார்ந்தாவறு அவள் காலைப்

பற்றிக் கெஞ்சியவாறு அவளது மனதை மாற்ற முயன்ற னர். சொக்கநாதன் நடந்தது முழுவதையும் அவளிடம் சொன்னான்.

''இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என்கி றாய்?'' என்றாள் கேட்டு முடித்தவுடன்.

''அரசு முறைப்படி தூதுவன் ஒருவனை விஜயராகவ நாயக்கனிடம் பெண் கேட்டு நீங்கள் அனுப்ப வேண்டும்.''

''விஜயராகவன் அதற்கு மறுத்துவிட்டால்?''

''சந்திரவதனா அவனுக்கு மிகவும் செல்லமான பெண். அவள் விருப்பத்தை பாழடிக்க மாட்டான். தவிர அவளது அண்ணன் மன்னார்தாசன் எங்களுக்குச் சாதகமாக இருக்கிறான். அவன் நிச்சயம் தந்தையின் மனதை மாற்றி விடுவான்.''

''எனக்கென்னவோ மனதிற்குள் ஏதோ ஓர் பயம் எழுகிறது சொக்கநாதா! பேரபாயம் ஒன்று நம்மைச் சூழ வருவது போன்று ஓர் உள்ளுணர்வு தோன்றுகிறது மகனே!''

''வீணாகக் கலங்காதீர்கள் அன்னையே! அப்படி எது வும் நிகழாது. தயவு செய்து தூது அனுப்புங்கள் தாயே!'' என்றான் சொக்கநாதன்.

''ஆமாம் அத்தை! அன்னை மீனாட்சியம்மன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, அத்தான் சொன்னபடியே செய் யுங்கள் அத்தை! எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்'' என்றாள் முத்துநகை.

அடுத்த சில நாட்களில் சகல அரசு மரியாதைகளுடன் தஞ்சை மன்னனிடம் பெண் கேட்டு, வெங்கடகிருஷ்ண னைத் தூது அனுப்பினாள் ராணி வையாம்பிகாதேவி!



# 44

பௌர்ணமி தினத்தின் காலைப் பொழுது புலர ஆரம்பித்ததும் கண்களை விழித்த அமைச்சர் மகள் மதுரவாணியின் இதயத்திற்குள் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது.

அதற்குச் சற்று நேரத்திற்கு முன்புதான் அமைச்சர் கோவிந்த தீட்சிதர் கும்பகோணத்திலுள்ள வேத பாடசாலையைப் பார்வையிடும் நோக்கத்தில் வழக்கம்போலக் கிளம்பிச் சென்று விட்டிருந்தார்.

இன்னும் சற்றுநேரத்தில் இளவரசன் மன்னார்தாசனுடன் இன்பமாகக் கழிக்கப் போகும் எண்ணங்கள் புரண்டோட மதுரவாணி வேகவேகமாகத் தன்னை அலங்கரித்துக் கொள்ளத் துவங்கினாள்.

நாட்டைக் குறிஞ்சி ராக ஆலாபனை அவளது குரலில் சன்னமாக இழைய, கண்ணாடி முன்னின்று தனது அலங்காரத்திலுள்ள அரைகுறைப் பிழைகளைச் சரிசெய்தாள்.

பின்னர் பூக்குடலையை எடுத்துக் கொண்டு, தன்னுடைய தாய் இருக்கும் இடத்திற்கு வந்தாள்.

''அம்மா நான் உய்யான வனத்திற்குச் சென்று பூஜைக்கான மலர்களைக் கொய்து வருகிறேன்'' என்றாள்.

''நமது வீட்டுத் தோட்டத்தில்தான் தேவையான மலர்கள் இருக்கின்றதே! எதற்காக நீ உய்யானவனம் வரை சென்று வரவேண்டும் மதுரவாணி?''

''உய்யான வனத்தில் இருக்கும் சில விசேஷமான பூக்கள் நமது வீட்டுத் தோட்டத்தில் இல்லையே அம்மா?''

''இருக்கிற மலர்கள் போதாதா? எதற்காக அவ்வளவு தூரம் சென்று நீ சிரமப்பட வேண்டும் என்று என் மனம் தவிக்கிறது?''

''தினமுமா செல்கிறேன்? ஒவ்வொரு பௌர்ணமி அன்று மட்டும்தானே செல்கிறேன்! அதுவும் எதற்காக? கும்பகோணம் சென்று இருக்கும் தந்தை நலமாக திரும்பி வரவேண்டும் என்பதற்காக இறைவனுக்கு மலர்களால் அலங்காரமும், அபிஷேகமும் செய்து நான் வழிபட்டு வருகிறேன். இப்பொழுது புரிந்ததா?''

இதைக் கேட்டவுடன் நாகாம்பாள் பூரித்துப் போனாள். தந்தையின் மீது அவள் வைத்திருக்கும் அன்பும், இறைவன் மீது அவள் கொண்டுள்ள பக்தியும் அவளைப் பரவசப்படுத்தியது.

''சரி போய் வா'' என்று அனுமதி கொடுத்ததும், மதுரவாணி நிம்மதிப் பெருமூச்சுடன் பூக்குடலையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

வீட்டு வாசற்படியில் இருந்து அவள் இறங்க முற்பட்ட அதே நேரத்தில் நாகாம்பாள் அவசரமாக அவளை நோக்கி ஓடி வந்தாள்.

''வாணி கொஞ்சம் நில்'' என்றாள் அவசரமாக.

''என்னம்மா?'' என்றவாறு வாணி குழப்பத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

''உய்யான வனத்திற்கு எப்படிச் செல்கிறாய்?''

''நேர்வழியாகத்தான் செல்லப் போகிறேன்.''

''அதைக் கேட்கவில்லை. கால் நடையாகவா செல்லப் போகிறாய்.''

''ஆமாம்.''

''வேண்டாம். பல்லக்கில் ஏறிச் செல்.''

இதைக் கேட்டதும் மதுரவாணி திடுக்கிட்டாள். பல்லக்கில் சென்றால், அது பலரது கவனத்தைக் கவருமே என்பதற்காகத்தான் அதனை அவள் தவிர்த்திருந்தாள்.

''எப்பொழுதும் நடந்துதானே செல்வேன் என்பதை மறந்து விட்டீர்களா?''

''இல்லை, உன் தந்தையிடம் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் நீ உய்யான வனத்திற்குச் சென்று மலர் கொய்து வரும் விஷயம் பற்றிச் சொன்னேன். அவர் என்னை மிகவும் 'கோபித்துக் கொண்டார். உன்னை வெளியே தனியே அனுப்ப அவர் மனம் ஒப்பவில்லை. இருந்தாலும் இறைவன் வழி பாட்டிற்காகத் தானே என்று கொஞ்சம் இறங்கி வந்தார்.''

''பிறகு என்ன?''

''மதுரவாணி மலர் கொய்து வரட்டும். ஆனால், வீட்டில் இருந்து கால்நடையாகச் செல்ல வேண்டாம். சிவிகையில் போய் வரட்டும் என்றார்.''

''கால்நடையாகச் சென்று மலர் கொய்து வழிபடுகிறேன் என்று இறைவனிடம் நான் பிரார்த்தித்திருக்கிறேனே அம்மா!''

''இல்லை. இந்த விஷயத்தில் உன் தந்தை பிடிவாதமாக இருக்கிறார். அமைச்சரின் மகள், அந்தண குலப் பெண், அந்தஸ்தைத் துறந்து வீதிகளில் நடந்து செல்வது அவருக்குப் பிடிக்காத ஒன்று.''

''நேர்த்திக் கடனுக்காகத் தானே நடந்து செல்கிறேன்'' என்றாள் எரிச்சலை அடக்கியவாறு.

''இல்லை மதுரவாணி. நான் சொல்வதைக் கேள்! பல்லக்கில் போவதானால் போகட்டும். இல்லாவிட்டால் அவள் போகவே வேண்டாம்' என்று தீர்மானமாகக் காலையில் உன் தந்தை என்னிடம் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். அவர் பேச்சை மீறி என்னால் நடக்க முடியாது.''

''ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டதற்காகத்தான் அப்படிச் சென்றேன் என்று தந்தையிடம் சொல்லிவிடலாம் அம்மா.''

''இந்த் விஷயத்தையே இப்பொழுதுதானே என்னிடம் சொல்கிறாய்! உன் தந்தை என்னிடம் கட்டளை இட்டபடி இன்று பல்லக்கில் சென்று மலர் கொய்து வா. நாளை அவர் கும்பகோணத்தில் இருந்து திரும்பி வந்தவுடன் உன்னுடைய நேர்த்திக் கடன் பற்றிச் சொல்கிறேன். அதன் பிறகு அவர் அனுமதி தந்தால், தாராளமாக நீ நடந்தே உய்யான வனத்திற்குச் சென்று வரலாம்.''

இதற்கு மேல் எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் மதுரவாணியின் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

''என்ன வாணி யோசிக்கிறாய்? உன் தந்தையின் சொல்லுக்கு மாறுபட்டு என்னால் நடக்க முடியாது. பல்லக்கில் சென்று புஷ்பங்களைப் பறித்து வருவதானால் செல். இல்லாவிட்டால் வீட்டுக்குள் சென்று நமது தோட்டத்திலுள்ள மலர்களைப் பறித்துப் பூஜை செய்'' என்றாள் கண்டிப்பானக் குரலில்.

''சரி, நான் தந்தை இஷ்டப்படியே பல்லக்கில் செல்கிறேன்'' என்றாள் எரிச்சலை முகத்தில் காட்டாதவாறு.

''டேய் சிவிகை தூக்கிகளை வரச் சொல்'' என்று நாகாம்பாள் உடனே உத்தரவிடத் தொடங்கினாள்.

சற்று நேரத்தில் மதுரவாணியைச் சுமந்து கொண்டு பல்லக்கு உய்யான வனத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

சிவகங்கைக் குளத்தருகே, எழிலுற அமைந்திருந்த மலர் வனத்தின் வாசலில் வந்து சிவிகை இறக்கி வைக்கப் பட்டது.

சிவிகை தூக்கிகளை அதே இடத்தில் காத்திருக்குமாறு கட்டளை இட்டுவிட்டு, மதுரவாணி பூக்குடலையைக் கையில் எடுத்துக் கொண்டு பல்லக்கில் இருந்து வெளியே வந்தாள்.

சுற்று முற்றும் பார்த்தாள். அதிகாலை நேரமாகையால் ஆள் நடமாட்டம் குறைவாகவே இருந்தது.

திருப்தியுடன் உய்யான வனத்திற்குள் நுழைந்தாள்.

மதுரவாணி மலர் வனத்திற்குள் நுழைந்த சிறிது நேரம் கழித்து இளவரசன் மன்னார்தாசனும் அவனது நண்பன் அக்கிராஜுவும் பூங்காவின் அருகில் வந்தார்கள்.

வனத்தின் வாசலில் பல்லக்கு ஒன்று இறக்கி வைக்கப் பட்டு இருப்பதையும், சிவிகை தூக்கிகள் அதனருகில் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருப்பதையும் பார்த்த மன்னார்தாசன் சற்றுத் தயங்கினான்.

''ராஜு வழக்கத்திற்கு மாறாக மதுரவாணி இன்று பல்லக்கில் வந்திருக்கிறாள் போல் தெரிகிறது. தனியாக வந்திருக்கிறாளா இல்லை அவளுடன் வேறு யாரும் வந்திருக்கிறார்களா என்றும் தெரியவில்லை. நீ இங்கு மறைந்திருந்து நோட்டம் பார். நான் உள்ளே செல்கிறேன்'' என்றான் இளவரசன்.

''சரி. மன்னாரு. நீ எதற்கும் கவனமாக இரு.''

மன்னார்தாசன் தலையாட்டியவாறு. மலர்வனத்தின் மற்றொரு வாசல் வழியாக உள்ளே நுழைய, அக்கிராஜு

மறைவான ஓர் இடத்தில் நின்றவாறு சுற்றிலும் கவனிக்கத் தொடங்கினான்.

தாங்கள் வழக்கமாகச் சந்திக்கும் இடத்திற்குத் தயங்கி தயங்கி வந்து சேர்ந்த மன்னார்தாசன், அங்கு மதுரவாணி மட்டும் தனித்து இருப்பதைப் பார்த்து நிம்மதியும், மகிழ்ச்சியும் அடைந்தான்.

மதுரவாணியும் அவனைப் பார்த்ததும் மகிழ்ச்சியுடன் வந்து அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

''உய்யான வனத்தின் வாசலில் சிவிகையைப் பார்த்ததும் ஒருகணம் பதைத்துப் போய்விட்டேன் வாணி. என்ன இது இன்று சிவிகையில் வந்து இறங்கி இருக்கிறாய்? இது பலரது கவனத்தைக் கவரும் என்பதை நீ உணரவில்லையா?'' என்றான் மன்னார்தாசன்.

''நான் என்ன செய்வேன் இளவரசே? நான் எவ்வளவோ சொல்லியும் என் அன்னை கேட்கவில்லை'' என்றவாறு நடந்தது முழுவதையும் சொல்லி முடித்தாள்.

''சரி. இன்று போகட்டும். அடுத்த தட்வை உன் தந்தையிடம் எப்படியாவது சமாளித்துச் சிவிகையில் வருவதைத் தவிர்த்துவிடு.''

''என் தந்தையின் பிடிவாத குணம் பற்றித் தங்களுக்குத் தெரியாதா? அந்தஸ்து விஷயத்தில் எப்பொழுதுமே குறியாக இருப்பவர். நான் திருப்பித் திருப்பிக் கால்நடையாகத்தான் செல்வேன் என்று பிடிவாதம் பிடித்தால் இங்கு வருவதையே முற்றிலுமாகத் தடுத்து விடுவார். அவர் இஷ்டப்படியே சில தடவை வருகிறேன். பிறகு சிறிது சிறிதாக அவர் மனதை மாற்றப் பார்க்கிறேன். இல்லாவிட்டால் இதைவிடப் பாதுகாப்பாக வேறு ஓர் இடத்தைத் தேர்ந்தெடுப்போம்.''

இருவரும் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஒரு புதர் மறைவில் நெருக்கமாக உட்கார்ந்தனர். மதுரவாணி அவன் கையை ஆசையுடன் எடுத்துத் தனது கன்னத்தில் வைத்து இழைக்கத் தொடங்கினாள்.

மன்னார்தாசன் சிந்தனை எங்கோ சுற்றிக் கொண்டிருந் தது.

''என்ன இளவரசே, நான் உங்கள் அருகில் உட்கார்ந்து இருப்பதை அறவே மறந்துவிட்டு, எங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே?'' என்றவாறு அவன் விரலைப் பிடித்துச் செல்லமாகக் கடித்தாள்.

உடனே தன்னுணர்வுக்கு வந்த மன்னார்தாசன், தனது விரலை அவளது வாயிலிருந்து எடுத்து அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

''சின்ன வயதில் இருந்த உன் குறும்பு, நீ வளர்ந்தது போல் வளர்ந்து விரலைக் கடிக்கும் அளவுக்கு வந்துவிட் டதே!''

''அது இருக்கட்டும். என்ன திடீர் என்று இவ்வளவு சிந்தனை?''

''என் தங்கையின் நிலைமை பற்றி நினைத்தேன். அதுதான் கடந்த சில நாட்களாக என் இதயத்தைக் கலக்கிக் கொண்டிருக்கிறது?''

''சந்திரவதனாவுக்கா? அவளுக்கு என்ன ஆயிற்று?'' பதட்டத்துடன் கேட்டாள்.

''சந்திரவதனா காதலில் ஈடுபட்டிருக்கிறாள்.''

''அவளா? அறியாத பெண்ணாயிற்றே! அவளா காத லில் ஈடுபட்டிருகிறாள்?'' தெரியாதவள் போல் வியப் பைத் தேக்கிக் கேட்டாள் வாணி.

''வயது வந்த பெண்கள் மனதில் என்ன இருக்கிறது என்பதை அந்த ஆண்டவனாலேயே அறிய முடியாது வாணி! அவள் காதலிப்பது ஒன்றும் அதிசயம் அல்ல! ஆனால், அவள் யாரைக் காதலிக்கிறாள் என்று அறிந்த பிறகு தான் எனக்குக் கலக்கமே வந்திருக்கிறது.''

''யாரைக் காதலிக்கிறாள்?''

''மதுரை சொக்கநாத நாயக்கனை!''

''இது... இது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

மன்னார்தாசன் நடந்த விஷயங்களைச் சுருக்கமாகச் சொன்னான்.

''இது பெரிய சிக்கலை ஏற்படுத்தும்போல் தோன்று கிறதே! இதில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?''

''நான் கேள்விப்பட்டவரை சொக்கநாதன் நல்லவன். அவனது வீரத்தையும், அழகையும், புத்திசாலித்தனத்தை நேரில் பார்த்தே அறிந்திருக்கிறேன். சந்திரவதனாவிற்கு எல்லா வகையிலுமே பொருத்தமானவன். ஆனால் இனப் பகைவன் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக என் தந்தை அவர்கள் திருமணத்திற்கு இசையமாட்டார்.''

''பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள்?''

''என் சொல்லுக்குக் கட்டுப்பட்டுச் சொக்கநாதன் விரைவிலேயே பெண் கேட்டுத் தூது அனுப்புவதாகச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறான். அந்தத் தூதுவனிடம் என் தந்தை எப்படி நடந்து கொள்வாரோ? எனக்கும் அவருக்கும் மனஸ்தாபம் துலாபுருஷதான விழாவிற்குப் பின்னர் மிகவும் மோசமடைந்து இருக்கிறது. இந்த நிலை மையில் சொக்கநாதனுக்குச் சாதகமாக நான் பேசினால் அது எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்று என் மனம் குழம்பிக் கலங்குகிறது.''

''எல்லாம் விதிப்படி நடக்கும் இளவரசே! மதுரையிலிருந்து மணவினைத் தூது வரட்டும் பார்க்கலாம். இப்பொழுது என்னைப் பாருங்கள் அன்பரே'' என்றவாறு மறுபடியும் அவன் கையை எடுத்துத் தனது கன்னத்தோடு வைத்து இழைக்கத் தொடங்கினாள்.

சரியாக இந்தச் சமயத்தில்தான் தஞ்சைத் தளபதியான ரங்கப்ப நாயக்கன் வேறு ஒரு வேலையாக உய்யான வனத்தின் பக்கமாக வந்து கொண்டிருந்தான்.

அவன் பார்வை எடுத்த எடுப்பிலேயே மறைவாக நின்று கொண்டு வனத்தைச் சுற்றி நோட்டமிட்டுக் கொண்டிருக்கும் அக்கிராஜுவின் மீது விழுந்துவிட்டது. அதேசமயம் அக்கிராஜு வேறுபக்கமாகப் பார்த்துக் கொண்டு இருந்ததால், தளபதி வருவது அவன் பார்வையில் படவில்லை. தளபதி உடனே சுறுசுறுப்பாக சிந்திக்கத் தொடாங்கினான்.

அக்கிராஜு எதற்காக இப்படி மறைந்து நின்று நோட்டம் பார்க்கிறான்? இளவரசனை விட்டுவிட்டு இவன் தனியாக வரமாட்டானே?

தளபதி தானும் ஓர் இடத்தில் மறைந்து சுற்றிலும் பார்த்தான். வனத்தின் வாசலில் சிவிகை ஒன்று இறங்கி இருப்பது தெரிந்தது.

இது அமைச்சர் வீட்டுப் பல்லக்கு அல்லவா? இதில், இந்த நேரத்தில், இந்த இடத்திற்கு யார் வந்திருப்பார்கள்? ஒருவேளை அமைச்சர் மகள் மதுரவாணியாக இருக்குமோ? அமைச்சர் இன்று கும்பகோணம் போயிருக்கிறார். அவர் மகள் இங்கு வந்திருக்கிறாள். அக்கிராஜு மறைந்து இருந்து நோட்டம் பார்க்கிறான். உள்ளே இளவரசன் இருந்தால்?

அதையும் பார்த்துவிடலாம்!

அக்கிராஜு அறியாதவாறு தளபதி உய்யான வனத்திற்குள் ஏறிக் குதித்தான். மறைந்து மறைந்து ஒவ்வோர் இடமாகப் பார்க்கத் தொடங்கினான்.

அதேசமயம் நேரமாகிவிட்டதால் காதலர் இருவரும் கட்டிப் பிடித்து முத்தமிட்டு விட்டுப் பிரியத் தொடங்கினர். நல்ல வேளையாக அந்தக் காட்சி தளபதியின் கண்களில் விழாவிட்டாலும், மதுரவாணி பூக்குடலையுடன் வெளியேறுவதைப் பார்த்துவிட்டான்.

அவள் வந்த அதே இடத்திலிருந்து சற்று நேரம் கழித்து இளவரசன் சுற்று முற்றும் பார்த்தவாறு வருவது தெரிந்தது.

தளபதியின் மனம் எல்லாவற்றையும் முடிச்சுப் போடத் தொடங்கியது. முகத்தில் குரூரமான மகிழ்ச்சி தோன்றியது.

இதையடுத்த சில நாட்களில் சொக்கநாதனின் அரசு முறைத் தூதுவனாக வெங்கடகிருஷ்ணன் தஞ்சை அரண்மனைக்கு வந்து சேர்ந்தான்.

# 45



நெஞ்சை அள்ளும் மாலைப்பொழுது தஞ்சை நகர்மீது கவியத் தொடங்கிய வேளையில் அரண்மனை வட்டாரமே பரபரப்புக்குள் மூழ்கியது.

மதுரை அரசாளும் மன்னன் சொக்கநாத நாயக்கனின் தாயாரான ராணி வையாம்பிகாதேவி முறைப்படி அனுப்பி வைத்த அரசு முறைத் தூதுவர்களான தளபதி வெங்கட கிருஷ்ணப்ப நாயக்கன் என்ற வெங்கட கிருஷ்ணனும், மதுரை அரசின் பொக்கிஷ அதிகாரியான பேஷ்கார் சின்னத்தம்பி முதலியாரும் ஏகப்பட்ட பரிவாரங்களுடனும் ஏராளமான பரிசுப் பொருட்களுடனும் தஞ்சை மன்னனைச் சந்திக்க வந்திருக்கும் சேதி கேட்டு நாடே வியப்புக்குள்ளாகியது.

மன்னன் விஜயராகவ நாயக்கன் ஏகப்பட்ட குழப்பத்திற்கு ஆளாகினான். பரம்பரை பரம்பரையாகப் பகை நிலவிவந்த நாட்டில் இருந்து இப்பொழுது எதற்காகத் தூது வந்திருக்கிறார்கள் என்று பலவிதமாகச் சிந்தித்துக் குழம்பினான்.

என்ன இருந்தாலும் அரசு முறைப்படி அனுப்பப்பட்ட தூதுவர்களை அவமானப்படுத்தக்கூடாது என்ற

நல்ல எண்ணத்தில் அவர்களையும், அவர்களைச் சேர்ந்த பரிவாரங்களையும், அரண்மனை வளாகத்தில் அமைந் துள்ள விருந்தினர் மாளிகையில் தங்கி ஓய்வு எடுக்கும்படி யான வசதிகளைச் செய்து தருமாறு அதிகாரிகளிடம் உத்தர விட்டான்.

மறுநாள் காலையில் அவர்களைத் தர்பார் மண்டபத் தில் முறைப்படி ஏற்றுக் கொள்வதாகச் செய்தி அனுப்பி னான்.

இந்தச் சமயத்தில் எதற்காகத் தூது? சொக்கநாதன் என்மீது போர் அறிவிப்பு ஏதாவது செய்து இருப்பானோ? ஒருவேளை நான் ஆற்றிய துலாபுருஷதானத்தின் விளை வாக அவர்கள் மனம் மாறி என் தலைமையை ஏற்றுக் கொள்வதாக அனுப்பி இருப்பார்களோ?

எதுவாக இருந்தாலும் தஞ்சை அரசியலில் இது மிக முக்கியமான விஷயம்! தூதுவர்களைச் சந்திக்கும் பொழுது தன்னுடன் சகலரும் இருப்பது நல்லது என்று அவன் மனம் விரும்பியது.

எனவே, அமைச்சர் கோவிந்த தீட்சிதர், தளவாய் ரங்கப்ப நாயக்கன், ராயசங்கள் உள்ளிட்ட சகல அதிகாரிக ளும் மறுநாள் காலை தர்பார் மண்டபத்தில் உரிய நேரத் தில் வந்துவிட வேண்டும் என்று உத்தரவிட்டான்.

மன்னார்தாசனுக்கும் இதே மாதிரிச் செய்தி பறந்தது. அரண்மனைப் பெண்டிர்களும் ஆச்சர்யத்துக்கும் உள்ளா னார்கள். மறுநாள் என்ன நடக்கும் என்று அவர்கள் மனம் பதைபதைத்தன.

இளவரசி சந்திரவதனாவிற்கு இந்தச் செய்தி கேள்விப் பட்டவுடன் ஓர் ஓரத்தில் மகிழ்ச்சி பிறந்தாலும், அதன் விளைவுகள் பற்றிப் பலவாறும் சிந்தனைப்பட்டு, இரவு முழுவதும் தூங்காமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் காலையில் தர்பார் மண்டபத்திற்குள் தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் கம்பீரமாக நுழைந்து அரியாசனத்தில் அமர்ந்து, சுற்றிலும் ஒரு முறை பார்த்தான்.

அவன் கட்டளைப்படியே அமைச்சர் கோவிந்த தீட்சிதர், தளவாய் ரங்கப்ப நாயக்கன், சோழர் காலத் திருமந்திர ஓலைக்கு நிகரான ராயசம் என்னும் தலைமைச் செயலர், வருவாய்த் துறைக் கணக்காளரான அட்டவணை, அவர்களுக்குக் கீழுள்ள சம்பிராட்டிகள், கணக்கர்கள், பொக்கிஷ அதிகாரியான தோஷிகான அதிகாரி முதல் அரசின் உயர் மட்ட அதிகாரிகள் அனைவரும் தங்களுக்கு உரிய ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

இளவரசன் மன்னார்தாசன் மன்னனுக்கு அருகே, அவனது அரியாசனத்தில் இருந்து சற்றுத் தாழ்வான இடத்தில் போடப்பட்டிருந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்திருந்தான்.

தர்பார் மண்டபத்தின் மேலுள்ள உப்பரிகையில் அரண்மனைப் பெண்டிர், கீழுள்ளவர்கள் பார்க்க முடியாத வகையில் அமர்ந்து இருந்தனர்.

அவர்களில் மன்னனின் மனைவியர்களுடன் இளவரசி சந்திரவதனாவும் பதை பதைக்கும் நெஞ்சத்துடன் அமர்ந்
திருந்தாள்.

ராயசம் எழுந்து நின்று, பணிந்து வாய் புதைத்து, ''மன்னர் கட்டளையிட்டால் தர்பார் நிகழ்ச்சிகள் துவங்கலாம்'' என்றான்.

''உம், நடக்கட்டும். முதலில் மதுரையில் இருந்து வந்திருக்கும் தூதுவர்களை வரச்சொல்'' என்றான் மன்னன் கம்பீரமாகத் தனது மீசையைத் தடவியவாறு.

சற்று நேரத்தில் மதுரை அரசுப் பரிவாரங்களுடன் வந்திருந்த கட்டியம் கூறுவோன் தர்பார் மண்டபத்தில் முதலில் நுழைந்து பணிந்து வணங்கி, முறைப்படி அறிவிக்கத் தொடங்கினான்.

★''தஞ்சை மன்னருக்கு எனது பணிவான வணக்கங்கள்! மூவுலகுக்கு அதிபதியும், முக்கடலுக்குச் சொந்தக்காரரும், முடியுடையோர் ஏத்தும் முத்தமிழ் நாயகனும், தென் தமிழ்நாட்டுச் சிங்கமுமான எமது மன்னர் ஸ்ரீசக்கர கோலாகல ஸ்ரீ.ஸ்ரீ.ஸ்ரீ சொக்கநாத நாயக்கரின் தாயான ராணி வையாம்பிகாதேவி அவர்கள் தங்கள் தயவை நாடி, வைவாசசி, சவ்யசாச்சின், சுக்ரீவகிரீடம் போன்ற விருதுகளை பெற்றவரும், அர்ச்சுனனுக்கு நிகரான வீரமும், அவனது பத்துப் பெயர்களுக்குச் சமமான பெயருடனும் திகழ்பவரான எமது தளபதியார் வெங்கடகிருஷ்ணப்ப நாயக்கரையும் எமது அரசின் பொக்கிஷ அதிகாரியான பேஷ்கார் சின்னத்தம்பி முதலியார் அவர்களையும் தங்களது மேலான பேட்டியினை வேண்டி அரசு முறைப்படி தூதுவர்களாக அனுப்பி இருக்கிறார்கள்.''

இதைக் கேட்டு விஜயராகவ நாயக்கன் ஏளனப் புன்னகை ஒன்றைத் தவழவிட்டவாறு ''அவர்களை வரச் சொல்'' என்றான்.

சற்று நேரத்தில் மதுரை அரசின் பரிவாரங்கள் ஏராளமான பரிசுப் பொருட்களை ஏந்தி வந்து தர்பார் மண்டபத்தில் அடுக்கி வைக்கத் தொடங்கினர்.

கடைசியாக வெங்கடகிருஷ்ணனும், சின்னத்தம்பியும் நுழைந்து மன்னனைப் பணிந்து வணங்கினர்.

மன்னன் தலையசைத்து அவர்கள் வணக்கத்தை ஏற்றுக் கொண்டு, முதலில் ஆசனங்களில் அமரச் சொன்னான்.

இருப்பினும் வெங்கடகிருஷ்ணன் பணிவுடன் நின்றவாறு, மிகக் கண்ணியமான முறையில் பேச்சைத் துவங்கினான்.

''எமது ராணியார் அவர்கள் தங்களின் தயவையும், தாராள குணத்தையும் நாடி சீனத்துப்பட்டு முதல் சிங்களத்துத் தங்கம் வரையும், கொற்கை முத்திலிருந்து கோல் கொண்டா வைரம் வரையான நவரத்தினங்களும் தங்களுக்குப் பரிசாக அனுப்பி வைத்துள்ளார்.''

''எப்பொழுதும் இல்லாத அக்கறை இப்பொழுது வையாம்பிகாவிற்கு வந்தது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. என்ன காரணத்திற்காக உங்களைத் தூது அனுப்பி இருக்கிறாள்?''

விஜயராகவன் வார்த்தையில் இருந்த இளக்காரமும், ராணியை மதிக்காமல் பேசிய ஏளனமும் வெங்கடகிருஷ்ணனுக்கு உறைத்தாலும், தான் வந்த நோக்கம் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காகப் பணிவுடன் சொல்லத் தொடங்கினான்.

''எமது மன்னர் சொக்கநாத நாயக்கருக்கு இணையான அழகும், வீரமும் கொண்டோர் இந்த அவனியில் யாரும் இல்லை. அதேபோன்று தங்கள் மகளான இளவரசி சந்திர வதனா தேவியாருக்கு ஒப்பான அழகும், அறிவும் படைத்த ஆரணங்கும் இந்த அகிலம் முழுதும் தேடினாலும் கிடைக்காது. எனவே, இந்த இருவரும் மணம் புரிவதன் மூலம், நமது இரு அரசுகளும் பகை மறந்து ஒன்றுபட வேண்டும் என்று எமது ராணியார் விரும்புகிறார்.''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சினம் சீறிப் பாயச் சிங்கம் போலச் சிலிர்த்து எழுந்தான் விஜயராகவ நாயக்கன்.

''வையாம்பிகாவிற்கு எவ்வளவு தைரியம் இருந்தால் என் மகளைப் பெண் கேட்டு உங்களைத் தூது அனுப்பி இருப்பாள்? தகுதியை மறந்துவிட்டாளா இல்லை குழம்பிப் போய்விட்டாளா?''

''மன்னர் அவர்கள் கோபம் கொள்ளக் கூடாது. தூது அனுப்பியது தங்களைப் போன்று ஒரு நாட்டின் ராணியார் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.''

''ராணி! எனது எதிரில் நின்று பேசுவதற்குக்கூட அருகதை இல்லாத வேலைக்காரர்கள் பரம்பரையில் வந்தவர்களுக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் என்னிடமே பெண் கேட்டு அனுப்பி இருப்பார்கள்? தூதுவன் என்பதால் உன் உயிர் பிழைத்திருக்கிறது. மரியாதையாக உன் பரிசுப் பொருட்களை எடுத்துக் கொண்டு வந்த வழியே போய்விடு'' ஆத்திரத்துடன் அரியாசனத்தில் அமர்ந்து மீசையை முறுக்கினான்.

''மன்னர் தயவு செய்து பொறுமை காக்க வேண்டும். ரிஷிமூலம், நதிமூலம் பார்க்கக் கூடாது என்று பெரியவர்கள் சொல்லியதுபோல அரசுகளின் ஆரம்பத்தைத் தேடி ஆராய்ந்து பார்த்தால் அசிங்கம் நிறைந்ததாக இருக்கலாம். அதனைக் குறையாக வைத்துப் பகை வளர்ப்பது நல்லதல்ல.''

''சிறுவனான நீ எனக்குப் புத்திபுகட்ட முயற்சிக்கிறாயா?''

''மன்னருக்கு அப்படி ஓர் எண்ணம் ஏற்படும்படியாக நான் பேசி இருந்தால் என்னை மன்னிக்க வேண்டுகிறேன். பல தலைமுறைகளுக்கு முன்பாக ஏற்பட்ட விஷயத்தை பெரிதுபடுத்தி நம் இரு நாடுகளும் பகை வளர்த்தது போதும் என்று தங்கள் தந்தையார் ரகுநாதநாயக்கர் அவர்கள் பரோபகாரமாக நினைத்ததனால்தானே தனது தங்கையை எமது மன்னர் திருமலை நாயக்கருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். ஏற்கனவே மணவினைத் தொடர்பு இருந்ததை மறுபடியும் ஏன் புதுப்பித்துக் கொள்ளக்கூடாது என்று எமது ராணியார் விரும்புகிறார்.''

''அதன் விளைவுகள் என்ன ஆயிற்று என்பதை வையாம்பிகா மறந்துவிட்டாளா? இல்லை இந்த வையகம் மறந்துவிட்டதா? யார் மறந்தாலும் இந்த விஜயராகவன் மறக்கவும் மாட்டான்! பெண் என்று பாராமல் கொலை செய்த கொடும்பாவிகளடா நீங்கள்! ஒருமுறை பட்டது போதாதா?''

''அந்தக் கோரமான சம்பவங்களினால் ஏற்பட்ட கறையைப் போக்கிக் கொள்ளவே இது ஒரு வழி என்று ராணி விரும்புகிறார். பழைய சம்பவங்களுக்கு யார் காரணம், யார் பொறுப்பு என்று அலசி ஆராய்ந்து பேச இதுதக்க சந்தர்ப்பம் இல்லை மன்னா. எப்பொழுதோ நடந்த சம்பவங்களை இன்றுவரை மனதில் வைத்துக் கொண்டு, வன்மம் வளர்ப்பது நமது இரு நாடுகளுக்கும், நாட்டு மக்களுக்கும் நல்லதல்ல என்று எமது ராணியார் அபிப்ராயப்படுகிறார்.''

''மதுரை அரச பரம்பரையினர் எமது வேலைக்காரர்கள் வழி வந்தவர்கள். தகுதி குறைவானவர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள என் மனம் ஒப்பாது. என் தந்தையார் பரந்த நோக்கத்துடன் பெண் கொடுத்து பட்ட பாட்டை நான் பார்த்தவன். கொலைக்கு அஞ்சாத பாவிகள்! அவர்களுக்குப் பெண் கொடுக்க என் உயிரே போனாலும் ஒப்புக் கொள்ள மாட்டேன்.''

இந்த வார்த்தைகளை உப்பரிகையின் மேல் இருந்து கேட்டுக் கொண்டிருந்த இளவரசி நெஞ்சு கலங்கித் துடிக்க ஆரம்பித்தாள்.

இளவரசன் மன்னார்தாசனோ இந்தச் சமயத்தில் தந்தையைக் குறுக்கிட்டுப் பேசுவது ஆபத்தான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று உணர்ந்து, கஷ்டப்பட்டுத் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டிருந்தான்.

தளவாய் ரங்கப்ப நாயக்கன் முதல் சகல அதிகாரிகளும் அங்கு நடப்பதைப் பீதியுடன் கவனித்துக் கொண்டிருந்தனர்.

வெங்கடகிருஷ்ணன் தொடர்ந்து பணிவுடனே பேச ஆரம்பித்தான்.

''எந்த ஒரு சாம்ராஜ்யத்திலும் ஒரு சக்கரவர்த்தியின் மைந்தன் அவரைப் போலவே முற்றிலுமாக இருந்ததில்லை என்பது உலக அனுபவம்மிக்கோர் உணர்ந்து கூறி இருக்கிறார்கள். பரம்பரை பற்றிப் பேசுவதை விடுத்துத் தற்போதைய நடைமுறை பற்றி எண்ணிப் பாருங்கள் மன்னா!''

''விரை ஒன்று போட்டால் சுரை ஒன்றா முளைக்கும் என்ற முதுமொழி நீ கேள்விப்பட்டதில்லையா!'' என்றான் இளக்காரமாக மன்னன்.

''எமது மன்னர் சொக்கநாதரைப் பற்றித் தாங்கள் முற்றிலும் அறியமாட்டீர்கள் மன்னா! அவரைப் போன்று இரக்க சிந்தனையும், கருணை நெஞ்சமும் கொண்டவர்கள் யாரும் இல்லை. அவர் அன்பின் இருப்பிடம், அமைதியின் திருவுருவம், தங்கள் மகளை மணம் முடித்தால் அவரைத் தனது தலையில் வைத்துத் தாங்குவார்.''

''இவ்வளவுதானா, இன்னும் அவனைப் பற்றி ஏராளமான பொய்களை அவிழ்த்துவிடப் போகிறாயா?''

''நான் சொன்ன எதிலும் எள்ளளவும் பொய்யோ, புகழுரையோ இல்லை மன்னா. முற்றிலும் உண்மை. தங்கள் மகளை மணம் புரிவதற்கான எல்லாத் தகுதிகளும் நிறைந்தவர் எமது மன்னர்.''

★★''மன்னர் ஹூம்'' இளக்காரமாக உறுமிய விஜயராகவ நாயக்கன் ''அந்தச் சொல்லுக்கே அருகதை இல்லாத

வன் அந்த சொக்கநாதன். மதுரை அரசர்களே வேலைக்கா ரர்கள் வழியில் வந்தவர்கள். அதிலும் இந்தச் சொக்கநா தன் அதற்குக்கூட அருகதை இல்லாத ஊர் பேர் தெரியாத எவனுக்கோ பிறந்தவன்'' என்றான்.

இதைக் கேட்டவுடன் வெங்கடகிருஷ்ணனுக்கு கோபம் எல்லை மீறத் தொடங்கியது.

''மன்னா வார்த்தைகளை அளந்து பேசுங்கள். திரு மலை நாயக்கனின் பேரரும், முத்துவீரப்ப நாயக்கரின் மைந்தருமான எமது மன்னர் சொக்கநாத நாயக்கரை இழிவாகப் பேசுவதை இனியும் என்னால் பொறுக்க முடியாதபடி செய்து விடாதீர்கள்!''

''முத்து வீரப்ப நாயக்கன் மைந்தனா இவன்? இல்லை. எவனுக்கோ பிறந்த இழிபிறவி உங்கள் சொக்க நாதன்! திருமலையின் மகன் முத்து வீரப்பன் இளம் வயதிலேயே காமக் கூடத்தில் திளைத்து உடல்நலம் குன் றிப் போனவன். அதனால் வையாம்பிகா தனக்கு வாரிசு வேண்டி வேறு எவனுடனோ உறவாடிச் சொக்கநாதனைப் பெற்றெடுத்தாள் என்ற விஷயம் எங்களுக்கு எப்பொ ழுதோ தெரியும். இப்படிப்பட்ட இழி பிறவிக்கு என் மகளை மணம் முடிப்பதா? என் உயிர் பிரிந்தால்கூட அது நடக்காது.''

''நாவை அளந்து பேசுங்கள் மன்னா! தூதுவன் என்ற முறையில் வந்ததால் என் மனம் தயங்குகிறது. இல்லை யேல் எங்கள் மன்னரையும் அவர் தாயையும் இகழ்ந்த உங்களை என்ன செய்திருப்பேன் என்று என்னாலேயே நிச்சயிக்க முடியாது.''

''நீ தூதுவன் என்பதனால்தான் நானும் உன்னை உயிரோடு இவ்வளவு நேரம் வைத்திருக்கிறேன். வெளியே போடா நாயே.''

''எமது மன்னர் இதைக் கேட்டு ஆத்திரமுற்றால் என்ன விளைவுகள் ஏற்படும்...''

''என்ன விளைவு ஏற்பட்டாலும் சந்திக்க தயாராக இருக்கிறேன். டேய், இவர்களை முதலில் வெளியேற்று. இவர்கள் கொண்டு வந்த பரிசுப் பொருட்களை வீதியில் தூக்கி எறி.''

கோபமுடன் விஜயராகவ நாயக்கன் உத்தரவிட்ட அதே நேரத்தில், உப்பரிகையில் இருந்தவாறு இத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்த சந்திரவதனா மயங்கி விழுந்தாள்.

---

* *வெங்கடகிருஷ்ணனின் விருதுகள் பற்றிய விவரம்*

*1. Oriental Historical Manuscripts - vo.II - William Taylor page no. 191.*

*2. The Indian Antiqary -. 1917 - page no.58.*

** *"Perhaps he was induced to so act because he knew Choka Natha to be the son of a bastard." - The Madura Country, A Manual - J.H.Nelson part III - page No.191.*

# 46



தஞ்சை அரண்மனையின் அந்தப்புரத்திலுள்ள இளவரசி சந்திரவதனாவின் அறையில் அம்சதூளிகா மஞ்சத்தின் மீது சந்திரவதனா கண்களை மூடி மயக்க நிலையில் படுத்துக் கிடந்தாள்.

அவள் கையைப் பிடித்து அரண்மனை வைத்தியர் நாடி பார்த்துக் கொண்டிருக்க, அருகில் மன்னன் விஜய ராகவ நாயக்கன் அவன் துணைவியார், இளவரசன் மன்னார்தாசன், தளபதி ரங்கப்ப நாயக்கன் ஆகியோர் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''வெறும் மயக்கம்தான். கவலைப்படும்படியாக ஒன்றும் இல்லை. நான் புகட்டிய மருந்து வேலை செய்யத் தொடங்கிவிட்டது. இளவரசியார் மயக்கம் சீக்கிரமே தெளிந்துவிடும்'' என்றார் வைத்தியர்.

''இவளை எதற்காகத் தர்பார் மண்டபத்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்குக் கூட்டிக் கொண்டு வந்தீர்கள்? அங்கு நடந்ததைப் பார்த்துப் பதறி மயக்கம் அடைந்துவிட்டாள்'' என்று மன்னன் தனது மனைவியரைக் கடிந்து கொள்ளத் துவங்கியபொழுது இளவரசி கண்களை விழித்துப் பார்க்கத் தொடங்கினாள்.

''சந்திரா இப்பொழுது எப்படியம்மா இருக்கிறது'' என்று பரிவுடன் அவள் தலையைத் தடவியவாறு கேட்டான் மன்னன்.

இளவரசி பதில் சொல்லாது மலங்க மலங்க விழித்தாள்.

''இளவரசியார் சற்று ஓய்வு எடுக்கட்டும். இப்பொழுது அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்'' என்று வைத்தியர் சொல்ல சேடிப் பெண் இருவரை மட்டும் இளவரசிக்கு அருகில் இருக்கச் சொல்லிவிட்டு மற்றவர்கள் அகன்றனர்.

மன்னன், அவன் மனைவியர், மன்னார்தாசன், தளபதி இவர்கள் அனைவரும் அந்தப்புரத்திலுள்ள மன்னனின் அறைக்குள் வந்து ஆளுக்கோர் ஆசனத்தில் கவலையுடன் உட்கார்ந்தனர்.

ஒவ்வொருவர் நெஞ்சிலும் விதவிதமான எண்ணங்கள் புரள, நீண்ட நேரம் யாரும், எதுவும் பேசாமல் அமைதியுடன் இருந்தனர்.

''நான் முற்பிறவியில் என்ன பாவம் செய்தேனோ, எனக்கு இப்படியெல்லாம் சோதனைகள் வருகின்றன. என் மகளைப் பெண் கேட்டு வரும் அளவுக்குச் சொக்கநாதனுக்கு நெஞ்சுத் துணிச்சல் வந்துவிட்டது விதிப்பயனன்றி வேறு என்ன?'' என்று வெறுப்புடன் சொன்னான் மன்னன்.

''மரம் பழுத்தால் வௌவாலை வா என்று சொல்லி இரந்து அழைப்பார் யாரும் இல்லை என்பார்கள். அழகான பெண் என்று இருந்தால், அவளை மணக்க ஆசைப்பட்டு பலரும் வருவது இயற்கை. அதனை விதிப்பயன் என்றும், முற்பிறவியில் செய்த பாவம் என்றும் வீணாக எண்ணி வருத்தப்படுகிறீர்கள்'' என்றான் மன்னார்தாசன்.

''அதற்காகக் காலம் காலமாகப் பகை இருந்துவரும் நாட்டில் இருந்து பெண் கேட்டு வருவதாடா இயற்கை?''

''ஆம் அது இயற்கையேதான்! அதற்காகத் தூது வந்தவனைத் தர்பார் மண்டபத்தில் இகழ்ந்து பேசியதும், சொக்கநாதன் பிறப்பை அவமானப்படுத்தியதும் நீங்கள் செய்த பெரும் பிழை.''

விஜயராகவன் மகனை முறைத்துப் பார்த்தான்.

''நான் செய்தது பிழையல்லடா! உன்னை மகனாகப் பெற்றேன் பார் அதுதான் பெரும் பிழை! எந்த நேரமும் ஆண்டவன் பால் பக்தி சிரத்தையுடன் இருக்கும் எனக்கு அந்த ஆண்டவனுக்குச் செய்யும் காரியங்களையே எள்ளி நகையாடும் உன்னைப் பிள்ளையாக அடைந்திருக்கிறேனே, இது நான் முற்பிறவியில் செய்த பாவம் இல்லாது வேறு என்ன?''

''உங்களைப் போல் நான் எல்லா வகையிலும் இல்லை என்பதை ஒத்துக் கொள்கிறீர்களா?''

''ஒத்துக் கொள்வதென்ன, அதைத்தான் பலபேர் முன்னிலையில் நீதான் அடிக்கடி நிரூபித்துக் கொண்டுதான் இருக்கிறாயே!'' என்றான் எரிச்சலுடன்.

''இதனைப் போன்றுதான் திருமலை நாயக்கன் மாதிரி அவன் பேரன் சொக்கநாதன் இருக்கமாட்டான் என்று உறுதியாகச் சொல்கிறேன். சொக்நாதனுக்கு என்ன குறை? சந்திரவதனாவுக்கு எல்லா வகையிலும் தகுதியானவன். இன்னும் நன்றாகச் சொல்லப் போனால், சந்திரவதனாவுக்குச் சொக்கநாதனுக்கு நிகரான ஒரு மணாளனை நீங்கள் இந்த மாநிலம் முழுவதும் தேடினாலும் கிடைக்காது.''

''இந்த வார்த்தைகளைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை'' என்று சினத்துடன் கேட்டான் மன்னன்.

''உண்மையையும், நியாயத்தையும் பேசுவதற்கு நான் எதற்கு வெட்கப்பட வேண்டும் தந்தையே?''

''எதுடா நியாயம்? ஊர் பேர் தெரியாத எவனுக்கோ பிறந்த அந்தச் சொக்கநாதனுக்கு என் மகளைக் கொடுப்ப தாடா நியாயம்?''

''எந்த ஆதாரத்தை வைத்து நீங்கள் அப்படி இழிவான வார்த்தைகளைக் கொட்டினீர்கள்? அதுவும் பல பேர் முன்னிலையில்.''

''அவன் பிறப்பைப் பற்றித்தான் நமது அரசு வட்டா ரத்தில் பல காலமாகப் பேசப்பட்டு வருகிறதே! இதற்கான ஆதாரத்தினை நான் தேடி வேறு போக வேண்டுமா?''

''பகைவர் நாட்டைப் பற்றிப் பல்வேறு கேவலமான வதந்திகள், நம்மிடம் ஆதாயம் தேடும் அறிவிலிகளால் ஆண்டாண்டு காலமாகப் பரப்பப்பட்டு வருகின்றன. இதேபோன்று நம் குடும்பத்தைப் பற்றிய வதந்திகளும் மதுரையில் அசிங்கமாகப் பேசப்பட்டு வரலாம். அறிவி லும், அனுபவத்திலும் முதிர்ந்த நீங்கள் இதனை அடி யோடு விலக்குவதை விட்டுவிட்டு அத்தனை பேர் மத்தி யில் அந்தத் தூதுவனை இகழ்ந்து ஆபத்தை வலிய அழைத்து விட்டு அதனை முற்பிறவியின் மீது போடுகிறீர் களே, இது அநியாயம் இல்லையா?''

மன்னன் ஆத்திரத்துடன் மகனை முறைத்துப் பார்த் தான்.

''அப்படியானால் வேலைக்கார நாய்க்குப் பெண் கொடுப்பதை நியாயம் என்கிறாய்?''

''பரம்பரை பற்றி மூலம் பார்ப்பது அறிவீனம் என்று மதுரைத் தூதுவன் சொன்னதில் எந்தத் தவறும் இல்லை தந்தையே! வேலைக்காரப் பரம்பரை என்று இகழ்கிறீர்

களே, நமது விஜயநகர சாம்ராஜ்யத்தை நிறுவிய ஹரிஹரரும், புக்கரும் இன்னொரு மன்னரிடம் வேலைக்காரர்களாக இருந்ததை மறந்துவிட்டீர்களா?''

''அது எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் நடந்தது?''

''சொக்கநாதன் மட்டும் நேற்றுவரை நம்மிடம் வேலைக்காரனாகவா இருந்தான்? அதுவும் பல தலைமுறைகளுக்கு முன்னால் நடந்த விஷயம்தானே! உங்களைப் போல் வீண் பெருமை உங்கள் தந்தை ரகுநாத நாயக்கரிடம் இருந்திருந்தால், தனது தங்கையைத் திருமலை நாயக்கனுக்கு மணம் செய்து கொடுத்திருப்பாரா? அந்தப் பெருந்தன்மை, பக்திப் பழமான உங்களிடம் இல்லையே என்று என் மனம் வருத்தப்படுகிறது.''

''என் தந்தை செய்தது பெருந்தன்மையான காரியமாடா? எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதை அவர் பின்னால் நினைத்து நினைத்து வருத்தப்பட்டார் என்பதை நீ எப்படி அறிவாய்?''

''பெண் கொடுத்ததில் முட்டாள்தனம் இல்லை தந்தையே! இரு நாடுகளும் இணைய வேண்டும் என்பதற்காகச் சரியாக ஆராய்ந்து பார்க்காமல் திமிர் பிடித்த பெண்ணை ஒரு நல்ல மனிதனுக்குக் கொடுத்துப் பாழாக்கிவிட்டோமே என்று வேண்டுமானால் வருந்தி இருப்பார். அச்சுதப்ப ரகுநாதம்மா திருமலை மன்னனை எடுத்தெறிந்து பேசிய வார்த்தைகள் எந்த ஆண் மகனையுமே ஆத்திரம் கொள்ளத்தான் செய்யும்.''

''பெண் கேட்டு வந்து, அதுவும் முறைப்படி வந்த தூதுவனை அவன் பணிந்து பேசியும்கூட உங்கள் ஆத்திரத்தை அடக்க முடியவில்லையே, தன்னுடைய மனைவி பல பேர் முன்னிலையில் எடுத்தெறிந்து பேசியதைக் கேட்டதும், திருமலை நாயக்கனுக்கு மட்டும் ஆத்திரம் வரக்கூடாதாக்கும்?''

''குதர்க்கமாகப் பேசினால் உன் குரல் வளையையே நெறித்துக் கொன்றுவிடுவேன். நீ எனக்குப் பிறந்தவனா இல்லை மதுரைப் பயலுக்குப் பிறந்தவனா?'' ஆத்திரத்தில் என்ன பேசுவது என்று அறியாமல் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் தெறித்தன.

இதைக் கேட்டதும், ''ஐயோ! என்ன வார்த்தைகள் பேசுகிறீர்கள்? கடவுளே!'' என்று அலறியவாறு மன்னார் தாசனின் தாய், மன்னனின் கையைப் பிடித்து அழத் தொடங்கினாள்.

சந்திரவதனாவின் தாயோ இளவரசன் கரத்தைப் பற்றிக் கண்களில் நீர் பெருக மன்றாடத் தொடங்கினாள்.

''மன்னாரு, இந்த வார்த்தைகளைத் தந்தையிடம் கேட்பதற்காகவா நீ இப்படிப் பேச வேண்டும்? பெற்றவர் இஷ்டம் எதுவாக இருந்தாலும் அதனைச் சிரமேற்கொள்வது பிள்ளைகள் கடமை இல்லையா? சந்திரவதனாவிற்கு ஏற்ற கணவர் யார் என்று நிச்சயிப்பதில் அவருக்குத் தானே அதிக அக்கறை இருக்கும். மகளின் வாழ்க்கையைக் கெடுக்கவா ஒரு தந்தை நினைப்பார்? விட்டுவிடு மன்னாரு. தந்தையிடம் மன்னிப்புக் கேள் மன்னாரு.''

''மன்னிக்கும்படியான குற்றங்கள் நான் எதுவும் செய்யவில்லை அம்மா. தந்தை எடுத்த முடிவு என் தங்கையின் வாழ்க்கையை பாழாக்கிவிடுமோ என்ற அச்சத்தில்தான் நான் இவ்வளவு தூரம் மன்றாடுகிறேன்.''

தளவாய் ரங்கப்ப நாயக்கன் எதுவுமே பேசாமல் அங்கு நடப்பது முழுவதையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு உள்ளுக்குள் ஒருபுறம் பயம் எழுந்து கொண்டிருந்தது.

மன்னார்தாசன் பேச்சைக் கேட்டு மன்னன் மனம் மாறி இளவரசியைச் சொக்கநாதனுக்கு மணமுடித்துவிடச் சம்மதித்துவிடக் கூடாது என்று அவன் மனம் அடித்துக் கொண்டிருந்தது.

இந்தப் பிரச்சினை உருவானது ஒருவகையில் நல்லது தான். மன்னனுக்கு இருக்கும் ஆத்திரத்தில் இளவரசிக்குச் சீக்கிரமே திருமணம் செய்ய முடிவெடுக்கலாம். அப்பொழுது அவசரத்திற்கு நல்ல மாப்பிள்ளை தேட வழியில்லாமல், அருகில் இருக்கும் மாப்பிள்ளையான அச்சுதப்பனுக்கே மணமுடித்துக் கொடுக்கச் சம்மதிக்கலாம் என்று அவன் மனம் ஒரு பக்கம் குதூகலித்தது.

அதனால் அதுவரை பேசாமல் இருந்த ரங்கப்பன் அவசரமாக மன்னார்தாசன் அருகில் வந்து பேசத் தொடங்கினான்.

''பதட்டப்படாதே மருமகனே! மன்னர் பேசியதில் எந்தத் தவறும் இல்லை. நீதான் சற்றுச் சாந்தமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தன் மகளின் வாழ்க்கையைக் கெடுக்க எந்தத் தகப்பனாவது முனைவானா? அதிலும் நமது மன்னர் தனது மகளை தனது உயிருக்கு உயிராக, ஆசையாக, அளவுக்கு அதிகமான செல்லம் கொடுத்து வளர்த்து வந்தவர். அப்படிப்பட்ட பெண் காலம் முழுவதும் கண்ணீர் வடிக்க அவர் மனம் ஒப்புமா?''

''அதனைத்தான் நானும் சொல்ல வருகிறேன். சொக்கநாதனைத் தவிர்த்து வேறு யாருக்காவது சந்திரவதனாவை மணம் முடித்துக் கொடுத்தால் அவள் நிச்சயம் காலம் முழுவதும் கண்ணீருடன்தான் கழிப்பாள். இல்லாவிட்டால் மற்றொருவனுக்கு மாலை இடுவதற்கு முன் அவள் மரணத்தைக்கூடத் தழுவலாம்.''

''நீ என்ன ஜோஸ்யனா? சந்திரவதனாவின் வருங்காலம் பற்றித் தெரிவதற்கு'' என்று இளக்காரமாகக் கேட்டான் மன்னன்.

''எனக்கு ஜோஸ்யம் தெரியாது தந்தையே! ஆனால் என் தங்கையின் இதயம் பற்றித் தெரியும். அந்த இதயத்தினுள் சொக்கநாதன் மீது வைத்துள்ள காதலைப் பற்றி முழுக்க முழுக்கத் தெரியும்.''

இதைக் கேட்டதும் எல்லையற்ற அதிர்ச்சிக்கு ஆளான மன்னன் தனது உடைவாளைச் சீற்றத்துடன் உருவி ''என்னடா சொன்னே?'' என்றவாறு தன் மகனை வெட்டுவதற்கு ஓங்கியவாறு வந்தான்.

இதைப் பார்த்ததும் ''ஐயையோ!'' என்று அலறியவாறு அவன் அன்னையர் மன்னனைப் பிடித்துக் கொள்ள, தளபதி அவசரமாக மன்னார்தாசனைப் பாதுகாப்பாகப் பிடித்துக் கொண்டான்.

''விடுங்கள் என்னை! இப்படிப்பட்ட அவதூறான வார்த்தைகளைப் பேசிய அவனைக் கண்டத் துண்டமாக வெட்டி எறிந்தால்தான் என் மனம் நிம்மதி அடையும்'' என்று மன்னன் சீற்றமாக உறுமினான்.

''ஆத்திரப்படாமல் நான் சொல்வதை தயவு செய்து பொறுமையாகக் கேளுங்கள் தந்தையே! நான் சொன்னது முழுக்க முழுக்க உண்மை! தயவு செய்து எனக்காக என் தங்கையின் நல்வாழ்வுக்காகச் சற்று நேரம்... சற்று நேரம்... தயவு செய்து...'' மன்றாடினான்.

மன்னன் எரிச்சலுடன் உறைக்குள் வாளைச் சொருகிவிட்டு உட்கார்ந்தவாறு ''சொல்லுடா'' என்றான்.

''சந்திரவதனாவும், சொக்கநாதனும் ஒருவரை ஒருவர் மனமாரக் காதலிக்கிறார்கள். என் தாயின் மீது ஆணையாக இது உண்மை.''

''உனக்கு எப்படித் தெரியும்?''

மன்னார்தாசன் ஆரம்பத்திலிருந்து நடந்த விஷயங்களைச் சொல்ல ஆரம்பித்தான். கேட்கக் கேட்க அங்கு இருந்தவர் அத்தனை முகங்களும் பீதியுடன் திகழ்ந்தன. ரங்கப்பனுக்கோ தன் தலையில் இடி விழுந்ததுபோல் உணர்ந்தான்.

அந்தப்புரத்தில் நடந்த சம்பவங்களை தொடர்புப் படுத்திப் பார்க்கும்பொழுது மன்னார்தாசன் சொன்னதில் உண்மை இருக்கும்போல் அனைவருக்கும் தெரிந்தது.

மன்னனுக்கு இளவரசி மீது அளவிடமுடியாத ஆத்திரம் பொங்கத் தொடங்கியது.

''அவள் மனதிலுள்ள காதலை அழித்துவிட வேண்டியதுதான். என் உயிரே போனாலும் அவளை சொக்கநாதனுக்கு தரமாட்டேன்'' என்றான் மன்னன்.

''அதற்காக அவள் மனம் மாறிவிடுமா? வேறு ஒருவனை மணக்க அவள் சம்மதிப்பாளா?'' மறுபடியும் மன்றாடினான் மன்னார்தாசன்.

''அவள் சம்மதத்தைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் யாரைக் கை நீட்டுகிறேனோ, அவனைத் தான் திருமணம் செய்ய வேண்டும்.''

''இவ்வளவு நடந்த பிறகும் சந்திரவதனாவைத் திருமணம் செய்ய யார் முன்வருவார்?''

''என்ன அப்படிக் கேட்டுவிட்டாய் மருமகனே! மன்னரின் மானம் காக்க நான் தயாராக இருக்கிறேன். மன்னர் சம்மதித்தால் என் மகனை இதற்குச் சம்மதிக்க வைக்கிறேன்'' என்றான் தளபதி இடையில் புகுந்தது.

''சும்மா இருங்கள் மாமா. அடிமுட்டாளான உங்கள் மகனுக்கு என் தங்கையை மணம் முடிப்பதைவிட என் கையாலேயே அவளைக் கொன்றுவிடுவேன்'' என்றான் ஆத்திரத்துடன் மன்னார்தாசன்.

மன்னனும் கோபத்துடன் ஆசனத்தில் இருந்து எழுந்தான்.

''டேய் நீ மட்டும் என்னோடு வா. சந்திரவதனாவிடம் போவோம். நீ சொல்வது உண்மையா என்று அவளிடமே விசாரிக்கிறேன். அதுமட்டும் உண்மையாக இருந்தால், என் மகள் என் பகைவனைக் காதலிப்பது மட்டும் மெய் என்று தெரிந்தால், அவளை அந்த இடத்திலேயே எமனுலகுக்கு அனுப்பி வைக்கிறேன். வேறு யாரும் என்னுடன் வராதீர்கள். வந்தால் முதலில் அவர்களைக் கொன்றுவிடுவேன்'' என்று ஆத்திரமாகப் பேசியபடி வேகமாகச் செல்ல, மன்னார்தாசன் மன்னனைப் பின் தொடர்ந்தான்.

தளபதி ரங்கப்ப நாயக்கன் மன்னார்தாசன் பேசிய வார்த்தைகளால் வெறுப்புற்றுத் தன் மாளிகைக்கு வந்தான்.

வன்மத் தீ வளர ஆரம்பித்தது. மன்னார்தாசனை அடியோடு ஒழித்துவிடும் நோக்கத்தில் அமைச்சர் கோவிந்த தீட்சிதரை தேடிச் செல்ல முடிவு எடுத்தான் தளபதி ரங்கப்ப நாயக்கன்.



# 47

நீண்ட மயக்கத்தில் இருந்து மீண்டு எழுந்த இளவரசி சந்திரவதனாவுக்கு முதலில் நினைவுகள் குழம்பி, பிறகு படிப்படியாக நடந்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன.

தன் தந்தையின் பிடிவாதமும், தாளமுடியாத கோபமும் சொக்கநாதன் மீது அவள் கொண்டுள்ள காதலை அடியோடு அழித்துவிட்டுத்தான் தீருமோ என்று எண்ணிக் கலங்கத் தொடங்கினாள்.

அந்தச் சமயத்தில்தான் மன்னன் விஜயராகவ நாயக்கனும், அண்ணன் மன்னார்தாசனும் அவளது அறைக்குள் நுழைந்தனர்.

இருவரையும் பார்த்து மஞ்சத்தில் இருந்து எழ முற்பட்ட சந்திரவதனாவைப் பார்த்து ''பரவாயில்லை படுத்துக் கொள் சந்திரா! இப்பொழுது உடல்நிலை எப்படி இருக்கிறது?'' என்று கேட்டவாறு அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தான் மன்னன்.

மன்னார்தாசன் உட்காராமல் மஞ்சத்தின் அருகே நின்றவாறு தங்கையைப் பரிவுடன் பார்த்தான்.

உடல்நிலை சற்றுத் தேறியதாலும், பெரியவர்கள் முன்னிலையில் படுத்துக் கொண்டே பேசுவதை மரியாதைக் குறைவான செயல் என்பதாலும் இளவரசி மெதுவாக எழுந்து உட்கார்ந்தவாறு ''இப்பொழுது தேவலை தந்தையே'' என்றாள் மெதுவான குரலில்.

மன்னன் மஞ்சத்தின் அருகே நின்றவாறு சாமரம் வீசிக் கொண்டிருந்த சேடிப் பெண்களைப் பார்த்துச் சைகை செய்ய, அவர்கள் பணிவுடன் அந்த அறையை விட்டு வெளியேறினார்கள்.

''உன்னுடைய திடீர் மயக்கத்திற்குக் காரணம் என்ன சந்திரா?'' என்று வினவினான் மன்னன்.

''என்னவென்று எனக்கே தெரியவில்லை தந்தையே! என்னை அறியாது மயங்கி விழுந்துவிட்டேன்.''

''மதுரைச் சொக்கநாதன் அனுப்பிய தூதர்களிடம் நான் கோபமாகப் பேசியதைப் பார்த்துப் பயந்து விட்டாயா?''

''இ... இல்லை...''

''பரம்பரைப் பரம்பரையாக இருந்துவரும் பகையை மறந்து தந்தை அவனுக்குப் பெண் கொடுக்கச் சம்மதித்து விடுவாரோ என்று பதைத்து விட்டாயா?''

இதைக் கேட்டவுடன் இளவரசி பதில் சொல்லத் தெரியாமல் அருகில் இருந்த தனது அண்ணனை ஏறிட்டுப் பார்க்க, மன்னார்தாசன் தந்தையிடம் பேச வாய் எடுத்தான்.

'நீ எதுவும் பேசாதே! நானே கேட்டுக் கொள்கிறேன்' என்ற பாணியில் மன்னன் கை உயர்த்தி மகனைத் தடுத்தான்.

''சொல்லும்மா, ஏன் மௌனமாக இருக்கிறாய்?''

இளவரசி தலைகுனிந்தவாறு இருந்தாள்.

''சொக்கநாதனுக்கு மணம் முடிக்க நான் சம்மதித்து விடுவேனோ என்று பயந்தாயா?''

இளவரசி பதில் சொல்லவில்லை.

''இல்லை சொக்கநாதனுக்கு உன்னைப் பெண் கொடுக்க மறுத்துவிட்டாரே என்று மயங்கி விழுந்தாயா?''

இளவரசி பயத்துடன் தந்தையை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உன் அண்ணன் சொன்னான் உனக்கும் அந்த மதுரை நாய்க்கும் நீண்ட காலமாகக் காதல் இருக்கிறது. நீயும் அவனும் அந்தப்புரத்தில் வைத்து அடிக்கடி சந்தித்து மகிழ்ந்து, கூடிக் குலாவி இருக்கிறீர்கள் என்று! நான் சொன்னேன் என் மகளின் உடலில் தஞ்சை அரச இரத்தம் ஓடுகிறது. ஒருக்காலும் மதுரைக்காரனை மனசாலும் விரும்பி இருக்கமாட்டாள். என் நெஞ்சைப் பிளக்கும் அந்த நீசச் செயலை ஒருக்காலும் செய்திருக்க மாட்டாள் என்று ஆணித்தரமாகச் சொன்னேன். சொல்லும்மா. நான் உன்மேல் வைத்திருக்கும் அபிப்ராயம் சரிதானே?''

''இல்லை தந்தையே இல்லை. அண்ணன் சொன்னது அத்தனையும் உண்மை'' என்றவாறு குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினாள்.

இதைக் கேட்டவுடன் விஜயராகவனுக்கு நெஞ்சைப் பிளந்ததுபோல் இருந்தது. எல்லையற்ற ஆத்திரம் கிளம்பத் தொடங்கியது.

''ஹூம்! உன்னைப் பெற்று வளர்த்து, மார் மீதும் தோள்மீதும் செல்லமாக வளர்த்ததற்கு நல்ல பிரதி உபகாரம் செய்துவிட்டாய் மகளே! நீ தரைமீது நடந்தால்கூட கால் நோகுமோ என்று நான் வருத்தப்பட்டிருக்கிறேன். அப்படியா நினைக்கிறாய். உன் தலைமீதே ஏறி மிதிக்கிறேன் என்று ஒரேயடியாக மிதித்துவிட்டாயே!''

''இல்லை தந்தையே இல்லை. தங்கள் மனம் சஞ்சலப் படும்படி நடக்க வேண்டும் என்று கனவிலும் நான் நினைத்ததில்லை.''

''பின்னர் சொக்கநாதனைக் காதலித்தால் நான் சந்தோஷப்படுவேன் என்று நினைத்தாயாக்கும்! மதுரைக்காரன் மீது என் நெஞ்சு நிறையப் பகை இருப்பதைப் பற்றிச் சொல்லிச் சொல்லி வளர்த்தேனே! அந்த நெஞ்சையே பிளந்துவிட்டால் எல்லாம் சரியாகப் போய்விடும் என்று நினைத்துத்தானே, எனக்குத் தெரியாமல் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறாய்!''

''சத்தியமாக அப்படி நினைக்கவில்லை தந்தையே! அவர் யார் என்று முதலிலேயே தெரிந்து இருந்தால் என் மனம் அவரை விரும்பி இருக்காது. அவரைப் பற்றிய உண்மைகளை என்னிடம் மறைத்து என்னை ஏமாற்றிவிட்டார். ஏமாந்து விட்டேனே, நான் ஏமாந்து விட்டேனே'' மறுபடியும் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''மதுரைக்காரர்கள்தான் ஏமாற்றுவதில் எத்தர்களாயிற்றே என்று எத்தனை முறை உன்னிடம் சொல்லியும் என் முகத்தில் மண்ணை வாரி இறைத்துவிட்டாயே மகளே! கொலைக்காரக் குடும்பம் ஆயிற்றே! நிஜமாகவே நீ ஏமாந்துவிட்டாயா, இல்லை அவனுடன் சேர்ந்து என்னை ஒரேயடியாகக் கொன்றுவிட நீயும் திட்டமிட்டாயா?''

''இல்லை, இல்லை. என்னை நம்புங்கள். நான்தான் ஏமாந்துவிட்டேன். என்னை அவர் ஏமாற்றி விட்டார்'' முகம் பொத்தி அழுதாள்.

விஜயராகவன் சற்று நேரம் மகளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். மகள் மீது வெறுப்பும் கோபமும் எழுந்தது.

''சரி. முதலில் அவன் யார் என்று தெரியாமல்தானே ஆசைப்பட்டுத் தொலைத்தாய்? அது உன் குற்றமல்ல! இப்பொழுது அவன் யார் என்று முற்றிலுமாக உணர்ந்து கொண்டாய் அல்லவா? அவன் நமது இனப்பகைவன் என்று தெரிந்துவிட்டதல்லவா?''

இளவரசி அழுதவாறு தலையாட்டினாள்.

''நடந்ததைக் கெட்ட கனவாக எண்ணி மறந்துவிடு. அவன் மீது கொண்டுள்ள ஆசையை ஒரேயடியாக ஒழித்து விடு. உனக்குக் கூடிய சீக்கிரமே அவனைவிடச் சிறந்த கணவனாக ஒருவனைத் தேர்ந்தெடுத்து, இந்த நாடே வியக்கும் வண்ணம் மணம் முடிக்கிறேன்.''

''முடியாது தந்தையே! அது மட்டும் என்னால் முடியாது தந்தையே!'' என்று முகத்தில் அறைந்து கொண்டு அழுதாள்.

அதனைப் பார்த்ததும் மன்னனுக்குச் சினம் சீறி எழுந்தது.

''எது முடியாது! சொக்கநாதனை மறக்க உன்னால் முடியாதா? பிறகு என்ன செய்ய வேண்டும் என்கிறாய்? அந்தப் பகைநாயின் காலைப் பிடித்து நான் கெஞ்சி என் மகளை ஏற்றுக் கொள் என்று கதற வேண்டும் என் கிறாயா?''

இளவரசி பதில் சொல்லாமல் அழுதாள்.

''காலம் காலமாகப் பகை காட்டி வந்த விஜயராகவன் கடைசியில் மகளுக்காக அந்தப் பகைவன் காலிலேயே விழுந்தான் என்ற தீராப் பழியை நான் சுமக்க வேண்டும் என்கிறாயா? நம் நாட்டு மக்கள் என்னைப் பார்த்துக் காறித் துப்ப வேண்டும் என்கிறாயா?''

''இல்லை தந்தையே...'' என்று துவங்கிய மன்னார்தா சனை ஆத்திரத்துடன் முறைத்த மன்னன் ''நீ எதுவும்

குறுக்கே பேசினால் உன்னை கொலை செய்துவிடுவேன். வாயை மூடிக் கொண்டு பேசாமல் இருடா நாயே'' என்று எரிந்து விழுந்தான்.

''சொல்லு சந்திரா சொல்! இததானே உன் ஆசை! காலம் காலமாக வளர்த்த தந்தையை விடக் காதலன்தானே உனக்குப் பெரிது! அவனுக்கு உன்னை மணம் முடிப்பதும் ஒன்றுதான். நான் செத்ததும் ஒன்றுதான். அதுதானே உன் விருப்பம்!''

''இல்லை, இல்லை'' என்று தலையாட்டியவாறு அழுதாள் இளவரசி.

''பகைவன் காலைப் பிடித்துக் கெஞ்சி உன்னை அவனுக்கு மணம் செய்வதற்குப் பதில், உன் கண் எதிரே செத்துத் தொலைக்கிறேன். அதன்பிறகு நீ யாரை வேண்டுமானாலும் உன் இஷ்டம்போல் திருமணம் செய்து கொள். மானத்திற்கு அஞ்சி உயிரை விட்டான் என்ற பெயராவது எனக்கு கிடைக்கட்டும்.''

இதைச் சொல்லி முடித்துத் தன் வாளை உருவி, தனது நெஞ்சில் பாய்ச்ச முயன்ற மன்னனைப் பார்த்ததும் அலறி அடித்து அவன் கால்களில் விழுந்து கதற ஆரம்பித்தாள் சந்திரவதனா.

''வேண்டாம் தந்தையே வேண்டாம். நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறேன். எனக்கு நீங்கள்தான் பெரிது. நான் எல்லாவற்றையும் மறந்துவிடுகிறேன். நீங்கள் செத்தால் நானும் செத்துவிடுவேன்'' என்று வாள் பிடித்த தந்தையின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கதறி அழுதாள்.

விஜயராகவன் கையில் இருந்த வாள் நழுவிக் கீழே விழுந்தது. தன் மகளின் தோளைப் பிடித்து நிமிர்த்தி, அவள் முகத்தைத் தன் மார்மீது பதித்து அவனும் கண்ணீர் பெருக்கினான்.

மன்னார்தாசன் முகம் வெளுக்க அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். மனதில் விரக்தி ஓடத் தொடங்கியது.

மன்னன் தனது மகளின் தலையைப் பரிவுடன் தடவிக் கொடுத்தவாறு கண்களில் நீர் வழிய மன்னார்தாசனை ஏறிட்டுப் பார்த்தான்.

''இப்பொழுது புரிந்து கொண்டாயாடா! தஞ்சை ராஜ வம்ச இரத்தம் என்றும் தரம் தாழ்ந்து போகாது'' என்றான் பெருமிதம் பொங்கி வழிய.

'ஹ்ூம்! பெண்களின் இழிநிலைக்குப் பெண்கள்தான் காரணம். இதில் என் தங்கை மட்டும் விதிவிலக்காக இருப்பாள் என்று நான் நினைத்தது தவறாகிவிட்டது' என்று மனதிற்குள் எண்ணிப் பெருமூச்சு விட்டபடி தோல்விக் களையுடன் அந்த இடத்தைவிட்டு அகன்றான் மன்னார்தாசன்.

அன்று மாலை மன்னன் விஜயராகவ நாயக்கன் தனது அமைச்சர் கோவிந்த தீட்சிதரை அழைத்துக் கொண்டு தஞ்சை அரசின் குலகுருவான குமாரதாத்தாச்சாரியின் குடிலுக்குச் சென்றான்.

அமைச்சரைக் காத்திருக்கச் சொல்லிவிட்டு, மன்னன் மட்டும் குலகுருவின் குடிலுக்குள் நுழைந்தான்.

நிஷ்டையில் இருக்கும் குரு கண் விழிப்பதற்காக அவர் காலடியில் காத்துக் கிடந்தான்.

நீண்ட நேரம் கழித்து அவர் விழி திறந்து, மன்னனின் சாஷ்டாங்க நமஸ்காரத்தை ஏற்றுக் கொண்ட சின் முத்திரை காட்டி அருள் பாலித்தார்.

''ஸ்வாமி என் மனம் பெருத்த சஞ்சலத்தில் ஆட்பட்டுத் தவிக்கிறது. எந்த வழியும் புலப்படவில்லை. கடவுளின் அவதாரமான தங்கள் கருணையை வேண்டிக் காத்துக் கிடக்கிறேன்'' என்று வருத்தமான குரலில் சொன்னான் மன்னன்.

''என்ன நடந்தது விஜயராகவா? இப்படி ஒரு சஞ்சலமான வார்த்தைகளை நான் இதுவரை உன்னிடமிருந்து கேட்டதே இல்லையே! விளக்கமாகச் சொல் மகனே!''

''என்னவென்று சொல்வேன் ஐயனே! எல்லாம் நான் முற்பிறவியில் செய்த பாவம்தான் என்னை இப்படி ஒரு நிலைக்கு ஆளாக்கி இருக்கிறது.''

''வருத்தப்படாமல் என்ன நடந்தது என்று சொல் மகனே!''

விஜயராகவன் நடந்த நிகழ்ச்சிகளை விரிவாகச் சொல்ல ஆரம்பித்தான். கவனமாகக் கேட்டார் குலகுரு.

''அல்லும் பகலும் அனுதினமும் ஆண்டவன் நாமத்தையே ஜெபிக்கும் எனக்கு ஆண்டவனையே எடுத்தெறிந்து பேசும் ஆணவம் நிறைந்த ஒருவனை மகனாகப் பெற்றிருக்கிறேன். எந்தப் பகைவனின் பெயரைக் கேட்டாலே என் நெஞ்சு கொதிக்குமோ அந்தப் பகைவன் மீதே காதல் கொள்ளும்படியாக இப்பொழுது என் மகளும் ஆளாகி இருக்கிறாள். நான் ஆண்டவனுக்கு என்ன தவறு செய்தேன்? என்னை இப்படித் தாங்க முடியாத சோதனைக்கு ஆளாக்கி இருக்கிறார் ஐயனே?''

''இப்பிறவியில் நீ எந்தத் தவறும் செய்யவில்லை மகனே! இதற்கு முந்தைய பிறவிகளில் நீ செய்த பாவங்க

ளின் பலாபலன் இப்பிறவியில் உன்னை ஆட்டிப் படைக்கிறது.''

''இதிலிருந்து மீள வழியே இல்லையா ஸ்வாமி? தங்களின் கட்டளைப்படி துலாபுருஷதானம் செய்தேன். அப்படியும் இறைவன் என்மீது திருப்தி அடையவில்லையா? என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறார்?''

''நீ செய்த முற்பிறவியில் நீ சுமந்த, பாவங்களின் அளவு மிக அதிகம். அது துலாபுருஷதானம் ஒன்றினால் மட்டும் நீங்க முடியாத அளவுக்கு பலம் நிறைந்ததாக இருக்கிறது.''

''வேறு என்ன செய்ய வேண்டும் என்று இறைவனிடம் வேண்டி உத்தரவிடுங்கள் செய்கிறேன்.''

''நீ இப்பிறவியை நீக்கி புதுப்பிறவி எடுக்க வேண்டும்.''

''நான் இறந்த பிறகுதான் எனக்கு அப்படி ஒரு பாக்கியம் கிடைக்கும் என்கிறீர்களா?''

''இல்லை, இப்பிறவியிலேயே நீ புதுப்பிறவி எடுக்கும்படியான ஒரு சடங்கு செய்ய வேண்டும்.''

''அது என்ன சடங்கு ஸ்வாமி?''

''ஹ்ரண்ய கர்ப்பதானம்.''

''அது என்னவென்று அடியேனுக்குப் புரியும்படியாக விளக்குங்கள் ஸ்வாமி.''

''ஹ்ரண்ய கர்ப்பதானம் என்னும் இந்தச் சடங்கினை நீ செய்து முடித்தவுடவன் நீ இப்பிறவியை விட்டு நீங்கி, புனிதமான ஒரு பிறவியை எடுத்து விடுவாய்! அதற்குச்

சமமான பிறவி இப்பூவுலகில் கிடையவே கிடையாது! அதற்கு முன் நீ எத்தனை பிறவி எடுத்து, எத்தகைய பாவங்கள் செய்திருந்தாலும், இந்தச் சடங்கின் மூலம் புதுப்பிறவி பெற்றுவிட்டால், அத்தனை பாவங்களும் தொலைந்துவிடும் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. அதன்பிறகு உனக்கு எந்தக் கஷ்டமும் அணுகாது.''

மன்னன் இதைக் கேட்டு விண்ணை பார்த்துக் கும்பிட்டுவிட்டு, ''அது எப்பொழுது செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்?'' என்றான்.

''இந்த வாரத்திற்குள் செய்துவிட்டால் நல்லது. உன் அமைச்சரைக் கூப்பிடு. அதன் விவரத்தை உரைக்கிறேன்.''

மறுவாரம் இந்தச் சடங்குகள் நடந்து முடியும் பொழுது மன்னார்தாசனுக்கும், மன்னனுக்கும் இருந்த உறவு அடியோடு அற்றுப் போகப் போகிறது என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்?



# 48

தூதுச் சென்று திரும்பிய வெங்கடகிருஷ்ண னின் வாய்மூலம் தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் தங்களை அவமானப்படுத்திய நிகழ்ச் சிகளைக் கேட்டு முடித்த சொக்கநாதனுக்குக் கோபம் பொங்கி எழுந்து புரண்டது.

''என் தாயைப் பழித்த தஞ்சை நாயக்கனைத் தலை வேறு உடல் வேறாக ஆக்கினால்தான் என் ஆத்திரம் தணியும். வெங்கடகிருஷ்ணா, உடனே நமது படைகளைத் திரட்டு, தஞ்சைத் தரணியையே தவிடுபொடியாக்கு வோம்'' என்ற விழிகள் சிவக்க சிங்கம்போல் சிலிர்த்துக் கொண்டு எழுந்தான்.

அருகில் அமர்ந்து அத்தனையையும் கேட்டு கண்கள் கசிய இருந்த அவன் தாய் ராணி வையாம்பிகாதேவி தனது மகனின் கோபத்தைப் பார்த்தவுடன் கதிகலங்கி, அவன் கையைப் பற்றி அவனைச் சாந்தப்படுத்த முயன்றாள்.

''சொக்கநாதா பொறுமையாக இரு. கோபத்தைக் கட்டுப்படுத்து.''

''தாயைப் பழித்தவனைத் தாயே தடுத்தாலும் விடேன். வெங்கடகிருஷ்ணா இன்னும் ஏன் நிற்கிறாய்? உடனே சென்று நமது படைகளைத் தயார் நிலையில் இருக்கச் செய்.''

''வேண்டாமடா சொக்கநாதா! சின்ன விஷயத்திற்காக இரு நாடுகளும் போரில் ஈடுபட்டு இரத்தம் சிந்த வேண்டுமா? அமைதியாக இரு மகனே!''

''அமைதி! அது எனக்கு தஞ்சை நாயக்கனின் சாவில் தான் கிடைக்கும். அவன் தலையை வெட்டி ஈட்டியில் குத்தி, நமது கோட்டை வாயிலில் குத்தி வைத்தால்தான் எனக்கு நிம்மதி பிறக்கும். விடுங்கள் தாயே என்னை!''

வையாம்பிகா அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மன்றாடினாள்.

''அற்ப விஷயத்தைப் பெரிதுபடுத்தி ஆத்திரப்படாதே மகனே!''

''எதம்மா அற்ப விஷயம்? தங்கள் மானத்தையே அவன் பழித்திருக்கிறானே, அதுவா அற்ப விஷயம்? ஒரு நாட்டு மகாராணியின் கற்பையே களங்கப்படுத்தி இருக்கிறானே, அதுவா அற்ப விஷயம்? இதனை நான் அற்ப விஷயமாக நினைத்தால் இந்நாட்டு மக்களே காறி உமிழ மாட்டார்களா? ஒரு நாட்டில் குடி இருக்கும் ஒரு சாதாரணப் பெண்ணின் மானத்தைப் பகைவன் ஒருவன் பழித்தால், அதற்குப் பழிவாங்க வேண்டியது அந்த நாட்டு மன்னனின் கடமை! அந்த மன்னனின் அன்னையையே ஒரு பகைவன் மாசுபடுத்தி இருக்கிறான் என்றால் அதைக் கேட்டு அந்த மகன் கையைக் கட்டிக் கொண்டு இருந்தான் என்றால் அதைப் போன்றதோர் அவமானம் அவனியில் கிடையாது அன்னையே!''

''என்னைத்தானடா சொல்லி இருக்கிறான். சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டும். பகைவனிடமிருந்து பண்பான வார்த்தைகளையா நாம் எதிர்பார்க்க முடியும்?''

''பண்பு தெரியாவிட்டால் இனியாவது அதைப் பற்றி அவன் தெரிந்து கொள்ளட்டும். வேலைக்காரர்கள் என்று நமது பரம்பரையை பழித்தான். பொறுத்துக் கொண்டேன்.

கொலைக்காரப் பாவிகள் என்று எனது பாட்டனார் புகழின் மீது புழுதிவாரி இறைத்தான். அதையும் பொறுத்துக் கொண்டேன். இப்பொழுது உங்கள் மீது அவமானச் சேற்றை அள்ளி எறிந்திருக்கிறானே! இதனை நீங்கள் பொறுத்தாலும் என்னால் பொறுக்க முடியாது.''

''அதற்காக இரு நாடுகளும் மோதிக் கொண்டு ஆயிரக் கணக்கானோர் அநாவசியமாகப் பலியாவதில் எனக்கு விருப்பமில்லை சொக்கநாதா!''

''தந்தை இறந்த பின்னர் தானும் உடன்கட்டை ஏறி விட்டால், தனயன் வாழ்வு தறிகெட்டு விடுமே என்பதற் காக நீங்கள் மேற்கொண்ட தியாக வாழ்வு அர்த்தமில்லா மல் போய்விடும் தாயே! உங்களைப் பழித்தவனை ஒன் றுமே செய்யாமல் நான் உட்கார்ந்திருந்தால் இந்த உலகம் என்னைப் பற்றி என்ன சொல்லும் தெரியுமா?''

''பேடி என்றுதானே சொல்லும்! சொன்னால் சொல் லட்டும். அதற்காகப் போர் என்ற பெயரில் உன்னை அபாயத்திற்குள் ஆட்படுத்த என் மனம் சம்மதிக்காது.''

''ஹூம்! பேடி என்று சொன்னால்கூட சகித்துக் கொள் வேன். நீங்கள் நினைப்பதுபோல் இல்லை அம்மா. என்ன சொல்வார் இவ்வுலகோர் தெரியுமா? தஞ்சை நாயக்கன் சொன்னதில் உண்மை இருக்கும்போல் இருக்கிறது. அத னால்தான் இத்தகைய அவமான வார்த்தைகளைக் கேட்ட பிறகும் சொக்கநாதன் சும்மா இருக்கிறான் என்று ஆணித் தரமாகப் பேசுவார்கள்.''

ராணி வையாம்பிகாதேவியின் கண்களில் இருந்து ஆறாக நீர் வழிந்தது. பதில் பேச முடியாமல் தலை குனிந்தாள்.

''இன்னும் என்னம்மா மௌனம்? நான் சொன்ன வார்த்தைகள் புரியவில்லையா?''

''இப்படியெல்லாம் அவமானங்கள் வந்துசேரும் என்றுதான் நான் ஆரம்பத்தில் இருந்தே உன்னைத் தடுத் தேன். தஞ்சை மண்ணின் வாசனைகூட உனக்குத் தெரியா மல் வளர்த்தேன். கடைசியில் நான் எதற்காகப் பயந் தேனோ அது நடந்துவிடும் போல் இருக்கிறது.''

''பழைய கதையைப் பேசிப் பயனில்லை அம்மா. இப்பொழுது என் எண்ணம் எல்லாம் விஜயராகவ நாயக் கனை வேரறுப்பதில்தான் துடித்துக் கொண்டிருக்கிறது. கையை விடுங்கள் அம்மா. நான் உடனே கிளம்ப வேண் டும்.''

''பொறு மகனே பொறு'' மறுபடியும் அவன் கையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு இறைஞ்சினாள்.

சொக்கநாதனின் ஆத்திரம் எல்லை மீறத் தொடங்கி யது.

''இப்பொழுது என் கையைவிடப் போகிறீர்களா இல் லையா? இனியும் என்னை நீங்கள் தடுத்தீர்களேயானால், தஞ்சை நாயக்கன் சொன்னதில் உண்மை இருக்குமோ என்ற சந்தேகம் எனக்கே வந்துவிடும்.''

அளவுக்கு மீறிய ஆத்திரத்தில் தனது வாயில் இருந்து என்ன வார்த்தைகள் வருகின்றன என்பது கூட உணராமல் படபடவென்று இப்படிக் கொட்டினான்.

இதைக் கேட்ட மறுகணம் அவன்தாய் சினத்துடன் நிமிர்ந்து ''.... என்னடா சொன்னாய்...?'' என்றவாறு சொக்கநாதனின் கன்னத்தில் பளார் என்று அறைந்தாள்.

பிறகு அப்படியே அருகில் இருந்த ஆசனத்தில் பொத் என்று அமர்ந்தாள்.

''இந்த வார்த்தைகளை உன் வாயில் இருந்து கேட்ப தற்குத்தானா இத்தனை காலம் உன்னைப் பாசமுடன் வளர்த்தேன்? என்னைக் கொல்லாமல் கொன்று விட்டா யேடா பாவி!'' என்றவாறு தனது தலையில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

சொக்கநாதன் மட்டுமல்ல அருகில் இருந்த வெங்கட கிருஷ்ணனும் இதைப் பார்த்தவுடன் திகைத்துப் போய் விட்டான்.

பக்கத்து அறைக்குள் இருந்தவாறு இத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்த முத்துநகைக்கு இதயமே வெடித்து விடும் போல் இருந்தது. கண்களில் அவளறியாமல் நீர் வழிந்து கன்னங்களை நனைத்துக் கொண்டிருந்தது.

சொக்கநாதன் ஒரு நிமிடம் கழித்துத் தனது திகைப்பில் இருந்து விடுபட்டு, தான் எத்தகைய வார்த்தைகளைக் கொட்டிவிட்டோம் என்று உணர்ந்து தவித்தான்.

தலையில் அடித்துக் கொண்டு தாய் அழும் காட்சி அவன் நெஞ்சை ஒரேயடியாக உலக்கி விட்டது.

ஓடிச் சென்று ராணியின் காலருகில் விழுந்து, அவள் கால்களைக் கட்டிக் கொண்டு அவனும் அழ ஆரம்பித்தான்.

''என்னை மன்னித்து விடுங்கள் அம்மா! ஆத்திரத்தில் என்ன பேசுவது என்று அறியாமல் பேசிவிட்டேன். என்னை அடியுங்கள். உங்கள் கோபம் தீரும்வரை அடியுங் கள்'' என்றவாறு தாயின் கரங்களைப் பற்றித் தனது முகத்தில் அடிக்க முயன்றான்.

ராணி வையாம்பிகா அவன் முகத்தைப் பற்றி தன் முகத்தோடு கட்டிக் கொண்டு கண்ணீர் பெருக்கினாள்.

''நாம் இப்படி எல்லாம் அவமானப்பட வேண்டும் என்று நமது தலையில் எழுதி இருக்கிறதுபோலும். தாயே மீனாட்சி, எங்களை ஏனம்மா இப்படிச் சோதனைக்கு உள்ளாக்குகிறாய்?''

சொக்கநாதன் தனது கண்களைத் துடைத்துக் கொண்டு தாயின் காலடியில் சம்மணமிட்டு அமர்ந்தான்.

''அம்மா... அம்மா... தஞ்சை நாயக்கனைப் பழி வாங்க வேண்டாம் என்று சொல்கிறீர்களா அம்மா...'' பரிதாபமாக் கேட்டான்.

''இல்லை மகனே, உன் வாயில் இருந்தே இப்படிப் பட்ட வார்த்தைகளை நான் கேட்டபிறகு, இனியும் நான் உன்னைத் தடுத்தால், அது நமது சந்ததியினருக்கே அவமானம்.''

''அப்படியானால் இன்றே நமது படைகளை அழைத்துக் கொண்டு தஞ்சையை நோக்கி செல்லட்டுமா?'' என்றான் மகிழ்ச்சி பொங்க.

''பொறு மகனே! போர் மட்டும் வேண்டாம்.''

சொக்கநாதன் புரியாமல் தாயை ஏறிட்டுப் பார்த்தான்.

''போர் வேண்டாம் என்றால்...''

''விஜயராகவன் தான் பேசிய வார்த்தைகளை எண்ணி வருத்தப்பட வேண்டும். ஒன்று அவன் என் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் காலம் முழுவதும் தன் தவறை எணணி அவன் கண்ணீர் வடிக்க வேண்டும்.''

''அதற்கு என்ன வழி?''

''அவன் மகள் எனக்கு மருமகளாக வேண்டும்.''

''அதைத்தான் அவன் மறுத்துவிட்டானே!''

''அவன் மறுத்தால் என்ன? அவன் மகள் உன்னை மனமார விரும்புகிறாளா இல்லையா?''

''என்னை உயிருக்கு உயிராக விரும்புகிறாள்.''

''அப்படியானால் உடனே தஞ்சாவூருக்குக் கிளம்பு. அவளை இங்கே கூட்டிக் கொண்டு வந்துவிடு. மீனாட்சி

அம்மன் முன்னிலையில் உங்கள் திருமணத்தை நான் நடத்தி வைக்கிறேன். அதன்பிறகு விஜயராகவன் தானாக வழிக்கு வருவான். இல்லாவிட்டால் மகளால் ஏற்பட்ட அவமானத்தை எண்ணி எண்ணிக் காலம் முழுவதும் கண்ணீர் விடுவான்.''

''இது நல்ல யோசனை'' என்று முகம் மலர்ந்தான் சொக்கநாதன்.

''இதற்கு ஏதாவது இடைஞ்சல் வருமா மகனே?''

''எந்த இடையூறும் வராது. சந்திரவதனா இதற்கு மனப்பூர்வமாகச் சம்மதிப்பாள். அவள் அண்ணன் மன் னார்தாசன் எங்கள் காதலுக்குத் துணையாக இருக்கிறான். அவளை இங்கு கூட்டி வருவதில் வேறு ஏதாவது இடைஞ் சல் ஏற்பட்டால்கூட அவன் உதவி எங்களுக்குப் பெரும ளவு துணை புரியும்.''

''அப்புறம் இன்னொரு விஷயம்.''

''சொல்லுங்கள் அம்மா.''

''அந்தப் பெண் தன் தந்தையை எதிர்த்து உன்னுடன் வருவதற்குச் சம்மதிக்கவில்லை என்று வைத்துக் கொள். அவளைப் பலவந்தப்படுத்தித் தூக்கி வருவதற்கு மட்டும் முயற்சிக்காதே! விரும்பாத பெண்ணைத் தூக்கி வந்துவிட் டான் என்ற வீணான பழி உன்னைச் சேரும்.''

''அப்படிப்பட்ட நிலைமை வரவே வராது அம்மா. சந்திரவதனாவும், மன்னார்தாசனும் இதற்கு நிச்சயம் சம்ம திப்பார்கள்.''

''அப்படியானால் வெங்கடகிருஷ்ணனும் நீயும் சீக்கி ரமே தஞ்சாவூருக்குக் கிளம்புங்கள்.''

தஞ்சைத் தளபதி ரங்கப்ப நாயக்கனின் உள்ளம் தாறுமாறாகக் கொதிக்கத் தொடங்கியது.

அடிமுட்டாளான உங்கள் மகனுக்கு என் தங்கையை மணம் முடிப்பதைவிட, என் கையாலேயே அவளைக் கொன்றுவிடுவேன் என்று மன்னார்தாசன் சொன்ன வார்த்தைகள் அவன் இதயத்தை அறுத்துக் கொண்டிருந்தன.

இதைக் கேட்டு மன்னனும் பேசாமல் இருந்தது, அவனது கோபத்தை மேலும் கிளறிவிட்டது.

மன்னார்தாசா, என்ன ஆணவத்துடன் என் மகனைப் பற்றி என்னிடமே சொன்னாய்! உன்னை என்ன பாடு படுத்துகிறேன் பார்!

என் மகனுக்கு மணம் முடிப்பதைவிட உன் தங்கையைக் கொன்று விடுவேன் என்றா சூளுரைத்தாய்! அவளை, அதே சந்திரவதனாவை என் மகனுக்கே திருமணம் செய்து வைக்கிறேனா இல்லையா என்று பார்!

அதுமட்டுமல்ல! உன்னை ஒரேயடியாக ஒழித்து இந்த நாட்டிற்கே மன்னனாக என் மகனுக்கு உன் தந்தை கையாலேயே முடிசூட்ட வைக்கிறேனா இல்லையா என்று பார்!

இந்த வன்மம் அவன் மூளையை ஆட்டி படைக்க திட்டம் ஒன்று அவன் நெஞ்சில் உருவானது.

அமைச்சர் கோவிந்த தீட்சிதரைத் தனிமையில் சந்தித்துப் பேசத் தொடங்கினான்.

பௌர்ணமி அன்று காலையில் உய்யான வனத்தில் தான் பார்த்த காட்சியைப் பற்றி அவரிடம் சொன்னான். அமைச்சரின் முகத்தில் தாறுமாறான கோபம் தெரிந்தது.

''தளபதியாரே, தாங்கள் சொல்வது உண்மையா? என் மகளும் இளவரசனுமா... சேச்சே... என்னால் நம்ப முடியவில்லையே...''

''மதுரவாணி நல்ல பெண் அமைச்சரே! மன்னார்தாச னைப் பற்றி உங்களுக்குத்தான் தெரியுமே! மகத்தான தறுதலை என்று! உங்கள் பெண்ணின் அழகைப் பார்த்து மயங்கி, அவளைத் தொந்தரவு செய்ய முயல்கிறான் என்று நினைக்கிறேன். மன்னார்தாசன் மனதிலுள்ள எண்ணம் உங்கள் மகளுக்கே தெரியாமல் இருக்கலாம். இளவரசன் அவளைப் பின்தொடர்ந்து வருவது நிச்சயம் அவளுக்குத் தெரியாது.''

''நல்லவேளை என் பெண்ணும் சேர்ந்து தப்பு பண்ணி விட்டாளோ என்று பதறிப் போய் விட்டேன். அப்பாவி யான என் பெண்ணைக் கெடுக்கும் நோக்கம் இளவரச னுக்கு இருந்தால் அதை நான் அனுமதிக்கமாட்டேன். வாருங்கள், இப்பொழுதே மன்னரிடம் சென்று முறையிடு வோம்.''

''அவசரப்படாதீர்கள். இப்பொழுதே மன்னரிடம் சொன்னால், இளவரசன் ஏதாவது சொல்லி சமாளித்துத் தப்பி விடுவான். அவனது பேச்சு சாமர்த்தியத்தைப் பற்றித் தான் தங்களுக்குத் தெரியுமே! அதனால் தகுந்த ஆதாரத்து டன் கையும் களவுமாக அவனைப் பிடித்து மன்னர் முன் நிறுத்தவேண்டும்.''

''அது எப்படி?''

''ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் நீங்கள் கும்பகோ ணம் செல்வது தெரிந்துதான் இளவரசன் உங்கள் மகளைப் பின் தொடர்கிறான். அதனால் வரும் பௌர்ணமி அன்றும், நீங்கள் கும்பகோணம் செல்வதாக வீட்டில் சொல்லி விட்டு, அதிகாலையில் என் வீட்டிற்கு ரகசியமாக வந்து விடுங்கள். அதன்பிறகு என்ன செய்யலாம் என்று நான் சொல்கிறேன்.''

அமைச்சர் மனம் இசைய ஆரம்பித்தது.

# 49



இளவரசன் மன்னார்தாசன் இந்தச் சம்பவங்கள் நடந்து முடிந்து பத்து நாட்கள் கழித்துத் தஞ்சை நகரின் எல்லையில் நுழைந்தபொழுது எல்லை யற்ற அதிர்ச்சிக்கு ஆளானான்.

தங்கை சந்திரவதனாவின் நிலையற்ற உறுதியினால் ஏற்பட்ட மன உளைச்சலையும், தந்தை விஜயராகவ நாயக்கன் அவன் மீது கோபமுற்றுப் பேசியதால் எழுந்த இருதய வலியையும் மறப்பதற்காகச் சில நாட்கள் தஞ்சையைவிட்டு அகன்று வேறு ஓர் இடத்தில் தங்குவ தென முடிவெடுத்து இருந்தான்.

தனது நண்பன் அக்கிராஜுவிடம் மட்டும் சொல்லி விட்டுக் காஞ்சிபுரம் சென்றுவிட்டான்.

அங்கு சில நாட்கள் தங்கி இருந்துவிட்டுத் திரும்பவும் அவன் தஞ்சைக்கு வந்து சேரும்பொழுது பத்து நாட்க ளுக்கு மேலாகி விட்டிருந்தது.

தஞ்சை நகரம் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந் தது. வீதி எங்கும் தோரணங்கள் தொங்கவிடப் பட்டிருந் தன. தெருமுனைகளில் அலங்கார வளைவுகள் கட்டப்பட் டிருந்தன.

மன்னார்தாசனுக்கு ஒன்றும் புரியவில்லை. தங்கை சந்திரவதனாவிற்கு அவன் வருவதற்குள் ஏதாவது மாப் பிள்ளை பார்த்துத் திருமண ஏற்பாடுகள் செய்துவிட்டார் களா?

அவசர அவசரமாகத் தனது குதிரையை அரண்ம னையை நோக்கிச் செலுத்தினான். ஆனால் பாதி தூரம் போவதற்குள் அக்கிராஜு அவனை நோக்கி ஓடிவருவது தெரிந்தது.

லகானை இழுத்துக் குதிரையைத் தெருவின் ஓரமாக அவன் நிறுத்தவும், அக்கிராஜு அவனருகில் வருவதற்கும் சரியாக இருந்தது.

''என்ன ராஜு, நம் நகர் முழுவதும் விழாக்கோலம் தெரிகிறதே? ஏதாவது விசேஷமா?'' என்று வேகமாக வினவினான் தாசன்.

''ஆம் மன்னாரு! உன்னைப் பார்த்தவுடன் அதைச் சொல்வதற்காகத்தான் ஓடோடி வந்தேன். மூன்று நாட்க ளில் வருவதாகச் சொல்லிவிட்டு ஏன் இத்தனை நாட்கள் கழித்து வந்திருக்கிறாய்?''

''அது இருக்கட்டும். நம் நகரில் என்ன விசேஷம்? அதனை முதலில் சொல்.''

''விசேஷம் என்றால் சாதாரண விசேஷம் இல்லை. மகத்தான விசேஷம். இந்த நாடே இதுவரை கண்டிராத விசேஷம்?''

''அப்படி என்ன விசேஷமடா? சீக்கிரம் சொல்.''

''உனது தந்தை ஹ்ரண்ய கர்ப்பதானம் செய்யப் போகிறார். இன்னும் சற்று நேரத்தில் அதற்கான சடங்கு கள் ஆரம்பித்துவிடும்.''

''இதென்ன புது தானம்? ஏற்கனவே துலாபுருஷ தானம் என்ற பெயரில் பொக்கிஷத்துப் பொன்னை எல் லாம் வாரி இறைத்தார். மறுபடியும் இதென்ன தானம்?''

''எனக்கு அதனைப்பற்றி முழுக்கச் சொல்லத் தெரிய வில்லை. இருந்தாலும் இது ரொம்பப் புதுமையான தானம். இந்த நாடே இதைக் கண்டு வியக்கப் போகிறது. நீ மட்டும் சில நாட்கள் முன்னதாக வந்திருந்தால் இத னைச் செய்துவிடாமல் தடுக்க ஓரளவாவது முயன்று இருக்கலாம். இனி நீ வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது.''

''எங்கே நடக்கிறது அந்தச் சடங்குகள்?''

''வழக்கம்போல் நமது ராஜகோபால சுவாமி கோயில் பிராகாரத்திற்குள்தான்.''

மன்னார்தாசன் கோபத்துடன், அக்கிராஜுவை உடன் அழைத்துக் கொண்டு கோயில் நோக்கி விரைந்தான்.

இராஜகோபால ஸ்வாமி கோயிலுக்குள் தலைநகரத்து மக்கள் கூட்டம் தளும்பிக் கொண்டிருந்தது. கோயில் முழுவதும் விதவிதமான அலங்காரம் செய்யப்பட்டிருந் தது.

இளவரசனைப் பார்த்ததும் கூட்டம் விலகி வழிவிட் டது. ஹ்ரண்ய கர்ப்பதானம் செய்யப்பட இருக்கும் மேடையருகே மன்னார்தாசன் வந்தான்.

வெண்கலத்தினால் செய்யப்பட்ட மிகப்பிரமாண்ட மான பசுமாட்டின் உருவச் சிலை ஒன்று அங்கு வைக்கப் பட்டிருந்தது. சூரிய ஒளியிலும் அருகில் வளர்க்கப்பட்டி ருந்த ஓம குண்டத்தில் இருந்து எழுந்த தீயின் ஜுவாலையி லும் அந்த வெண்கலப் பசு பொன்னைப் போல தகதகத்துக் கொண்டிருந்தது.

அதனருகே இருந்த பொன் ஆசனத்தில் மன்னன் விஜயராகவ நாயக்கன் சாஸ்த்ரோக்தமான முறையில் ஆடை ஆபரணங்கள் அணிந்து அமர்ந்திருக்க, அவன் எதிரே அவர்களது குலகுரு குமார தாத்தாச்சாரியார் ஓம

குண்டத்தில் நெய்வார்த்தவாறு வேத மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்தார்.

அவரது அருகே அவரது மனைவி அனந்தலட்சுமி அம்மையார் பட்டுச் சேலையும், பல்வேறு அணிகலன்களும் பளபளக்க அமர்ந்திருந்தார். அவர்களைச் சுற்றிலும் நிறைய பிராமணர்கள் குலகுருவிற்கு ஒத்தாசை செய்து கொண்டிருந்தனர்.

மன்னருக்கு அருகே அமைச்சர் கோவிந்த தீட்சிதரும், தளவாய் ரங்கப்ப நாயக்கனும், அவனது மைந்தன் அச்சுதப்பனும் பணிவுடன் நின்றிருக்க அவர்களுக்குப் பின்னர் அரசப்பிரதிநிதிகளும், பிரதானிகளும் குழுமி இருந்தனர்.

இந்த இடத்திற்குச் சற்று எதிர்த்தாற்போல் சடங்குகளைக் காண்பதற்கு வசதியாக ஒரு மேடை அமைக்கப் பட்டு, அதன்மீது மன்னனின் மனைவியரும், இளவரசி சந்திரவதனாவும் மட்டுமின்றி அந்தப்புரத்து மகளிர் பலரும் அமர்ந்திருந்தனர்.

இந்த இடத்திற்கு வந்து சேர்ந்த இளவரசன் மன்னார் தாசன் நேரே மன்னன் அமர்ந்திருக்கும் இடத்தருகே வந்து நின்றான். மன்னார்தாசன் அங்கு வந்து நிற்பதை மன்னனின் கண்கள் கவனித்துவிட்ட போதிலும், பார்த்தும் பார்க்காதது மாதிரியான பாவனையில் குலகுரு சொன்ன மந்திரங்களைத் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

அதேபோன்று குமார தாத்தாச்சாரியாரும் இளவரசனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு பிறகு அதனைச் சட்டை பண்ணாமல் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

மன்னார்தாசன் கண்கள் சுற்றிலும் ஒருமுறை பார்த்து விட்டு அங்கு இருந்த பிரமாண்டமான வெண்கலப் பசுவின்மீது நிலைத்து நின்றது. அதன் அமைப்பைப் பார்த்து அவன் விழிகள் வியப்பில் விரிந்தன.

கிட்டத்தட்டப் பத்தடி உயரமும், ஆறடி நீளமும், நான்கடி அகலமும் கொண்டதாக அற்புதமாக வடிவமைக்கப்பட்டிருந்தது அந்த வெண்கலப் பசுவின் உருவச் சிலை.

மன்னார்தாசனுக்கு ஒன்றுமே புரியவில்லை. இது என்ன வகையான சடங்கு? இவ்வளவு பெரிய உருவச் சிலை எதற்கு?

அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் அருகே நெருங்கினான்.

''அமைச்சரே இது என்ன சடங்கு? எதற்காக இவ்வளவு பெரிய பசுமாட்டின் உருவச் சிலை வைக்கப்பட்டிருக்கிறது?'' என்று கேட்டான்.

''மன்னர் ஹ்ரண்ய கர்ப்பதானம் செய்ய இருக்கிறார். அதற்காகத்தான் இந்த உருவச்சிலை செய்யப்பட்டிருக்கிறது'' என்றார் அமைச்சர்.

''ஹ்ரண்ய கர்ப்பதானமா? அப்படி என்றால் என்ன அர்த்தம்!''

''கோடச மகாதானங்களில் துலாபுருஷதானத்திற்கு அடுத்தபடியாகச் சொல்லப்படும் மிகப் பெரியதானம். இதனைச் செய்வதன் மூலம் மன்னர் புதுப்பிறவி எடுக்கப் போகிறார்.''

''புதுப்பிறவியா? எப்படி?''

''இந்துக்களுக்கு மிகவும் புனிதமானது பசு. ஆண்டவனுக்குச் சமமாக கருதப்படுவது பசு ஒன்றுதான். அதன் வயிற்றில் பிறப்பதற்கு மாதவம் செய்ய வேண்டும். உன் தந்தை இப்பிறவியில் பட்ட இன்னல்கள் தீர, பசுவின் வயிற்றில் இருந்து பிறப்பதன் மூலம் புதுப்பிறவி, புனிதமான பிறவி அடைய இருக்கிறார்.''

''இனிமேல் என் தந்தை எப்படிப் பிறக்க முடியும்? அதுவும் பசுவின் வயிற்றில் இருந்து?''

''அந்தச் சடங்குகள்தான் நடந்து கொண்டிருக்கின்றன. முற்றிலும் பாருங்கள், உங்களுக்குப் புரிந்துவிடும்.''

மன்னார்தாசனின் மனதிற்குள் எழுந்த எரிச்சலை மறைத்துக் கொண்டு அங்கு நடப்பதைக் கவனிக்கத் தொடங்கினான்.

முதல் சடங்குகள் முடிவுற்றதும் குலகுரு எழுந்து நின்று வெண்கலப் பசுவிற்குப் பூஜை செய்தார்.

பின்னர் பசுவின் வயிற்றுப் பகுதியை மட்டும் திறந் தார். அதற்குள் ஓர் ஆள் உட்காரும்படியான கொள்ளளவு டன் காணப்பட்டது.

குலகுரு உத்தரவிட மன்னன் விஜயராகவ நாயக்கன் வேதமந்திரங்களும், மங்கல வாத்தியங்களும் முழங்க, வெண்கலப் பசுவின் வயிற்றிற்குள் ஏறி உட்கார்ந்தான்.

பசுவின் வயிற்றிற்குள் மன்னன் உட்கார்ந்து கொண்ட வுடன் குலகுரு மறுபடியும் ஓம குண்டத்தின் முன் அமர்ந்து வேத மந்திரங்களை உச்சாடனம் செய்ய ஆரம்பித் தார்.

அமைச்சர் கோவிந்த தீட்சிதர் தன்னருகில் நின்று இருக்கும் மன்னார்தாசனிடம் அதன் விவரத்தைச் சொல்ல ஆரம்பித்தார்.

''மன்னர் இப்பொழுது பசுவின் வயிற்றிற்குள் அமர்ந்து இருக்கிறார். அதாவது மன்னரை இந்தப் பசு தன்னுள் கர்ப்பமாகக் கொண்டிருக்கிறது என்று பொருள். மன்னர் இப்பிறவியை விட்டு நீங்கி, புதுப்பிறவி எடுக்கும் ஆரம்பக் கட்டமாகப் பசுவின் வயிற்றில் கர்ப்பமாக மாறி இருக்கிறார். அது முழுமைபெறும் சடங்கினை இப்பொ ழுது குலகுரு செய்து கொண்டிருக்கிறார்.''

மன்னார்தாசனுக்கு இதைக் கேட்டவுடன் உள்ளுக்குள் ஆத்திரம் பொங்கி எழுந்தது.

என்ன இது முட்டாள்தனம்! சிலை உருவமான பசுவின் வயிற்றுக்குள் உட்கார்ந்து கொண்டால் அது கர்ப்பமாகிவிட்டதாக அர்த்தமா? சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறதே!

அந்த இடத்தில் அத்தனை பேர் மத்தியில் எதுவும் செய்ய வழியின்றிப் பல்லைக் கடித்தவாறு அங்கு நடப்பதைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

நீண்டநேரம் மந்திரங்களை ஓதிய குரு, அதன்பிறகு பசுவின் அருகில் வந்து சில சடங்குகளைச் செய்தார். வயிற்றிற்குள் உட்கார்ந்திருந்த மன்னன் கைகூப்பிய நிலையில் பக்தி சிரத்தையில் மூழ்கி இருந்தான்.

அதனைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்ததும் மன்னார்தாசனுக்கு வேதனையும், வெறுப்பும், திகைப்பும், சினமும் மாறிமாறி எழ ஆரம்பித்தன.

கர்ப்பமாகி இருக்கும் வெண்கல பசுவிற்கான சடங்குகளை நடத்தி முடித்ததும் குலகுரு தனது அருகில் இருந்த தன்னுடைய மனைவி அனந்த லட்சுமி அம்மையாரை அழைத்தார்.

''அனந்தி, பசுவின் கர்ப்பகாலம் முடிந்துவிட்டது. பிரசவிக்கும் நேரம் வந்துவிட்டது. இதற்குப் பிரசவம் பார்க்க வேண்டிய பொறுப்பு, குலகுருவின் மனைவியாகிய உன்னைச் சேர்ந்தது. அதனால் நான் சொல்கிறபடி நீ செய்ய வேண்டும்'' என்றார்.

''அப்படியே செய்கிறேன்'' என்றாள் அவர் மனைவி.

குலகுரு அதன்பிறகு பசுவின் வயிற்றிற்குள் அமர்ந்து இருக்கும் மன்னனைப் பார்த்துச் சொன்னார்.

''விஜயராகவா, இப்பொழுது உன்னை உள்ளே வைத்து, அதன் வயிற்றுப் பகுதியை மூடிவிடப் போகிறேன். அதன்பிறகு நீ இந்தப் பசுவின் பிறப்பு உறுப்பாக அமைந்து இருக்கும் துவாரத்தின் வழியாகத் தலை நீட்ட வேண்டும். உன்னை அதன்பிறகு பசுவின் பிறப்பு உறுப்

பில் இருந்து, வெளியே இழுத்துக் கொண்டு வருவது பிரசவம் பார்க்கும் என் துணைவியின் வேலை. அதன்படி செய்.''

மன்னனை உள்ளடக்கி வயிற்றுப் பகுதி மூடப்பட்டது. அதன்பிறகு வேத மந்திரங்களும், மங்கல வாத்தியங்களும் முழங்க மன்னன் பிரமாண்டமான வெண்கலப் பசுவின் வயிற்றிற்குள் இருந்து பிறப்பு உறுப்பின் வழியாகத் தலை நீட்டினான். அனைத்து மங்கல ஒலிகளும் விண்ணைப் பிளந்தன.

குலகுருவின் மனைவி, பசுவின் பிறப்பு உறுப்பு வழியாகத் தலை நீட்டிய மன்னனின் தலையைப் பிடித்து மெதுவாக இழுக்க கொஞ்சம் கொஞ்சமாக அதன் வழியாக வெளியேறித் தரையில் கால் வைத்தான் மன்னன். மறுபடியும் மங்கல ஒலிகளின் இரைச்சல்!

குலகுரு மன்னன் அருகில் வந்து, ''விஜயராகவா இந்த க்ஷணம் முதல் நீ புதுப்பிறவி பெற்றுவிட்டாய். புனிதமான இந்தப் பிறவியை நீ அடைந்ததான் மூலம் உனது சகல கஷ்டங்களும் அடியோடு விலகிவிடும். இன்னும் ஒரே ஒரு சடங்கு. அனந்தி நீ அப்படி உட்கார்'' என்றார் மனைவியைப் பார்த்து.

அனந்தலட்சுமி அம்மையார் தரையில் அவர் சொன்னபடி அமர்ந்தார்.

''விஜயராகவா! நீ இப்பொழுது குழந்தை! பசுவின் வயிற்றில் இருந்து பிரசவிக்கப்பட்ட பச்சிளம் பாலகன். உன்னைப் பிரசவிக்க உதவிய என் மனைவி உனக்கு ஒரு வகையில் தாய் மாதிரி! அதனால் அவரது மடியில் தலை சாய்த்து ஒரு குழந்தையைப்போல் நீ படுத்துக் கொண்டு, ஒரு பச்சைக் குழந்தை செய்வதைப் போலவே கையைக் காலை உதைத்துக் கொண்டு அழவேண்டும். என் மனைவி தன் குழந்தையைக் கொஞ்சுவது போலவே கொஞ்சி உன்னை சீராட்ட வேண்டும். அத்துடன் இந்தப் பிறவிச் சடங்குகள் முடிந்துவிடும்.''

மன்னன் விஜயராகவன் குலகுரு சொன்னபடியே குலகுருவின் மனைவியின் மடியில் ஒரு சிசுவினைப் போல் தலை சாய்த்து, கை, கால்களை உதறிப் பலமான ஓசையுடன் அழுதான். குலகுருவின் மனைவி அந்த அழுகையை அடக்குவதுபோன்ற பாவனையுடன் செல்லமாகச் சீராட்டத் தொடங்கினாள்.

இதற்குமேல் இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாத வேதனையிலும், வெறுப்பிலும் இளவரசன் மன்னார் தாசன் அந்த இடத்தில் இருந்து வெளியேறினான்.

மறுநாள் காலை அது விஸ்வரூபம் எடுத்து அவன் தந்தை மீது வெடிக்கத் தொடங்கியது.

---

*★ தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் செய்த விநோத மான இந்த ஹ்ரண்ய கர்ப்பதானத்தைப் பற்றி நிறைய சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதற்கான முழுமையான ஆதாரம் பின்வருமாறு:*

*" The Brahmans persuaded him to have a colossal figure of a cow cast in bronze, and at the proper moment he solemnly entered its belly in the presence of a multitude of people, whilst prayers were offered up and hymns sung; and having remained inside for a sufficient time, during which innumerable prescribed ceremonies were performed, was at last brought in to the world by the wife of the royal Guru who officiated on the occasion as mid-wife, and was handled and treated like a newly born babe, of which he endevoured to the best of his ability to imitate the cires and gestures... The cow being regarded in the light of divinity, and a divinity of high order, the cow birth is held to be spiritual second birth. To make it efficacy complete, the cow should be cast in gold, and after the birth should be broken up nto fragments and distributed amongst Brahmans. - The Madura Country A Manual - J.H.Nelson, Part III, page no. 188.*

# 50



தஞ்சை அரசின் அரண்மனையினுள் அழகுற அமைந்திருந்த தர்பார் மண்டபத்தில் மன்னன் விஜயராகவ நாயக்கன் கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

அமைச்சர் கோவிந்த தீட்சிதரும், தளவாய் ரங்கப்ப நாயக்கனும் மற்றும் அரசப் பிரதிநிதிகள் அனைவரும் அவர்களுக்குரிய ஆசனங்களில் உட்கார்ந்திருந்தனர்.

மன்னனுக்கு எதிரில் அரசின் கணக்கு அதிகாரி பணிவுடன் நின்றவாறு முதல்நாள் நடைபெற்ற ஹிரண்ய கர்ப்ப தானத்தின் கணக்குகளைச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அங்கு இளவரசன் மன்னார்தாசன் கோபாவேசத்துடன் உள்ளே நுழைந்தான்.

மன்னரிடம் பணிவையோ, வணக்கத்தையே காட்டாது எடுத்த எடுப்பிலேயே தந்தையைப் பார்த்துக் கோபத்துடன் கேட்க ஆரம்பித்தான்.

''தந்தையே இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் தாங்கள் இப்படி மூடத்தனமாக, முட்டாள்தனமாக நடந்து கொண்டு இருக்கப் போகிறீர்கள்?''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஆஸ்தான மண்டபத்தில் வீற்றிருந்த அனைவரும் திகைப்புற்றுப் பேச்சு

மூச்சற்று இருக்க, மன்னனுக்கு எல்லையற்ற கோபம் எழத் தொங்கியது.

''மன்னார்தாசா, என்ன இது துடுக்குத்தனமான பேச்சு? யாரிடம் பேசுகிறோம், எந்த இடத்தில் பேசுகிறோம் என்ற அறிவு உனக்கு அடியோடு அற்றுப் போய்விட்டதா?''

''என்னுடைய அறிவுக்கு எந்தவித பங்கமும் இது வரை ஏற்பட்டதில்லை. ஆனால், தங்களுடைய அறிவு தான் நாளுக்குநாள் மழுங்கிக் கொண்டு வருகிறது.''

''நாவை அடக்கிப் பேசு மன்னார்தாசா! இந்த இடத்தில் நீ எனது மகனல்ல! ஒரு மன்னனிடம் பேசும் நடைமுறைகளைக்கூட அறியாத நீ, இன்னும் இதே மாதிரிப் பேசிக் கொண்டிருந்தால், மகன் என்றும் பாராமல் உனது நாவைத் துண்டித்து விடுவேன்.''

''மகனாக நான் வரவில்லை மன்னவா! இந்த நாட்டிலுள்ள ஒரு சாதாரணக் குடிமகன் என்ற முறையில் நான் கேட்கிறேன். சாஸ்திரங்களின் பெயரால் நீங்கள் நடத்திக் காட்டும் மூடத்தனங்களின் அளவு எல்லைமீறிப் போய்க் கொண்டிருக்கிறது!''

''அப்படி என்னடா செய்துவிட்டேன்?'' பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டான் மன்னன்.

''இந்த நாட்டிற்கு என்ன குறை வந்துவிட்டது? நீங்கள் புதுப்பிறவி எடுக்கவில்லையே என்று இந்த நாட்டு மக்களில் யார் அழுதார்கள்? வெண்கலத்தால் செய்யப்பட்ட பசுமாட்டின் வயிற்றுக்குள் அமர்ந்து அதன் பிறப்பு உறுப்பு வழியாக வந்துவிட்டால் நீங்கள் புதுப்பிறவி எடுத்துக் கொண்டதாக ஆகிவிடுமா? அதிலும் ஒரு குழந்தையைப்போல, எழுபது வயதைத் தாண்டிய கிழப்பருவத்தில் இருக்கும் தாங்கள், ஒரு பச்சிளம் சிசுவினைப் போலக் குலகுருவின் மனைவியரது மடியில் தலைசாய்த்து அழுததும், கையைக் காலை உதறியதும், சேச்சே. பார்ப்பதற்கே

அசிங்கமாக இருந்தது. சிறு பிள்ளைகள் விளையாட்டு என்றால் இதனைச் சகித்துக் கொள்ளலாம். வயது முதிர்ந்த ஒருவர் அதிலும் இந்த நாட்டிற்கே மன்னர் இப்படிப்பட்டக் காரியத்தைச் சாஸ்திரத்தின் பெயரால், நாட்டு மக்கள் முன்னிலையில் செய்தது நகைப்புக்குரிய செயல் என்று உங்கள் மனதில் உறைக்கவில்லையா?''

''இப்படித்தான் செய்ய வேண்டும் என்று சாஸ்திரங்கள் உரைக்கும்பொழுது, அதனை மாற்றிச் செய்வதற்கு ஆண்டவனுக்கே அதிகாரமில்லை..மூளை இருக்க வேண்டிய இடத்தில் கொழுப்பு மட்டுமே நிறைந்திருக்கும் உனக்கு இதெல்லாம் எங்கே புரியும்?''

''சாஸ்திரங்கள், சாஸ்திரங்கள் என்று திரும்பத் திரும்ப அதே பல்லவியைப் பாடாதீர்கள். எனக்குச் சாஸ்திரங்கள் மீதே நம்பிக்கை இல்லை. ஹ்ரண்ய கர்ப்பதானம் என்ற பெயரில் நீங்கள் செய்த பிரமாண்டமான வெண்கலப் பசுவினையும், தங்கத்தினால் செய்யப்பட்ட மற்றொரு பசுமாட்டினையும் இங்குள்ள பிராமணர்களுக்கு மட்டும் பிரித்து வழங்கச் சொல்லி இருக்கிறீர்கள். நீங்கள் செய்த சடங்கு பக்கத்து நாடுகளில் பரிகாசத்துக்குரிய செய்தியாகப் பரவி இருக்கும். நீங்கள் செய்த தானம் நமது பொக்கிஷத்தைக் காலி ஆக்கி, நாட்டின் எதிர்கால நலத்தை முடக்கும்.''

''பக்கத்து நாடுகள் பரிகசிக்கமாட்டார்கள். தங்களால் இப்படிச் செய்ய முடியவில்லையே என்று மனதிற்குள் மருகுவார்கள். நான் என்னடா புதிதாகவா இதனைச் செய்திருக்கிறேன். இதற்கு முன்னர் இதே நாட்டில் இதே மாதிரி ஏராளமான மன்னர்கள் செய்து இருக்கிறார்கள். இதற்கு முன் இதே தஞ்சையைத் தலைநகரமாகக் கொண்டு தரணி போற்ற ஆட்சிபுரிந்த இராச இராச சோழன் திருவிசலூர்க் கோயிலில் துலாபாரம் ஏறியபொழுது அவனது பட்டத்தரசியான தந்தி சக்திவிடங்கி என்பவள் ஹ்ரண்ய கர்ப்பம் புகுந்ததாகக் கல்வெட்டு இருக்கிறது.''

''மற்றவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதற்காக நாமும் மடத்தனமாகச் செய்வதா?''

''அறிவின் நிலை பிறழ்ந்த உனக்கு அதெல்லாம் தவறாகத்தான் தெரியும். மனுநீதிச் சோழன் முதல் எத்தனையோ சோழ மன்னர்கள் சிறப்பாக கோலோச்சிய பெருமை பெற்றது இந்தச் சோழ தேசம். சாஸ்திரங்களின் படி நடந்ததால்தானே அவர்கள் அத்தனைச் சிறப்புப் பெற்றார்கள். அதுவும் மனுநீதிச் சோழனின் பெயரை இன்னமும் இந்த நாட்டில் நினைவு கூர்கிறார்களே அதற்குக் காரணம் என்ன? மனுநீதி தவறாமல் ஆட்சி புரிந்தானே அதனால்தானே?''

''யார் அது மனுநீதிச் சோழன்?''

''மனுநீதிச் சோழன் யார் என்றுகூடத் தெரியாமல் இருக்கும் நீ, நான் செய்த சடங்குகளை எதிர்ப்பு பேசுகிறாய்?''

''அதனைப் பற்றி முற்றும் தெரிந்ததனால்தான் கேட்கிறேன் யார் அந்த மனுநீதிச் சோழன்.''

இதற்கு அருகில் இருந்த அமைச்சர் பதிலளிக்க ஆரம்பித்தார்.

''முன்னொரு காலத்தில் ஒரு சோழ மன்னன் இந்த நாட்டை நீதி வழுவாது ஆண்டு வந்தான். அவன் மகன் ஒருநாள் தேரில் ஏறி வீதியில் செல்லும்பொழுது, தவறுதலாக ஒரு பசுங்கன்றின் மீது தேரை ஏற்றிக் கொன்றுவிட்டான். அதன்பிறகு அதனைப் பற்றிக் கவலைப்படாமல் சென்றுவிட்டான். கன்றை இழந்த அதன் தாய்ப்பசு இந்த அநீதியைப் பார்த்து, மன்னன் அரண்மனையின் வாயிலில்

அமைக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியை அசைத்து அடித்ததாம். இதனைப் பார்த்து வியந்த சோழன், நடந்ததை மக்களிடம் விசாரித்தான். தன்மகன் செய்தது தவறு என்று தீர்ப்பளித்து, அவனது மகனைத் தரையில் படுக்க வைத்து, அதே தேரை அவன்மீது ஏற்றிக் கொன்றானாம். அதனால் தான் அவனை மனுநீதி கண்ட சோழன், மனுநீதிச் சோழன் என்று இன்றளவும் பெருமைபட நம் மக்கள் பேசி வருகிறார்கள்.''

''இது எவ்வளவு பொய்யான புனைந்துரை என்று புரியவில்லையா உங்களுக்கு? ஐந்தறிவு பெற்ற ஒரு விலங்கு ஆராய்ச்சி மணி பற்றித் தெரிந்து, வீதியில் இருந்து அரண்மனைவரை ஓடி வந்திருக்குமா? இது ஒரு முட்டாள்தனமான கற்பனை என்று ஆராய்ந்து பார்க்க உங்கள் மனம் இதுவரை முயலவில்லை?''

''கற்பனை அல்ல இளவரசே! வெகுகாலத்திற்கு முன் உண்மையிலேயே நடந்தது. 'வாயிற் கடைமணி நடுநாநடுங்க, ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத் தான்தன், அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன் பெரும் பெயர்ப்புகார் என்பதியே' என்று சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதையில் வருகிறது. இதனைப் போன்று பல தமிழ் இலக்கியங்களில் இக்கதை சொல்லப்பட்டு இருக்கிறது'' என்றார் அங்கு இருந்த ஒரு தமிழ்ப்புலவர்.

''இருக்கட்டுமே! மன்னனைப் புகழ்வதற்காகப் புலவர்கள் புனைந்துரைத்த பொய்க்கதை! மேகங்களுக்கு விலங்கிட்டு சிறைப்படுத்தினான் ஒரு பாண்டியன் என்பார்கள். புறாவிற்காகத் தனது சதையை அறுத்துக் கொடுத்தான் ஒரு சோழன் என்பார்கள். அதேபோன்றுதான் இதுவும். நடக்க முடியாத ஒரு விஷயத்தை மன்னனது பெருமைக் காப் பாடிய ஒரு கற்பனை.''

''அப்படிச் சொல்ல முடியாது இளவரசே! அந்த யுகத்தில் அவை எல்லாம் உண்மையிலேயே நடந்தன. இப்பொழுது கலியுகம் பாருங்கள். அதனால் அந்த மாதிரி அற்புதங்கள் நடைபெறாமல் இருக்கலாம்'' என்றார் அமைச்சர்.

''தாங்கள் என்ன இரண்டு யுகங்களிலும் இருந்து பார்த்துவிட்டு வந்தீர்களா?'' என்று கேட்டதும் அமைச்சர் கடுப்புடன் தலைகுனிந்தார். மன்னார்தாசன் தொடர்ந் தான்.

''சரி. நீங்கள் சொன்னபடி மனுநீதிச் சோழன் கதை உண்மையிலேயே நடந்தது என்றே வைத்துக் கொள் வோம். சோழனின் மகன் தேரில் வரும்பொழுது கவனி யாது தேரை ஓட்டிப் பசுங்கன்றின் மீது ஏற்றிக் கொன்று விட்டான். வேண்டும் என்றோ அந்தக் கன்றினைக் கொல்ல வேண்டும் என்றோ, நினைத்து அவன் தேரை ஏற்றவில்லை இல்லையா? இந்த செயலுக்கு என்ன தண்டனை? அதே தேர்க்காலில் மகனை ஏற்றிக் கொல்வதா சரியான தண் டனை? எந்த அடிப்படையில் இந்த நீதியை மகனுக்கு வழங்கினான் சோழ மன்னன்?''

''மனுநீதியில் சொல்லப்பட்டபடி அந்தத் தண்ட னையை வழங்கி இருக்கிறான். அதனால்தானே அவன் மனுநீதிச் சோழன் என்று பெருமையாகச் சொல்கிறார்கள்'' என்றான் மன்னன்.

''புரியாமல் பேசாதீர்கள் தந்தையே! மாலை தர்ம சாஸ்திரம், மனு ஸ்மிருதி என்றெல்லாம் சொல்லப்படும், அந்த மனுநீதியில் அந்தக் குற்றத்திற்கு அப்படி ஒரு தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதா?''

''எனக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. அமைச்ச ருக்குத்தான் தெரியும். அவர்தான் சகல சாஸ்திரங்களையும்

கரைத்துக் குடித்தவர். என்ன அமைச்சரே, இந்தக் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்?'' என்றான் மன்னன் கோவிந்த தீட்சிதரைப் பார்த்து.

அமைச்சர் மௌனமாக நின்றார்.

''என்ன அமைச்சரே, மனுநீதியில் அப்படித்தானே சொல்லப்பட்டு இருக்கிறது?'' மறுபடியும் கேட்டான் மன்னன்.

''அவரைக் கேட்டுப் பலனில்லை தந்தையே! அவர் பதில் சொல்லமாட்டார். காரணம்? மனுநீதியில் அப்படிப் பட்ட ஒரு தீர்ப்பு சொல்லப்படவில்லை.''

''என்ன அமைச்சரே, மன்னார்தாசன் சொல்வது உண்மையா? மனுநீதியில் அப்படிச் சொல்லவே இல்லையா?''

அமைச்சர் பதில் கூறாது பேசாமல் இருந்தார்.

*''அவரைக் கேட்காதீர்கள் தந்தையே! நானே இதற்கு முற்றிலுமாக விளக்கம் அளிக்கிறேன். 'வண்டியோட்டி ஒருவன் தன்னுடைய கவனக்குறைவின் காரணமாகப் பசு போன்ற கால்நடைகளின் இளங்கன்றுகளைக் கொன்று விட்டால் அதற்காக இருநூறு பணம் அபராதம் விதிக்க வேண்டும்' என்று மனுநீதியின் எட்டாம் அத்தியாயத்தின் இருநூற்றுத் தொன்னூற்று ஏழாம் ஸ்லோகம் தெளிவாகச் சொல்கிறது. கன்றினைக் கொலை செய்த வண்டி ஓட்டியை அதேபோன்று கொல்லுமாறு சொல்லப்படவில்லை. என்ன அமைச்சரே, இதனை உங்களால் மறுக்க முடியுமா?''

அமைச்சர் வாயைத் திறக்கவில்லை.

''மனுநீதியில் மட்டுமல்ல தந்தையே, இந்த நாட்டில் இதுவரை புழங்கிவரும் ஆபஸ்தம்பர், கௌதமர், வசிஷ்

டர், நாரதர், பௌதாயனர், விஷ்ணு, பிரஹஸ்பதி, சுக்கிர நீதி உள்ளிட்ட சகல நீதி நூல்களிலும் சொல்லப்படாத ஒரு தீர்ப்பை, ஒரு மாபெரும் அநீதியை அந்தச் சோழன் தனது மகனுக்கு வழங்கி இருக்கிறானே அவனா இந்தத் தரணி போற்றும் தலைசிறந்த மன்னன்? மனுநீதியில் சொல்லப்படாத தீர்ப்பை வழங்கியவனுக்குப் பெயர் மனு நீதிச் சோழன்! விந்தையாக இல்லையா தந்தையே?''

''சரிதான் நிறுத்துடா! தேவையில்லாமல் பேசிக் கொண்டு போகிறாய்'' கோபமாகக் கத்தினான் மன்னன்.

''ஆம, தேவையற்ற பேச்சுத்தான் இது. தலைமுறை தலைமுறையாக உலவி வரும் செய்தியை அறிவுப்பூர்வமா கச் சரியான ஆதாரங்களுடன் ஆராய்ந்து பார்ப்பதுதான் விவேகமான செயல் என்று உங்களுக்குப் புரிய வைப்பதற் காகத்தான் இதனைப் பேச வேண்டிய தேவை ஏற்பட்டது தந்தையே! இதனைப் போன்றுதான் சாஸ்திரங்களின் பெய ரால் நம்மீது சில சுயநலம் விரும்பிகளால் திணிக்கப்படும் விஷயங்களை ஆராய்ந்து முடிவு எடுப்பதுதான் அறிவிற் சிறந்தவரின் பண்பு, அதை விடுத்து ஒரு மன்னனே இப்படிக் கண்மூடித்தனமாக, முட்டாள்தனமாக, மூடத் தனமாக அறிவு மழுங்கி மற்றவர்கள் நகைக்கும்படியாக இப்படி ஒரு காரியத்தை செய்தது எனக்கு அவமானமாக இருக்கிறது.''

இதற்கும் மேலும் தன் மகன் பேசுவதைக் கேட்க பொறுக்காமல் மன்னன் தனது அரியாசனத்தில் இருந்து எழுந்து மன்னார்தாசனின் கன்னத்தில் மாறி மாறி அறைந் தான்.

''உனக்கு மட்டுமல்லடா, உன்னை மகன் என்று சொல்வதற்கே எனக்கு அவமானமாக இருக்கிறது. நீ என்

கண்ணிலேயே விழிக்காதே! எங்கேயாவது போய்த் தொலை! இன்றுமுதல் நீ எனக்கு மகனுமல்ல! நான் உனக்கு தந்தையும் அல்ல! டேய் இவனை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுங்கள்.''

மன்னார்தாசன் அதற்கு மேல் அங்கு நிற்க மனமின்றி வேகமாக ஆஸ்தான மண்டபத்தைவிட்டு வெளியேறி னான்.

அந்தரப்புரத்திலுள்ள தன்னுடைய அறைக்குள் வந்து வெறுப்புடன் மஞ்சத்தில் சாய்ந்தான்.

தந்தையின் போக்கு வரவரப் பிடிக்கவில்லை இனி யும் இங்கு இருப்பது தவறு. எதிர்காலத்தில் தந்தை மறுபடியும் இந்த மாதிரி மூடத்தனமாக ஏதாவது செய் வார். அதனை என்னால் பொறுக்க முடியாது தட்டிக் கேட்க வரும். பின்னர் இதேபோன்று அவமானப்பட நேரிடும்.

தந்தையிடம் மற்றவர் முன்னிலையில் அடி வாங்கு வது இது இரண்டாவது தடவை! இனியும் இப்படி ஒரு நிகழ்ச்சி நடக்கக் கூடாது.

இதற்கு வழி நான் தஞ்சையைவிட்டுப் பிரிந்து வேறு எங்காவது போய் சில காலம் வாழ வேண்டியதுதான். தந்தை எக்கேடும் கெட்டுப் போகட்டும். தங்கைக்கு எவ னையாவது மணம் செய்து வைக்கட்டும். நான் சில காலம் சந்திரகிரியில் வசிக்க வேண்டியதைத் தவிர வேறு வழி யில்லை.

உடனே அவனுக்குத் தனது ஆசைக் காதலி மதுர வாணியின் நினைவு வந்தது. தன்னுடைய பிரிவு அவளை அதிகமாக வாட்டிவிடும். அதனால் அவளிடம் சொல்லி

அவளை ஆறுதல்படுத்திவிட்டு அன்றே இந்த நாட்டை விட்டு அகன்றுவிட வேண்டியதுதான்.

நாளை மறுநாள்தானே பௌர்ணமி!

மன்னார்தாசன் பௌர்ணமி நாளுக்காகக் காத்திருந்தான். அதே நாளைத்தான் தளபதி ரங்கப்ப நாயக்கனும், அமைச்சர் கோவிந்த தீட்சிதரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த நாளும் வந்தது.

---

*1. should a driver, being met in the way by another carriage or by cattle, kill any animal by his negligence, a fine shall without doubt, be imposed by the following rule... for killing very young cattle, the fine shallbe two hundred ponas. - Manava Dharma Sastra or the Instituter of Manu - translated by G.U.Houghton - page no.215-216.*

*2. The laws of Manu - Translated by G.Buhler and edited by F.Max Muller - page no.305-306.*

# 51



பொழுது புலருவதற்குச் சில நாழிகைக ளுக்கு முன்னரே அமைச்சர் கோவிந்த தீட்சிதர் கும்பகோணத்திலுள்ள வேதபாட சாலைக்குப் புறப்படுவதற்குத் தயாராகிவிட்டார்.

நான்கு குதிரைகள் பூட்டிய ரதம் ஒன்று அவரை ஏற்றிச் செல்லும் பொருட்டு வாசலில் நின்று கொண்டிருந்தது.

அவரை விடை கொடுத்து அனுப்புவதற்காக அவரது மனைவி நாகாம்பாளும், மகள் மதுரவாணியும் வாசல் வரை அவருடன் சேர்ந்து வந்தனர்.

''போய் வருகிறேன் நாகு. வழக்கம்போல் நாளை தான் திரும்பி வருவேன். மதுரவாணி உன்னிடம் ஒன்று சொல்ல மறந்துவிட்டேன்'' என்றார் அமைச்சர்.

''என்ன தந்தையே?''

''இன்று நீ உய்யான வனத்திற்குச் சென்று பூஜைக்காகப் புஷ்பங்களைப் பறிக்க வேண்டும் இல்லையா?''

''ஆம் தந்தையே.''

''நான் நலமுடன் திரும்பிவர வேண்டும் என்பதற்காக நீ உய்யான வனத்திற்கு நடந்தே சென்று புஷ்பங்களைப் பறித்து வருவதாக இறைவனிடம் வேண்டி இருக்கிறாய் என்று உன் தாய் கூறினாள்.''

''உண்மைதான் தந்தையே.''

''இதைக் கேட்டவுடன் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.''

''அப்படியானால் இன்று நடந்தே செல்லட்டுமா தந்தையே?'' ஆர்வமுடன் கேட்டாள்.

''இன்று ஒருநாள் மட்டும் பல்லக்கில் சென்று மலர்களைப் பறித்து வா மகளே. நான் நினைத்தபடி இன்றைய காரியங்கள் அனைத்தும் நல்லபடியாக முடிந்துவிட்டால் அடுத்த பௌர்ணமி முதல் நீ வேண்டிக் கொண்டபடி நடந்தே செல்லலாம்.''

''சரி தந்தையே'' என்ற மதுரவாணிக்கு மனதிற்குள் மகிழ்ச்சிப் பொங்கிப் பெருகத் தொடங்கியது.

இளவரசருக்கு இது தெரிந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்.

''நான் சென்று வருகிறேன்''

அமைச்சர் ரதத்தில் ஏறிக் கொள்ள, வண்டியோட்டி மெதுவாகக் குதிரைகளை நடத்தி வீதிகளைக் கடக்கத் தொடங்கினான்.

இளவரசன் மன்னார்தாசனுடன் இனிமையாகக் கழிக்கப் போகும் பொழுதுகளை மனதிற்குள் அசைபோட்டவாறு, தன்னை அலங்கரித்துக் கொள்ளத் தொடங்கினாள் அமைச்சரின் மகள்.

இரண்டு வீதிகளைக் கடந்ததும் அமைச்சர் வண்டியை நிறுத்தும்படி ஓட்டியிடம் உத்தரவிட்டார். ரதம் அவசரமாக நின்றது.

''மன்னர் எனக்கு மிக முக்கியமான ஓர் வேலையைப் பணித்து இருக்கிறார். அதனை நான் மறந்துவிட்டேன். அதனால் இன்று நான் கும்பகோணம் செல்ல இயலாது.

நான் ஓர் ஓலை தருகிறேன். அதனை நீ வேதபாடசாலையின் முதன்மை உபாத்தியாயரிடம் கொடுத்துவிடு. வழக்கம்போல் நீ நாளைக் காலை கிளம்பி வந்தால் போதும்'' என்றவாறு ஓர் ஓலையினை எடுத்து ரதசாரதியிடம் நீட்டினார்.

''ஐயா தங்களை வீட்டில் விட்டுவிட்டுச் செல்லட்டுமா?''

''வேண்டாம், நான் அரண்மனைக்குச் செல்ல வேண்டும். நடந்துபோய்க் கொள்கிறேன்.''

அமைச்சர் ரதத்தில் இருந்து இறங்கியதும் வண்டியை வேகமாகக் கிளப்பினான் ஓட்டி!

பொழுது இன்னும் புலராததால், புகைபடிந்தது போன்று இளம்பனி நகர் முழுவதும் சூழ்ந்து இருந்ததால், அமைச்சர் நடந்தே சென்று தளபதி ரங்கப்ப நாயக்கன் மாளிகைக்குள் நுழைவதை நாட்டு மக்கள் யாரும் கவனிக்கவில்லை.

மதுரவாணி பூக்குடலையை எடுத்துக் கொண்டு தனது தாயிடம் சொல்லிவிட்டு வாசலுக்கு வந்து பல்லக்கில் ஏறி உட்கார்ந்தாள்.

அவளைச் சுமந்து கொண்டு பல்லக்கு சிவகங்கைக் குளத்து அருகே உள்ள மலர்வனத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

தளபதியின் மாளிகைக்குள் நுழைந்த அமைச்சரை உற்சாகத்துடன் வரவேற்றான் ரங்கப்ப நாயக்கன்.

''வாருங்கள் அமைச்சரே! சொன்னபடியே சரியான நேரத்தில் வந்துவிட்டீர்களே!''

''எல்லாம் தயாராக இருக்கிறதா தளபதியாரே? உய்யான வனத்திற்கு நாம் செல்லலமா?'' என்ற அமைச்சரின் முகத்தில் லேசாகக் கவலை ரேகைகள் படர ஆரம்பித்தன.

''நேரே நாம் இப்பொழுது உய்யான வனத்திற்குச் செல்ல வேண்டாம். வனத்திற்கு அருகில் நாம் மறைந்து இருந்து பார்ப்பதற்கு வசதியாக வீடு ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறேன். இருபதுக்கும் மேற்பட்ட வீரர்கள் ஆயு தம் தாங்கிய நிலையில் நமது உத்தரவிற்காக அங்கு காத்துக் கிடக்கிறார்கள்.''

''எனக்கு என்னவோ மனதிற்குள் கலக்கமாக இருக்கி றது.''

''கவலைப்படாதீர்கள் அமைச்சரே! மதுரவாணி மீது நிச்சயம் தவறு இருக்காது. மன்னார்தாசன்தான் அவளை தொந்தரவு செய்யப் பார்க்கிறான். இன்று அதனை நீங்கள் நேரிலேயே பார்த்துவிடலாம்.''

தளபதியும், அமைச்சரும் சிவிகையில் ஏறி மலர்வனத் தின் மிக அருகில் உள்ள வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். தளபதி சொன்னது மாதிரியே இருபதுக்கு மேற்பட்ட வீரர்கள் அங்கு காத்திருந்தார்கள்.

தளபதியும், அமைச்சரும் அந்த வீட்டிற்குள் மறைந்து இருந்தவாறு, சாளரத்தின் வழியாக உய்யான வனத்தின் சுற்றுப்புறம் முழுவதும் கண்களை ஓடவிட்டுக் கொண்டி ருந்தனர்.

சற்று நேரம் கழித்து மதுரவாணியின் பல்லக்கு மலர் வனத்தின் வாசலில் வந்து இறக்கி வைக்கப்பட்டது. அதன் திரைச் சீலையை விலக்கியவாறு மதுரவாணி பூக்குடலையு டன் வெளியேறுவது தெரிந்தது.

சிவிகையில் இருந்து வெளியேறிய மதுரவாணி சுற் றுப்புறத்தை ஒருமுறை பார்த்துவிட்டு, மலர்வனத்திற்குள் நுழைவது தெரிந்தது.

அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் இதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்கியது.

மன்னார்தாசன் தன் நண்பன் அக்கிராஜுவுடன் இணைந்து உய்யான வனத்தை நோக்கி வந்து கொண்டிருந் தான்.

''மன்னாரு கொஞ்சம் பொறுமையாக இரு. எல்லாம் நல்லபடியாக நடக்கும்'' என்றான் அக்கிராஜு.

''அந்த நம்பிக்கை எனக்கு அடியோடு அற்றுப் போய் விட்டது ராஜு. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பார்கள். என் தந்தைக்கு எழுபதுக்கு மேல் ஆகிவிட் டது. இனி இவர் திருந்துவார் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. சிறிது காலம் பிரிந்து இருந்தாலாவது இவர் மனம் மாறுமா என்று பார்க்கலாம். மாறாவிட்டால் என் தந்தை இறக்கும்வரை நான் வெளிநாட்டில் இருப்பது என்று முடிவெடுத்துவிட்டேன்.''

''நான் சொன்னால் கேட்கமாட்டாய். இப்பொழுது உன் ஆசைக்காதலி மதுரவாணி உன் கன்னத்தைப் பிடித்து கெஞ்சப் போகிறாள். வெளிநாடு செல்லும் எண்ணத்தை அடியோடு மாற்றிக் கொள்ளப் போகிறாய்.''

''மதுரவாணி எவ்வளவு கெஞ்சினாலும் என் மனம் மாறாது ராஜு. அவள் நிச்சயம் வருத்தப்படுவாள், தவிப் பாள், அழுவாள். இருந்தாலும் அவளை எப்படியாவது ஆறுதல்படுத்தி விடுவேன். அதன்பிறகு நான் சந்திரகிரிக்கு உடனே கிளம்பிவிடலாம் என்று தீர்மானித்திருக்கிறேன்.''

இருவரும் பேசியவாறு உய்யான வனத்தினருகே வந்து சேர்ந்தார்கள். வனத்தின் வாயிலருகே மதுரவாணி யின் பல்லக்கு இறக்கி வைக்கப்பட்டு இருப்பதையும், அதனருகே தூக்கிகள் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருப் பதையும் பார்த்தனர்.

''ராஜு, மதுரவாணி வந்துவிட்டாள். நான் உள்ளே செல்கிறேன். வழக்கம்போல் கவனமாக பார்த்துக் கொள்'' என்றவாறு இளவரசன் மற்றொரு வழியாக மலர் வனத்திற் குள் நுழைந்தான்.

இந்தக் காட்சியை மறைந்து இருந்து பார்த்துக் கொண் டிருந்த அமைச்சரின் கண்களில் அளவிட முடியாத சினம் தெரிந்தது.

''வாருங்கள் தளபதியாரே! இப்பொழுது சென்று அந் தப் பதரைப் பிடிக்கலாம்!'' என்று பரபரத்தார் அமைச்சர்.

''பொறுங்கள் அமைச்சரே! இப்பொழுது நாம் வீரர்க ளுடன் சென்றால், அக்கிராஜு அதனைப் பார்த்துவிடு வான். உடனே இளவரசனுக்குச் சைகை செய்வான். மன் னார்தாசன் மலர் வனத்திலிருந்து மறைந்துவிடுவான். அவன் செயலைக் கையும் களவுமாகப் பிடித்தால்தானே நாம் மன்னரிடம் தெளிவாக முறையிட முடியும்.''

''இப்பொழுது என்ன செய்யச் சொல்கிறீர்கள்?''

தளபதி அவர் காதில் ரகசியமாகத் தனது திட்டத்தைச் சொன்னான். அமைச்சருக்கும் அது பிடித்திருந்தது.

மலர் வனத்தினுள் நுழைந்த மன்னார்தாசன் வழக்கமா கத் தாங்கள் சந்திக்கும் இடத்தில் மதுரவாணி பூக்களைப் பறிக்கும் பாவனையில் அவனுக்காகக் காத்துக் கிடப்ப தைக் கண்ணுற்றாள்.

இளவரசன் அருகில் வந்ததும் மகிழ்ச்சியுடன் அவன ருகில் வந்து கையைப் பற்றிக் கொண்டாள். இருவரும் ஒரு புதர்மறைவில் நெருக்கமாக அமர்ந்தவாறு, ஒருவர் கையை மற்றவர் காதலுடன் இறுக்கிப் பிடித்தவாறு பேசத் தொடங்கினர்.

''என்ன இளவரசே, தங்கள் தந்தையுடன் தர்பார் மண்டபத்தில் தர்க்கம் செய்து அவரைக் கோபத்திற்குள் ளாக்கி விட்டீர்களாமே! என் தந்தை வீட்டில் வந்து அதைச் சொல்லி வருத்தப்பட்டார். ஏன் இப்படி எல்லாம் நடந்து கொள்கிறீர்கள்?''

''என்ன செய்வது வாணி! என் பிறவிக்குணம் அப்படி! தவறு என்று என் மனதில் பட்டதைத் தட்டிக் கேட்காமல் என் மனம் ஒப்ப மாட்டேன் என்கிறது.''

''அதேபோன்று சாஸ்திரங்களின் மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்திருப்பது தங்கள் தந்தையின் பிறவிக் குணம்! அதுமட்டும் மாறிவிடுமா?''

''அதனை இப்பொழுதான் உணர்ந்திருக்கிறேன்.''

''தர்பார் மண்டபத்தில் தாறுமாறாகப் பேசி மன்னர் உங்களை அத்தனை பேர் முன்னிலையில் கைநீட்டி அடிக் கும்படியாகவா நடந்து கொள்வது? இதன்னபபற்றி நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள்? மன்னர் உங்களை மகனே இல்லை என்று தீர்மானித்துவிட்டதாகக்கூட என் தந்தை சொன்னார்.''

''உண்மைதான். என்மீது எல்லையற்ற வெறுப்பில் இருக்கிறார். இனியும் அவர் அருகே இருந்து அவரது வெறுப்பை அதிகமாக்க வேண்டாம் என்று நினைக்கி றேன்.''

''என்ன சொல்கிறீர்கள் இளவரசே?'' என்றாள் அதிர்ச் சியுடன்.

''சில காலம் சந்திரகிரியில் வசிக்கலாம் என்று முடி வெடுத்துவிட்டேன். இங்கு இருந்தால்தானே எனக்கும் அவருக்கும் சண்டை வருகிறது.''

''அதற்காக இந்த நாட்டின் இளவரசர் நாட்டை விட்டு ஓடிச் செல்வதா? நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள்? மன்னருக்கு உங்கள் மீதான வெறுப்பு அதிகமாகாதா? இப்பொழுதே உங்களை அவரது மகன் இல்லை என்று சொல்லும் அளவுக்கு வெறுத்து இருக்கிறார்.''

''சில காலம் பிரிந்து இருந்தால் அவர் மனம் மாறுமா என்று பார்க்கலாம்! மாறாமல் அவர் இறக்கும்வரை என்

மீது வெறுப்பிலேயே இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். அதன்பிறகு நான் இந்த நாட்டிற்கேத் திரும்ப வருகிறேன்''

''என்ன இப்படிப் பேசுகிறீர்கள் இளவரசே? நாடு விட்டு ஓடிய உங்கள் மீதுள்ள வெறுப்பில் மன்னர் வேறு யாருக்காவது பட்டம் சூட்டிவிட்டால்?''

''போனால் போகட்டும். கோதாவரி ஆற்றங்கரையில் குடில் அமைத்து நாம் இருவரும் பழைய காலத்து ரிஷியும், பத்தினியும்போல் வாழ்வோம். காலம் முழுவதும் கவலையே இன்றி இலக்கிய பூங்காவில் உலாவி வருவோம்.''

''இதற்காகவா உங்களை இவ்வளவுக் கஷ்டப்பட்டுக் காதலித்தேன்'' என்று மதுரவாணி மனதிற்குள் மருகிக் கலங்கினாள். அவள் கண்களில் கண்ணீர் தளும்பத் தொடங்கியது.

''நான் உன்னிடம் இருந்து விடை பெற்றவுடன் இங்கிருந்து கிளம்பிப் போய்விடலாம் என்று சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்.''

''இப்படி என் நெஞ்சில் கல்லைத் தூக்கிப் போடுவதற்காகவா இங்கு வந்தீர்கள்?'' என்றவாறு அழ ஆரம்பித்தாள் மதுரவாணி.

மன்னார்தாசன் அவளைத் தேற்றிக் கொண்டிருந்தான்.

தளபதி உத்தரவிட்டதும் ஆயுதம் தாங்கிய பத்து வீரர்கள் அக்கிராஜு நின்றிருக்கும் இடத்தில் அவனவறியாது மறைந்து மறைந்து சென்றார்கள்.

அக்கிராஜு மலர்வனத்தின் நான்கு வாயில்களையும் கண்களால் உற்றுப் பார்த்து, தெரிந்தவர்கள் யாராவது வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அவன் பின்பக்கமாக வந்து பத்து வீரர்களும் அவன்மீது பாய்ந்து அப்படியே அமுக்கித் தரையோடு

தரையாக அழுத்திப் பிடித்துக் கொண்டார்கள். அவனது கையும் காலும் இறுக்கக் கட்டப்பட்டது. வாயில் துணி யைத் திணித்தார்கள்.

இதற்குள் தளபதியும், அமைச்சரும் அந்த இடத்திற்கு வந்துவிட்டனர். அவர்களது ஆணைப்படி, அக்கிராஜுவை அவர்கள் மறைந்திருந்த வீட்டிற்குள் கொண்டு சென்று பூட்டி வைத்தனர்.

பின்னர் அவர்கள் இருவரும் வீரர்களைக் கூட்டிக் கொண்டு ஓசை ஏற்படுத்தாமல் மலர்வனத்தின் பின் வாசல் வழியாக உள்ளே நுழைந்தனர்.

சென்ற தடவை மன்னார்தாசனை இந்த வனத்தில் பார்த்த இடம் தளபதிக்கு நினைவு இருந்ததால், அவர்கள் அனைவரையும் மறைந்து மறைந்து சிறு ஓசைகூட ஏற் படுத்தாமல் அந்த இடத்தை நோக்கிக் கூட்டிச் சென்று கொண்டு இருந்தான்.

மன்னார்தாசன் மதுரவாணியின் கண்களில் வழிந்த நீரைத் துடைப்பதற்காகக் கைகளைக் கொண்டு சென்றான். அவள் வெறுப்புடன் அதனைத் தட்டிவிட்டாள்.

''என்னை ஒன்றும் தேற்ற வேண்டாம்'' என்றவாறு தேம்பினாள்.

''வருத்தப்படாதே மதுரவாணி! நீ நினைப்பது போல் எதுவும் நடக்காது. என் தந்தை மனம் மாறலாம். மாறினா லும் மாறாவிட்டாலும் நீதான் என் மனைவி. அதுமட்டும் இந்த ஜென்மத்தில் மாறாது. நேரமாகிறது. பொழுது நன்றாகப் புலர்ந்துவிட்டது. இனி நாம் இங்கு இருப்பது ஆபத்து.''

''அழாதே மதுரவாணி! வா எனக்கு ஒரு முத்தம் கொடு. அந்த முத்தம் ஒன்றுதான் உன்னைப் பிரிந்து இருக்கும் பொழுதுகளில் என் நினைவை மகிழ்ச்சிப்படுத்

தும் வா கண்ணே'' என்றவாறு அவளது கையைப் பற்றி இழுத்தான்.

அப்பொழுது தளபதியும், அமைச்சரும் அவர்கள் அருகே வரும் ஓசை மதுரவாணியின் காதுகளில் விழுந்து விட்டது. இளவரசன் கையை அவசரமாக உதறினாள்.

ஆண்களுக்குத்தான் காதல் மயக்கத்தில இருந்தால் உலகமே தெரியாதே! தவிர அவர்கள் இளவரசனுக்குப் பின்பக்கமாக வந்து கொண்டிருந்ததால் அவன் கண்களி லும் படவில்லை.

''இன்னும் ஏன் கோபிக்கிறாய் கண்ணே! வா எனக்கு ஒரு முத்தம் கொடு'' என்றவாறு அவள் கையை மறுபடி யும் இழுத்துத் தன்னோடு அணைக்க முயன்றான். வாணி கையிலிருந்து பூக்குடலை கீழே விழுந்தது.

அதேநேரம் தன் தந்தையும் மற்றவர்களும் அந்த இடத்தருகே வந்துவிட்டதை மதுரவாணியின் கண்கள் பார்த்துவிட்டன.

உடனே பதறிப்போய் இளவரசனைப் பிடித்துத் தள்ளி னாள்.

''என்ன இளவரசே, இது அக்கிரமம்! தனியாக இருக் கும் பெண்ணைத் தேடி வந்து வம்பு செய்கிறீர்கள்?'' என்று கத்தினாள்.

இந்த வார்த்தைகளை மதுரவாணி சொல்லி முடிக்க வும், தளபதியும், அமைச்சரும் வீரர்களுடன் வந்து சூழ்ந்து கொள்ளவும் சரியாக இருந்தது.



# 52

மன்னார்தாசன் எல்லையற்ற அதிர்ச்சிக்கு ஆளானான்.

தான் முற்றிலும் எதிர்பாராத விதமாகத் தளபதியும், அமைச்சரும் வீரர்களுடன் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டதைவிட மதுரவாணி சொன்ன வார்த்தைகள்தான் அவனை அதிர்ச்சிக்கடலில் ஆழ்த்திவிட்டன.

''தனிமையில் வந்த என் பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டதற்காக உன்னை இதே இடத்தில் கொன்று இருப்பேன். ஆனால், நீ இந்த நாட்டின் இளவரசன் என்பதற்காக உன்னை உயிரோடு விட்டு இருக்கிறேன்'' அமைச்சர் ஆத்திரத்தில் பொரிந்து கொண்டு இருந்தார்.

மதுரவாணி குலுங்கிக் குலுங்கி அழுதுகொண்டு இருந்தாள். மன்னார்தாசன் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்து கற்சிலை என நின்றிருந்தான்.

மதுரவாணி எதற்காக அப்படிச் சொன்னாள். 'தனியாக இருக்கும் பெண்ணைத் தேடி வம்பு செய்கிறீர்கள்' என்று இந்த வார்த்தையை என்ன அர்த்தத்தில் சொன்னாள்?

தன் தந்தையைப் பார்த்தவுடன் பழியை என்மீது போட்டு விட்டாளா? சேச்சே! அப்படி இருக்காது!

நான் பிரிந்துசெல்ல இருப்பதைத் தாங்க முடியாமல் என்மீது ஊடல் கொண்டு கோபித்துக் கொண்டிருக்கும் பொழுது, நான் அவள் கையைப் பற்றி இழுத்து முத்தம் கொடுக்க முயன்றதால் அவளது ஊடல் அதிகரித்து என்மீது பொய்க் கோபத்துடன் 'இப்படி வம்பு செய்யலாமா' என்றுதான் சொல்லி இருப்பாள்!

இந்தச் சமயம் பார்த்து இவர்கள் வந்துவிட்டதால் அதன் பொருள் தலைகீழாக மாறிவிட்டது!

இனியாவது இதனைப் புரிந்து கொண்டு உண்மையை எடுத்துச் சொல்லத்தான் போகிறாள்! சொல் மதுரவாணி, சொல்.

ஆனால் மதுரவாணி எதுவுமே சொல்லாமல் தலை குனிந்து அழுது கொண்டிருந்தாள்.

''பாவி! ஒன்றும் அறியாத என் மகளிடம் இப்படித் துராக்ருதமாக, துஷ்டத்தனமாக நடந்து கொண்டு கேவலப் படுத்தி விட்டாயே! பாரடா அந்தக் குழந்தை எப்படி அழுகிறாள் என்று!'' அமைச்சர் கோபத்துடன் கத்திக் கொண்டிருந்தார்.

சொல் மதுரவாணி, இப்பொழுதாவது சொல். மன்னார்தாசன் மனதிற்குள் மறுகிக் கொண்டிருந்தான்.

அழுது கொண்டிருந்த மதுரவாணியோ அவனை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை.

''பெண் பித்துக் கொண்டு நாள்தோறும் பவழவீதியிலுள்ள பரத்தையர்களைத் தேடிச் சென்ற நீ கடைசியில் அப்பாவியான என் மகளின் கையைப் பிடித்து இழுக்கும் அளவுக்குச் செல்வாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை.''

"அமைச்சரே, இங்கேயே நின்று இதனைப் பற்றி பேசிக் கொண்டு இருக்க வேண்டாம். நாட்டு மக்கள் பலரும் வந்துபோகும் இடம் இது. மற்றவர்களுக்குத் தெரிந்தால் மதுரவாணியின் பெயருக்குத்தான் களங்கம் ஏற்படும். இவனை முதலில் மன்னனிடம் கொண்டு செல்வோம்" என்றான் தளபதி.

"ஆம், அவர் தெய்வ பக்தி மிகுந்தவர். அவர்தான் இவனுக்கு நல்ல தீர்ப்பு வழங்குவார். மதுரவாணி, நீ பல்லக்கில் ஏறிச் சீக்கிரமே வீட்டிற்குச் செல். டேய், இளவரசனை இழுத்து வாருங்கள்" என்ற அமைச்சரின் வார்த்தைகளைக் கேட்டதும், இகழ்ச்சியாக அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தான் மன்னார்தாசன்.

மதுரவாணி கண்களைத் துடைத்தவாறு வேகவேக மாக அந்த இடத்தைவிட்டு வெளியேறினாள்.

அவள் கொண்டு வந்த பூக்குடலையில் உள்ள மலர் கள் விரல்கள் காலடி பட்டுச் சின்னாபின்னமாகச் சிதறின.

மன்னன் விஜயராகவ நாயக்கன் மட்டிலாக் கோபத்துடன் மைந்தன் மன்னார்தாசனை முறைத்துப் பார்த்தான்.

ஆஸ்தான மண்டபத்தில் அரசப் பிரதிநிதிகள் முன்னி லையில் அதிகப்பிரசங்கித்தனமாக அவன் பேசியதை நினைத்து ஏற்கனவே கொதித்துப் போயிருந்த மன்னனின் மனம், அமைச்சர் மகளிடம் தகாத முறையில் நடந்து கொண்டு இப்படி கையும் களவுமாகப் பிடிபட்டு வந்து நிற்பதைப் பார்த்ததும் மன்னார்தாசன்மீது வெறுப்பும் கோபமும் மாறி மாறி எழுந்தது.

"சொல்லுடா அமைச்சர் மகளின் கையைப் பிடித்து இழுத்து முத்தம் கொடுக்க முயன்றாயா?" சினத்துடன் சீறினான் மன்னன்.

மன்னார்தாசனோ எதுவும் பேசாமல் சிலையென நின்றிருந்தான்.

"நான் மட்டுமல்ல மன்னா! நமது தளபதியாரும் இதோ இருக்கும் அத்தனை வீரர்களும் எங்கள் கண்களால் நேரடியாகப் பார்த்தோம்" என்றார் அமைச்சர்.

"செய்வதையும் செய்துவிட்டு இப்படி சிலை என நிற்கிறாயே! இதைக் கேட்டவுடன் என் உயிரே போய் விடக் கூடாதா என்று இருக்கிறது. நீ திமிருடன் நின்று கொண்டு இருக்கிறாய்! எந்த ஜென்மத்தில் என்ன பாவம் செய்தேனோ, இப்படிப்பட்ட பாவியை என் மகனாகப் பெற்றிருக்கிறேன். துலாபுருஷதானமும், ஹ்ரண்யகர்ப்ப தானமும் செய்தும்கூட என் பூர்வ ஜென்மவினை, இப்படித் தொடர்ந்து கொண்டு இருக்கிறதே ஆண்டவா!"

இதைக் கேட்டு மன்னார்தாசன் இகழ்ச்சியாகச் சிரித்தான். இதைப் பார்த்தவுடன் மன்னனுக்கு மறுபடியும் ஆத்திரம் தோன்றி மறுபடியும் அவன் கன்னத்தில் அறைந்தான்.

"செய்வதையும் செய்துவிட்டுச் சிரிக்கவாடா செய்கிறாய்? நமது குலகுருவுக்கு அடுத்தபடியாக மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கும் அமைச்சர் மகளையே தொடும் அளவுக்குத் துணிந்து விட்டாயா? அன்றைக்குத் தர்பார் மண்டபத்தில் என்னை இகழ்ந்து பேசினாயே, இதுதானா உன் யோக்யதை?"

இதைக் கேட்டவுடன் மன்னார்தாசன் தந்தையை ஏறிட்டுப் பார்த்து, "என்மீது எந்தத் தவறும் இல்லை. வேறு எதையும் நான் வாய் திறந்து சொல்ல விரும்பவில்லை" என்று மட்டும் சொன்னான்.

"அப்படியானால் என் மகள் மீது தான் தவறு என்று சொல்கிறீர்களா இளவரசே?" என்று கோபத்தை அடக்கியவாறு கேட்டார் அமைச்சர்.

''நான் அப்படிச் சொல்லவில்லை. என்மீது தவறு இல்லை.''

''இதற்கு வேறு என்ன அர்த்தம்? நாங்கள் பார்த்தது தவறு. என் மகள் வார்த்தைகளைக் கேட்டது தவறு என்கிறீர்களா?''

''தெரியாது. என் மீது தவறு இல்லை.''

''என் மகள் மீது சுற்றி வளைத்துக் குற்றம் சாட்ட முயல்கிறார் மன்னா! இதனை நான் அவள் வாயின் மூலமாக உங்களுக்கு நிரூபிக்கிறேன் மன்னா'' என்றார் அமைச்சர் ஆத்திரத்துடன்.

''தேவை இல்லை அமைச்சரே! உங்கள் வார்த்தை களை நான் ஆண்டவன் வார்த்தைகளுக்குச் சமமாக எப் பொழுதும் எண்ணுபவன். மதுரவாணியை இங்கு அழைத்து வரவேண்டாம். என் மகனைப் பற்றி எனக்குத் தெரியாதா?''

மன்னார்தாசன் மறுபடியும் இகழ்ச்சியாகச் சிரித்தான்.

''இல்லை மன்னவா! வழக்கு என்று வந்த பிறகு அமைச்சர் என்ற அந்தஸ்து பார்க்கக் கூடாது. இவ்வளவு தூரம் வந்துவிட்ட பிறகு நான் சரிவர அதனை நிரூபிக்கா விட்டால், இந்த நாட்டு மக்கள் என் மகள் பெயருக்கும் களங்கம் ஏற்படுத்தி விடுவார்கள். நான் இப்பொழுதே சென்று என் மகளை உங்கள் முன் கூட்டி வருகிறேன். நடந்த உண்மைகளை அவளே தன்னுடைய வாயால் எடுத்துச் சொல்லட்டும். அதன்பிறகு நீங்கள் தீர்ப்பு வழங் குங்கள்'' அமைச்சர் வேகமாக வெளியேறினார்.

அமைச்சர் வீட்டிற்குள் நுழையும்பொழுது மதுரவாணி தலைகுனிந்து உட்கார்ந்தவாறு அழுது கொண்டிருந்தாள். அவளருகே ஒன்றும் புரியாத முகபாவத்துடன் அவள் தாய் கவலையுடன் வீற்றிருந்தாள்.

அமைச்சரைப் பார்த்ததும் ''என்னங்க நடந்தது? உய் யான வனத்திலிருந்து திரும்பி வந்து இப்படி அழுது கொண்டே இருக்கிறாள். கேட்டால் ஒன்றுமே சொல்ல மாட்டேன் என்கிறாள்'' என்றாள் தாய்.

அமைச்சர் நடந்த விவரங்களை மனைவியிடம் கூறி னார்.

''அடப்பாவி! நம் குழந்தையிடம் இப்படியா அவன் நடந்து கொண்டான்! அதுதான் குழந்தை இப்படி அழுது தவிக்கிறது! அந்தச் சண்டாளனைச் சும்மாவிடக் கூடாது! மன்னர் அவனுக்குத் தகுந்த தண்டனை தருவாரா இல்லை மகன் என்ற பாசத்தில் பெயருக்குக் கண்டித்துவிட்டுப் போகச் சொல்லி விடுவாரா?'' என்றாள் நாகாம்பாள்.

''விஜயராகவ நாயக்கன் தெய்வ பக்தி மிகுந்தவன். தவறான தீர்ப்புக்கூற அஞ்சுபவன். நிச்சயம் தகுந்த தண் டனை விதிப்பான்.''

''இந்தப் பாவிக்கு என்ன தண்டனை வழங்கு வார்கள்?''

★ ''இப்படிப்பட்டக் குற்றத்திற்கு வசிஷ்டர் தனது நீதி நூலில் சரியான தண்டனை கூறி இருக்கிறார்! மன்னர் குலத்தைச் சேர்ந்த ஒருவன் பிராமணப் பெண்ணை கெடுக்க முயன்றால், அவனை சாரைப்புல் இலைகளால் கட்டி தீயுனுள் தூக்கி எரிய வேண்டும். அந்தப் பிராமணப் பெண்ணின் தலைமுடியை மழித்து, உடல் முழுவதும் எண்ணெய் தடவி ஆடையின்றி அம்மணமாக ஆக்கி, அவளை ஒரு வெள்ளைக் கழுதையில் ஏற்றி வீதி சுற்றி வந்தபிறகு அவள் புனிதம் அடைகிறாள் என்கிறார்.''

இதைக் கேட்டதும் மதுரவாணிக்கு உடல் முழுவதும் நடுங்கத் தொடங்கியது.

''நல்ல தீர்ப்புத்தான். அந்தப் பாவியைத் தீயில் எறிந்து கொன்றால்தான் நல்லது. ஆனால் நமது பெண்ணை அந்த மாதிரிச் செயவ்து நன்றாக இராதே?'' என்று இழுத்தாள் நாகாம்பாள்.

''பயப்படாதே! அப்படிப்பட்ட தீர்ப்புகள் வழங்கும் காலம் மாறிவிட்டது. இருந்தாலும் மன்னார்தாசனுக்கு இதற்கு இணையான தீர்ப்பு நிச்சயம் கிடைக்கும்.''

''நமது மகளுக்கு?''

''அவள்மீது தான் எந்தத் தவறும் இல்லையே! இளவரசன் கையைப் பிடித்து இழுத்ததும் நம் குழந்தை அழுது மன்றாடியதை என் கண்களாலேயே பார்த்தேனே! இருப்பினும் இவள் மன்னர் முன்வந்து நடந்ததைச் சொல்ல வேண்டும். செய்வதையும் செய்துவிட்டு நம் மகள் மீது சேற்றை வாரி வீசி இருக்கிறான் அந்தத் துஷ்டன்.''

''இவ்வளவு தூரம் அவன் சொன்னபிறகு அவன் முகத்தில் அறைவதுபோல் நடந்ததை மன்னரிடம் போய் சொல் மகளே!'' என்றாள் நாகாம்பாள்.

''ஆமாம். மதுரவாணி எழுந்துவா. நேரம் கடத்தக் கூடாது. இல்லாவிட்டால் உன்னைப் பொய் சொல்லச் சொல்லி இவ்வளவு நேரம் போதனை செய்திருக்கிறோம். அதனால்தான் இத்தனை காலதாமதமாகக் கூட்டி வந்திருக்கிறார் அமைச்சர் என்று அந்தத் துஷ்டன் வாய் கூசாமல் சொல்வான். எழுந்திரு மதுரவாணி, சீக்கிரம்.''

மதுரவாணி கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து அமைச்சரின் பின்னே செல்லத் தொடங்கினாள்.

மன்னன் விஜயராகவ நாயக்கன் மதுரவாணியை உற்றுப் பார்த்தான்.

அழுது அழுது வீங்கி இருந்த அவள் முகத்தைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது. இப்படிப் பண்ணி

விட்டானே என்று நினைத்து மகன் மீது ஆத்திரம் மேலும் கூடியது.

அந்த இடத்தில் அமைச்சர், தளபதி, மன்னார்தாசன் தவிர மற்றவர்கள் வெளியேறுமாறு சொன்னான் மன்னன்.

மதுரவாணி அந்த இடத்தில் நுழைந்தது முதல் இளவரசன் நின்று கொண்டிருக்கும் பக்கம் ஓரக்கண்ணால்கூடத் தனது பார்வையைச் செலுத்தவில்லை.

மன்னர் முன் தலை குனிந்தே நின்றாள் மதுரவாணி.

''வருத்தப்படாதே மதுரவாணி! உய்யான வனத்தில் என்ன நடந்தது? பயப்படாமல் சொல்'' என்று பரிவுடன் கேட்டான் மன்னன்.

'சொல் மதுரவாணி! இப்பொழுதாவது உண்மையைச் சொல்' என்று மன்னார்தாசன் மனது கதறத் தொடங்கியது.

மதுரவாணி எதுவுமே சொல்லாமல் முகத்தைப் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

''கலங்காதே மகளே! நடந்ததை மட்டும் சொல்லி முடித்தவுடன் நீ போய்விடலாம்! சொல்! என்ன நடந்தது?'' மறுபடியும் மன்னன் வினவினான்.

மதுரவாணி குலுங்கி குலுங்கி அழுதவாறு சொல்ல ஆரம்பித்தாள்.

''சில காலமாக... இளவரசர்... என்னைப் பின் தொடர்ந்து வந்து... தொந்தரவு கொடுத்துக் கொண்டே... இருந்தார். ... இன்று உய்யான வனத்தில்... நான் தனியாக பூப்பறித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து 'என்னருகில் வந்து என் கையைப் பிடித்து இழுத்து...'' அதற்கு மேல் சொல்ல முடியாமல் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''இதைக் கேட்டவுடன் இளவரசனுக்கு அந்த இடமே சுழல்வது போலிருந்தது. வானமே தன் தலையில் வீழ்ந்து விட்டதைப் போல் உணர்ந்தான்.

சே! இப்படிப்பட்ட பெண்ணையா காதலித்தேன்!

''இப்பொழுது என்னடா சொல்கிறாய்? இனியும் உன்மீது தவறு இல்லை என்று சாதிக்கப் போகிறாயா?'' என்றான் மன்னன்.

''இல்லை எல்லாத் தவறும் என்மீதுதான்! இனி நீங் கள் மரண தண்டனை கொடுத்தால்கூட மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன்'' என்றான் மன்னார்தாசன் விரக்தியு டன்.

''இதன்பிறகும் இவன் திமிருடன் பேசுவதைப் பார்த் தீர்களா அமைச்சரே! இவன் செய்த இந்தச் செயலுக்கு மரணம் ஒன்றுதான் சரியான தண்டனை! இருப்பினும் இவன் ஒரே நாளில் சாகக் கூடாது. தான் செய்த செயலை நினைத்து வருந்தி, நாள்தோறும் மனவேதனைப்பட்டுச் சிறுகச் சிறுகச் சாகவேண்டும்'' என்றவாறு அருகில் இருந்த மணியை ஒலித்துக் காவலர்களை வரவழைத்தான்.

''இந்த நாயை இழுத்துச் சென்று சிறையில் அடையுங் கள்.''

மறுவிநாடி மன்னார்தாசனுக்கு விலங்கிட்டுச் சிறைச் சாலைக்கு இழுத்துச் சென்றார்கள்.

இந்தக் காட்சியைப் பார்த்தும் முகத்தில் எந்தவிதச் சலனமும் இன்றி மதுரவாணி தனது தந்தையுடன் அங்கி ருந்து நகர்ந்தாள்.

தளபதி ரங்கப்ப நாயக்கனுக்கோ மனதில் எல்லையற்ற மகிழ்ச்சி பெருகத் தொடங்கியது.

தஞ்சையின் ஒரே வாரிசைச் சிறையில் தள்ளியாயிற்று. இனி மன்னார்தாசன் கதி அதோ கதிதான்!

அடுத்தபடியாக இளவரசி சந்திரவதனாவைத் தனது மகன் அச்சுதப்பனுக்குத் திருமணம் செய்து விட்டால் போதும், இந்த நாடே இனி எங்கள் கைகளில்தான்!

இந்த எண்ணத்தில் தளவாய் அங்கிருந்து சென்றான். மன்னன் விஜயராகவ நாயக்கனோ, தனது பூஜை அறைக்குள் சென்று இறைவனை வழிபட ஆரம்பித்தான்.

இதற்கு அடுத்த நாள்தான் மதுரையில் இருந்து கிளம்பி சொக்கநாதன் தஞ்சாவூருக்குள் நுழைந்தான்.

---

* *"If a Kshatriya approches a female of the Brahmana caste, (the king) shall cause the Kshatriya to be tied up in leaves of sara grass and shall throw him in to a fire. He shall cause the head of the Brahmani to be shaved, and her body to be anointed with butter; placing here naked on a white donkey, he shall cause her to be conducted along the high road. It is declared in the veda that she becomes pure (thereby)" - Sacred Laws of the Aryas - Vasistha - Translated by George Buhler and edited by F.Max muller - Page no.110.*



# 53

சொக்கநாதனும், அவனது நண்பன் வெங்கடகிருஷ்ணனும் மாறுவேடம் புனைந்து, தஞ்சை நகருக்குள் நுழையும்பொழுது மாலைப் பொழுது மலரத் தொடங்கி இருந்தது.

தஞ்சை அரண்மனையின் பிரதான வாயிலைக் கடந்ததும், சொக்கநாதன் சற்று யோசித்தவாறு நின்றான்.

''என்ன சொக்கநாதா தயங்குகிறாய்?'' என்று கேட்டான் வெங்கடகிருஷ்ணன்.

''நாம் முதலில் மன்னார்தாசனை சந்தித்துப் பேசிவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன். மன்னார்தாசனின் மாளிகை எது என்று தெரியவில்லை. அதுதான் யோசிக்கிறேன்.''

''வா. விசாரிப்போம்.''

அவர்கள் சற்று தூரம் நடந்து எதிரில் வந்து கொண்டிருந்த ஒருவனை நிறுத்தி விசாரித்தார்கள்.

''ஐயா, இளவரசன் மன்னார்தாசன் அவர்கள் இருக்கும் மாளிகை எங்கே இருக்கிறது?'' என்று வினவிய வெங்கடகிருஷ்ணனை அந்த மனிதன் ஏற இறங்கப் பார்த்தான்.

''தங்கள் இருவரையும் பார்த்தால் வெளியூரில் இருந்து வரும் ஆசாமிகள்போல் தெரிகிறது. மன்னரைப் பார்க்க வேண்டுமா? இல்லை இளவரசரைத்தான் நாடி வந்திருக்கிறீர்களா?''

''நாங்கள் சந்திரகிரியில் இருந்து வருகின்றோம். இதற்கு முன்பு இளவரசர் அங்கு இருந்தபொழுது எங்களுக்குள் நல்ல பழக்கம். அதனால்தான் அவரை பார்த்து விட்டுப் போகலாம் என்று எண்ணினோம். அவர் தங்கி இருக்கும் மாளிகை இருக்கும் இடத்தை மட்டும் சொன்னால் போதும்.''

''இங்கிருந்து நேராக நடந்து வலது பக்கம் திரும்பினால் மூன்றாவது கட்டிடம்தான் அவரது மாளிகை. ஆனால், இளவரசர் இப்பொழுது அங்கு இல்லை.''

''வேறு எங்கு இருக்கிறார்?''

''சிறைச்சாலையில்.''

இதைக் கேட்டதும் இருவரும் எல்லையற்ற அதிர்ச்சிக்கு ஆளானார்கள்.

''சிறையிலா? எதற்கு? யார் அவரைச் சிறையில் அடைத்தார்கள்?'' திகைப்புடன் கேட்டான் சொக்கநாதன்.

''வேறு யார் இளவரசரைச் சிறையில் அடைக்க முடியும்? மன்னரேதான் தன் மைந்தரைச் சிறையில் தள்ளி இருக்கிறார். இந்த நாட்டு மக்களே அதனை எண்ணி மனக்கவலையில் ஆழ்ந்து இருக்கிறார்கள்.''

''தந்தையே மகனைச் சிறையில் தள்ளியது விந்தையாக இருக்கிறதே? தகுந்த காரணம் இல்லாமல் அப்படி நடந்திருக்க முடியாதே! அந்த காரணம் என்ன என்று தங்களுக்குத் தெரியுமா?''

''இந்த நாட்டு மக்களுக்கேத் தெரியும்.''

''அப்படியா! நாங்களும் தெரிந்து கொள்கிறோமே! என்னவென்று சொல்லுங்கள்.''

அந்த மனிதன் சுற்றுமுற்றும் ஒரு தடவை பார்த்து விட்டு மெல்லிய குரலில் சொன்னான்.

''இளவரசர் இங்கு வந்ததில் இருந்தே அவர் நடத்தை சரியில்லை. பவழ வீதியிலுள்ள பரத்தையரை நாடிப் பகல் பொழுதில்கூடச் செல்லுகிறார் என்று பலர் பேச ஆரம் பித்து விட்டார்கள்.''

''இதற்காகவா அவரைச் சிறையில் அடைத்தார் உங் கள் மன்னர்?''

''இல்லை, இளவரசரின் காமப்போதை எல்லை கடந்து அமைச்சர் மகள் மதுரவாணி அம்மையாரைத் தீண்டும் அளவுக்குப் போய்விட்டது.''

''மெய்யாகவா?''

*''ஆமாம். அமைச்சர் கோவிந்த தீட்சிதரே அவரைக் கையும் களவுமாகப் பிடித்து, மன்னரிடம் இழுத்துச் சென்ற முறையிட்டு இருக்கிறார். அரசருக்கு அளவுகடந்த ஆத்திரம். உடனே இளவரசரை விலங்கிட்டுச் சிறையில் தள்ளிவிட்டார். அதனால் இளவரசரைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையைத் துறந்துவிட்டுக் காலாகாலத்தில் ஊர்ப் போய்ச் சேருங்கள்.''

செய்தி சொன்ன அந்த மனிதன் அத்துடன் நகர்ந்த பிறகும் சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் எல்லை யற்ற அதிர்ச்சியில் அதே இடத்தில் சிலைகளென நின்று கொண்டிருந்தனர்.

''சொக்கநாதா, என்னால் இதனை நம்பவே முடிய வில்லையே! இந்தச் செய்தி உண்மையாக இருக்குமா? மன்னார்தாசன் இப்படிப்பட்டவனாக இருப்பான் என்று நினைத்துப் பார்க்கக்கூட என்னால் முடியவில்லையே.''

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. முதலில் அவன் சிறையில் இருப்பது உண்மையா என்று தீர விசாரிக் கலாம்.''

இருவரும் தனித்தனியாகப் பிரிந்து ஊருக்குள் நன் றாக விசாரித்துப் பார்த்துவிட்டு மறுபடியும் கூடினார்கள்.

இருவர் முகங்களிலும் கவலையும், தோல்விக் களை யும் அப்பிக் கிடந்தது.

''தனியாக இருக்கும் ஒரு பெண்ணிடம், அதிலும் தங்களது மரியாதைக்குரிய அமைச்சர் மகளிடமே தப்பாக நடந்து கொள்ளும் அளவுக்கு மன்னார்தாசன் துணிந்து இருப்பான் என்று இப்பொழுதுகூட என்னால் நம்ப முடிய வில்லையே!''

''இதில் எங்கோ, ஏதோ தவறு இருக்கிறது கிருஷ்ணா! நமக்கு இப்பொழுது அது முக்கியமில்லை. மன்னார்தாசன் சிறையில் இருப்பது நமது திட்டத்தின் பாதிப் பகுதியைத் தகர்த்துவிட்டது.''

''இனி என்ன செய்வது?''

''இனி மீதிப் பாதி சந்திரவதனாவைச் சந்திப்பது! அவள் நிச்சயம் என்னோடு கிளம்பி வரச் சம்மதிப்பாள். அதுபோதும். அவளைக் கூட்டிக் கொண்டு இரவோடு இரவாக மதுரைக்குக் கிளம்பிவிட்டால் போதும்.''

# சந்திரவதனா

தஞ்சை அரண்மனையும், அந்தப்புரமும் கறுப்பு மையைப் பூசிக் கொண்டது போன்று காரிருள் சூழ ஆரம்பித்த நடுநிசி வேளை.

சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் அந்தப் புரத்து மதிற்சுவர் ஓரமாகப் பதுங்கிப் பதுங்கி வந்தனர். மன்னார்தாசன் சிறையில் அடைக்கப்பட்டுவிட்டதால், அந்தப்புரத்தின் காவல் பொறுப்பு மீண்டும் தளபதியின் அதிகாரத்திற்கே மாற்றப்பட்டு இருந்தது. அதனால் காவல் பணியிலும் மந்தநிலை தெரிந்தது.

இருவரும் உள்ளே ஏறிக் குதித்துப் பதுங்கியவாறு, சந்திரவதனா தங்கி இருக்கும் பழைய மாளிகை அருகே வந்தனர்.

வெங்கடகிருஷ்ணன் கீழே இருக்க, சொக்கநாதன் கயிறு வீசி, ஆறாவது மாடியின் மூன்றாவது சாளரத்தில் ஏறி உள்ளே குதித்தான்.

இளவரசி சந்திரவதனா படுத்திருந்த அறைக்குள் இருள் சூழ்ந்து இருந்தபோதிலும், அவள் மஞ்சத்தினருகே ஏற்றி வைக்கப்பட்டு இருந்த அகல் விளக்கு ஒன்று முணுக் முணுக் என்று எரிந்து கொண்டிருந்தது.

சாளரத்தின் வழியாகச் சொக்கநாதன் குதித்த சத்தத் தைக் கேட்டதும் சந்திரவதனா எழுந்து உட்கார்ந்து, அகல் விளக்கின் திரியை இழுத்து நன்றாக எரியவிட்டாள். அவள் முகத்தில் பதட்டமோ, பயமோ தென்படவில்லை. கவலைதான் சூழ்ந்து இருந்தது.

சொக்கநாதன் மஞ்சத்தினருகே வருவதற்கும், அவள் எழுந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

''வாருங்கள், நீங்கள் என்னைத் தேடி வருவீர்கள் என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்'' என்ற இளவரசியின் குரலிலும், முகத்திலும் வருத்தம் நிறைந்து இருந்தது. கண்கள் கலங்கிப் போய்ச் சிவந்து காணப்பட்டன.

''என்ன சந்திரவதனா, உன் தந்தைக்கு என்ன பைத்தியம் பிடித்து இருக்கிறதா? மணம் பேச வந்த தூதுவர்களை இகழ்ந்ததோடு மட்டுமின்றி, என் தாயின் மானத்தையே பழித்து இருக்கிறார். உன் தமையன் மன்னார்தாசனை சிறையில் தள்ளி இருக்கிறார்'' என்று கோபத்தோடு ஆரம்பித்த சொக்கநாதன், சந்திரவதனாவின் நிலையைப் பார்த்தவுடன் திடுக்கிட்டுப் பேச்சை நிறுத்தினான்.

சந்திரவதனா குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள்.

''நான் முற்பிறவியில் என்ன பாவம் செய்தேனோ, இப்படி எல்லாம் வேதனை அனுபவிக்க வேண்டி இருக்கிறது. எனக்கு... எனக்கு... செத்துவிடலாம் போல் தோன்றுகிறது...'' தேம்பி தேம்பி அழுதாள்.

இதனைப் பார்த்த சொக்கநாதன் அவளருகில் நெருங்கி அவள் கையைப் பற்றி ''வருந்தாதே சந்திரா! நீ சாவதற்காகவா நான் இப்படிக் கஷ்டப்பட்டு வந்திருக்கிறேன்'' என்று தேற்ற ஆரம்பித்தவனின் கையை மெதுவாக விலக்கினாள்.

''இனி என்னைத் தொடாதீர்கள். எப்பொழுது என் தந்தை உங்களுக்கு என்னைத் திருமணம் செய்ய மறுத்து விட்டாரோ அதன்பிறகு நான் உங்களைத் தொட அனுமதிப்பது பாவம். தயவு செய்து என்னை மறந்து விடுங்கள்.''

இதைக் கேட்டவுடன் ஒரு கணம் திகைத்துப் போனான் சொக்கநாதன்.

''என்ன சந்திரா, என்ன வார்த்தைச் சொல்கிறாய்? உன்னை மறப்பதா? அதைவிட இறந்துவிடு என்று சொல். சந்தோஷமாகச் சாகிறேன். உன்னை மறந்து உயிர்வாழ என்னால் முடியும் என்று நினைக்கிறாயா?''

இதற்கு இளவரசி பதில் கூறாமல் அழுது கொண்டே இருந்தாள்.

''என் தாயைப் பழித்த உன் தந்தையைக்கூட உன் முகத்தை எண்ணித்தான் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். அத்தனை அவமானங்களையும் சகித்துக் கொண்டு, உன் மீதுள்ள காதல் ஒன்றையே பெரிதாக எண்ணி ஓடோடி வந்திருக்கும் என்னை பார்த்தா இப்படி ஒரு வார்த்தை சொன்னாய்?''

''வேறு வழியில்லை அத்தான். உங்களை இனி அத்தான் என்று அழைப்பதற்குக்கூட என் இதயம் நடுங்குகிறது. இப்பிறவியில் நாம் இருவரும் இணைவது என்பது நடக்கவே நடக்காது. நான் ஏன் இவ்வளவு அழகாகப் பிறந்தேன் என்று என்மீதே எனக்கு வெறுப்பாக இருக்கிறது. அழகான பெண்கள் அவஸ்தைப் பட்டுத்தான் சாவார்கள் என்பது என் விஷயத்தில் சரியாகத்தான் போய்விட்டது. தயவு செய்து என்னை நீங்கள் மறந்துதான் ஆகவேண்டும். வேறு வழியே இல்லை.''

''ஏன் வழியில்லை சந்திரா? இன்றே, இப்பொழுதே, இந்த விநாடியே, நீ உன் தாய் தந்தையரை மறந்து என்னோடு கிளம்பிவா. உன்னை என் நாட்டிற்குக் கூட்டிச் சென்று நாடே வியக்கும் வண்ணம், மீனாட்சி அம்மன் சாட்சியாக உன்னை என் மனைவியாக ஆக்குகிறேன். அதன்பிறகு என்ன எதிர்ப்பு வந்தாலும் அதனைச் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்.''

''அது மட்டும் என்னால் முடியவே முடியாது. எனது தாய், தந்தையரின் முன்னிலையில், அவர்கள் சம்மதத்துடனும், ஆசியுடனும்தான் என் திருமணம் நடக்க வேண்டும்.''

''அது இந்த ஜென்மத்தில் நடக்காது'' என்றான் எரிச்சலுடன்.

''அதற்காக உங்களோடு ஓடிவந்து என் பெற்றோருக்கும், இந்த நாட்டிற்கும் தீராத அவமானத்தைத் தேடித்தர நான் விரும்பவில்லை.''

''தயவு செய்து நான் சொல்வதைக் கேள் சந்திரா...''

''தயவு செய்து அந்த எண்ணத்தை அடியோடு மறந்து விடுங்கள். என் உயிர் போனாலும் சரி. அப்படி ஒரு காரியத்தை நான் செய்ய மாட்டேன். அத்துமீறி என்னை நீங்கள் பலவந்தமாகத் தூக்கிச் செல்ல முயன்றால் எங்கள் நாட்டு எல்லையைத் தாண்டுவதற்குள் எனது உயிர் பறந்து விடும். அது நிச்சயம்.''

''என்ன இப்படிப் பேசுகிறாய் சந்திரா? நம் திருமணம் நடப்பதற்கு இதைவிட்டால் வேறு வழியே இல்லை.''

''அதனால்தான் என்னை மறந்துவிடுங்கள் என்கிறேன்.''

''அப்படியானால் நீயும் என்னை மறந்துவிடுவாயா? என்னை மறந்து வேறு ஒருவனுக்கு மாலையிட்டு மனைவியாக உனக்கு விருப்பமா?''

''ஐயோ... நீங்கள் ஏன் என்னைச் சந்தித்தீர்கள்...? நான் யார் என்று தெரிந்தும் என்மீது ஏன் ஆசை கொண்டீர்கள்...? நீங்கள் யார் என்று சொல்லாமலே என் மனதை மயக்கிக் காதலிக்க வைத்தீர்கள்? இதற்குத்தானா? இப்படி நான் வேதனைப்படுவதற்குத்தானா...?''

முகத்தைப் பொத்திக் கொண்டு கேவிக் கேவி அழுதாள். சொக்கநாதன் சற்று நேரம் பரிதாபமாக அவளைப் பார்த்தான். பிறகு பரிவுடன் அவள் தலையைத் தடவி சாந்தப்படுத்த முயன்றான்.

அவன் கையை மறுபடியும் விலக்கினாள், ''இனி என்னைத் தொடாதீர்கள். தெரிந்தோ, தெரியாமலோ, உங்கள் மீது நானும் ஆசைப்பட்டுவிட்டேன். இதுதான் முதலும் கடைசியும். என் தந்தை சம்மதித்தால் உங்களோடு நான் மணவாழ்வில் இணைவேன். அவரோ உங்களை நினைத்தாலே வெறுக்கிறார். அதேசமயம் உங்களைத் தவிர வேறு யாரோடும் என்னை மணம் புரிய என் தந்தை ஏற்பாடு செய்தால்கூட, என் பிணத்தைத்தான் அவர்கள்

பார்க்க முடியும். இது உங்கள் மீது ஆணை! அதற்காக உங்களோடு ஓடிவர நான் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டேன்.''

''சந்திரா தயவு செய்து...''

''இனி நீங்கள் எதுவும் பேசவேண்டாம். தயவு செய்து போய்விடுங்கள். உங்களிடம் கடைசியாக இந்த வார்த்தைகளைச் சொல்ல வேண்டும் என்றுதான் உங்கள் வரவைத் தினமும் எதிர்பார்த்தபடி என்னுடைய அறையில் தூங்காமல் காத்துக் கிடந்தேன். இனி நான் இந்த அறையில் தங்கப் போவதில்லை. என்னுடைய தாயின் அறையில் அவரோடு சேர்ந்து நான் இருப்பது என்று முடிவு செய்து விட்டேன். இனிமேல் என்னைத் தேடி வராதீர்கள். என்னை ஒரேயடியாக மறந்துவிடுங்கள்...''

''சந்திரா... நான் சொல்வதை...''

சொக்கநாதன் வார்த்தைகளைப் பற்றிச் சட்டையே பண்ணாமல், கண்களில் நீர்வழிய, அந்த இடத்தைவிட்டு, நகர்ந்து, அறையின் கதவுகளைத் திறந்து, அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் அங்கிருந்து வெளியேறி அவளுடைய தாயின் அறையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தாள் இளவரசி சந்திரவதனா.

திகைத்துப் போய்ச் சிலையென நின்றான் சொக்கநாதன்.

இனி போரைத் தவிர வேறு வழியில்லை என்று அவன் இதயத்திற்குள் முரசு ஒலிக்கத் தொடங்கியது.

---

*"he (Mannarudas) advacned his love to the one of the daughters of Govinda Dikshita and when this was brought to the notice of the Nayaka by the Minister himself, he ordered him to be put into prison"* - *The Nayakas of Tanjore - V.Vriddhagirisan - Page no.153.*



# 54

சிறைச்சாலைக்குள் சிதறிக் கிடந்த சிறுஒளியின் வெளிச்சத்தில், கல் மேடையின்மீது கால் மடித்து உட்கார்ந்தவாறு, கையில் இருந்த ஏடு ஒன்றில் எழுத்தாணிக் கொண்டு எதையோ எழுதிக் கொண்டிருந்த இளவரசன் மன்னார்தாசன், சிறைக் கம்பிகளின் மறுபக்கம் நிழலாடியதை உணர்ந்து ஏறிட்டுப் பார்த்தான்.

அவனுடைய நண்பன் அக்கிராஜு கலங்கிய கண்களுடன் அங்கு நின்று இருந்தான்.

மன்னார்தாசன் விரக்தி புன்னகை ஒன்றை வீசியவாறு எழுந்து அவனருகில் வந்தான். இளவரசன் முகத்தில் குறுந்தாடி முளைத்திருக்க வேதனையும் விரக்தியும் நன்றாக விளைந்து இருந்தது.

இளவரசன் நிலையைப் பார்த்து அக்கிராஜு மேலும் கலங்கி கண்களில் நீர் வழிய, சிறைக் கம்பிகளின் வழியாக அவனது கரங்களைப் பற்றி பேச வார்த்தைகள் வராது தவித்தான்.

''கலங்க வேண்டிய நானே கல்லைப் போல இருக்கும் பொழுது நீ எதற்கு கண்ணீர் வடிக்கிறாய் ராஜு'' என்றான் மன்னார்தாசன்.

''உனக்கு... உனக்கு இப்படி ஒரு நிலைமை வரும் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை மன்னாரு. சிறுமை கொண்ட பெண்ணாக மதுரவாணி இருப்பாள் என்று நான் சிறிதளவும் நினைத்துப் பார்த்ததில்லை. நினைக்க நினைக்க என் நெஞ்சே வெடித்துவிடும்போல் இருக்கிறதே! நீ எப்படித் தாங்குகிறாய் மன்னாரு?''

''எவ்வளவு பெரிய அறிவாளியின் புத்தியும் அழகான பெண்ணின் கண் வீச்சுப்பட்டால் அறவே மழுங்கிவிடும் என்பதற்கு நானும் ஓர் உதாரணம் ஆகிவிட்டேன் ராஜு! அதனை எண்ணிக் கலங்கிக் கொண்டே இருந்தால் அவனைவிட முட்டாள் யாரும் இல்லை.''

''வலிய வலிய வந்து காதலித்தாளே! அவளைப் பற்றிய நினைப்பே இல்லாமல் இருந்த உன்னை எப்படி யெல்லாம் தொல்லை கொடுத்து உன் மனதைப் பலவந்த மாகப் பற்றி இழுத்தது என் ஒருவனுக்குத்தானே தெரியும். அப்படிப்பட்ட பெண்ணுக்கு அப்படியே தலை மாற்றி உன்னைக் குற்றம் சொல்ல எப்படித்தான் மனம் வந்தது? பெண்ணா அவள்? பேய்! ராட்சசி!''

''அவளைக் குற்றம் சொல்லிப் பலனில்லை ராஜு! என் புத்தித்தான் மழுங்கிப் போய்ச் சரிவரக் கணிக்கத் தவறிவிட்டது. சின்னஞ்சிறு பிராயத்திலேயே நானும் அவ ளும் அவள் தந்தையிடம் அட்சர அப்பியாசம் பயிலும் பொழுது என்னைக் கிள்ளிவிட்டு, நான் தான் அவளைக் கிள்ளியதாக அவள் தந்தையிடமே புகார் செய்வாள். அப்பொழுதும் நான் பேசாமல் இருந்தேன். அதனை இளம் பருவத்துக் குறும்பு என்று நினைத்தேன். தேனை ஊற்றி வளர்த்தாலும் வேம்புக் கசக்கத்தான் செய்யும் என்பதைச் சிந்திக்கத் தவறிவிட்டேன்.''

அப்பொழுதும் உண்மையைச் சொல்லாமல் வாயை மூடிக் கொண்டிருந்திருக்கிறாய். இப்பொழுது உன் தலை யில் கல்லை தூக்கிப் போட்டு இருக்கிறாள். அதற்கும்

பேசாமல்தான் இருந்திருக்கிறாய். உண்மையை நீ சொல்லி இருக்க வேண்டியதுதானே.''

''என் பேச்சை நம்பும் மனநிலையில் அவர்கள் இல்லை ராஜு.''

''உங்கள் காதலுக்கு ஒரே சாட்சி நான்தான் என்னைக் கூட்டி வரச் சொல்லி இருந்தால் நான் அத்தனையையும் புட்டுப்புட்டு வைத்திருப்பேனே!''

''வேலிக்கு ஓணான் சாட்சி என்பார்கள். பெண்ணின் பேச்சைத்தான் கால காலமாக இந்த உலகம் நம்புகிறது. நீலமேதஜுடு நெறயனோட பலிமி பட்டபயிலாஜுடு பண்ட்டி பலிமி யடுதானிபலிமி யடனே சூடுரா. அப்ப டீன்னு வேமனா சொல்வார். 'ஒரு கப்பலோட வலிமையை நீரில் காணலாம். ஒரு வண்டியோட வலிமையை நிலத்தில் காணலாம். ஆனால் ஒரு பெண்ணோட வலிமையை அவள் எங்கெல்லாம் இருக்கிறாளோ அங்கெல்லாம் அறியலாம்'கிறது உண்மை ராஜு. நீ என்ன சொன்னாலும் எடுபடாது.''

''அவள் உன்மீது வைத்திருந்த காதலுக்கு அர்த்தம் என்ன மன்னாரு? எத்தனை இடர் வந்தாலும் எதிர்த்து நிற்பது காதல். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உன்மீது பழி போட்டிருக்கிறாளே சண்டாளி! நிறைவேறாது என்று தெரிந்தும் எதற்காக உன்னை விரட்டிவிரட்டி காதலித்தாள்?''

''சில பெண்களுக்கு மனதில் இப்படி ஒரு ரகசிய ஆசை இருக்கும். அடுத்தவர்க்குத் தெரியாமல் எப்படியாவது நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பார்கள். அதில் வெற்றியடைந்தால் ரகசியமாக அதனை எண்ணி எண்ணி மகிழ்வார்கள். ஆபத்து ஒன்று வரும்பொழுது தங்கள் ஆசை நிறைவேறாவிட்டால் கூடப் பரவாயில்லை. தங்களை மட்டும் காத்துக் கொள்ள எத்தகைய பொய்யையும் பேச அஞ்ச மாட்டார்கள். அந்த மாதிரிப் பெண்ணாக

மதுரவாணியும் இருப்பாள் என்று தான் நான் கடுகளவும் சிந்திக்கத் தவறிவிட்டேன்.''

''இருந்தாலும் இந்த நாட்டின் அமைச்சர் மகள். உயர்ந்த குலத்தில் பிறந்தவள். கல்வி ஞானம் நிறைந்த வள். இப்படிச் செய்வாள் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்?''

''காமயுத்தலு மிருவ கடின சித்தலு ஸ்த்ரீலு, ஸ்த்ரீல நடவடேமி ஜெப்ப ஒச்சு, தலப்பகானு பதிதனமு முக்யம் பவுனு, கடமமேட்டி பண்ட்டி கரணிவேம'ன்னு வேமனா சொல்வார். 'காமமும், ஆசையும் கடின இதயமும் கொண் டவர்கள் பெண்கள்' அவர்கள் நடத்தையைப் பற்றி என்ன சொல்ல முடியும்? நம்பிக்கைக்கு உரியதாய் இருப்பதே அவர்களது தலையாய பண்பு! அவர்களோ அதற்கு மாறாக அத்திப் பழத்தினைப் போல வெளியே அழகாவும், உள்ளே புழுக்கள் நிறைந்ததாகவும் இருக்கிறார்கள்'' என்று வேமனா அந்த மாதிரிப் பெண்களைப் பற்றி நிறையச் சொல்லி இருக்கிறார். அந்த மாதிரிப் பெண்கள் எவ்வளவு பெரிய அந்தஸ்தில் இருந்தாலும் எவ்வளவு உயர்ந்த குடிப்பிறப்பைக் கொண்டு இருந்தாலும் எத்தனை சிறந்த கல்வி கற்றாலும் அப்படித்தான் இருப்பார்கள்!''

''இப்படித் தத்துவம் பேசி இனி என்ன லாபம் மன்னாரு? இப்படிப்பட்ட பாவியின் உண்மை நிலை இந்த உலகுக்குத் தெரிய வேண்டாமா? இந்த நேரத்திலும் இனிமேலும் நீ மௌனம் சாதிப்பது சரியல்ல மன்னாரு.''

''நான்தான் சொல்லிவிட்டேனே. என் பேச்சை யாரும் நம்பமாட்டார்கள். உன் சாட்சியையும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இதைவிட்டால் ஆண்டவன் வந்துதான் சாட்சி சொல்ல முடியும். அவர் புராணங்களில் மட்டும் தான் சாட்சி சொல்வார்.''

''பிறகு என்னதான் தீர்வு?''

''காலம்தான் தீர்ப்பு அளிக்க முடியும். எனது உண்மை நிலை பற்றி இந்த நாட்டு மக்கள் அறியக்கூடிய காலம் ஒருநாள் வரலாம். அப்பொழுது நான் குற்றமற்றவன் என்று உணரலாம். ஒருவேளை அந்த நாளே வராமலே கூடப் போகலாம். யார் அறிவார்கள்?''

''அதுவரை சிறையில் இருந்து இப்படி வறட்டுத் தத்துவம் பேசிக் கொண்டிருக்கலாம் என்று முடிவு செய்து விட்டாயா?''

''இப்பொழுது சிறைதான் என் சிந்தைக்கு அமைதி தருகிறது ராஜு! மதுரவாணியும் அவள் காதலும் என்னை இங்கு மயக்காது மருட்டாது. என் தந்தை செய்யும் மூடத் தனமான காரியங்கள் என் செவிகளில் விழாது. இந்த உலகத்தையே மறந்து, இலக்கியவானில் என் எண்ணப் பறவை சிறகடித்துப் பறக்க சிறைச்சாலையைவிடச் சிறந்த இடம் கிடையாது என்று முடிவு செய்து விட்டேன் ராஜு. நடப்பது நடக்கட்டும். போய்வா நண்பா.''

அக்கிராஜு மனச்சுமையுடன் கண்களைத் துடைத்த வாறு அங்கிருந்து அகல, மன்னார்தாசன் மறுபடியும் கல் மேடையில் அமர்ந்து காவிய ஏடு ஒன்றை எடுத்துப் புரட்டத் தொடங்கினான்.

மதுரை அரண்மனையில் அந்தப்புரத்தில் மகாராணியின் ஆலோசனை மண்டபத்தில் மன்னன் சொக்கநாதனும், அவனது தாய் வையாம்பிகாதேவியும், சொக்கநாதனின் நண்பனும் நாட்டின் தளபதியுமான வெங்கடகிருஷ்ணனும் அருகருகாக ஆசனங்களில் அமர்ந்து இருந்தனர்.

அவர்கள் அனைவரின் முகங்களிலும் சோகமும் கவலையும் நிறைந்து காணப்பட்டன.

அந்த அறையை ஒட்டி இருந்த சிறிய அறையில் அவர்கள் பேசுவதைக் கேட்பதற்கு வசதியான ஓர் இடத்தில் உட்கார்ந்து இருந்த முத்துநகையும் வாடிய முகத்துடன் காணப்பட்டாள்.

நீண்ட நேரம் அங்கு அமைதி நிலவிக் கொண்டிருந்தது.

சொக்கநாதன் அந்த அமைதியைக் கலைக்கும் முகமாக மீண்டும் பேச்சைத் துவக்கினான்.

''தங்களைப் பழித்த தஞ்சை நாயக்கனைத் தலை குனிய வைப்பதற்காக நாங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் இப்படித் தகர்ந்துவிடும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை அன்னையே!''

''மன்னார்தாசன் சிறையில் இருக்கிறான் என்று கேள்விப்பட்ட உடனே எனக்குப் பாதி உயிர் போய்விட்டது. இளவரசியாவது சொக்கநாதனுடன் சேர்ந்து வருவாள் என்று நினைத்தேன். அவள் இப்படிப் பேசுவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்றான் வெங்கட கிருஷ்ணன்.

''நானே எதிர்பார்க்கவில்லை அன்னையே! என்மீது உயிரையே வைத்து இருந்தாள். எனக்காக அவள் எதையும் செய்வாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இந்த மாதிரி நடந்து கொள்வாள் என்று ஊசிமுனை அளவுகூட நான் எதிர்பார்க்கவேயில்லை.''

''ஆனால் அப்படித்தான் சந்திரவதனா நடந்து கொள்வாள் என்று எதிர்பார்த்தேன் சொக்கநாதா!'' என்றாள் அவன் தாய்.

''என்னம்மா சொல்கிறீர்கள்? சந்திரவதனா என்னோடு வரமாட்டாள் என்று நிஜமாகவே எதிர்பார்த்தீர்களா எப் படி?''

''உனக்குப் பெண்கள் மனதைப் பற்றித் தெரியாது சொக்கநாதா! வயதும் அனுபவமும் ஏற ஏற உனக்கே புரியும்.''

''எப்படி அம்மா? எப்படி எதிர்பார்த்தீர்கள்?'' வியப் புடன் கேட்டான்.

''என்னதான் உயிருக்கு உயிராக ஓர் ஆடவனை ஒரு பெண் காதலித்தாலும், அவளுடைய தாய் தந்தையருக்கு அவமானமோ, தலைக்குனிவோ ஏற்படும்படியாக அவள் ஒருநாளும் நடந்து கொள்ளமாட்டாள். தன்னுடைய மண வாழ்க்கையின் மகிழ்ச்சியில் தன்னைப் பெற்றவர்களின் மகிழ்ச்சியும் ஓர் அங்கம் என்றுதான் எல்லாப் பெண்களும் நினைப்பார்கள். இதில் சந்திரவதனா மட்டும் விதி விலக் காக இருப்பாள் என்று சொல்லவா முடியும்?''

''ஒருவேளை அவள் என்னோடு ஓடி வந்திருந்தால் அவளைப் பற்றி என்ன நினைப்பீர்கள்?''

''எனக்கு அவள் மீது நிச்சயம் மதிப்பு இருக்காது. உன் காதலை மட்டும் பெரிதாக நினைத்த ஒரே ஓர் எண்ணத்தை மட்டும் மதித்து உனக்கு அவளை மணம் புரிந்து வைத்தாலும், பெற்று வளர்த்தவளை ஒரு விநாடி யில் உதறியவள் மீது என் பாசத்தின் அளவு குறைந்தே காணப்படும்!''

''அதை விடுங்கள். இனி என்ன செய்யலாம்? அதைப் பற்றிச் சொல்லுங்கள் மகராணியாரே!'' என்றான் வெங்கட கிருஷ்ணன்.

**வை**யாம்பிகாதேவி சற்று நேரம் மௌனமாக இருந்தாள்.

''இனியும் மௌனம் சாதித்துப் பலனில்லை அம்மா. என் காதலைவிட, உங்களைப் பழித்துப் பேசிய தஞ்சை நாயக்கனுக்குப் பாடம் புகட்டுவதே எனது முக்கிய கடமையாக இருக்கிறது. அதற்கு ஒரே வழி அவன்மீது போர் தொடுப்பதுதான். இதை விட்டால் வேறு வழியே இல்லை அம்மா'' என்று கெஞ்சினான் சொக்கநாதன்.

''இன்னும் ஏன் தயங்குகிறீர்கள் மகாராணியாரே? தங்கள் மீது விழுந்த மாசை, தஞ்சை மன்னனின் இரத்தத்தைக் கொண்டு துடைக்க வேண்டும் என்று இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். உத்தரவு கொடுங்கள் அன்னையே! அந்த விஜயராகவ நாயக்கனை வேரோடு அறுத்து வருகிறோம்'' என்றான் வெங்கடகிருஷ்ணன்.

சற்றுநேரம் யோசித்துக் கொண்டிருந்த ராணி வையாம்பிகாதேவி பிறகு ஒரு முடிவுடன் பேச ஆரம்பித்தாள்.

''ஆம், இதற்கு போர் ஒன்றைத் தவிர வேறு வழியில்லை'' என்றாள் ஆணித்தரமாக.

இதனைக் கேட்டவுடன் சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் மகிழ்ச்சிப் பெருக்கில் ஒருவர் கையை மற்றவர் பற்றி இறுக்கி மகிழ்ந்தனர்.

மகாராணி மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

''போரின் முக்கிய நோக்கம் தஞ்சை நாயக்கன் தான் பேசியது தவறு என்று உணருமாறு செய்வதுதான். அதற்காக அவனைப் போர்க் களத்தில் கொன்றுவிட்டால், என் மனம் திருப்தி அடையாது சொக்கநாதா!''

''அவனை வேறு என்ன செய்ய வேண்டும் அன்னையே?''

''விஜயராகவ நாயக்கனை உயிரோடு பிடித்து விலங் கிட்டு மதுரைக்கு இழுத்து வாருங்கள். அவன் மகள் சந்திரவதனாவின் விரல் நகத்திற்குக்கூடச் சேதம் ஏற்படுத் தாமல், ஓர் இளவரசிக்கு உரிய மரியாதையோடு இங்கு கூட்டி வாருங்கள். அதன்பிறகு...''

''அதன்பிறகு?''

''விஜயராகவனை விலங்கோடு நிறுத்தி அவன் கண் எதிரில் அவன் மகளுக்கு நீ தாலி கட்ட வேண்டும் சொக்கநாதா! உன்னோடு ஒரு நாள் வாழ்ந்துவிட்டு அவள் செத்தால்கூடப் பரவாயில்லை சொக்கநாதா! அதை எண்ணி எண்ணி அவள் தந்தை காலம் முழுவதும் சிறை யில் கண்ணீர் விடவேண்டும். அதை விடுத்து அவன் என் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டால் அத்தனையை யும் மறந்துவிட கூட நான் தயாராக இருக்கிறேன்.''

''உங்கள் ஆசை நிறைவேறுவதை என் உயிர்மூச்சாகக் கருதுகிறேன் அன்னையே! வெங்கடகிருஷ்ணா, நமது படைகள் சீக்கிரமே கிளம்புவதற்கான ஏற்பாடுகளைத் துரிதப்படுத்து!'' என்று ஆக்ரோஷத்துடன் உறுமினான் சொக்கநாதன்.

அடுத்த சில நாட்களில் மதுரையிலிருந்து பெரும் படை ஒன்று தஞ்சாவூரை நோக்கி விரைய ஆரம்பித்தது.



# 55

மன்னன் சொக்கநாதன் தலைமையில் மதுரையில் இருந்து கிளம்பிய பெரும் படையில் நால்வகைச் சேனைகளும் கணக்கில் அடங்காவண்ணம் நிறைந்து காணப்பட்டன.

தஞ்சைத் தரணியைத் தாக்கப்போகும் தகவல் குறித்து மதுரை அரசுக்கு கட்டுப்பட்ட எழுபத்திரண்டு பாளையக்காரர்களுக்கும் இதற்கு முன்னரே ஓலை அனுப்பப்பட்டு இருந்ததால், ஒவ்வொரு பாளையக்காரரும் தங்களால் இயன்ற பெரும்படைகளை அனுப்பி இருந்தது மட்டுமின்றி, வலிமையும் இளமையும் கொண்ட பாளையக்காரர்கள் பலர் நேரடியாக வேறு வந்திருந்தனர்.

இப்படைகளுடன் மதுரை அரசின் சொந்தப் படைகளும் இணைந்திருந்ததால் மொத்தச் சேனைகளின் அளவு கொந்தளிக்கும் கடலைப்போல காண்பவர் நெஞ்சைக் கலங்கடித்துக் கொண்டு இருந்தது.

விரைந்து செல்லும் படைகளின் காலடிப்பட்டுக் கிளம்பி எழுந்த புழுதிக் காற்று விண்ணை நோக்கிப் பறந்து கண்ணை மருட்டிக் கொண்டிருந்தது.

தங்கள் மன்னனுக்கும் அவன் தாய்க்கும் ஏற்பட்ட அவமானத்தைத் தஞ்சை மன்னனின் இரத்தத்தால் கழுவ

வேண்டும் என்ற வெறி ஒவ்வொரு வீரனையும் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தது.

சொக்கநாதனின் நண்பனும் மதுரைப் படைகளின் தளவாயுமான வெங்கடகிருஷ்ணனும், மதுரை அரசின் வருவாய்த்துறை தலைவரான பேஷ்கார் சின்னத்தம்பி முதலியாரும், கன்னிவாடிப் பாளையத்தின் அதிபதியான சின்னக்கத்திரி நாயக்கரும் அனைத்துச் சேனைகளின் மொத்தப் பொறுப்பையும் ஏற்று படைகளை முடுக்கி விரட்டினர்.

மதுரைப் படைகள் எடுத்த எடுப்பில் நேரடியாகத் தஞ்சைக் கோட்டைக்குச் செல்லாமல், தஞ்சைக்கு மிக அருகில் இருக்கும் தஞ்சை அரசைச் சேர்ந்த வல்லம் கோட்டைக்கு முன் வந்து நின்றன.

செம்பூரான் கற்கள் என்று சொல்லப்படும் சிவப்பு நிறக் கற்களால் எழுப்பப்பட்ட கோட்டை, அளவில் தஞ்சைக் கோட்டையைவிடச் சிறியதாக இருந்தது. அதே சமயம் சதுரமாகவோ, செவ்வகமாகவோ இல்லாமல் கோழி முட்டையைப் போன்ற நீள்வட்டத்தில் அமைக்கப் பட்டிருந்தது.

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் மதுரை மன்னனை இகழ்ந்து பேசிய பிறகு அதனால் ஏற்படப் போகும் பின் விளைவுகளை அதிகமாகச் சிந்திக்காது, ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு அக்கறை யின்றி இருந்ததால் வல்லம் கோட்டையின் பலம் மிகக் குறைவாகவே இருந்தது.

இருப்பினும் மதுரைப் படைகளைப் பார்த்ததும், கோட்டையின் கதவுகள் அடைக்கப்பட்டு படைகள் தற் காப்பு முயற்சியில் இறங்க ஆரம்பித்தன. மதில் மீது எண்ணெய்க் கொப்பரைகளும், கல்வீசும் இயந்திரங்களும் ஏற்றப்பட்டன.

ஏராளமான வில் வீரர்கள் மதிற்சுவரில் பதுங்கி இருந்து சரமாரியாக அம்புகளை மதுரைப் படைகள் மீது தொடுக்க ஆரம்பித்தனர்.

சொக்கநாதன் யானையின் மீது ஏறி வல்லம் கோட்டையின் முழு அமைப்பையும் கண்களால் பார்வை இட்டான். சற்று நேரம் யோசித்தான்.

பின்னர் தனது நண்பனையும் மற்ற தளபதிகளையும் அழைத்துப் போர்முறை பற்றி விளக்க ஆரம்பித்தான்.

''கிருஷ்ணா, கோட்டையின் அமைப்பைப் பார்த்தாயா?''

''பார்த்தேன் சொக்கநாதா! கோழி முட்டை வடிவத்தில் வித்தியாசமாகக் கட்டப்பட்டிருக்கிறது.''

''இந்த வகைக் கோட்டைகளின் சக்தி முழுவதும் முட்டையின் நுனியாகிய கோட்டையின் நுழைவுப் பகுதியில் திரண்டு இருக்கும். வளைவான பின் பக்கத்தில் படைகளுக்குத் தேவைப்படும் அனைத்துப் பலமும் பரவலாக்கப்பட்டு வலிமை நிறைந்திருக்கும். அதனால் கோட்டையின் முன்னும் பின்னும் தாக்குவது புத்திசாலித்தனம் இல்லை. சக்தியை உடைக்க நீண்ட நேரம் ஆவது மட்டுமின்றி நமது பக்கம் சேதம் நிறைய உண்டாகும்.''

''நீ என்ன சொல்ல வருகிறாய் என்பது புரிகிறது சொக்கநாதா! முட்டையைப் பக்கவாட்டில் லேசாகத் தட்டினாலே இரண்டாக உடைந்து விடும் என்றுதானே?''

''அதேதான்! கோட்டையின் முன்னும் பின்னும் பெயருக்குச் சிறிதளவு படைகளை நிறுத்து! மீதிப் படைகளை இரண்டாகப் பிரித்துக் கோட்டையின் இரண்டு பக்கங்களிலும் கொண்டு சென்று முழு மூச்சுடன் தாக்க ஏற்பாடு செய்.''

''அப்படியே செய்கிறேன் சொக்கநாதா!''

அடுத்த சில நாழிகைகளில் வெங்கடகிருஷ்ணனும் மற்ற தளபதிகளும் தங்கள் மன்னனின் கட்டளைப்படி படைகளைப் பிரித்துக் கோட்டையின் பக்கவாட்டுப் பகுதி களை பலமாகத் தாக்க ஆரம்பித்தனர்.

மண் மேடுகள் அமைத்து ஏற்றி வைக்கப்பட்டிருந்த பீரங்கிகள் கோட்டைச் சுவர்களின் மீது குண்டுகளை உமிழத் தொடங்கின. எங்கும் பேரிரைச்சல்!

சொக்கநாதன் நினைத்தபடியே ஒருசில நாழிகைகளுக் குள் கோட்டைச் சுவர் இடிபட்டு விழுந்தது மதுரைப் படைகள் ஆக்ரோஷத்தோடு உள்ளே நுழைந்து, தஞ்சைப் படைகளுடன் சமர்புரிய ஆரம்பித்தன.

வெட்டுப்பட்டும், குத்துப்பட்டும் வெஞ்சமரில் கத்தி பட்டுக் குடலறுந்தும் ஏராளமான வீரர்கள் இறந்துபட்ட னர். அவர்கள் உடலில் இருந்து சிந்திய இரத்தம் அந்தக் கோட்டையினுள்ளே இருக்கும் வஜ்ர தீர்த்தம் என்ற சுனை யில் கலந்து செந்நீராக மாறி வாய்க்கால் வழியோடிப் பச்சை வயல்களில் பாய்ந்தது.

எண்ணற்றோர் உயிரைப் போக்கி மாய்ந்துவிட, மிச் சம் இருப்போர் காயம்பட்டுச் சாய்ந்துவிட, மாலை அரும் பும் நேரத்தில் வல்லம் கோட்டை முழுவதையும் மதுரைப் படை வெற்றி கொண்டது.

இந்தச் செய்தியை சுமந்தவாறு தஞ்சை வீரன் ஒருவன் மன்னனிடம சேதி சொல்ல மறைவாக விரைந்தான்.

விஜயராகவ நாயக்கன் தன்னுடைய பூஜை அறையில் கண்களை மூடிக் கண்களைக் கூப்பிய நிலையில் ஆண்டவ னைத் தியானித்து ஆழமான பக்தியில் மூழ்கி இருந்தான்.

அமைச்சர் கோவிந்த தீட்சிதர் பயத்துடன் அங்கு நுழைந்து சற்று நிதானித்தார். அவர் முகத்தில் லேசான கவலைப் படர்ந்திருந்தது.

காலடி ஓசை கேட்டதுமே கண்விழித்துப் பார்த்த மன்னன் தனது அமைச்சர் அங்கு நிற்பதை அறிந்து அவசர காரியம் இல்லாவிட்டால் அமைச்சர் அங்கு வரமாட்டாரே என்று உணர்ந்து ஆண்டவன் விக்ரகத்தின் காலடியில் ஒரு மலரை எடுத்து வைத்துக் கும்பிட்டவாறு எழுந்தான்.

''என்ன அமைச்சரே, இந்த நேரத்தில்?'' என்றான்.

''வல்லம் கோட்டையை மதுரைப் படைகள் பிடித்து விட்டன. நமது வீரர்கள் அனைவரும் மாண்டுவிட்டதாக இப்பொழுதுதான் செய்தி வந்தது'' என்றார் அமைச்சர் இருளடைந்த முகத்துடன்.

விஜயராகவ நாயக்கன் முகத்தில் எல்லையற்ற ஆத்திரம் எழத் தொடங்கியது. ''நெருப்புடன் விளையாட ஆரம்பித்துவிட்டான் மதுரை நாய்! அவனுக்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டது அமைச்சரே, உடனே நமது சபையைக் கூட்டுங்கள்'' என்று உறுமினான்.

அமைச்சர் அவசரமாக நகர, மன்னன் மறுபடியும் பூஜை அறைக்குள் நுழைந்து ஆண்டவன் காலடியில் விழுந்து வணங்கினான்.

தஞ்சை அரசின் தர்பார் மண்டபத்தில் மன்னன் விஜய ராகவ நாயக்கன் முன்னிலையில் போர் ஆலோசனைக் குழு கூடி இருந்தது.

அமைச்சர் கோவிந்த தீட்சிதர், தளவாய் ரங்கப்ப நாயக்கன், அவன் மைந்தன் அச்சுதப்பன் மற்றும் நால் வகைச் சேனைகளின் தளபதியும் அங்கு குழுமி இருந்தனர். ஒவ்வொருவர் முகத்திலும் ஆத்திரமும், கோபமும் ஆவேசமும் தென்பட்டது.

''வல்லம் கோட்டையை மதுரை நாய்கள் வளைத்து விட்டார்களாம். கோட்டையில் இருக்கும் நமது படை வீரர்கள் எவரும் உயிர் பிழைக்கவில்லையாம். எதிர்பாரா

மல் நடந்த தாக்குதல் இது! இதனை எண்ணி அந்தச் சொக்கநாதன் மமதை கொள்ளலாம். இருந்தாலும் ஆண்டவன் நமது பக்கள் இருப்பதை அந்த மடையன் அறியமாட்டான்! அவன் மமதை அழிய வேண்டும்! அவன் திமிர் ஒடுங்க வேண்டும்! அவன் படைகள் சின்னாபின்னமாக வேண்டும்'' என்று சிவந்த விழிகளுடன் சீறினான் விஜய ராகவ நாயக்கன்.

''நாளைக் காலையில் மதுரைப் படைகள் நமது நகரை நோக்கிப் புறப்படப் போகிறதாம்'' என்றார் அமைச்சர்.

''அதற்கு முன்னரே அவர்களை நாம் அழித்துவிட வேண்டும். என் அப்பன் ரங்கநாதனிடம் முறையிட்டு விட்டேன். நிச்சயம் வெற்றி நமது பக்கம்தான்'' என்ற வாறு விண்ணைப் பார்த்துக் கும்பிட்டான் விஜயராகவ நாயக்கன்.

''தஞ்சை நகரைக் கண்ணால் பார்ப்பதற்கு முன்னரே அவனது சேனைகள் அனைத்தையும் நாசப்படுத்த வேண்டும். நமது படைகளை நள்ளிரவிலேயே தயார் செய்யுங்கள் தளபதியாரே! விடிவதற்குள் அவர்கள் வல்லம் கோட்டையை நோக்கி விரையட்டும்'' என்றார் அமைச்சர்.

''ஆம், மதுரைப் பதர்களை வல்லத்தின் எல்லையைத் தாண்டவிடக் கூடாது. அடியோடு அழித்துவிட வேண்டும்'' என்றான் மன்னன்.

''மன்னருக்கு என் மனதில் பட்ட சின்ன யோனை ஒன்றைக் கூறலாமா'' என்று தயங்கித் தயங்கி சொன்னான் தளபதி.

''சொல் ரங்கப்பா.''

''மதுரைச் சொக்கநாதன் படை திரட்டி வந்த ஒரே நோக்கம் நமது இளவரசியைத் திருமணம் செய்வதுதான். இல்லையா? இந்த நோக்கம் நிறைவேறாமல் போய்விட்

டால், மனம் துவண்டு அப்படியே திரும்பி விடலாம் இல்லையா? இரண்டு பக்கமும் தேவையற்ற உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுக்கலாம் இல்லையா?''

''எப்படி?''

''நமது இளவரசியாருக்கு நாளையே திருமணத்தை நடத்திவிட்டால், சொக்கநாதனின் நோக்கமே சிதறி விடுமே! அதன்பிறகு அவன் நம்மை நோக்கிப் படைகளைச் செலுத்தவே அவமானம் அடையலாம் இல்லையா?''

''எந்த நேரத்தில் என்ன பேசுகிறாய் ரங்கப்பா? நடக்கக் கூடிய காரியமா? இப்பொழுதே நேரம் நள்ளிரவைக் கடந்துவிட்டது. நாளைக் காலையில் என் மகளின் திருமணத்தை நடத்துவது எப்படி? மாப்பிள்ளைக்கு எங்கு போவது?''

''கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு எதற்கு மன்னா கடையைத் தேடிக் கவலைப்பட வேண்டும்?'' என்றான் சூசகமாக.

''கொந்தளிக்கும் நேரத்தில் புதிர் போட்டுப் பேசாதே ரங்கப்பா! புரியும்படியாக சொல்.''

''என் மகன் அச்சுதப்பனைப் பற்றித்தான் சொல்கிறேன். நாளைக் காலையே அச்சுதப்பனுக்கும் சந்திரவதனாவுக்கும் ராஜகோபால ஸ்வாமி சந்நிதியில் நாட்டு மக்கள் முன்னிலையில் திருமணம் நடக்கட்டும். இந்தச் செய்தி வல்லம் கோட்டையைப் பிடித்த அகங்காரத்தில் இருக்கும் மதுரை மடையனுக்குச் சீக்கிரமே எட்டும்படி செய்துவிடுவோம். அடுத்த விநாடியே அவன் மனம் உடைந்து, தனது வீரர்கள் மத்தியில் கேவலப்பட்டு அப்படியே திரும்பிவிடுவான்'' என்று வினயமாகவும், பணிவாகவும் பேசினான் தளவாய் ரங்கப்ப நாயக்கன்!

அவன் மகன் அச்சுதப்பனோ பெருமையுடன் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சுற்றிலும் குழுமி இருப்ப வர்களைப் பார்த்தான்.

மதுரை அரண்மனைக் கட்டிட வளாகத்தில் இருந்த அந்தப்புரம், இளங்காலைப் பொழுது புலர்ந்து சில நாழி கைகளே ஆகிஇருந்த போதிலும், வழக்கமான கலகலப்பு இன்றி சற்று அமைதியாகக் காட்சி அளித்துக் கொண்டிருந் தது.

அழகு மயிலான முத்துநகை தன் அலங்காரத்தில் அதிகக் கவனம் செலுத்தாமல், முகத்தில் நிறையக் கவலை படர்ந்திருக்க மெதுவாக நடந்து வந்து ராணி வையாம்பிகா தேவியின் அந்தரங்க அறைக்குள் நுழைந்தாள்.

''வா முத்துநகை!'' என்று வரவேற்ற ராணியின் முகத்திலும் விசனம் தென்பட்டது.

மகாராணிக்கு எதிரில் உட்கார்ந்த பிறகும் முத்துநகை எதுவும் பேசாமல் அமைதியாகத் தலைகுனிந்தவாறு இருந் தாள்.

''ஏன் முத்துநகை ஒரு மாதிரியாக இருக்கிறாய்? சொக்கநாதனுக்கு ஏதேனும் ஆபத்து நேரிடுமோ? என்று கலங்குகிறாயா? கவலைப்படாதே கண்ணே! இந்த அகி லம் முழுவதுமே அணித் திரண்டு வந்தாலும், அத்தனை யையும் தவிடுபொடியாக்கும் ஆற்றல் பெற்றவன் என் மகன்! தஞ்சைப் படைகள் அவனுக்கு ஒரு துரும்பு! கூடிய சீக்கிரமே அவனது வெற்றிச் செய்தி நம்மைத் தேடி வரப் போகிறது பார்!'' என்று வையாம்பிகாதேவி அவளைத் தேற்றினாலும், அவளுக்கும் உள் மனது கலங்கிக் கொண்டி ருந்தது.

முத்துநகை வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வர வில்லை. ஆனால் கண்களில் இருந்த நீர் அருவியாக வழிந்துக் கொண்டிருந்தது.

ராணி வையாம்பிகாதேவி இதனைப் பார்த்து அவள் மீது எல்லையற்ற பாசம் பெருக, அவளருகே வந்து, அவள் தலையை அன்புடன் வருடிக் கொடுத்து, கண்களில் வழிந்த நீரைத் துடைத்து விட்டாள்.

''பைத்தியம்! எதற்காக இப்படிக் கண் கலங்குகிறாய்? அவனுக்கு ஒன்றும் நேராது! அவன் சுண்டு விரல் நகத்தைக் கூடச் சேதப்படுத்த முடியாது.''

''அது எனக்கும் தெரியும் அத்தை! இருந்தாலும் என் மனம் பதறுகிறது. இருப்புக் கொள்ளவில்லை. இரவில் தூக்கமே வருவதில்லை... அத்தை... நான் ஒன்று சொல் லட்டுமா?'' என்று தயங்கித் தயங்கிச் சொன்னாள் முத்து நகை!

''சொல் கண்ணே!''

தொடர்ந்து முத்துநகை சொன்ன விஷயத்தைக் கேட்ட தும் ராணி வையாம்பிகாதேவியின் முகம் மாறத் தொடங்கி யது.

# 56



மையிருள் படர ஆரம்பித்திருந்தது. மதுரைப் படைகளால் வெற்றி கொள்ளப்பட்ட வல்லம் கோட்டையின் மீது!

கோட்டைக்கு உள்ளேயும் வெளியேயும் ஏராளமான பிணங்கள் குவிந்து கிடந்தன. சிவந்த நிறமுள்ள செம்பூரான் கற்களால் கட்டப்பட்ட கோட்டைச் சுவர்களின் மீது இருபக்கத்து வீரர்களின் இரத்தம் தெறித்து மேலும் சிவப்பாகி இருந்தது.

கோட்டையைச் சுற்றி ஆங்காங்கே தீவட்டிகள் ஏற்றப்பட்டு அந்த மங்கலான வெளிச்சத்தில் பிணங்களை ஒதுக்குவதிலும், காயம்பட்டவர்களை சிகிச்சை முகாமிற்கு கொண்டு செல்வதிலும் ஏராளமான வீரர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இறந்து பட்டவர் உடலை பகல் நேரம் முழுவதும் காக்கை, கழுகுகள் குதறி எடுத்ததுபோக மிச்சமிருக்கும் அங்கங்களைத் தின்று பசியாற நாய்களும், நரிகளும் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தன.

கோட்டையைச் சுற்றியுள்ள இருட்டுப் பகுதிகளில் நரிகளின் ஊளை நாராசமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. செத்த பிணங்களில் இருந்து துர் வாடை எழத் தொடங்கி

இருந்தது. வெற்றி கொண்ட மதுரைப் படைகளின் மத்தியில் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருந்த கூடாரம் ஒன்றில் மதுரை மன்னன் சொக்கநாதன் அமர்ந்திருக்க, அவனருகே அவனது தளபதி வெங்கடகிருஷ்ணனும், பேஷ்கார் சின்னத்தம்பி முதலியாரும் கன்னிவாடிப் பாளையக்காரன் சின்னக் கத்திரி நாயக்கரும் அமர்ந்திருந்தனர்.

''வல்லம் கோட்டையை நாம் அடியோடு வெற்றிக் கொண்ட விஷயம் இந்நேரம் விஜயராகவ நாயக்கனுக்குத் தெரிந்திருக்கலாம். நாளைக் காலையில் நம்மைத் தாக்குவதற்காகத் தஞ்சைப் படைகள் விரைந்தோடிவரும்'' என்றான் வெங்கடகிருஷ்ணன்.

''நாளைக் காலையில் தஞ்சைப் படைகள் தஞ்சையில் இருந்து கிளம்புவதாக இருந்தால், அவை இங்கு வந்து சேருவதற்கு மாலையாகிவிடும். அதன்பிறகு சீக்கிரமே இருட்டத் தொடங்கிவிடும். அந்த நேரத்தில் போர்புரிய முடியாது. அதனால் படைகளை அதற்கு முன்னரே அவர்கள் தயார் செய்யலாம்'' என்றான் சொக்கநாதன்.

''உண்மைதான்! நமது வெற்றியைப் பற்றி கேள்விப் பட்டதுமே படைகளைத் திரட்டி விடுவார்கள். அநேகமாக நள்ளிரவுக்குப் பிறகு அவர்கள் கிளம்பினால் நாளைக் காலையில் இங்கு வந்து சேர்ந்து விடலாம்'' என்றான் சின்னக்கத்திரி நாயக்கன்.

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன். அதனால் நமது படைகளை உடனே ஓய்வு எடுக்கச் சொல்! இன்று முழுவதும் போர் செய்து களைத்துப் போய் இருக்கிறார்கள்...''

''அப்படியே உத்தரவு இடுகிறேன் சொக்கநாதா! நாளைக்காலை விடிவதற்குள் நமது படைகளும் தயாராகி விடவேண்டும்.''

''கோட்டைக்குள் நமது படைகள் யாரும் இருக்கக் கூடாது. ஏற்கனவே சிதறிக் கிடக்கும் கோட்டை நமக்குப்

பாதுகாப்பு அல்ல. அதனால் ஓய்வு எடுக்கும் வீரர்களைக் கூட கோட்டைக்கு வெளியே வந்து உறங்க சொல்.''

''அப்படியே செய்கிறேன். ஒருவேளை தஞ்சைப் படைகள் நாளைக் காலையில் இங்கு வராவிட்டால்?''

''நமது படைகள் தஞ்சையை நோக்கிச் செல்லட்டும். தாமதமாகக் கிளம்பும் தஞ்சைப் படைகளை நடுவழியில் எதிர்ப்பது இன்னும் சுலபம்'' என்றான் சொக்கநாதன்.

அடுத்த சில நாழிகளில் நாய், நரிகளின் ஊளைகளி னூடே உறக்கம் கொள்ளத் தொடங்கியது மதுரைப் படை கள்.

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் தன்னுடைய தளபதி ரங்கப்ப நாயக்கனை முறைத்துப் பாத்தான்.

''என்ன சொன்னாய் ரங்கப்பா? படையெடுத்துவரும் வேலைக்கார நாய்க்குப் பயந்து கொண்டு ஒரு பேடியைப் போல எனது மகள் சந்திரவதனாவிற்கு அவசர அவசரமாக உனது மகன் அச்சுதப்பனுக்கு விவாகம் செய்து வைக்க வேண்டும் என்றா சொல்கிறாய்? முதலில் மதுரைக்காரன் நம்மீது படையெடுப்பதன் நோக்கம் என்னவென்று புரிந்து கொண்டாயா? இல்லையா'' என்று கோபத்துடன் கேட் டான்.

''புரிந்துதான்...'' என்று இழுத்தான் தளபதி.

''என்ன புரிந்து கொண்டாய்? எனது மகளை மணம் புரியத் தூது அனுப்பிய அவன் பரம்பரையையே நான் அவமானப்படுத்தி விட்டதாகவும், அந்த அவமானத்தை இரத்தத்தால் துடைத்தெறிய வேண்டும் என்ற வெறியுடன் படை எடுத்து வந்திருக்கிறான். என்னைக் கொன்று என் மகளைத் திருமணம் செய்யாமல் விடமாட்டேன் என்று சபதம் செய்திருப்பதாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் என் மகளுக்கு அவசர

அவசரமாக நான் திருமணம் செய்து வைத்தால், அதை கேள்விப்பட்டு அவன் மனம் உடைந்து அப்படியே திரும்பிவிடுவான் என்றா நினைக்கிறாய்?''

தளபதி பேசாமல் நின்றான்.

''என் மகளின் திருமணச் செய்தி அவனது ஆத்திரத்தை இன்னும் அதிகமாகக் கிளப்பும். என்னைக் கொல்வதோடு மட்டுமின்றி என் மகளையும் அவளது மணாளனையும் கொன்று இரத்தம் குடிக்க வேண்டும் என்ற வெறியல்லவா அந்த நாய்க்கு ஏற்படும். இதனை ஏன் நீ சிந்திக்க வில்லை?''

தளபதி தலை குனிந்து கொண்டான்.

''அப்படியே இளவரசிக்குத் திருமணம் செய்து கொடுத்தாலும் உன் மகன் அச்சுதப்பனைப் போன்ற அறிவு கெட்டவனையா அவளுக்கு மாப்பிள்ளையாகத் தேர்ந் தெடுப்பது?''

''அச்சுதப்பனை நீங்கள் தரக்குறைவாக எடைபோடு கிறீர்கள் மன்னவா'' தளபதி தன் மனதில் எழுந்த கோபத்தை அடக்கியவாறு கேட்டான்.

''பெற்ற பிள்ளையைப் பற்றி நீதான் சரியாகக் கணிக்க மறந்துவிட்டாய் ரங்கப்பா! ஒரு நல்ல ஆண்மகனுக்குத் தேவையானது ஆழ்ந்த புத்திசாலித்தனமும், அப்பழுக்கற்ற வீரமும்தான். அவை இரண்டுமே உன் மகனிடம் இல் லையே! அவனால் இளவரசிக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலைமையையும், அந்தப்புரத்தில நடைபெற்ற அவமான கரமான நிகழ்ச்சிகளையும் இவ்வளவு சீக்கிரம் நான் மறந்து விட்டேன் என்றா நினைக்கிறாய் ரங்கப்பா?''

இதைக் கேட்டவுடன் அச்சுதப்பன் தலையைக் குனிந்து கொண்டான்.

தளபதிக்கு ஒரு பக்கம் தர்மசங்கடமாக இருந்தாலும், தொடர்ந்து மன்னனிடம் மன்றாடத் தொடங்கினான். இப்படிப்பட்ட இக்கட்டான சமயத்தில் மன்னன் மனதைச் சற்று அசைத்துவிட்டால் போதும், தனது எண்ணம் நிறைவேறிவிடும் என்ற சிந்தனை அவனுக்குள் இருந்தது.

மன்னன் மனம் மாறி அச்சுதப்பனுக்குச் சந்திரவதனாவைத் திருமணம் செய்து வைத்துவிட்டால் போதும், அதன்பிறகு பொங்கிவரும் மதுரைப் படைகளின் வேகம் நிச்சயம் குறையும். மணமான பெண்ணின் வாழ்க்கையைக் கெடுப்பது பாவம் என்ற எண்ணம் மதுரைப் படைகளின் வெறியைத் தணித்துவிடும். அவர்கள் நிச்சயம் போரிட மறுப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமை வந்துவிட்டால் அவர்களைத் தஞ்சைப் படைகள் மிகச் சுலபமாகச் சமாளித்து விடும்.

மன்னார்தாசனோ சிறையில் இருக்கிறான். அவன்மீது மன்னனுக்கு இருக்கும் வெறுப்பு இன்னும் மறையவில்லை.

மன்னார்தாசனைத் தனது வாரிசாகக்கூட மன்னன் ஏற்றுக் கொள்ள மாட்டார். அதன்பிறகு அச்சுதப்பன்தான் இந்த நாட்டிற்கு மன்னன்!

இப்படிப்பட்ட பொன்னான வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்ற எண்ணம் தளபதியின் மனதைப் பிடித்து ஆட்டிக் கொண்டு இருந்ததால், மன்னன் விஜயராகவ நாயக்கனிடம் கெஞ்சாத குறையாகக் கேட்க ஆரம்பித்தான்.

''மன்னா, இதற்கு முன் அச்சுதப்பன் நடந்து கொண்டதெல்லாம் அவன் ஜாதகத்தில் இருந்த கோளாறு! இப்பொழுது அவனுக்கு செவ்வாய் திசை நடக்கிறது. இவனை வெற்றிக்கொள்ள யாராலும் இயலாது. இந்திரனின் வஜ்ரா

யுதம் அச்சுதப்பன் நெஞ்சில் குடியேறி இருக்கிறது என்று நமது மன்னார்குடி ஜோதிடர் ஆணித்தரமாகக் கூறி இருக்கிறார். அச்சுதப்பனும் எவ்வளவோ மாறிவிட்டான் மன்னவா! நம்புங்கள்! தயவு செய்து!''

''தளபதி திரும்பத் திரும்ப மன்னனிடம் கெஞ்ச அச்சுதப்பன் மறுபடியும் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தான்

''அதற்காக மதுரைப் படைகளுக்குப் பயந்து கொண்டு ஒரு பேடியைப் போல விஜயராகவ நாயக்கன் மகளுக்கு அவசரத் திருமணம் நடத்தினான் என்ற கேவலமான சொல் இந்நாட்டு மக்கள் மத்தியில் உலவ வேண்டும் என்று எண்ணுகிறாயா?'' என்று மன்னன் மறுபடியும் கோபத்துடன் கேட்டான்.

இவ்வளவு நேரம் அமைதியாக இருந்த அமைச்சர் கோவிந்த தீட்சிதர் இதன்பிறகு குறுக்கிட்டுப் பேச ஆரம்பித்தார்.

''மன்னவா இப்பொழுது நம்முன் இருக்கும் தலையாய பிரச்சினை இளவரசியின் திருமணம் அல்ல! மதுரைப் படைகள் ஏற்கனவே வல்லம் கோட்டையைப் பிடித்து நமது வீரர்களைச் சின்னா பின்னமாக்கிவிட்டது. இப்பொழுது நேரமோ நள்ளிரவைக் கடந்துவிட்டது. நாளைக் காலையில் மதுரைப் படைகள் நிச்சயமாக நம்மை நோக்கி விரைந்தோடி வரும். அதனை எப்படித் தடுப்பது. அவர்களை எப்படி வெற்றிக் கொள்வது என்பதுதான் இப்பொழுது நமக்கு முக்கியம். இளவரசிக்கும், அச்சுதப்பனுக்கும் திருமணம் பற்றிய விவாதத்தினை நீங்கள் இருவரும் விடிய விடியப் பேசிக் கொண்டிருந்தால், மதுரைப் படைகள் நாளை நமது கோட்டையைச் சூழ்ந்து கொள்ளும்!''

''உண்மைதான் மன்னா! மதுரைப் படைகளை இங்கு வரவிடாமல் வழியிலேயே தடுத்து நிறுத்தி, அவர்களை புறமுதுகு காட்டி ஓடச் செய்வதே நமக்குப் பாதுகாப்பானது. அதனால் இப்பொழுதே நமது படைகளைத் தயார் செய்தால்தான், நாளை விடிவதற்குள் சேனைகள் அனைத்தும் இங்கிருந்து கிளம்புவதற்குச் சரியாக இருக்கும்...'' என்றார் ஓர் உயர் அதிகாரி.

''இளவரசியின் விவாகமா இல்லை படைகளை எடுத்துச் செல்வதா என்று மன்னர் சீக்கிரம் முடிவு செய்தால் நல்லது'' என்றார் அமைச்சர்.

''இளவரசியின் விவாகத்திற்கு இது சமயமல்ல. மதுரைப் படைகளை விரட்டுவதுதான் நமக்குப் பெருமை'' என்ற மன்னனின் வார்த்தைகளைக் கேட்டுச் சோகமாகத் தலைகுனிந்தான் தளபதி.

அவன் முகத்தைச் சற்றுநேரம் கூர்ந்து பார்த்துவிட்டுக் கொஞ்சநேரம் யோசித்தவாறு நின்றான் தஞ்சை மன்னன். பின்னர் நிதானமாக அவனைப் பார்த்துச் சொன்னான்.

''ரங்கப்பா, உன் மனதையும் நான் நோகடிக்க விரும்பவில்லை. உன் மகன் அச்சுதப்பனுக்கு ஜாதகத்தின்படி நல்ல திசை நடந்து அறிவும், வீரமும் கொண்டவனாக மாறிவிட்டான் என்பதை நான் மட்டுமல்ல இந்த நாடே அறிந்து கொள்ளும்படியான சந்தர்ப்பம் ஒன்றைத் தருகிறேன். அச்சுதப்பன் அதனை நிரூபித்துக் காட்டட்டும்.''

''நிச்சயம் நிரூபிப்பான்! என்ன செய்ய வேண்டும் என்று ஆணையிடுங்கள் மன்னவா?'' என்று உறுதியான குரலில் கூறினான் தளபதி.

''இப்பொழுதே நமது படைகளைத் திரட்டுங்கள். உதயத்திற்குள் அத்தனை படைகளும் வல்லத்தை நோக்கி

விரைய வேண்டும். படைகளுக்குத் தலைமையேற்று நீ செல்லக்கூடாது ரங்கப்பா. நீ இங்கேயே இருந்தால் போதும்.''

''தளபதி நானிருக்க வேறு யார் தலைமை தாங்குவது மன்னா?'' புரியாமல் கேட்டான் ரங்கப்ப நாயக்கன்.

''உன் மகன் அச்சுதப்பனைத் தலைமையேற்றுப் படைகளை நடத்தி மதுரைப் படைகளுடன் யுத்தம் செய்யும்படி உத்தரவு இடுகிறேன். உண்மையிலேயே அச்சுதப்பன் நீ சொன்னபடி மாவீரனாக மாறி இருந்தானேயானால் மதுரைப் படைகளை வெற்றிக் கொள்ளட்டும். அவர்களை வல்லத்தில் இருந்து மட்டுமல்ல, நமது நாட்டின் எல்லையை விட்டே துரத்தி அடிக்கவேண்டும். அதுமட்டுமல்ல ரங்கப்பா?''

''இன்னும் என்ன செய்ய வேண்டும் மன்னவா?''

''அந்த நாய் வேலைக்காரப் பதர், முறைதவறிப் பிறந்த முட்டாள், மன்னன் என்ற சொல்லுக்கே அருகதை இல்லாத மடையன் சொக்கநாத நாயக்கனின் தலையை அறுத்து என் காலடியில் கொண்டு வந்து வைக்கச் சொல். மறுநிமிடமே என் மகளை உன் மகனுக்கு மணம் முடித்து வைக்கிறேன். இது சத்தியம்'' என்றான் மன்னன் ஆவேசம் கலந்த குரலில்.

''நிச்சயமாக உங்கள் எண்ணத்தை என் மைந்தன் நிறைவேற்றுவான். உறுதி சொல்லடா அச்சுதப்பா!'' என்று மகனைப் பார்த்துச் சொன்னான் தளபதி ரங்கப்ப நாயக்கன்.

''நாளைய பொழுது மறைவதற்குள் மதுரை நாயின் தலையை உங்கள் காலடியில் சமர்ப்பிக்கிறேன் மன்னா!'' என்று அச்சுதப்பன் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு உறுதி கூறினான்.

அடுத்த சில நிமிடங்களில் தஞ்சைக் கோட்டை சுறுசுறுப்புடன் இயங்கத் தொடங்கியது.

தஞ்சைக் கோட்டையின் பாதுகாப்பிற்காகத் தேவைப் படும் படைகளைத் தவிர்த்து, ஏனைய படைகள் முழுவதும் அவசர அவசரமாகத் திரட்டப்பட்டன. நால்வகைச் சேனைகளும், அவர்களுக்கான ஆயுதம் முதல், உணவு வரை தேவைப்படும் அத்தனை பொருட்களும் வேக வேகமாகத் தயார் செய்யப்பட்டன.

அச்சுதப்பனைத் தனியாக அழைத்துத் தளபதி ரங்கப்ப நாயக்கன் அறிவுரை கூறிக் கொண்டிருந்தான்.

''அச்சுதப்பா, இது நமக்கு மானப்பிரச்சினை மட்டுமல்ல, நல்ல எதிர்காலத்திற்கான ஆரம்பமும் கூட! உன் திறமையை நிரூபி! சொக்கநாதனைக் கொல்ல முடியாவிட்டால்கூடப் பரவாயில்லை. மதுரைப் படைகளை நாட்டை விட்டே ஓட்டிவிட்டால் கூடப் போதும், மன்னர் மகிழ்ச்சி அடைவார். இளவரசியை நிச்சயம் உனக்கே திருமணம் செய்து வைப்பார். அதன்பிறகு நீதான் இந்த நாட்டு மன்னன்! என் நம்பிக்கையைக் காப்பாற்று அச்சுதப்பா!''

''கவலையே படாதீர்கள் தந்தையே! மதுரைப் படைகளை விரட்டி அடிப்பது மட்டுமல்ல, அந்த மதுரை நாயின் தலையை அறுத்து வந்து மன்னர் காலடியில் வைக்காமல் விடமாட்டேன்'' என்று பெருமிதம் பொங்கக் கூறினான் அச்சுதப்பன்.

விடிவதற்குச் சில நாழிகைகள் இருக்கும் பொழுதே அச்சுதப்பன் தலைமையிலான தஞ்சைப் படைகள் வல்லம் கோட்டையை நோக்கி விரைய ஆரம்பித்தன.

அதே நேரத்தில் மன்னன் விஜயராகவ நாயக்கன் தனது பூஜை அறைக்குள் புகுந்து இறைவனிடம் மனம் உருகி வேண்ட ஆரம்பித்தான்.

# 57



உறக்கத்தில் இருந்த கதிரவன் சிலிர்த்துக் கண் விழித்த சில நாழிகைகளுக்குள்ளே வல்லம் கோட்டையின் முன்பு மதுரைப் படைகள் அனைத்தும் தயார் நிலையில் அணிவகுத்து நின்றன.

தஞ்சையை நோக்கி அவற்றை ஆயத்தம் செய்யும் முனைப்பான முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, வெகு தூரத்தில் புழுதிக் காற்றுக் கிளம்பி விண்ணை நோக்கி உயர்ந்து கொண்டிருப்பது அவர்களின் விழிகளில் பட்டது.

அதேநேரம் மதுரை ஒற்றன் ஒருவன் புயலெனப் பறந்து வந்த புரவியில் இருந்து இறங்கி வெங்கடகிருஷ்ணன் இருக்கும் முகாமிற்குள் நுழைந்தான்.

அடுத்த சில நிமிடங்களில் வெங்கடகிருஷ்ணன் வேகமாகச் சொக்கநாதன் இருக்கும் இடத்திற்கு ஓடோடி வந்தான்.

''சொக்கநாதா, தஞ்சைப் படைகள் நம்மை நோக்கி விரைந்து வந்து கொண்டிருக்கிறதாம்.''

''இதனை நாம் எதிர்பார்த்ததுதானே கிருஷ்ணா! நமது படைகள் அவர்களை எதிர்கொண்டு செல்ல வேண்டாம். இதே இடத்திலேயே நிற்கட்டும். அணிவகுத்து நிற்கும் குதிரைப்படைகளை இரண்டாம் வரிசையில் போய் இருக்கச் சொல். நமது பீரங்கிகளை அனைத்துப் படைகளுக்கும் முன்னால் நிறுத்து'' என்றான் சொக்கநாதன்.

''விரைந்து வரும் எதிரிப் படைகளில் முதலில் வருவது குதிரைப் படையாகத்தான் இருக்கும். அதனால் நமது பீரங்கிகள் அவர்கள் மீது குண்டு மழை பொழிந்தால் சிதறிவிடுவார்கள் அதுதானே?''

''ஆம். எதிரியின் குதிரைப் படையை முதலில் எடுத்த எடுப்பிலேயே சிதற அடித்துவிட வேண்டும். அதன்பிறகு மீதியுள்ளவர்களை நோக்கி நமது குதிரைப் படைகளை மோதவிடு. அதன் பின்னால் காலாட்படைகளும், கடைசியாக யானைப் படைகளும் செல்லட்டும்.''

''அப்படியே செய்கிறேன் சொக்கநாதா!''

''அப்புறம் இன்னொரு விஷயம்?''

''உத்தரவிடு சொக்கநாதா!''

''தஞ்சைப் படைகளுக்குத் தலைமையேற்று வருவது யார் என்று பார்த்து உடனே என்னிடம் வந்து சொல்.''

''சரி.''

அடுத்த சில நிமிடங்களில் சொக்கநாதன் உத்தரவிட்டபடியே தங்கள் படைகளை அணிவகுத்து ஆயத்தம் செய்தான் வெங்கடகிருஷ்ணன்.

விண்ணைப் பிளக்கும்படியான போர்க்குரல் எழுப்பியவாறு விரைந்து ஓடிவந்தன தஞ்சைப் படைகள். கண்ணுக்கு எட்டும்படியான தூரத்தில் அவை வந்ததும், மதுரை அரசின் பீரங்கிகள் காதைப் பிளக்கும்படியான முழக்கம் எழுப்பியவாறு குண்டுமாரி பொழிந்தன.

தஞ்சைப் படைகளின் முன் வரிசையில் வந்த குதிரைப் படைகள் பீரங்கி குண்டுகள் பட்டுச் சிதறி ஓடத் தொடங்கியது. அவற்றின் பின்னால் வந்த காலாட் படையினர் மீது மதுரையின் குதிரை வீரர்கள் ஆக்ரோஷத்துடன் பாயத் தொடங்கினர்.

அதேநேரம் வெங்கடகிருஷ்ணன் வேகமாகச் சொக்கநாதன் இருக்கும் இடத்திற்கு ஓடோடி வந்தான்.

''சொக்கநாதா தஞ்சைப் படைகளுக்குத் தலைமையேற்று வந்திருப்பது யார் தெரியுமா?''

''யார்? தளபதி ரங்கப்ப நாயக்கனா?''

''இல்லை அவன் மகன் அச்சுதப்பன்!''

இதைக் கேட்டவுடன் சொக்கநாதன் இதழில் இளக்காரமான புன்னகை ஒன்று எழுந்தது.

அவசரமாகத் தனது குதிரையில் ஏறினான்.

''அச்சுதப்பன் ஒரு கொசு! அவனை வெல்ல நீ எதற்குச் செல்கிறாய் சொக்கநாதா? நமது கன்னிவாடிப் பாளையக்காரனை அனுப்பினால் போதாதா?'' என்றான் வெங்கடகிருஷ்ணன்.

''அச்சுதப்பன் ஒரு துரும்பு என்றாலும், எனக்கும் சந்திரவதனாவிற்கும் இடையேயுள்ள ஒரே ஒரு போட்டியாளன்! அவனை என் கையால்தான் கொல்லவேண்டும். இல்லாவிட்டால் அவனைப் பார்த்து நான் பயந்து கொண்டு ஒளிந்துகொண்டதாகப் பீற்றிக் கொள்வான். அவன் வேறு யார் கையினால் வெட்டுப்பட்டுச் செத்தாலும் இந்த இழிச்சொல் மக்களிடையே நிலைத்து நின்று விடும்!''

''அதுவும் உண்மைதான்.''

அடுத்த விநாடியே சொக்கநாதன் ஏறி இருந்த புரவி, போர்க் களத்தில் புயலெனப் புகுந்து முன்னேறி, அச்சுதப் பன் போரிட்டுக் கொண்டிருக்கும் இடத்தை அடைந்தது.

இருவரது குதிரைகளும் எதிர் எதிரே நின்றன. அச்சு தப்பன் உருவிய வாளுடன் சொக்கநாதனை முறைத்துப் பார்த்தான்.

''என்ன அச்சுதப்பா , அன்று மதயானையைப் பார்த்த தும் குதிக்கால் பிடரியில் படும்படியாக ஓடினாயே, இன்று இத்தனை யானைகளைப் பார்த்ததும் தொடை நடுங்கித் திரும்பிவிடலாம் என்று யோசிக்கிறாயா?'' என்று கிண்ட லாகக் கேட்டான் சொக்கநாதன்.

இதைக் கேட்டவுடன் அச்சுதப்பன் அவனை ஆத்திரத் துடன் முறைத்துப் பார்த்தான்.

''வாயை மூடி ஓடிப்போடா முட்டாளே! நான் உன் னைப் போன்ற எலிகளுடன் மோதுவதில்லை. எங்கே உங்கள் மன்னன் என்ற பெயர் படைத்த மடையன்? அச்சுதப்பன் தலைமையேற்று வந்திருக்கிறான் என்ற செய்தி கேள்விப்பட்டு ஓடி ஒளிந்திருக்கிறானா? சீக்கிரம் அவனை என் முன் வரச்சொல்!'' என்று உறுமினான்.

''அந்த மதுரை மன்னன் என்கிற இந்த மடையன்தான் இப்பொழுது நீ இருக்கும் இடத்தைத் தேடி ஓடி வந்திருக்கி றான் என்பதுகூடப் புரியாத பெரும் படையனாக நீ இருக்கிறாயே அச்சுதப்பா?''

''நீதானா அந்த நாய்? வாடா! உன் தலையை அறுத்து எங்கள் மன்னர் காலடியில் போடாமல் விடமாட்டேன்'' என்றவாறு வாளை ஆவேசமாகச் சுழற்றியவாறு சொக்க நாதனுடன் மோதத் தொடங்கினான்.

சொக்கநாதன் அவனுடன் முதலில் விளையாட்டாக வாள் வீசினான். பெரும்பாலும் அவன் தாக்குதலைத் தடுக்குமுகமாகத்தான் அவன் வாள் சுழன்றது.

அச்சுதப்பனோ ஆவேசத்தோடு சுழன்று சுழன்று தாக்கினான். அவனைப் பார்த்து இளக்காரமாகச் சிரித்தபடி வாள் வீசிக் கொண்டிருந்த சொக்கநாதன் முகத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கடுமை ஏற ஆரம்பித்தது.

அந்தக் கடுமை அவனது வாள் வீச்சிலும் தெரிய, அச்சதப்பன் மனம் கலங்க ஆரம்பித்தது. சொக்கநாதன் வாள் வீச்சில் ஒப்பில்லாதவன் என்று உணர்ந்த அவன் மனம் நடுக்கம் கொள்ளத் தொடங்கியது.

அடுத்த சில விநாடிகளில் சொக்கநாதனின் வாள் அச்சுதப்பன் கழுத்தில் இடியைப் போல வீசியது.

அச்சுதப்பன் தலை துண்டிக்கப்பட்டுத் தரையில் விழுந்தது. குதிரையில் இருந்து அவனது தலையற்ற முண்டம் குருதி கொப்பளிக்க குதிரையின் பிடரி மீது சரிந்து தொங்கத் தொடங்கியது.

அடுத்த சில நாழிகைக்குள் தஞ்சைப் படைகள் முழுவதும் தோற்றுப் பின் வாங்கி ஓடத் தொடங்கின. மதுரைப் படைகளின் வெற்றி முழக்கம் நாற்றிசைகளையும் கலங்கடித்தது.

அச்சுதப்பன் தலையை மட்டும் எடுத்துக் கொண்டு தஞ்சை வீரன் ஒருவன் மன்னரிடம் சேதி சொல்ல விரைந்தான்.

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் முகத்தில் விசனமும் வேதனையும் தென்பட்டன. அமைச்சர் கோவிந்த தீட்சிதரும், மற்றயை உயர் அதிகாரிகளும் சொல்லொணாச் சோகத்தில் திளைத்து இருந்தனர்.

தளபதி ரங்கப்ப நாயக்கன் வெட்டுபட்ட தனது மைந்தனது தலையைப் பார்த்து குமுறிக் குமுறி அழுது கொண்டிருந்தான்.

'அச்சுதப்பா என் செல்வமே! உன்னை இந்த நிலைமையில் காண்பதற்காகவா? நான் எப்படி எல்லாம் கனவு கண்டேன்? நீ வெற்றி முகத்துடன் வருவாய்! மன்னர் மனம் மகிழ்ந்து தன் மகளை மணமுடித்து வைப்பார்! இந்த நாட்டிற்கே மன்னனாக முடிசூடிடுவாய் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேனே! இப்படி வெட்டுப்பட்ட தலையுடன் வருவாய் என்று கனவிலும் எதிர்பார்க்கவில்லையே! அச்சதப்பா, மகனே, என் கண்ணே, என் நெஞ்சை வெட்டிப் பிளந்து விட்டாயேடா என் மாணிக்கமே!'

மனதிற்குள் கலங்கி, குமுறிக் கண்ணீர் பெருக்கினான். மன்னன் விஜயராகவ நாயக்கன் அவனைத் தேற்றினான்.

''வருந்தாதே ரங்கப்பா! விதி! அச்சுதப்பன் இப்படித்தான் சாகவேண்டும் என்று ஆண்டவன் கருவிலேயே எழுதி வைத்த தீர்ப்பு! இனி வருந்தி என்ன செய்வது? அழாதே! மனதைத் தேற்றிக் கொள்! அச்சுதப்பன் கோழையைப் போல் சாகவில்லை ரங்கப்பா! வீர மரணம் எய்தி இருக்கிறான்!''

ரங்கப்ப நாயக்கன் கண்களைத் துடைத்துக் கொண்டு ஆவேசத்துடன் பேச ஆரம்பித்தான்.

''விடமாட்டேன் மன்னா அந்த மதுரை நாய்களை! அவர்களைச் சின்னாபின்னமாக்க வேண்டும். அந்தச் சொக்கநாதன் தலையை இதேமாதிரி வெட்டி எறிந்தால் தான் என் ஆத்திரம் அடங்கும்.''

''அதைத்தான் நானும் நினைக்கிறேன் ரங்கப்பா! அச்சுதப்பனின் வீர மரணம் எனக்குப் பெருமிதம் ஏற்படுத்தினாலும் நமது படைகள் தோற்றோடி, புறமுதுகிட்டது எனக்குப் பெருத்த அவமானத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதனைத் துடைத்தே ஆகவேண்டும்.''

''மதுரைப் படைகள் வெற்றிக்களிப்புடன் தஞ்சையை நோக்கி சீக்கிரமே கிளம்பிவிடும் மன்னா!'' என்றார் அமைச்சர் சோகம் கலந்த முகத்துடன்.

''அவர்களைத் தஞ்சை நகர எல்லைக்கருகே கூட வரவிடக்கூடாது. தோற்றோடி வந்த நமது படைகளைத் தைரியப்படுத்தி மறுபடியும் அவர்களை நோக்கிச் செலுத்த வேண்டும். இம்முறை மதுரைப் படைகள் மண்ணோடு மண்ணாகச் சரிய வேண்டும். இப்பொழுதே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யட்டுமா மன்னா?'' என்று ஆத்திரத்துடன் கொக்கரித்தான் ரங்கப்ப நாயக்கன்.

''அப்படியே செய் ரங்கப்பா! அத்தோடு மனித ஜென்மங்களை மட்டும் முழுக்க முழுக்க நம்பிப் பலனில்லை. மகேசனின் ஆசியும் நமக்கு வேண்டும். இதுவரை நம் குருவிடம் இதைப்பற்றி நான் வேண்டாதது மாபெரும் தவறு. இப்பொழுதே அவரிடம் சென்று மன்றாடப் போகிறேன். அவரது ஆசியுடன் நாளைக் காலையில் நமது படைகள் யுத்தக் களத்திற்குச் செல்வதுதான் நல்லது என்று நினைக்கிறேன். என்ன சொல்கிறீர்கள் அமைச்சரே?''

''முற்றிலும் உண்மை மன்னா! அவனன்றி ஓர் அணுவும் அசையாது'' என்று அமைச்சர் வேதாந்தம் பேசியதைக் கேட்டதும் வானைப் பார்த்துக் கும்பிட்டான் மன்னன்.

அதற்கடுத்த நாழிகையில் மன்னனை ஏற்றிக் கொண்ட ரதம் குலகுரு குமார தாத்தாச்சாரியாரின் குடிலின் முன் வந்து நின்றது.

தஞ்சை அரண்மனையின் அந்தப்புரம் இரவின் இரண்டாம் ஜாமம் தொடங்கும்பொழுதே நிசப்தம் கொள்ளத் தொடங்கியது.

மதுரைப் படைகள் நெருங்கி வரும் சேதி கேட்டது முதல் அந்தப்புரத்தின் மங்கையர்கள் மனம் கலங்கி, உணவை வெறுத்து, ஒருவருக்கொருவர் பேசுவதற்குக்கூட விருப்பம் இன்றி, தங்கள் அறைகளில் விளக்குகளை அணைத்துவிட்டு மஞ்சத்தில் படுத்தவாறு மருகிக் கொண்டிருந்தனர்.

இளவரசி சந்திரவதனா தன்னுடைய தாயின் அறையில் உள்ள மற்றொரு தனி அறையில் அமைக்கப்பட்டிருந்த மஞ்சத்தின் மீது படுத்தவாறு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். அவள்தாய் மற்றொரு மஞ்சத்தில் படுத்தாவறு உள்ளூரக் கலங்கித் தவித்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் இதயத்தைப் போலவே அவர்கள் படுத்திருந்த அறைகளின் விளக்குகள் அணைக்கப்பட்டு இருள் சூழ்ந்து கிடந்தது. இருவரும் கண்களை மூடித் தூங்குவது போன்ற பாவனையில் கிடந்த போதிலும், மற்றவர் தூங்காமல் மனங்கலங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்ற உணர்வும் அவர்களுக்கு இருந்தது.

இதில் சந்திரவதனாதான் அதிக துக்கத்திற்கு ஆளாகி இருந்தாள்.

இவ்வளவும் என்னால்தானே வந்தது! நான் அழகாய்ப் பிறந்ததனால்தானே வந்தது! அந்தச் சொக்கநாதனின் கண்களில் பட்டதனால்தானே வந்தது! அவரைக் காதலித்ததனால்தானே வந்தது! ஐயோ! நான் எதற்குப் பிறந்தேன்?

நெஞ்சம் குமுறி குமுறிக் கலங்கியது சந்திரவதனாவிற்கு!

அச்சதப்பன் மரணம் இங்குள்ள அனைவரின் இதயத்தையும் எப்படி எல்லாம் கலங்கடித்துவிட்டது! அவன் மடையன்தான்! அறிவிலிதான்! நல்ல வீரனுக்குரிய அம்சங்கள் எதுவுமே இல்லாதவன்தான்! இருந்தாலும் அவன் சாவு, அவனது கோர மரணம், அவன் தலை அறுபட்டுக் கிடந்த செய்தி என் மனதையே உலுக்கிவிட்டதே!

அவன் சாவுக்கு நான்தானே காரணம்! அவன் தந்தை அத்தனை பேர் மத்தியில் தனது மகனின் வெட்டுப்பட்ட தலையை மார்பிலே அணைத்துக் கொண்டு கதறி அழுதாராமே! கடவுளே! இவ்வளவுக்கும் காரணமாக என்னைப் படைத்துவிட்டாயே!

போரின் முடிவு என்ன ஆகும் என்றே தெரியவில்லையே? சொக்கநாதர் ஈடு இணையற்ற வீரர்! ஒப்பில்லா புத்திசாலி! அவர் வெல்வது நிச்சயம்! அப்படி வென்றால் கூட என் தந்தை அவருக்கு என்னை மணம் முடித்துக் கொடுக்கச் சம்மதிக்கமாட்டாரே!

ஒருவேளை தஞ்சைப் படைகள் வென்றால்? என் தந்தைக்கு இருக்கும் ஆத்திரத்தில் அவரை ஜெயித்தவுடன் கண்டிப்பாக கொல்லத்தான் செய்வார்! அப்படி நடந்துவிட்டால்... தெய்வமே!

இப்படி வேதனைப்படுவதற்காகவா இறைவா என்னைப் படைத்தாய்!

இளவரசி தன்னை மறந்து குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

இதனைக் கேட்டவுடன் அடுத்த அறையில் படுத்திருந்த அவள் தாய் ஓடோடி வந்து, அவளை தனது மடியில் போட்டுக் கொண்டு, மகளைத் தேற்றுவதற்கு வார்த்தைகள் வராமல், அவள் முகத்தோடு முகமாக சேர்த்து அணைத்தவாறு, அவளும் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கினாள்.

# 58



தஞ்சை அரசின் மொத்தச் சேனைகளின் பெரும்பகுதி தனியாகப் பிரிக்கப்பட்டுக் கோட்டை வாசலின் முன்பு அணிவகுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

படைவீரர்கள் அனைவரும் தஞ்சை அரசுக்குரிய ஆடைகளை அணிந்து ஒரு பக்கம் வரிசையாக நின்று கொண்டிருந்தனர். அவர்களது ஆயுதங்கள் அனைத்தும் பட்டை தீட்டப்பெற்று அவர்களுக்கு முன்பு மொத்தமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. கிழக்கு வானில் அப்பொழுதுதான் எழுந்த பகலவன் ஒளியில் அவை பளபளத்துக் கொண்டிருந்தன.

அவர்களுக்கு அடுத்த வரிசையில் போரில் கலந்து கொள்ள இருக்கும் புரவிக் கூட்டம் கடிவாளம், சேணம், கால்படி முதலியன பூணப் பெற்றுக் கம்பீரமாக அணி வகுத்து நின்றன.

அதற்கு அடுத்தபடியாக போரின்போது முழக்கப் படும் முரசு போன்ற தோற் கருவிகள் வரிசையாக வைக்கப் பட்டிருந்தன.

இந்த அணிவகுப்புக்களுக்கு முன்புறமாகப் படைத் தளபதிகளும் அவர்களுக்கு முன்புறமாக தளவாய் ரங்கப்ப

நாயக்கனும், அமைச்சர் கோவிந்த தீட்சிதரும் பணிவாக நின்று கொண்டிருந்தனர்.

இத்தனை பிரமாண்டமான வரிசைகளுக்கு நேர் எதிரான மத்திய பகுதியில் ஓமகுண்டம் ஒன்று வளர்க்கப்பட்டு தீ எரிந்து கொண்டிருந்தது.

இதன் ஒரு பக்கத்தில் மன்னன் விஜயராகவ நாயக்கன் ஆழ்ந்த பக்தியுடன், இரு கைகளையும் கூப்பியவாறு, கண்களை மூடித் தொழுது கொண்டிருக்க, ஓம குண்டத்தின் மறுபக்கத்தில் அவனது குலகுரு குமார தாத்தாச்சாரியார் தன்னருகே வேத சிரோன் மணிகள் சூழ்ந்திருக்க, ஓமகுண்டத்தில் நெய் வார்த்து, வேள்வித் தீயினை வளர விட்டு யக்ஞம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தார்.

மதுரையில் இருந்து திரண்டு வந்த எதிரிப் படைகள் கண்ணுக்குத் தெரியாத தீய சக்திகளை ஏவிவிட்டிருந்ததால் தான் வல்லம் கோட்டை வீழ்ந்துவிட்டது. அதனால் எதிரிகள் ஏவிய தீய சக்திகளை முறியடிப்பதற்கும், தஞ்சைப் படை வீரர்களுக்குத் தன்னேரில்லாத வலிமையை ஊட்டுவதற்கும் குலகுருவானவர் வேள்வி நடத்துவதுதான் சாலச் சிறந்தது என்று கூறியதால், மன்னன் விஜயராகவ நாய்க்கனும் அதற்குக் கட்டுப்பட்டு இத்தனை ஏற்பாடுகளையும் செய்திருந்தான்.

வேத மந்திரங்கள் கம்பீரமாக முழங்க வேள்வித் தீ ஓமகுண்டத்தினுள் பொங்கி எழுந்து, புகை கக்கிக் கொண்டிருந்தது. அந்தப் புகை நாலாபக்கமும் சூழ்ந்து, சுற்றி நிற்கும் படைவீரர்களின் கண்களைக் கரித்துக் கொண்டிருந்தன.

வேள்வித் தீயின் புகைமூட்டம் தாளாமல் அணி வகுத்து நின்ற குதிரைகளில் சில மிரண்டு கனைக்க ஆரம்பித்தன. அவற்றைக் குதிரை வீரர்கள் கஷ்டப்பட்டுக் கட்டுக்குள் கொண்டுவரப் பிரயத்தனப்பட்டனர்.

யக்ஞத்தின் ஒரு பகுதி முடியும் தறுவாயில் வரும் பொழுது குலகுரு குமார தாத்தாச்சாரியார் தனது சிஷ்யர்களில் ஒருவரை அழைத்தார்.

''இடி மரத்தைக் கொண்டு வாருங்கள்'' என்று ஏவினார்.

அடுத்த சில நொடிகளில் ஒரு முழு நீளமுள்ள மரக்கட்டை ஒன்றை அந்தச் சிஷ்யர் ரொம்பப் பணிவாக, புனிதமான ஒரு பொருளைக் கொண்டு வருவதுபோல், பயபக்தியுடன் தன்னிரு கைகளிலும் ஏந்தி வந்து குமார தாத்தாச்சாரியாரின் கையில் கொடுக்க, அவரும் அதனைப் பக்தி சிரத்தையுடன் வாங்கினார்.

அந்த மரக்கட்டையின் பெரும்பகுதி கருகிய நிலையில் காணப்பட்டன. குலகுரு மன்னனைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

''விஜயராகவா, இது சாதாரண மரம் அன்று. இதன் விவரம் உனக்குத் தெரியாது இல்லையா?''

''சொல்லுங்கள் தெரிந்து கொள்கிறேன் ஸ்வாமி!'' என்று பணிவுடன் இரு கை கூப்பிய நிலையில் சொன்னான் மன்னன்.

''இது இடி விழுந்து தாக்கிய ஒரு மரத்தில் இருந்து எடுக்கப்பட்ட கட்டை! அதனால்தான் கருகிய நிலையில் காணப்படுகிறது. இந்த மரத்தினை இடி தாக்கியது போலவே உனது எதிரிகள் தாக்கப்பட்டு அழிய வேண்டும் என்பதற்காக, இந்த மரக்கட்டையினை உன் கையாலேயே எடுத்து ஓமகுண்டத்தில் போடு விஜயராகவா!''

''அப்படியே செய்கிறேன் ஸ்வாமி!''

மன்னன் அந்த மரக்கட்டையினைப் பணிவாக வாங்கி, தன் இரு கைகளிலும் ஏந்தி, இறைவனைத் தியானித்தவாறு, ஓமகுண்டத்தில் போட்டான். குலகுரு

அதன்மீது நெய்வார்க்க, மரக்கட்டை புகைந்து எரியத் தொடங்கியது.

''ஏ சாபமே! எங்களை விட்டு விலகி ஓடு! கொழுந்து விட்டு எரியும் தீ குளத்தினைவிட்டு விலகி ஓடுவதுபோல, சாபமே, நீ எங்களைவிட்டு விலகி ஓடு! மரத்தின் மீது வானத்தில் இருந்து தாக்கிய இடியினைப் போல, எங்கள் மீது சாபம் இட்டவர்களைத் தாக்கு!'' என்ற பொருள்படும் அதர்வண வேத மந்திரத்தை உரத்த குரலில் உச்சரித்த வாறு, குலகுரு ஓமகுண்டத்தில் போடப்பட்ட மரக் கட்டை மீது நெய் வார்த்தார்.

மன்னன் விஜயராகவ நாயக்கன் ஓமகுண்டத்தைப் பயபக்தியுடன் தொட்டுக் கும்பிட்டுவிட்டு வானத்தைப் பார்த்து ஒருமுறை கும்பிட்டான்.

இந்தச் சடங்குகள் முடிந்ததும் குலகுருவானவர் அரு கில் இருந்த புனித நீர் நிறைந்த கும்பம் ஒன்றை எடுத்துக் கொண்டு படைகள் அணிவகுத்து நின்ற இடத்தருகே வந்தார். மன்னன் விஜயராகவ நாயக்கனும் கைகூப்பிய நிலையில் அவரைப் பின் தொடர்ந்தான்.

குலகுரு குமார தாத்தாச்சாரியார் கும்பத்தில் இருந்த புனித நீரை எடுத்துப் படைவீரர்கள் மேல் தெளித்தார். பின்னர் படைவீரர்கள் முன்னால் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மேல் தெளித்தார். அதனை அடுத்து இருந்த போர் முரசங்களின் மீதும் புனித நீரினைத் தெளித்தார்.

''உங்களை வெல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் உங்கள் படை வீரர்கள் மீது ஏவப்பட்ட மந்திரம், அம்பு முதலான போர் ஆயுதங்கள் மீது ஏவப்பட்ட மந்திரம், போர் முரசங்கள் மீது ஏவப்பட்ட மந்திரம் இவை அனைத் தையும் சுழற்றி எதிரியின் மீதே திரும்ப வீசுகிறேன்'' என்று பொருள்படும்படியான அதர்வண மந்திரங்களைக் கம்பீர மான குரலில் உச்சரித்தார் குலகுரு.

இவை முடிந்த பின்னர் உச்சரித்த மந்திரங்களின் தாத்பர்யத்தைப் பற்றிக் குலகுரு, மன்னனிடம் தமிழில் விளக்க மன்னன் விஜயராகவ நாயக்கன் அகம் மகிழ்ந்து, கண்கள் கலங்கி, ஆகாயத்தைப் பார்த்துக் கும்பிட்டான்.

குலகுரு இதற்கு அடுத்த சடங்கினை ஆரம்பிக்க உத்தரவிட்டார். அதற்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் அவரது சிஷ்யர்கள் பணிவுடன் கொண்டு வந்து வைத்தனர்.

மறுபடியும் ஓமகுண்டத்தினருகே அமர்ந்து நெய் வார்த்து வேள்வித் தீயை வளரவிட்டார் குலகுரு.

மந்திரங்களை உச்சரித்தவாறு மன்னன் கையில் ஒரு சிறிய உரலைக் கொடுத்தார். அதற்குள் அரிசி உமி நிறைந்து காணப்பட்டது.

''விஜயராகவா, இந்த உரலுக்குள் இருக்கும் உமி யைப்போல உன்து எதிரிகள் சிதறி ஓடவேண்டும் என்று மனதில் தியானித்துக் கொண்டு உமியினை ஓமகுண்டத் தில் போடு'' என்றார் குலகுரு.

மன்னனும் அதன்படியே செய்ய, குரு அந்த உமியின் மீது நெய் வார்த்தார்.

அதன்பிறகு அவர் ஒரு முறத்தினை எடுத்தார். அந்த முறத்தில் இருபத்து நான்கு கூழாங்கற்கள் வைக்கப்பட்டி ருந்தன.

''விஜயராகவா, இந்த முறத்தினை வாங்கி நன்றாக இதனை நீ புடைக்க வேண்டும். முறத்தில் இருக்கும் கூழாங்கற்கள் கீழே விழுந்துவிடாமல், அவை ஒன்றோடு ஒன்று சப்தமாக உரசிக் கலகலக்கும்படியாக இந்த முறத் தினை நீ புடைக்கவேண்டும். சிதறிய இந்தக் குழாங்கற்க ளைப்போல உனது எதிரிகள் சிதறவேண்டும் என்பதற்காக அதர்வண வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது இந்தச்

சடங்கு'' என்றவாறு முறத்தினை மன்னனிடம் நீட்டினார் குலகுரு குமாரதாத்தாச்சாரியார்.

மன்னனும் பயபக்தியுடன் அந்த முறத்தினை வாங்கி குரு சொன்னபடி கூழாங்கற்கள் கலகலக்கும்படியாகப் புடைத்தான்.

அதன்பிறகு குலகுரு வேள்வித் தீயில் நெய் ஊற்றிய வாறு ''எதிரி படைகளை இந்திரன் குழப்பட்டும். மாறாத் துக்கள் வலிமையுடன் அவர்களை அழிக்கட்டும். எதிரிக ளைப் பார்த்த மாத்திரத்தில் அக்னி அவர்களைக் கொள்ளை யடிப்பதாக எதிரிப் படைகள் அனைத்தும் தோல்வியுற்று திரும்பி ஓடட்டும்'' என்ற பொருள் கொண்ட அதர்வண வேதத்தினை முழங்கினார்.

இந்தச் சடங்குகள் முடிந்ததும் மன்னனை அழைத்துக் கொண்டு குலகுரு குமாரதாத்தாசசாரியார் குதிரைகள் அணி வகுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வந்தார்.

''குதிரைகள் அனைத்தும் முறைப்படி ஸ்நானம் செய் யப்பட்ட பின்னர்தானே இங்கு கூட்டி வரப்பட்டன?'' என்று வினவினார்.

''ஆம் ஸ்வாமி! தங்கள் கட்டளைப்படியே அனைத் துக் குதிரைகளையும் குளிப்பாட்டி இருக்கிறேன்'' என் றான் குதிரைப்படைத் தளபதி.

அதன்பிறகு குலகுரு உத்தரவிட, அவரது சிஷ்யர்கள் நெய்ப்பானைகளைக் கொண்டு வந்து அங்கு வைத்தனர். பானைகளில் இருந்த நெய்யை எடுத்துக் குதிரைகள் மீது அந்தந்த வீரர்களைக் கொண்டு தடவச் சொன்னார்.

நெய் கலந்த, மணம் மிகுந்த பொருட்கள் சேர்த்துக் கலக்கப்பட்டிருந்த உணவினை இலையில் எடுத்து ஒவ் வொரு புரவிக்கும் புகட்டும்படி உத்தரவிட்டார்.

அதன்பின்னர் அந்தக் குதிரைகளுக்கு நீர் அருந்தும்படி யான ஏற்பாடுகளை செய்யச் சொன்னார். கடைசியாகப் புனித நீரைப் புரவிகள் மீது தன் கையால் தெளித்தார்.

பிறகு அத்தனை குதிரைகள் முன்னால் வந்து நின்றார்.

''ஏ ஓட்டம் நிறைந்தவனே! பருந்திற்கும், காற்றிற்கும் வேகம் இருப்பதுபோல் உனக்கும் ஒரு ரகசியமான இடத்தில் வேகம் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. இதனைக் கொண்டு, ஏ குதிரைகளே, போரில் ஜெயிப்பீர்களாக! வெற்றி இலக்கை அடைவீர்களாக!'' என்ற அதர்வண வேத மந்திரத்தை அட்சுர சுத்தமாக உச்சரித்தார்.

இதன்பிறகு அவர், மன்னனை அழைத்துக் கொண்டு போர் முரசுகள் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு வந்தார்.

அந்த முரசுகள் ஏற்கனவே அவர் கட்டளை இட்டிருந்த படி நன்றாகக் கழுவப்பட்டு, வாசனைத் திரவியங்கள் பூசப்பட்டு இருந்தன. அதனை ஒருமுறை நன்றாகப் பார்வை இட்டார் குலகுரு.

பிறகு தனது சிஷ்யர்களை அழைத்து, அந்த முரசுகளின் மீது நெய் தடவச் சொன்னார். நெய் தடவி முடித்ததும், அவற்றின் முன்னால் வந்து அதர்வண மந்திரங்களை ஓதத் தொடங்கினார்.

''மரத்தினால் செய்யப்பட்டு, பசுவின் தோலினால் மூடப்பட்டு இருக்கும் போர் முரசமே! படைவீரர்கள் போரிட உயர்ந்த ஒலிகளை எழுப்புவாயாக! தனது வெற்றியில் உறுதியாக இருக்கும் சிங்கத்தைப்போல, எதிரிகளைத் தோல்வி அடையச் செய்ய, உன்னுடைய குரலைக் கூர்மையாக்கி, எதிரிகளின் மத்தியில் இடியைப் போல முழங்குவாயாக!''

முரசுகளுக்கான மந்திரங்களை முழக்கி முடித்த குல குரு குமாரதாத்தாச்சாரியார் அதன் பிறகு ஒரு பெரிய போர் முரசின் அருகில் சென்று அதில் செருகி இருந்த குச்சிகளை எடுத்தார்.

இரண்டு குச்சிகளையும் தனது இரு கரங்களிலும் உறுதியாகப் பிடித்துக் கொண்டு மூன்று முறை பலமாக அடித்து முரசொலித்தார். உடனே போர் வீரர்கள் வெற்றி முழக்கம் செய்து ஆரவாரித்தனர்.

பின்னர் தன் கையால் அந்தக் குச்சிகளை அடிப்பவனி டம் கொடுத்தார்.

*''விஜயராகவா, அதர்வண வேதத்தில் சொல்லப்பட் டிருக்கும் சடங்குகள் திவ்யமாகவும், திருப்தியாகவும் நிறைவேறிவிட்டன. இனி உன் படைகள் எதிரிகளை நோக்கிக் கிளம்பிச் செல்லட்டும். கூடிய சீக்கிரமே வெற் றிச் செய்தி உன்னைத் தேடி வரும்'' என்று ஆசீர்வதித்தார்.

அடுத்தநாள் காலையில் அங்கு கூடி இருந்த படைகள் வல்லத்தினை நோக்கி போர் முரசு ஒலித்தவாறு புறப்பட ஆரம்பித்தன.

தளவாய் ரங்கப்ப நாயக்கனைத் தஞ்சைக் கோட்டை யின் பாதுகாப்பை ஏற்கும்படி மன்னன் கட்டாயப்படுத்திய தால் மற்றைய தளபதிகள் படைகளை விரைந்து செலுத்திக் கொண்டு சென்றனர்.

விஜயராகவ நாயக்கன் தனது குல்குரு குமார தாத்தாச் சாரியாரைக் குடிலுக்கு வழியனுப்பிவிட்டுத் தனது அந்த ரங்க அறையிலுள்ள ஆண்டவன் விக்ரகத்தின் முன் அமர்ந்து வழிபட ஆரம்பித்தான்.

அதே சமயம் தஞ்சையில் நடைபெற்ற வேள்விபற்றிக் கேள்விப்பட்ட மதுரைப் படைகள் கலக்கம் கொள்ளத் தொடங்கின. தங்களை அழிப்பதற்காக மந்திர சக்திகள் ஏவப்பட்டு, பில்லி சூன்யம் வைக்கப்பட்டு விட்டதாக ஒரு வதந்தி கிளம்பி, படை வீரர்களின் மனதில் அச்சத்தைக் கிளப்பிவிட்டது.

தஞ்சைப் படைகளை எதிர்த்து நிற்பதற்கே அவர்களில் சிலருக்குத் திகிலும், நடுக்கமும் ஏற்படத் தொடங்கியது.

---

★இந்தப் பகுதியில் இதுவரை கூறப்பட்ட அனைத்துச் சடங்குகளுக்கும் மந்திரங்களுக்குமான ஆதாரம் *'Hymns of Atharva - veda - translated by Maurice Bloomfield, Edited by F.Max Muller - page no.77,93, 476; 121, 325; 145, 508; 130, 436.*

# 59



மதுரைப் படைகளின் மத்தியில் பலத்த பாதுகாப்பான இடத்தில் மன்னனுக்கென்று அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தில் போர் ஆலோசனைக் குழு கூடி இருந்தது.

மன்னன் சொக்கநாதன் மத்தியில் அமர்ந்திருக்க, அவனது தளபதி வெங்கடகிருஷ்ணன், பேஷ்கார் சின்னத்தம்பி முதலியார், கன்னிவாடிப் பாளையக்காரன் சின்னக்கத்திரி நாயக்கர் மற்றும் படைத் தளபதிகள் அனைவரும் மன்னனைச் சுற்றிலும் அமர்ந்திருந்தனர்.

''தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் தனது படைகளை முன்னிறுத்தி மாபெரும் யக்ஞம் ஒன்றை நடத்திக் கொண்டு இருக்கிறானாம். அதர்வண வேத மந்திரங்களைக் கற்றுணர்ந்த அவனது குலகுரு நம்மீது வலிமையான மாய சக்திகளை ஏவி விட்டிருக்கிறாராம். இந்தச் செய்தி நமது போர் வீரர்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டுப் பயத்தினை அவர்களுக்குள் ஏற்படுத்தி இருக்கிறது'' என்று ஆரம்பித்தான் வெங்கடகிருஷ்ணன்.

''வீரர்களில் பலர் பீதி அடைந்து இருக்கிறார்கள். கண்ணுக்குத் தெரியாத மாயசக்தி நம்மை அழித்துவிடுமோ என்று அச்சங்கொண்டு அலைகிறார்கள்'' என்றார் சின்னத் தம்பி முதலியார்.

''தஞ்சைப் படைகள் விரைந்து வந்தால் இந்தப் பயத்தில் நம்முடைய வீரர்களில் பலர் பயத்துடன் பின்வாங்கி ஓடி விடுவார்களோ என்றுகூடத் தோன்றுகிறது'' என்றார் சின்னக்கத்திரி நாயக்கர்.

இவை அனைத்தையும் கேட்டுக் கொண்டு சொக்கநாதன் பதில் எதுவும் பேசாமல் நீண்ட நேரம் சிந்தித்தவாறு இருந்தான். பிறகு மெதுவாகப் பேசத் தொடங்கினான்.

''விஜயராகவ நாயக்கன் கண்மூடித்தனமான பக்தி கொண்டவன். அவனது குலகுரு அதனைப் பயன்படுத்திக் கொண்டு அவனை மேலும் மேலும் முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை நாமே நேரில் பார்த்த விஷயம்தானே கிருஷ்ணா! மந்திரங்களை ஏவி ஒரு நாட்டை மண்ணோடு மண்ணாக ஆக்க முடியும் என்பது உண்மையானால், இந்த உலகில் மந்திரவாதிகளல்லவா ஆட்சி புரிய முடியும்? இதனை நம்பி வீண் பயம் கொள்வது பேடித்தனம்.''

''இது எங்களுக்கும் தெரியாமல் இல்லை சொக்கநாதா! ஆனால் நமது வீரர்களில் பெரும்பாலானவர்கள் கல்வி அறிவு அற்றவர்கள், பாமரர்கள். சிந்தித்துப் பார்க்கும் திறன் குறைந்தவர்கள். காலம் காலமாக வழங்கிவரும் கதைகளின்மீது அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டவர்கள். அவர்கள் மனதை அவ்வளவு சீக்கிரம் மாற்ற முடியாது. அதிலும் இப்பொழுது நாம் கொந்தளிப்பான கட்டத்தில் இருக்கிறோம். இன்னும் இரண்டு நாட்களில் தஞ்சைப் படைகள் நம்மைத் தாக்க ஓடோடி வரும்.''

''ஆம் மன்னா! அதற்குள் நாம் நமது வீரர்களைத் தைரியப்படுத்தாவிட்டால், போரின் நிலைமை என்னவாகும் என்று நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது'' என்றார் பேஷ்கார்.

''உண்மைதான். மனிதனுக்குக் கண்ணுக்குத் தெரியாத சக்திகளின் மீதுதான் நிறைய பயம் இருக்கிறது. எவ்வளவு பெரிய வீரனையும் சிந்திக்கும் ஆற்றலை அழித்து, தன்னம் பிக்கையை வேரோடு அறுத்து எறிந்துவிடும். மாய சக்தி ஒன்று இருக்கிறது என்று நினைத்தே அவர்களுக்குப் பாதி உயிர் போய்விடும். அந்த நிலைமையை நாம் மாற்றித்தான் ஆகவேண்டும்.''

''எப்படி மாற்றுவது? என்ன செய்வது? சீக்கிரம் சொல்லுங்கள் மன்னவா?'' என்று படபடத்தார் கன்னி வாடிப் பாளையக்காரர்.

''நமக்கு நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை மதித்து, அவர் கள் வழியிலேயே அவர்களுக்குத் தைரியத்தை ஏற்படுத்தி, பயத்தினைப் போக்குவதுதான் இப்போதுள்ள சூழ் நிலைக்கு ஒரே வழி.''

''எப்படி? புரியும்படி சொல்'' என்றான் வெங்கட கிருஷ்ணன்.

''தஞ்சைப் படைகள் முன்னிலையில் இப்பொழுது விஜயராகவ் நாயக்கன் யாகம் நடத்திக் கொண்டிருக்கிறான் இல்லையா? யாகம் முடிந்து, அனைத்துச் சடங்குகளும் நிறைவுற்ற பிறகு தஞ்சைப் படைகள் கிளம்பி வருவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் ஆகும் இல்லையா?''

''நிச்சயம் இரண்டு நாட்கள் ஆகும்.''

''அதற்குள் நாம் நமது படைகளின் திருப்திக்காக அவர்கள் முன்னிலையில் அதே மாதிரி யாகம் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்! நம்மீது ஏவிவிடப்பட்டதா கச் சொல்லப்படும் மாய சக்திகளை அழிக்கும் திறன் கொண்டவர் என்று பிரசித்திப் பெற்ற ஒரு சாஸ்திரிகளை அழைத்துவா! அவர் நடத்தும் யாகம் நமது படைகளின் மனதில் புகுந்திருக்கும் பயத்தினை அறவே ஒழித்துப்

புதிய பலத்தையும், தன்னம்பிக்கையையும் நமது வீரர்கள் பெறும்படியாக அமையவேண்டும்.''

''இன்றே, இப்பொழுதே அதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்கிறேன்'' என்று மகிழ்ச்சியுடன் எழுந்தான் கிருஷ்ணன்.

அடுத்த சில நாழிகைகளில் மந்திர, தந்திரங்களில் தேர்ச்சி பெற்றவர் என்று அந்தப் பகுதியில் புகழ்பெற்ற சாஸ்திரி ஒருவரைத் தேடிப்பிடித்து மன்னனது முகாமிற்குக் கூட்டி வந்தான் வெங்கடகிருஷ்ணன்.

சாஸ்திரிகள் மன்னனைப் பார்த்து வணங்கினார்.

''இவர் பெயர் பக்தப் பிரியா ஸ்வாமிகள்! எந்தவித பில்லி சூன்யங்களையும், தீய சக்திகளையும், மோடி வைத்த மாய சக்திகளையும் அழிப்பதில் வல்லவர்'' என்று அவரை அறிமுகப்படுத்தினான் வெங்கடகிருஷ்ணன்.

''நல்லது சாஸ்திரிகளே, எனது தளபதி எல்லா விஷயங்களையும் தங்களிடம் கூறி இருப்பார் என்று நினைக்கிறேன்.''

''சகல விஷயங்களையும் ஆதியோடு அந்தமாகக் கூறிவிட்டார். தாங்கள் பயப்படாதீர்கள்!''

''என் பயத்தைப் போக்குவதைவிட, எனது வீரர்கள் பயத்தினை நீங்கள் போக்கவேண்டும்.''

''கவலையேப் படாதீர்கள்! குமாரத் தாத்தாச்சாரியாரின் சக்தி எனது சக்திக்கு முன்பு ஒரு துரும்பு! அவர் ஏவிய அனைத்துத் தீய சக்திகளையும் அறவே அழித்துவிடுவது மட்டுமல்ல, அந்தத் தீய சக்திகளை அவர்கள் மீதே திருப்பி அனுப்பிவிடும் வல்லமை பெற்றவன் நான்.''

''தங்களைப் பற்றிய இந்தப் பெருமைகளை எங்களது படைவீரர்கள் முன் நீங்கள் பேசுவதுதான் நல்லது. அதுமட்டுமல்ல! அதற்கு நீங்கள் என்னென்ன செய்யப்

போகிறீர்கள் என்பதையும், அவர்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும்படியாகச் செய்வதுதான் நல்லது.''

''அப்படியே செய்கிறேன் மன்னவா! இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் முன்னிலையில் மாபெரும் வேள்வி ஒன்றை நடத்தப் போகிறேன். அதற்குத் தேவையான பொருட்களுடன் லட்சக்கணக்கான பூசணிக்காய்கள் வேண்டும். அவற்றை எப்படியாவது சேகரித்துக் கொண்டு வருமாறு தாங்கள்தான் உத்தரவிடவேண்டும்!''

''லட்சக்கணக்கான பூசணிக்காய்களா? அவ்வளவு எதற்கு ஸ்வாமிகளே?'' என்று குழப்பத்துடன் கேட்டான்.

பக்தப்பிரியா ஸ்வாமிகள் விளக்கமாகச் சொக்கநாதனிடம் சொல்லத் தொடங்கினார். அதனைக் கேட்டு முடித்தவுடன், இனி தனது வீரர்களின் பயத்தைப் போக்கிவிடலாம் என்று மகிழ்ச்சி அடையத் தொடங்கினான் சொக்கநாதன்.

**ம**துரைப் படைகளின் முன்னிலையில் மாபெரும் யாகம் ஒன்றை அடுத்த சில நாழிகைகளில் ஆரம்பித்து வைத்தார் பக்தப் பிரியா ஸ்வாமிகள்.

ஓமகுண்டத்திற்கு எதிரே லட்சக்கணக்கான பூசணிக்காய்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

சொக்கநாதன் கட்டளை இட்ட மறுநிமிடமே வீரர்கள் நாடு முழுவதும் ஓடிச் சென்று, கண்ணில் தென்பட்ட பூசணிக்காய்கள் அனைத்தையும் திரட்டிக் கொண்டு வந்திருந்தனர்.

மதியம் ஆரம்பித்த வேள்வி மாலை வரை நடைபெற்றது. பக்தப் பிரியா ஸ்வாமிகள் அதுவரை விதவிதமான மந்திரங்களைத் தனது சிஷ்யர்களுடன் சேர்ந்து விண்ணதிரும்படியாக உரத்த குரலில் உச்சாடனம் செய்தார்.

பின்னர் ஓமகுண்டத்தில் இருந்து எழுந்து, குவித்து வைக்கப்பட்டிருந்த பூசணிக்காய்களின் மீது புனித நீர் தெளித்து ஒருவருக்கும் புரியாத மொழியில் மந்திரங்களைச் செபித்தார்.

இதன்பிறகு மன்னனையும், அங்கு கூடி இருக்கும் அத்தனை போர் வீரர்களையும் பார்த்துக் கம்பீரமான குரலில் பேசத் தொடங்கினார்.

''மன்னா, தஞ்சையில் இருந்து ஏவிவிடப்பட்ட அனைத்துத் தீய சக்திகளும் என் மந்திரங்களுக்குக் கட்டுப் பட்டு இந்த யாகசாலை நெருப்பில் விழுந்து அழிந்துவிட்டன. இனி அவை தங்களது வீரர்களின் கால் நகத்திற்குக்கூடத் தீங்கு விளைவிக்க முடியாது.''

இதனைக் கேட்டதும் மதுரைப் படைகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன. பக்தப் பிரியா ஸ்வாமிகள் தொடர்ந்து பேசினார்.

*''எனது சக்திக்குக் கட்டுப்பட்ட மாயசக்திகளை இதோ இங்கு குவித்து வைக்கப்பட்டிருக்கும் லட்சக்கணக்கான பூசணிக்காய்களுக்குள் ஏற்றி இருக்கிறேன். இவை அனைத்தையும் இன்று இரவோடு இரவாக உடைத்து காவிரி நதியில் வீசி எறியுங்கள். பூசணிக் காய்களுக்குள் புகுந்திருக்கும் மாயச் சக்திகள் காவிரி நதிநீரில் கலந்து விடும். இந்த நதிநீரை நாளைக் காலையில் தஞ்சைப் படைகள் குடிக்கும். அதன்பிறகு எனது மாயச் சக்திகள் அவர்களை அடியோடு வலுவிழக்கச் செய்துவிடும். அது மட்டுமல்ல தஞ்சை வீரர்களில் பலர் உங்களை எதிர்த்துப் போரிட மனமின்றி, உங்கள் பக்கமே சேர்ந்து கொள்ளுவர்.''

இதைக் கேட்டவுடன் வீரர்கள் இன்னும் அதிக மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர்.

அதன்பின்னர் பக்தப் பிரியா ஸ்வாமிகள் கட்டளை யிட அத்தனை பூசணிக்காய்களையும் ஆர்வமுடன் எடுத்து வந்து காவிரி நதியில் உடைத்து எறிய ஆரம்பித்தனர்.

கண்ணுக்குத் தெரியாத சக்திகளின் மீது மக்கள் கொண்ட கண்மூடித்தனமான நம்பிக்கையைப் பார்த்துச் சொக்கநாதன் வியப்படைந்தான்.

இரவோடு இரவாக லட்சக்கணக்கான பூசணிக் காய்க ளையும் உடைத்துத் தூள் தூளாக்கிக் காவிரித் தண்ணீரில் எறிந்து முடித்தனர் மதுரைப் படை வீரர்கள் ஒவ்வொருவ ரும்.

இந்தத் தண்ணீரைத்தான் நாளைத் தஞ்சைப் படைவீரர் கள் குடிப்பார்கள் என்று நிச்சயமாகத் தெரிந்ததால், இனி அவர்களை வெற்றிக் கொள்வது உறுதி என்று ஒவ்வொரு போர் வீரனுக்கும் புத்துணர்ச்சிப் பிறக்கத் தொடங்கியது.

இதற்கு அடுத்த நாள் காலை புலர ஆரம்பித்ததுமே மதுரைப் படைகள் ஆக்ரோஷத்தோடு தஞ்சையை நோக் கிப் புறப்பட்டன.

சரியாக அதே சமயத்தில்தான் தஞ்சைப் படைகளும் வல்லத்தை நோக்கி ஆவேசமான போர்க்குரல் எழுப்பிய வாறு ஓடிவந்து கொண்டிருந்தன.

இரண்டு படைகளும் தஞ்சாவூரில் இருந்து சில கற்கள் தொலைவில் வந்து மோத ஆரம்பித்தன. காண்பவர் நெஞ் சம் கலங்கும்படியாகப் போர் மூண்டது!

மதுரை மன்னன் சொக்கநாதனும், அவனது படைத் தளபதி வெங்கடகிருஷ்ணனும் புயலைப்போலத் தஞ்சைப் படைகளுக்குள் புகுந்து தாக்கத் தொடங்கினர். போரின்

கூக்குரலும், வெட்டுப்பட்டு விழுந்தவர்களின் மரண ஓலமும், விடாமல் ஒலித்துக் கொண்டிருந்த போர் முரசுகளின் முழக்கமும் சேர்ந்து வானமே இடிந்து விழுந்து கொண்டிருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது.

முடிவில் தஞ்சைப் படைகள் தோற்றுப் பின் வாங்கத் தொடங்கின. மதுரைப் படைகள் அத்துடன் வாளா இருக்கவில்லை. வாளைச் சுழற்றிக் கொண்டு அவர்களை விரட்டத் தொடங்கின. தஞ்சைப் படைகள் வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடிக் கொண்டு இருந்தன.

கடைசியில் அவர்கள் தஞ்சைக் கோட்டைக்குள் சென்று புகுந்துகொள்ள கோட்டையின் பிரமாண்டமான கதவுகள் இழுத்துப் பூட்டப்பட்டன.

கோட்டையைச் சுற்றி இருந்த அகழியின் மீது அமைக்கப்பட்ட தொங்குபாலம் இழுத்துக் கட்டப்பட்டது. கோட்டைக்கு வெளியே தஞ்சை வீரர்கள் ஒருவர்கூட இல்லாது சகலரும் கோட்டைக்குள் சென்று ஒளிந்து கொண்டனர்.

மதுரைப் படைகள் கோட்டைக்கு எதிரில் முகாம் அமைத்தது.

வெங்கடகிருஷ்ணன் உள்ளிட்ட ஆலோசனைக் குழு மறுபடியும் மன்னன் சொக்கநாதனைச் சந்தித்தது.

''நேரம் இருட்ட ஆரம்பித்துவிட்டது சொக்கநாதா! நமது படைகள் ஓய்வு எடுக்கட்டும். நாளைக் காலையில் கோட்டையைத் தகர்க்கும் முயற்சியில் ஈடுபடுவோம்'' என்றான் கிருஷ்ணன்.

''நம்மிடம் தோற்றோடிய தஞ்சைப் படைகள் கோட்டைக்குள் ஒளிந்து தொடை நடுங்கிக் கொண்டு இருக்கும்.

அவர்களை வெல்வது எளிது என்று இந்நேரம் விஜயராகவ நாயக்கனுக்குப் புரிந்திருக்கும். அதனால் நாளைக் காலையில் நாம் கோட்டையைத் தாக்கவேண்டாம். தஞ்சை மன்னனுக்கு ஒரு வாய்ப்புக் கொடுப்போம்.''

''எப்படி?''

''மறுபடியும் தூது அனுப்புவோம். மகளைத் திருமணம் செய்ய சம்மதித்தால் போரை நிறுத்தி விடுகிறோம் என்று அவனுக்குத் தகுந்த ஆட்கள் மூலம் நாளைக் காலையில் தூது செல்ல ஏற்பாடு செய் கிருஷ்ணா!'' என்று அமைதியாகச் சொன்னான் சொக்கநாதன்.

---

*★ மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன் பக்தப் பிரியா ஸ்வாமிகளை வைத்து நடத்திய இந்த விநோதமான யக்ஞம் பற்றி ஆதாரம் - Oriental Historical Manuscripts - Volume II - William Taylor - Page No. 192.*



# 60

தஞ்சை அரண்மனை வளாகத்தினுள் மிகக் கடைசியாக அமைக்கப்பட்டிருந்த சிறைச்சாலை முழுவதும் இருள் சூழ்ந்து கிடந்தது.

பூமாதேவி இருள் என்னும் கரிய ஆடையினை எடுத்துக் கட்டிக் கால் யாமமே ஆயிருந்த போதிலும், அரண்மனையின் மற்றைய பகுதிகளில் ஆங்காங்கு ஏற்றி வைக்கப்பட்டிருந்த தீவட்டிகளின் வெளிச்சம் அவற்றை ஊடுருவி இருந்தும்கூட, சிறைச்சாலைக் கட்டிடம் மட்டும் முக்கால்வாசி இருட்டில் மூழ்கிக் கிடந்தது.

சிறைச்சாலைக்குள் இருந்த சிறு அறைகள் பலவற்றில் சிறு வெளிச்சம் கூட இல்லாமல் கண்ணை மூடிக் கொண்டிருந்தன. வௌவால், பெருச்சாளி, போன்ற பிராணிகள் எச்சம் மட்டுமின்றி, சிறையில் அடைக்கப்பட்டிருந்த மனிதப் பிராணிகளின் சிறுநீர் நாற்றமும் சேர்ந்து, ஒருவிதமான குமட்டல் ஏற்படுத்தும் நாற்றம் எங்கும் வியாபித்துக் கொண்டு இருந்தது.

இளவரசன் மன்னார்தாசன் அடைக்கப்பட்டிருந்த சிறைக்குள் மட்டும் சிறிய கைவிளக்கு ஒன்று முணுக் முணுக் என்று எரிந்து கொண்டிருந்தது.

அறையின் மூலையில் அமைக்கப்பட்டிருந்த சிறிய கல்மேடையின் மீது அந்தக் கைவிளக்கை எடுத்து வைத்து அதனருகே ஓலைச் சுவடி ஒன்றை எடுத்துப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் மன்னார்தாசன்.

பலநாட்கள் சிறைவாசம் அவன் மேனியில் நிறைய மாறுதல்களை ஏற்படுத்தி இருந்தது. இளவரசன் என்பதற்காக விசேஷமான முறையில் எந்த வசதிகளும் செய்து தராமல், சிறையில் உள்ள மற்றவர்களுக்கு அளிக்கப்படும் அதேவிதமான உணவே மன்னார்தாசனுக்கும் கொடுக்கப்பட்டு வந்ததால், அவன் தேகம் மெலிந்து காணப்பட்டது.

வெளிச்சம் காணாத மேனி வெளுத்துப் போய் இருந்தது. கன்னங்களில் குறுந்தாடி பயிராகிக் கிடந்தது. இருப்பினும் அவன் கண்களில் எப்பொழுதும் காணப்படும் கூர்மையில் மட்டும் எந்தவிதக் குறைபாடும் ஏற்படவில்லை.

கையில் இருந்த ஓலைச்சுவடியைப் பிரித்து ஏடு ஒன்றை எடுத்து விளக்கினருகில் நெருக்கி வைத்து, வாய் விட்டுப் படிக்க ஆரம்பித்தான்.

''ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை
நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்
வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே!''

ஆஹா! என்ன அற்புதமாக சித்தர் பாடி வைத்து இருக்கிறார்! இதே மாதிரித்தானே தெலுங்கில் வேமனா சொல்லி இருக்கிறார்.

மன்னார்தாசன் அறையின் மற்றொரு மூலையில் வைத்திருந்த இடத்திற்கு எழுந்து சென்று, அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஓலைச் சுவடிகளைப் புரட்டினான்.

வேமனாவின் கவிதைகள் அடங்கிய ஓலைச் சுவடியினைத் தேடி எடுத்துக் கொண்டு மறுபடியும் விளக்கின் அருகில் உட்கார்ந்தான்.

சுவடியைப் பிரித்துப் அந்தக் கவிதையினை வாய்விட்டுப் படிக்க ஆரம்பித்தான்.

*''இறைவன் இப்பூமிக்கு வெளியே ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறான் என்ற அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்றார்களே! இறைவன் எங்கோ இருப்பதாகக் கற்பனை செய்து ஏன் தேடிக் கொண்டே இருக்கிறீர்கள்? இறைவன் உங்களுக்குள்ளே இருக்கிறான் என்பதுவே உண்மை.''

இரண்டு சிந்தனையாளர்களின் கருத்தும் அப்படியே ஒன்றுபோல் இருக்கிறதே! மொழியும், காலமும், இடமும் வேறுபட்டால்கூட மனிதரது சிந்தனையில் ஒற்றுமை இருக்கத்தானே செய்கிறது.

மன்னார்தாசன் தன்னை மறந்து இந்தச் சிந்தனையில் லயித்து இருந்தபொழுது, சிறையின் வாசலில் தனது நண்பன் அக்கிராஜு வந்து நிற்பதை அவன் கவனிக்கவில்லை.

அறையில் இருந்த சிறிய வெளிச்சத்தில் இளவரசன் உருவத்தினை உற்றுப் பார்த்த அக்கிராஜுவுக்கு கண்கள் கலங்கியது.

எப்படி இருந்தவன், எப்படி எல்லாமோ இருக்க வேண்டியவன் இப்படி இருக்கிறானே என்று அவன் இதயம் புலம்பியது. இவ்வளவுக்கும் காரணமான மதுர வாணி மீது அவனுக்குள் ஆத்திரம் கிளம்பியது.

''மன்னார்தாசா! மன்னார்தாசா!'' என்று உரத்த குரலில் அவனை அழைத்தான்.

இதனைக் கேட்டதும் ஏறிட்டுப் பார்த்த இளவரசன், தன் நண்பன் அக்கிராஜுவைப் பார்த்ததும், மகிழ்ச்சியுற்று, ஓலைச் சுவடியைப் பத்திரமாக எடுத்து வைத்துவிட்டு, அவனருகே வந்தான்.

சிறைக் கம்பிகளின் வழியாகத் தனது நண்பனின் கைகளை ஆர்வமுடன் பற்றிக் கொண்டான்.

''எப்படி இருக்கிறாய் ராஜு? உன் வீட்டில் அனைவரும் நலமா?'' அன்புப் பெருக்குடன் கேட்டான் மன்னார் தாசன்.

''நான் எப்படி இருந்தால் என்ன மன்னாரு? நீ எப்படி இருக்கிறாய்? அதைச் சொல்லு!'' என்று கலங்கிய குரலில் கேட்டான் அக்கிராஜு.

''எனக்கென்ன ரொம்ப மகிழ்ச்சியாகக் காலத்தை கழிக்கிறேன். மாளிகை வாசத்தைவிட, இந்த இடம்தான் எனக்குத் திருப்தியைத் தருகிறது. எத்தனை புதிய விஷயங்களை இங்கு வந்தபிறகுதான் தெரிந்து கொண்டேன் தெரியுமா?''

இந்த நாட்டில் நடந்த விஷயங்களை சிறைச்சாலையினுள் இருக்கும் இவன் எப்படி தெரிந்து கொண்டான் என்று அக்கிராஜு வியப்பாக இருந்தது.

''அப்படி என்ன தெரிந்து கொண்டாய்?''

''தமிழ் இலக்கியத்தில் சித்தர் பாடல்கள் என்று ஒரு தொகுப்பு எனக்குக் கிடைத்தது. என்ன அற்புதமான பாடல்கள் தெரியுமா ராஜு?''

ஹூம்! இவனுக்கு வெளியுலகமே தெரியாமல் அல்லவா இருக்கிறான் என்று ராஜு மனதிற்குள் வருந்தினான். இளவரசனோ தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான்.

''அதில் சிவவாக்கியர் என்று ஒரு சித்தர் இருக்கிறார். அவர் எவ்வளவு புதுமையான கருத்துகளைச் சொல்லி இருக்கிறார் தெரியுமா?''

அக்கிராஜுவிற்கு அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. மன்னார்தாசன் அதை உணராது சொல்லியவாறே இருந்தான்.

''இதில ஒரு பெரிய அதிசயம் பாரு! தெலுங்கிலே வேமனான்னு ஒரு கவிஞரைப் பத்திச் சொல்லி இருக்கே

னில்லையா, அவரோட கருத்தும், தமிழ்ல சிவவாக்கி யர்னு இருக்கிற இந்த சித்தர் பாடலும் பல இடங்கள்ல ஒற்றுமையா இருக்கு. உதாரணமா தமிழ்ல ஒரு பாட்டு! சொல்றேன் கேளு.

'நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புஷ்பம் சாத்தியே
சுற்றி வந்து முணமுண என்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள் இருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?'

இதே மாதிரி இதே கருத்தை வேமனாவும் சொல்லி இருக்கிறார். அதையும் கேளு!

★''மனிதர்கள் கற்களைச் சிவன் என்று கற்பனை செய்து அதனைச் சிறப்பித்திருக்கிறார்கள். கற்கள் கற்களே தானே தவிர சிவனில்லை. நம்முள்ளே குடிகொண்டு இருக்கும் சிவனை நம்மால் ஏன் கூர்ந்து உணர முடிய வில்லை.'

பார்த்தாயா! அப்படியே ஒற்றுமையா இல்லை! இதே போன்று இவ்வுலகில் எத்தனை மொழிகளில் இத்தகைய சிந்தனையாளர் தோன்றி உள்ளனர் என்று அறிய வேண்டும் போல் இருக்கிறது!''

''மன்னாரு, உலகம் முழுவதையும் ஆராய நினைக் கும் நீ இங்கு, இந்த நாட்டில் இந்தச் சிறைக்கூடத்திற்கு வெளியே இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று உனக்குத் தெரியுமா?''

''அப்படி என்ன அதிசயம் நடந்து கொண்டிருக்கிறது? என் தந்தை வேறு ஏதாவது தானம் என்ற பெயரில் கிறுக்குத்தனமாக ஏதாவது செய்து கொண்டு இருக் கிறாரா?''

''இந்த நாடே இப்பொழுது பெருத்த அபாயத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறது. மதுரையில் இருந்து சொக்க

நாதன் பெரும்படையுடன் வந்து நமது வல்லம் கோட்டையைக் கைப்பற்றியதோடு மட்டுமல்லாமல், தளவாய் மகன் அச்சுதப்பனைக் கொன்று நம் கோட்டை வாசல் வரை வந்துவிட்டான்.''

''என்ன சொல்கிறாய் ராஜு?'' பதட்டத்துடன் கேட்டான் மன்னார்தாசன்.

அக்கிராஜு நடந்தது முழுவதையும் விரிவாக அவனிடம் சொல்லி முடித்தான். கேட்டு முடித்த இளவரசன் முகத்தில் எல்லையற்ற சோகமும் வருத்தமும் காணப்பட்டது.

''இவை அனைத்திற்குமே மூலகாரணம் எனது தந்தைதான். மகளின் வாழ்க்கையை அந்தஸ்து என்று வறட்டுக் கௌரவத்திற்காக அழித்துக் கொண்டிருக்கிறார். மண முடித்துக் கொடுக்க மனம் இல்லாவிட்டாலும், நாசூக்காக இதனைத் தவிர்ப்பதை விடுத்து, ஆபத்தை அவரே வலியப் போய் அழைத்து வந்திருக்கிறார். சொக்கநாதனின் பரம்பரையை இழிவுபடுத்தியது போதாது என்று அவனைப் பெற்ற தாயையே தரக்குறைவாகப் பேசினால் அவனுக்கு ஆத்திரம் வராமல் என்ன செய்யும்? தாரத்தை விற்றுவிட்டுத் தாசியை விலைக்கு வாங்கியது போன்ற கதை! பலனை அனுபவிக்கிறார்!''

''இருந்தாலும் இப்படி நாம் தோல்வி அடைவோம் என்று நான் நினைக்கவில்லை மன்னாரு! அச்சுதப்பனின் மரணம் தளவாயை அடியோடு உலுக்கிவிட்டது. ஆளே மாறிப் போய் அலைகிறார்.''

''மதுரை அரசு நம்மைவிட அளவில் பெரியது ராஜு! எழுபத்திரண்டு பாளையங்களும் சேர்ந்து வந்தால் நம்மால் எப்பாடு பட்டும் எதிர்கொள்ள முடியாது! அதனை என் தந்தை உணராதது தவறு! அப்படியே வந்தாலும் அதற்கான வலுவினை நம் பக்கம் ஏற்படுத்திக் கொள்ளாது ஆண்டவன் மீது பாரத்தை போட்டு ஆச்சார்யார்களின் மூட வழியைக் கடைப்பிடித்தது அடுத்த தவறு! இக்கட்டான

சூழ்நிலையில் அனுபவமற்ற அறிவே இல்லாத அச்சுதப்ப னைத் தலைமை தாங்கச் சொன்னது அதைவிடத் தவறு! இத்தனை தவறுகளையும் செய்த பிறகும் நாம் ஜெயிப் போம் என்று எப்படி நினைக்கிறாய்?''

''சரி நடந்தது நடந்துவிட்டது. இனி என்ன வழி?''

''இதற்கு ஒரே ஒரு வழி சொக்கநாதனுடன் சமாதான மாகப் போவது ஒன்று! நம்மைக் காட்டிலும் எல்லாவிதத்தி லுமே மேலானவன் என்று அவன் நிரூபித்துவிட்டபிறகு, அவனுக்கு நம் பெண்ணைக் கொடுப்பது ஒன்றும் இழிந்த செயல் இல்லை என்று என் தந்தை உணரவேண்டும். இதனால் இரு நாடுகளுக்கும் நல்லது.''

''இதனை யார் சொன்னாலும் மன்னர் ஏற்றுக் கொள்ள மாட்டார். உன்னை இந்த இடத்தில் இருந்து எப்படியாவது விடுதலை செய்து கூட்டிச் செல்கிறேன். நீயாவது மன்னரி டம் சொல்லி போர் நடக்கவிடாமல் செய் மன்னாரு.''

''என்னால் முடியாது ராஜு! முதலில் உன்னுடன் வருவதற்கு நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். சிறையில் என்னை அடைத்த என் தந்தையின் உத்தரவின்றி இந்த இடத்தில் இருந்து வெளியேற நான் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டேன்.''

''அப்படியானால் இந்த நாடு?''

''என் தந்தையின் அறிவு எந்தப் பாதையில் செல்கி றதோ, அந்தப் பாதையில்தான் நாட்டின் எதிர்காலமும் இருக்கும்.''

நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்ட அக்கிராஜு பின்னர் மன்னார்தாசனைப் பார்த்து ''மதுரவாணியைப் பற்றிய செய்தி ஒன்று உனக்குத் தெரியுமா?'' என்றான்.

''மதுரவாணியா? யார் அவள்?'' என்றான் மன்னார் தாசன்.

''என்ன அப்படிக் கேட்கிறாய் மன்னாரு?''

''நான் அவளை மறந்து பலகாலம் ஆகிவிட்டது. அவள் பெயரையே என் இதயத்தில் இருந்து துடைத்து எறிந்துவிட்டேன்.''

''இருந்தாலும் தெரிந்துகொள். மதுரவாணிக்குத் திருமணம் நிச்சயமாகிவிட்டதாம். மாப்பிள்ளை தூரத்துச் சொந்தமாம். கூடிய விரைவில் திருமணம் நடக்கப் போகிறது என்று கேள்விப்பட்டேன்.''

''நல்லபடியாக நடக்கட்டும். இனி அவளைப் பற்றி என்னிடம் பேசாதே ராஜு! மறந்தவை மறந்தவையாக இருக்கட்டும்.''

''உன் தந்தையிடம் ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?''

''அவர் என்னை மறந்துவிட்ட பிறகு, அவருக்கு நினைவூட்ட நான் விரும்பவில்லை. உன் நட்பு மாறாமல் இருக்கிறதே, அது ஒன்றுதான் எனக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம். நீ போய்வா ராஜு!''

அக்கிராஜு கண்களில் வழிந்த நீரைத் துடைக்கக்கூட மனமின்றி, உயிரற்ற பிணம்போல் வெளியேறினான்.

மறுநாள் காலையில் சொக்கநாதனின் தூதன் ஒருவன் விஜயராகவ நாயக்கனைப் பார்த்து பேசுவதற்கான ஏற்பாடுகள் நடக்கத் தொடங்கின.

---

** Ignorant that the deity shines abroad in the earth, why should ye search imagining him elsewhere? That the deity exists whithin thee is truth Verses of Vemana C.P.Brown - Page no.191.*

** Men imagine stones to be siva, and maginity them, stones are stones and not siva, why is it that we cannot discern siva who dwells within us? - Verses of Vemana C.P.Brown - page no.218.*

# 61



ஈடுகட்ட முடியாத பெரும் இழப்பு தன்னுடைய வறட்டுப் பிடிவாதத்தினால் இந்த நாட்டிற்கே ஏற்பட்டுள்ளது என்பதை இந்தச் சமயத்தில் கூட உணர்ந்து கொள்ளாத தஞ்சை வேந்தன் விஜயராகவ நாயக்கன் நாளின் பெரும்பகுதியை அரண்மனையில் உள்ள தனது பூஜை அறைக்குள்ளேயே கழித்துக் கொண்டிருந்தான்.

எல்லாம் வல்ல இறைவன் தன்னை எந்த நேரத்திலும் காப்பாற்றுவான் என்ற எண்ணத்தில் இப்பொழுது நேர்ந்துள்ள இக்கட்டினைக் களைந்து தன்னை காப்பாற்றும்படி தனது குலதெய்வமான இராசகோபால ஸ்வாமியைத் தியானித்த வண்ணம் இருந்தான்.

விஞ்சையர் கோன் ஏற்றும் தஞ்சை என்று சிறப்பிக்கப் பெற்ற தஞ்சை மாநகரமோ, பீலிகள் பிடுங்கி எறியப்பட்ட மஞ்சைபோல அகோரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது.

நகரத்தைச் சுற்றிலும் நான்கு புறங்களிலும் எழுப்பப்பட்டிருந்த பிரமாண்டமான அரணின் நான்கு வாயில்களும் பலமான கதவுகளால் இறுக அடைக்கப்பட்டிருந்தன.

மதிற்சுவரின் மேலே ஆயிரக்கணக்கான வீரர்கள் ஆயுதங்களைக் கையில் ஏந்தியவாறு, எந்த நேரமும் ஆபத்தினை எதிர்கொள்ளத் தயாரான நிலையில் காவல் புரிந்து கொண்டு இருந்தனர்.

எண்ணெய்க் கொப்பரைகளும், கல்வீசும் எந்திரங்களும் விற்பொறிகளும் மதிலின் மீது மறைவான நிலையில் ஏற்றி வைக்கப்பட்டு இருந்தன. ஒருசில பீரங்கிகளும் அவற்றின் இடையே தெரிந்தன.

மதிலை ஒட்டி நூறு அடி அகலமுள்ள பெரும் அகழி நாலாபுறமும் சூழ்ந்து இருந்தன. மதி வஞ்சித்திடும் அந்த ஆழம் அறியா முடியா அகழியின் நீர் மதுரைப் படையின் ஆற்றலை எண்ணியோ என்னவோ அடிக்கடி சின்னஞ்சிறு அலைவீசி, நடுங்கி, அரற்றிக் கொண்டிருந்தது.

அகழி நீரில் ஆங்காங்கே முதலைகளும், நீர்ப்பாம்புகளும் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. அதனைக் கடப்பதற்கு என்று அமைக்கப்பட்டிருந்த தொங்கு பாலங்கள் ஏற்றப்பட்டுப் பாதுகாப்பாகச் சங்கிலிகளால் பிணைக்கப் பட்டு இருந்தன.

இந்த மாபெரும் கோட்டையின் நான்கு புறங்களிலும் மதுரைப் படைகள் சூழ்ந்து பலமாக முற்றுகையிட்டுக் கொண்டிருந்தன. தங்கள் மன்னனிடம் இருந்து ஆணை வந்தால் மறுநிமிடமே அந்தக் கோட்டையை நோக்கிப் பாய்ந்து செல்வதற்காக ஒவ்வொரு வீரர்களும் துடித்துக் கொண்டு இருந்தனர்.

கோட்டைக்கு வெளியே இருந்த குடியிருப்புகள் அனைத்தும் மதுரைப் படைகள் நெருங்கி வருவதைப் பார்த்ததுமே, அவசர அவசரமாகத் தங்கள் குடும்பத்துடன் ஓடி மறைந்துவிட்டதால், சுற்றுப்புறம் முழுவதும் வெறிச் சோடிப் போய்க் காணப்பட்டது.

கோட்டைக்கு உள்ளே இருக்கும் தஞ்சை நகரத்து மக்களில் பலர் பயத்துடன் தங்களது உடைமைகளைப் பற்றிக்கூட கவலைப்படாமல் ஓடி விட்டிருந்தனர்.

மீதி இருந்த குடிமக்கள் கூட எந்த நேரமும் மனதில் பயமும் பீதியும் பொங்கி எழ, நடு நடுங்கிப் போய்த் தங்கள் வீட்டை விட்டுக் கூட வெளியேறாமல் ஒடுங்கிப் போய் இருந்தனர்.

தஞ்சைக் கோட்டையின் பாதுகாப்பு முழுவதையும் தளபதி ரங்கப்ப நாயக்கன் ஏற்றுக் கொண்டு இருந்தபோதி லும் அவன் மனதில் இனந்தெரியாத சோகம் சூழ்ந்து இருந்தது.

தன் மகனை இழந்ததன் மூலம் தன்னுடைய வருங் காலமே இருண்டுவிட்டதால் அந்தக் கோபம் அனைத்தும் சொக்கநாதன் மீதே திரும்பி இருந்தது. மதுரை மன்னனைத் தன் கையால் கொல்ல வேண்டும் என்ற ஆத்திரம் மட்டுமே அவனுக்குள் கனன்று கொண்டிருந்தது.

அமைச்சர் கோவிந்த தீட்சிதரோ இந்தச் சமயத்தில் என்ன செய்வது என்ற குழப்பத்திலும், மன்னனைக் கூடச் சந்திக்க முடியாத விரக்தியிலும் தன்னுடைய வீட்டிற்குள் ளேயே முடங்கிப் போய்க்கிடந்தார்.

மன்னன் விஜயராகவ நாயக்கனோ தன்னுடைய பூஜை அறை ஒன்றே கதி என்று கிடந்தான். அந்தப்புரத்திற்குச் சென்று தனது மனைவிகளையோ, தனது ஆசை மகளான இளவரசி சந்திரவதனாவையோ பார்க்க வேண்டும், அவர் களைத் தேற்ற வேண்டும் என்ற எண்ணம் கூட அவனுக்கு உதிக்கவில்லை.

எந்த நேரமும் ஆண்டவனையே தியானித்துக் கொண்டு இருந்தான். ஆண்டவன் ஏதாவது அதிசயம்

புரிவான். தனது எதிரிகளை மண்ணோடு மண்ணாக்குவான் என்ற நம்பிக்கை அவனுக்குள் மறையவே இல்லை.

நாலாபுறமும் எதிரிப்படைகள் சூழ்ந்துள்ளனர். ஒரு கோழையைப்போலக் கதவுகளை அடைத்துக் கொண்டு பதுங்கிக் கொண்டு இருக்கிறோம். இந்தச் சமயத்தில் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று ஆண்டவன் ஏதாவது ஓர் உபாயத்தின் மூலம் தனக்குத் தெரிய வைப் பார் என்று காத்துக் கிடந்தான்.

ஆண்டவன் நேரடியாக எப்படி என்னைப் போன்ற சாதாரண நரனிடம் பேசுவார்? அவரது அன்புக்குகந்த ஆச்சார்யார்களின் மூலமாகத்தானே பேசுவார்!

இப்படிப்பட்ட இக்கட்டான சமயத்தில் எப்படி நான் செயல்பட வேண்டும் என்று எனது குலகுருவிடம் அல் லவா கேட்க வேண்டும்? ஆம், அது ஒன்றுதான் வழி!

மன்னன் உடனே தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத் திரமான வீரர்கள் சிலரை அழைத்தான்.

''நீங்கள் மாறுவேடம் புனைந்து இன்று இரவு இரக சிய வழியில் கோட்டையில் இருந்து வெளியேறி, நம்மு டைய குலகுரு குமாரதாத்தாச்சாரியாரின் குடிலுக்குச் செல் லுங்கள். நமது குருவை எப்பாடுபட்டாவது எனது இருப்பி டத்திற்கு பாதுகாப்பாகக் கூட்டி வருவது உங்கள் பொறுப்பு!''

அந்த வீரர்கள் அன்று இரவே மன்னன் கூறியது போன்று கோட்டையைவிட்டு வெளியேறினார்கள்.

குலகுருவின் வரவை எண்ணி விஜயராகவ நாயக்க னின் இதயம் துடித்துக் கொண்டு இருந்தது.

மறுநாள் நள்ளிரவில்தான் அந்த வீரர்கள் அவனிடம் திரும்பி வந்தனர். அவர்களுடன் மன்னனின் குலகுரு குமார தாத்தாச்சாரியார் வரவில்லை!

மன்னன் குழப்பத்துடனும் கவலையுடனும் அவர்களைப் பார்த்துக் கேட்டான்.

''என்னடா நீங்கள் மட்டும் வந்திருக்கிறீர்கள்? நமது குலகுருவினைக் கூட்டி வரவில்லையா?''

''குலகுருவின் குடிலிருக்கும் இடத்திற்குச் சென்றோம் மன்னா! அங்கு யாருமே இல்லை. விசாரித்துப் பார்த்ததில் அவரும், அவரது சீடர்களும் மதுரைப் படைகள் வருவதற்கு முன்பே அந்த இடத்தைவிட்டுக் காலி செய்துவிட்டுப் போய்விட்டார்களாம். மலையாள தேசத்திற்குச் சென்றுவிட்டதாகக் கேள்வி!''

இதைக் கேட்டதும் விஜயராகவ நாயக்கனுக்குப் பெருத்த ஏமாற்றமாகப் போய்விட்டது. இப்படிப்பட்ட இக்கட்டான சமயத்தில் தனது குலகுருகூட அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாரே என்று தனது தலைவிதியை நொந்து கொண்டான்.

விரக்தியும், கவலையும், ஏமாற்றமும் நெஞ்சில் சூழ, அரண்மனையை விட்டு வெளியேறி, கோட்டையின் மதில் மீது ஏறிக் காவற்பணியைப் பார்வையிட ஆரம்பித்தான்.

கோட்டைக்கு வெளியே நாலாபுறமும் மதுரைப் படைகள் சூழ்ந்திருப்பது தெரிந்தது. கோட்டையின் உட்பகுதிகளில் தஞ்சை வீரர்கள் நடமாட்டம் மட்டும் தெரிந்ததே ஒழிய, நாட்டு மக்களில் எவரும் தட்டுப்படவில்லை.

மன்னனைப் பார்த்ததும் தளவாய் ரங்கப்ப நாயக்கன் ஓடோடி அவனருகில் வந்து பணிவுடன் வணங்கினான். பின்னர் எதிரிப்படைகளின் நிலைமையையும், கோட்டையின் பாதுகாப்பிற்காக அவன் செய்திருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை பற்றியும் விரிவாகச் சொன்னான்.

மன்னன் இதைக் கேட்ட பிறகும் எதுவுமே சொல்லவில்லை. இருவரும் மதிலின் மேலிருந்த அகன்ற பாதை வழியாக மெதுவாக நடக்க ஆரம்பித்தனர். இருவரது முகங்களிலும் பெருத்த கவலை தென்பட்டது.

ஒருவருக்கொருவர் எதுவும் பேசாமலேயே நடந்து கொண்டு இருந்தனர்.

அப்பொழுது கோட்டையின் பிரதான வாசலுக்கு எதிராக மதுரைப் படைகளின் முரசு ஒன்று பலமாக முழங்கத் தொடங்கியது. அதனருகே ஒருவன் வெள்ளைக்கொடி ஒன்றைப் பிடித்து வீசியவாறு உரக்கக் கத்திக் கொண்டிருந்தான்.

தளவாய் வேகமாக அந்த இடத்திற்கு நேர் உச்சியில் மதில் மீது நின்றவாறு உரத்த குரலில் கேட்டான்.

''என்ன வேண்டும் உனக்கு?''

''உங்களது மன்னரிடம் ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிவிக்கச் சொல்லித் தூதுவன் என்ற முறையில் என்னை மட்டும் எங்களது மன்னர் அனுப்பி வைத்திருக்கிறார்.''

''என்ன விஷயம் என்று சொல்?''

''அந்த விஷயத்தினைத் தஞ்சை மன்னரிடம் தனியாகத் தெரிவிக்க வேண்டும் என்று கட்டளை!''

தளவாய் இதைக் கேட்டுத் தன்னருகே நின்று கொண்டு இருந்த விஜயராகவ நாயக்கனை மௌனமாக ஏறிட்டுப் பார்த்தான்.

''அவனை மட்டும் வரச்சொல்'' என்றான் மன்னன் இறுகிப் போன முகத்துடன்.

தளபதி இதைக் கேட்ட பிறகு, கீழே நிற்கும் மதுரை வீரனைப் பார்த்துக் கத்திச் சொன்னான்.

''உங்கள் படைகள் அகழியில் இருந்து ஆயிரம் அடி தூரத்திலே நிற்க வேண்டும். நீ மட்டும் கோட்டைக்குள் வரவேண்டும். இதில் ஏதாவது மாற்றம் தெரிந்தால் உனது உயிர் உடனடியாகப் பறந்துவிடும்.''

மதுரை வீரன் இதற்கு உடனடியாகச் சம்மதிக்க, கோட்டை வாசலில் இருந்த தொங்கு பாலம் மெதுவாக இறக்கப்பட்டு அகழி மீது நின்றது.

மதுரைத் தூதுவன் மட்டும் தனியாக அதில் ஏறி உள்ளே வரத் தொடங்கினான்.

தர்பார் மண்டபத்தில் மன்னன் விஜயராகவ நாயக்கன் அமர்ந்திருக்க, சுற்றிலும் தளபதி, அமைச்சர் உள்ளிட்ட அரசப் பிரதானிகள் தங்களுக்குரிய ஆசனங்களில் உட்கார்ந் திருந்தனர்.

மதுரைத் தூதுவன் தஞ்சை மன்னனைப் பணிவுடன் வணங்கினான்.

''விஜயநகரப் பேரரசின் வழிவந்தவரும், சக்கர வர்த்தி ஸ்ரீகிருஷ்ண தேவராயருக்கு இணையான பெருமை பெற்றவருமான தஞ்சை மன்னருக்கு, மதுரை மன்னரின்

தூதுவனான அடியேனின் வணக்கத்தினைத் தங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.''

''உங்கள் மன்னன் என்ன சொல்லிவிட்டான்?'' ஆணவம் குறையாமல் கேட்டான் விஜயராகவ நாயக்கன்.

''மன்னா, தாங்கள் எல்லா வகையிலுமே உயர்ந்தவர். வயதும் அனுபவமும், ஆற்றலும் நிறைந்தவர். கீர்த்தியும், புகழும், கௌரவமும் நிரம்பப் பெற்ற பெருந்தகையாளர். ஆனால் விதி வசத்தினால் எங்களிடம் தோல்வி பெற்று, கோட்டைக்குள் அடைந்து கிடப்பதை நினைத்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம்.''

''உங்கள் வருத்தத்தைப் பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை. உங்கள் வேந்தன் என்ன சொல்லிவிட்டான். அதை மட்டும் சொல்.''

''இப்பொழுதுகூடத் தங்களது பெருமைக்குப் பங்கம் ஏற்படாமல் செய்யும் வழி இருக்கிறது. எங்கள் மன்னரின் வீரத்தினை இனியாவது உணர்ந்து, தங்களது இளவரசியாரை எங்கள் மன்னருக்கு மணம் முடித்து வைத்துவிட்டால் நாங்கள் போரை இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்.

''உனது மன்னனுக்கு எனது மகளை மணம் முடித்துக் கொடுக்கச் சம்மதித்தாலே எனது பெருமைக்குப் பங்கம் தான். நாங்கள் இப்பொழுது தோற்றிருக்கிறோம். இருப்பினும் இது முடிவான தோல்வி அல்ல! எந்த நிலைமையிலும் என் மகளை ஒரு வேலைக்கார நாய்க்கு முறைதவறிப் பிறந்தவனுக்குத் தருவதற்குச் சம்மதிக்க மாட்டேன் என்று போய்ச் சொல்!''

''மன்னா, நிலைமையை யோசித்துப் பாருங்கள். எங்கள் படைபலம் அதிகம்! நீங்களோ பயந்து போய்க் கதவுகளை அடைத்துக் கிடக்கிறீர்கள்!''

''இது பயம் இல்லையடா! தற்காப்பு! படைபலம் அதிகம் என்று பீற்றிக் கொள்பவர்கள் ஏன் வெளியே நின்று தயங்க வேண்டும்?''

''உங்களின் முடிவுக்காக, உங்கள் மனம் மாற ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதற்காக எங்கள் மன்னர் பொறுத்து இருக்கிறார்.''

''என் முடிவு ஒருக்காலமும் மாறப் போவதில்லை. உனது மன்னரிடம் போய்ச் சொல். முடிந்தால் சண்டையிட்டுக் கோட்டையைக் கைப்பற்றச் சொல். ஒருவேளை பயமாக இருந்தால் வந்த வழியாகத் திரும்பி ஓடச் சொல்!''

''வீண் பிடிவாதம் செய்யாதீர்கள் மன்னா! விளைவுகளை எண்ணி வருந்த வேண்டி இருக்கும்.''

''யார்? நானா இல்லை அவனா என்று போரிட்டுப் பார்க்கச் சொல்.''

மறுபடியும் இதற்கு ஏதோ பேச முயன்ற தூதுவனைப் பார்த்துக் கையுயர்த்தி, ''வீண் பேச்சு வேண்டாம். நீ போகலாம்'' என்றவன் தளவாயைப் பார்த்து ''ரங்கப்பா இந்தத் தூதனுக்கு எந்தவித இடறும் ஏற்படாமல் சீக்கிரம் கோட்டையை விட்டு வெளியேற ஆவன செய்'' என்றான்.

மதுரைத் தூதுவன் ஏமாற்றத்துடன் அங்கிருந்து வெளியேறினான்.

# 62



மதுரை அரண்மனையிலிருந்து சற்று அருகாக அமைந்திருந்த அந்தப்புரத்தினுள், ராணி வையாம்பிகா தேவியின் அறைக்குள் முத்துநகை கண்கலங்கிய முகத்துடன் தலைகுனிந்தவாறு இருக்க, அவள் முகத்தையே பரிவுடன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் மகாராணி!

சற்று நேரம் அங்கு மௌனம் கோலோச்சியதே தவிர முத்துநகை வாயில் இருந்து வார்த்தைகள் எதுவும் வரவில்லை.

வையாம்பிகாதேவி அவளருகே நெருங்கி உட்கார்ந்து அவள் தலையினைப் பாசத்துடன் தடவி விட்டவாறு, பரிவு கலந்த வார்த்தைகளைப் பேசத் தொடங்கினாள்.

''என்ன முத்துநகை என்னிடம் சொல்வதற்கு உனக்கு என்ன தயக்கம்? சொல் கண்ணே! என்ன சொல்ல வந்தாய்?''

முத்துநகைக்கு அதனைச் சொல்வதற்கான துணிச்சல் போய்விட்டது. அதைச் சொன்னால் அத்தை ஏதாவது கோபித்துக் கொள்வார்களோ என்ற பயம் ஏற்படத் தொடங்கியது.

வேண்டாம். அத்தையிடம் அதைச் சொல்லவே வேண்டாம். சொன்னாலும் அது நடக்காது. சொன்னபிறகு வசவு வாங்குவதற்குப் பதில் சொல்லாமலே இருந்துவிடலாம்.

இருந்தாலும் சொல்லிப் பார்த்தால் என்ன?

வேண்டாம், வேண்டாம். அத்தை நிச்சயம் அதற்குச் சம்மதிக்க மாட்டார். சொல்லவே வேண்டாம்.

முத்துநகை இப்படிக் குழம்பிப் போய் இருந்தாள். மகாராணி அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டு மறுபடியும் கேட்டாள்.

''என்ன முத்துநகை, இன்னும் ஏன் மௌனம்? நீ இவ்வளவு தூரம் தயங்கும் அளவுக்கு அப்படி என்ன விஷயம்? சொல்லம்மா?''

முத்துநகை அவசர, அவசரமாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''ஒன்றுமில்லை அத்தை! இன்று மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்று அத்தானுக்காகச் சிறப்பு வழிபாடும், அபிஷேக ஆராதனைகளும் செய்யலாமா என்று நினைத்தேன். அதற்காக நாம் இருவருமே கோயிலுக்குச் செல்லலாமே என்று சொல்ல நினைத்தேன். இப்படிப்பட்ட சமயத்தில் தாங்களும் என்னோடு கோயிலுக்கு வருவதற்குச் சம்மதிப்பீர்களோ என்ற பயம் ஏற்பட்டது. அதனால்தான் தயங்கினேன்'' என்றாள்.

மகாராணி வையாம்பிகாதேவி தன்னுடைய மனதிற்குள் சிரித்துக் கொண்டாள். இந்த மக்குப் பெண்ணின் வார்த்தைகளைக் கேட்டபிறகு!

வயதும், அனுபவமும் அதிகம் பெற்றவளும், இந்த நாட்டையே தனித்து நின்று பல்லாண்டுகளாகச் சிறப்புடன் நிர்வாகம் செய்து வருபவளுமான மகாராணிக்கா, இந்தப் பெண் தன்னிடம் சொல்லப் பயந்து பேச்சை மாற்றுகிறாள் என்பது புரியாது!

அதிலும் ஒரு பெண்ணின் மனம் மற்றொரு பெண்ணிற்கா தெரியாது? முத்துநகை தான் சொல்ல வந்த விஷயத்தை அப்படியே மென்று விழுங்கிவிட்டாள் என்பது நன்றாகவே அவளுக்குப் புரிந்தது.

இருந்தாலும் அதனை அறிந்து கொண்டவள் போல் காட்டிக் கொள்ளாமல், அவள் வழியிலேயே சென்று தெரிந்து கொள்ள விரும்பினாள் வையாம்பிகாதேவி!

''சாமியைக் கும்பிடுவதற்குச் சமயம் பார்ப்பார்களா? இதைச் சொல்லவா இத்தனை தயக்கம் உனக்கு? அதிலும் எனது மகனின் வெற்றிக்காக எத்தனை அபிஷேகங்கள் செய்யச் சொன்னாலும் எனக்கு அதில் விருப்பம் இல்லாமல் போகுமா? மீனாட்சி அம்மன் கோயிலுக்குத்தானே போக வேண்டும்? வா. இப்பொழுதே கிளம்பலாம்.''

ராணி வையாம்பிகாதேவி, முத்துநகையைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு அடுத்த நாழிகைப் பொழுதில் மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் செல்லத் தொடங்கினாள்.

சொக்கநாதனின் வெற்றிக்காக அம்மன் சந்நிதியில் விசேஷ அபிஷேகங்களும், ஆராதனைகளும் சிறப்பாக நடைபெற்றது. அம்மனின் அலங்காரம் மிக அற்புதமாக அமைந்திருந்தது.

தனது ஆசைக்குகந்த அத்தான் சொக்கநாதன், தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனை வெல்வதோடு மட்டுமின்றி அவன் விருப்பப்படியே இளவரசி சந்திரவதனாவைத் திருமணம் செய்வதற்கு எந்தவிதத் தடையும் ஏற்படக் கூடாது என்று மனமுருகிப் பிரார்த்தனை செய்தாள் முத்துநகை.

தன்னருகே நின்றவாறு கண்களை மூடி, இரு கரங்களையும் கூப்பியவாறு பக்தி சிரத்தையுடன் வழிபட்டுக் கொண்டிருக்கும் முத்து நகையை ஓரக்கண்ணால் பார்த்துப் பரவசம் அடைந்தாள் ராணி வையாம்பிகாதேவி!

'என் மகன் மீது இவ்வளவு ஆசையும் பாசமும் வைத்திருக்கும் இந்தப் பெண்ணுக்கு எள்ளளவும் ஏமாற்றத்தை அளித்து விடாதே அம்மா' என்று மனதிற்குள் கசிந்து, இறைஞ்சி வேண்ட ஆரம்பித்தாள் ராணி!

மீனாட்சி அம்மனையும், திரிசிரபுரம் எரித்த விரிசடைக் கடவுளான சொக்கநாதப் பெருமானையும் நீண்ட நேரம் வழிபட்டுவிட்டுப் பிராகாரங்களைச் சுற்றி வந்து பொற்றாமரைக் குளத்தின் படிக்கட்டில் சற்று நேரம் அமர்ந்திருந்தனர்.

குளத்தில் உள்ள மீன்களுக்கு அரிசிப் பொரி எடுத்துத் தூவினாள் வையாம்பிகாதேவி! அம்மனின் கண்களுக்கு உவமையாகச் சொல்லப்படும் எந்த அழகிய மீன்கள் நீந்தி வந்து, அரிசிப் பொரிகளை விழுங்கிவிட்டுச் செல்லும் மனோகரமான காட்சியை நீண்ட நேரம் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் இருவரும்!

இப்பொழுதாவது முத்துநகை தனது மனத்திலுள்ள விஷயத்தைச் சொல்லுவாள் என்று எதிர்பார்த்தாள் சொக்கநாதனின் தாய்!

முத்துநகையோ எதையுமே பேச விரும்பாதவள் போல் உட்கார்ந்திருந்தாள். அவளது கண்கள் தடாகத்து மீன்களை ரசித்துக் கொண்டிருந்ததே ஒழிய, அவள் சிந்தனை மட்டும் வெகுதூரத்தில் சென்றிருக்கிறது என்பது வையாம்பிகாதேவிக்கு நன்றாகவே தெரிந்தது.

பிறகு இருவரும் அரண்மனைக்குக் கிளம்பி வந்தனர். அந்தப்புரத்தினுள் நுழைந்ததும் முத்துநகை தனது அத்தையைப் பார்த்து ''நான் என்னுடைய அறைக்குச் செல்ல உத்தரவு கொடுங்கள்'' என்றாள்.

''அங்கே போய் என்ன செய்யப் போகிறாய்? வா, சற்று நேரம் மலர் வனத்திற்குள் சென்று உலவி விட்டு வருவோம்'' என்றாள் அவளது கையைப் பற்றியவாறு.

முத்துநகை இதற்கு மறுப்பேதும் சொல்லவில்லை.

அந்தப்புரத்தினை ஒட்டி அழகுற அமைந்திருந்த பூங் காவிற்குள் இருவரும் புகுந்தனர்.

காலைப் பொழுது கடந்து கதிரவன் உச்சிப்பொழுதை நெருங்க ஆரம்பித்திருந்ததால், தனது வெப்பக் கதிர்களைச் சற்று உக்கிரமாகவே வீசிக் கொண்டிருந்தான்.

இருப்பினும் சூரியனின் கோப ஜுவாலையை உய் யான வனத்திற்குள் உயர்ந்து வளர்ந்திருந்த பல்வேறு விதமான மரங்களும், நறுமணம் வீசும் மலர்ச்செடிகளும் வெகுவாகத் தணித்துக் கொண்டிருந்தன.

வையாம்பிகாதேவியும், முத்துநகையும் மெதுவாக நடந்து வந்து, குளிர் தரு ஒன்றின் நிழல் படிந்த ஒரு கல் மேடையின் மீது உட்கார்ந்தார்கள்.

அப்பொழுது மான் ஒன்று முத்துநகையின் அருகில் வந்து, அவள் மடிமீது தன் தலையை வைத்து அவளையே பார்த்தது, முத்துநகை வாஞ்சையுடன் அதன் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

''என்ன முத்துநகை, இந்த மான் உன்னைத் தேடி வந்து உன்னிடம் இழைகிறதே! இது உன் செல்லப் பிராணியா?'' என்று வியந்தவாறு கேட்டாள் ராணி.

''ஆம் அத்தை, இங்கு வந்தது முதல் இதுவும் நானும் ரொம்பவும் நட்பாகப் பழகி வருகிறோம். என்னை எங்கே பார்த்தாலும், ஆசையுடன் என்னருகே ஓடி வந்து இப்படித் தான் இழையும்!''

''உன்னிடம் இந்த மான் மட்டுமா? என் மகனும் சேர்ந்துதானே மயங்கிப் போய் இருக்கிறான்!''

''போங்கள் அத்தை!'' என்று உடனே வெட்கப்பட் டாள் முத்துநகை.

''இது ஆண் மானா இல்லை பெண் மானா?''

''பெண் மான்தான்! இதற்கு மங்கா என்று நான் பெயர் சூட்டி இருக்கிறேன்.''

''மங்கா என்பது உனது பிறந்த வீட்டுப் பெயர் அல்லவா? அதனையே உன் செல்ல மானுக்கும் சூட்டி இருக்கிறாயாக்கும்! சரி, இதற்கு ஜோடி இருக்கிறதா?''

வையாம்பிகா கேட்ட மறுவிநாடியே அந்த இடத்தருகே ஆண் மான் வந்துவிட, முத்துநகையின் மடியில் இருந்த பெண் மான் அதனைப் பார்த்துவிட்டு அவளிடமிருந்து திமிறி அதனருகே ஓடியது. இரண்டு மான்களும் இணை சேர்ந்து அங்கிருந்து மின்னலாகப் பாய்ந்து மறைந்து விட்டன.

''நீங்கள் கேட்டீர்களே அத்தை, அதன் ஜோடிதான் அந்த ஆண் மான்! சரியான முரடு! என்னிடம் ஒட்டவே ஒட்டாது!''

''அப்படியா! அதற்கு என்ன பெயர் வைத்திருக்கிறாய்? சொக்கநாதன் என்றா?''

முத்துநகை இதற்குப் பதில் கூறாமல் நாணித் தலை குனிந்தாள்! அவள் கன்னங்கள் இரண்டும் சிவந்தன!

இதனைப் பார்த்த ராணி வையாம்பிகாதேவி பூரித்துப் போய் முத்துநகையின் நாடியைப் பிடித்து நிமிர்த்தினாள்.

''முத்துநகை, உன்னிடம் ஒன்று கேட்க நினைக்கிறேன். மறைக்காமல் உண்மையைச் சொல்வாயா?'' என்றாள்.

''என்ன அத்தை?'' என்றாள் புரியாமல்.

''என்னிடம் எதையோ சொல்ல வந்தாயே? அது என்ன?''

''அதுதான் கோயிலுக்கு...''

''இல்லை. நீ சொல்ல வந்த விஷயம் அதுவல்ல! பேச்சை மாற்றியது எனக்குப் புரியாமல் இல்லை. உண்மையைச் சொல், என்ன சொல்ல வந்தாய்?''

முத்துநகை தயங்கினாள். உள்ளுக்குள் மறுபடியும் பயம் எழுந்தது அவளுக்கு.

''என்னிடம் சொல்வதற்கு உனக்கு என்ன தயக்கம்? இல்லை பயமா? இவ்வளவுதானா என்னை நீ புரிந்து கொண்டது? நீ என்ன சொன்னாலும் நான் உன்னைக் கோபித்துக் கொள்ள மாட்டேன். பயப்படாமல் சொல்.''

''இல்லை... வந்து.... அத்தை... நான்...'' பேச வார்த்தைகள் வராது தயங்கினாள்.

''பயப்படாதே கண்ணே! தைரியமாக உள் மனதில் உள்ளதைச் சொல்.''

''இப்பொழுது நடக்கும் சண்டையில் வெற்றி யார் பக்கம் என்பதை உறுதியாகச் சொல்ல முடியவில்லை. இவ்வளவு தூரம் சென்றிருக்கும் நமது படைகள் களைத்துப் போய்விட்டாலோ, இல்லை வேறு ஏதாவது இடைஞ்சல் ஏற்பட்டதாலோ தோற்றுவிடும்படியான சூழ்நிலை ஏற்பட்டால் அதன் விளைவுகளை நினைத்துப் பார்ப்பதற்கே எனக்குப் பயமாக இருக்கிறது.''

''அப்படி ஒன்றும் நடக்கும் என்று கனவிலும் எதிர் பார்க்காதே! என் மகனின் வீரத்தைப் பற்றி இந்த நாடே அறியும்! நாடே என்ன, இந்த உலகமே அறியும்! அவன் வெற்றிமாலை சூடி வரத்தான் போகிறான். கவலையேப் படாதே!''

''நாம் நினைப்பது மாதிரி அத்தான் தஞ்சை மன்னரைத் தோல்வியுறச் செய்துவிட்டால், அதன் பிறகு ஏற்படப் போகும் நிகழ்ச்சிகளை நினைத்தும் என் மனம் பேதலிக்கிறது.''

''அதன்பிறகு என்ன நடக்கும்? என் மகன் சந்திரவதனாவை மணம் முடித்து வருவான்! அதற்காக நீ ஏன் பேதலிக்கிறாய்? அதன்பிறகு அவன் உன்னையும் தான் மணக்கப் போகிறான்! மறுத்துவிடுவான் என்று பயப்படுகிறாயா?''

''அதைப்பற்றி நான் பயப்படவில்லை அத்தை! அத்தான் என்னை ஒருபோதும் கைவிட மாட்டார்.''

''பின்னர் எதைப் பற்றிப் பயப்படுகிறாய்?''

''போரின் முடிவில் ஒருவேளை தஞ்சை மன்னன் இறந்துவிட்டால், அதன்பிறகும் சந்திரவதனா அத்தானை மணந்து கொள்ளச் சம்மதிப்பாளா? தன் தந்தையின் சாவுக்கும், இந்த நாட்டின் அழிவுக்கும் நான்தானே காரணம் என்று அவள் வேறு ஏதாவது ஒரு முடிவுக்குச் சென்றுவிட்டால்?''

ராணி இதைக்கேட்டு யோசிக்க ஆரம்பித்தாள். முத்து நகை தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தாள்.

''ஒருவேளை விஜயராகவ நாயக்கனை நமது படைகள் உயிரோடு பிடித்துவிட்டால் கூட, தஞ்சை மன்னன் தன் உயிர் உள்ளவரை இந்தத் திருமணத்திற்குச் சம்மதிக்க மாட்டேன் என்று மறுத்தால்? இதனைப் பார்த்துச் சந்திரவதனாவும் தந்தையின் சம்மதமின்றி மணமேடை ஏறமாட்டேன் என்று பிடிவாதம் செய்தால்?''

ராணி பதில் ஏதும் சொல்லவில்லை.

''அத்தான் தஞ்சையை வெற்றி பெற்றாலும் அவருக்கு ஏமாற்றம் வந்துவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது அத்தை!''

''நீ சொல்வதும் சரிதான். அதற்கு என்ன செய்யலாம் என்கிறாய்?''

''அதற்காகத்தான்... நான்... வந்து...''

''தயங்காமல் சொல்.''

அடுத்து முத்துநகை சொன்ன வார்த்தைகளை கேட்டதும் ராணி வையாம்பிகாதேவியின் முகம் மாறியது.

''என்ன வார்த்தைகள் சொல்லிவிட்டாய்'' என்று முத்துநகையைப் பார்த்துச் சினம் பொங்க, கண்கள் சிவக்கக் கடுமையாகக் கேட்டாள் ராணி.

# 63



உளடையம் என்றும் நீர் அரண் என்றும் தமிழ் இலக்கியங்களில் சொல்லப்படும் அகழி சூழ்ந்த பிரமாண்டமான தஞ்சைக் கோட்டையின் நான்கு புறங்களிலும் மதுரைப் படைகள் கோட்டையின் மீதுள்ள எதிரிப் படைகளின் குண்டுகள் தாக்க முடியாத தூரத்தில் முகாமிட்டு, சொக்கநாதனின் உத்தரவிற்காகக் காத்துக் கிடந்தனர்.

படைகளுக்கு நடுவே பலத்த காவலுடன் அமைக்கப் பட்டிருந்த வண்ணமிகுந்த அழகிய கூடாரத்தினுள் மன்னன் சொக்கநாதன் முன், விஜயராகவ நாயக்கனிடம் தூது சென்று திரும்பிய வீரன் பணிவுடன் நின்றவாறு நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

கேட்கக் கேட்கச் சொக்கநாதனின் முகம் கோபத்தில் சிவக்கத் தொடங்கியது.

சொக்கநாதனைச் சுற்றி அமர்ந்திருந்த வெங்கடகிருஷ்ணன், பேஷ்கார் சின்னத்தம்பி முதலியார், கன்னிவாடிப் பாளையக்காரனான சின்னக் கத்திரிநாயக்கன் ஆகியோரின் முகங்களிலும் ஆத்திரம் கனலாக எரிந்து கொண்டிருந்தது.

தூதுவனை அனுப்பிவிட்டுச் சொக்கநாதன் சற்று நேரம் சிந்தித்தவாறு இருந்தான்.

''இன்னும் ஏன் சிந்தனை சொக்கநாதா? வீண் பிடிவா தத்திற்குப் பெயர் பெற்றவன் விஜயராகவ நாயக்கன் என்பது தெரிந்ததுதானே! அடுத்து என்ன செய்யலாம் என்று சொல்'' என்றான் அவன் நண்பனும் தளவாயுமான வெங்கடகிருஷ்ணன்.

''இவ்வளவு தூரம் வந்ததற்குப் பிறகு இனி போரைத் தவிர வேறு.வழியே இல்லை'' என்றார் பேஷ்கார்.

''ஆம். விஜயராகவ நாயக்கனுக்குக் கொடுத்த இரண் டாம் வாய்ப்பினையும் தட்டித் தகர்த்து விட்டான். இதற்கு மேலும் போரிடுவதற்கு என்ன யோசனை மன்னனவா?'' என்றார் கன்னிவாடிப் பாளையக்காரர்.

''தூதுவன் வந்து சொல்லியதுமே என் நெஞ்சிற்குள் போர் முரசு ஒலிக்கத் தொடங்கி விட்டது கிருஷ்ணா! என் சிந்தனை இப்பொழுது தஞ்சைக் கோட்டையை எப்படித் தகர்ப்பது என்பதில் தான் ஆழ்ந்திருக்கிறது'' என்று ஆரம் பித்த சொக்கநாதன் மறுபடியும் சற்று நேரம் யோசித்துவிட் டுச் சொல்லத் தொடங்கினான்.

''கோட்டையின் உயரமும் சுற்றளவும் அதிகமாகத் தான் இருக்கிறது. கோட்டைக் கதவுகளும் பலமாக இருப் பது மட்டுமின்றிச் சமீபத்தில்தான் மராமத்து செய்யப் பட்டு அதன் பலத்தை மேலும் அதிகப்படுத்தி இருக் கிறார்கள். இதனை நாம் பீரங்கிகள் கொண்டு தாக்குவ தைத் தவிர வேறு வழியில்லை.

அப்படியே பீரங்கி கொண்டு கோட்டையின் ஏதாவது ஒரு பகுதியைத் தகர்த்தாலும், அந்த இடிபாடுகள் வழியாக நமது படைகள் நுழைவதற்குப் பெரும் இடைஞ்சலாக இருப்பது கோட்டையைச் சுற்றிலும் இருக்கும் ஆழமான அகழி!

அதனை நீந்திக் கடப்பது இரண்டு வகையிலும் ஆபத்து. கோட்டை மதில் மீதுள்ள எதிரிப் படைகள்

நீந்திவரும் நமது படைகள் மீது துப்பாக்கிக் குண்டுகளையும், அம்புகளையும் சரமாரியாகத் தொடுத்து ஏராளமான சேதத்தினை விளைவிக்க முடியும். இரண்டாவது ஆபத்து அகழிக்குள் இருக்கும் முதலைகள்! இவற்றை மீறி நாம் கோட்டை அருகே கூடச் செல்ல முடியாது.''

''பிறகு என்ன செய்யலாம்?'' என்றான் வெங்கட கிருஷ்ணன்.

''நீ என்னோடு வா கிருஷ்ணா. கோட்டையின் நான்கு புறமும் மீண்டும் ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு வருவோம்.''

அடுத்த சில நிமிடங்களில் சொக்கநாதனும், வெங்கட கிருஷ்ணனும் ஆளுக்கொரு குதிரையில் ஏறிக் கொண்டு தஞ்சையில் கோட்டையின் நான்கு புறங்களிலும் உன்னிப்பாகப் பார்த்தவாறு சென்றனர்.

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன தனது அந்தரங்க அறைக்குள் போர் ஆலோசனைக் குழுவினை கூட்டி இருந்தான்.

தளவாய் ரங்கப்ப நாயக்கன் முதல் தஞ்சைப் படைகளின் முக்கிய தளபதிகளும், அமைச்சர் கோவிந்த தீட்சிதரும் அங்கு அமர்ந்திருந்தனர்.

அனைவரின் முகங்களிலும் கவலை தோய்ந்திருந்தது. விஜயராகவ நாயக்கனோ எதனைப் பற்றியும் கவலைப் படாதது போல் கண்களை மூடி ஆண்டவனைத் தொழுது விட்டு, அவர்களைப் பார்த்துப் பேசத் தொடங்கினான்.

''மதுரை நாய்க்கு இருக்கும் திமிரைப் பார்த்தீர்களா? இந்த விஜயராகவ நாயக்கனை எவ்வளவு கேவலமாக எடைபோட்டு இருக்கிறான். கோட்டையைச் சுற்றி இருக்கும் அவனது படைகளைப் பார்த்துப் பயந்து போய் என்

மகளை அவனுக்குத் தாரை வார்த்துவிடுவேன் என்று எவ்வளவு இளக்காரமாக நினைத்துவிட்டான். அதனை நாம் தகர்க்க வேண்டும். ரங்கப்பா, மதுரைப் படைகளை நாம் விரட்டியே ஆகவேண்டும்.''

''இப்போதுள்ள நிலைமையில் நம்மால் கோட்டையை விட்டு வெளியேறுவது தற்கொலைக்குச் சமம். மதுரைப் படைகள் நம்மைவிட அளவில் பெரியவை. ஆனால், நமது கோட்டை மிக மிக வலிமையானது. கோட்டையைச் சுற்றியுள்ள அகழியைப் பார்த்து அஞ்சாதவர்கள் இவ்வுலகில் இல்லை. அதனால் நாம் சிறிது காலம் கோட்டைக்குள்ளேயே பாதுகாப்பாக இருப்போம். மதுரைப் படைகள் நெருங்கி வந்தால், அகழி அருகே கூட வரமுடியாதபடி நமது துப்பாக்கி வீரர்கள் பார்த்துக் கொள்வார்கள்'' என்றான் தளவாய்.

''அதுதான் சரி மன்னவா! கோட்டைக்கு வெளியே உள்ள மதுரைப் படைகள் எவ்வளவு நாட்கள்தான் முற்றுகையிட முடியும்? கையிலுள்ள உணவுப் பொருட்கள் தீர்ந்தவுடன் சலித்துப் போய் வந்த வழியே திரும்பி விடுவார்கள்'' என்றார் அமைச்சர்.

''என்ன செய்வீர்களோ தெரியாது. மதுரைப் படைகள் நம் கோட்டையின் சுவரைத் தொட்டுவிடக் கூடாது. அது உங்கள் பொறுப்பு. மற்றவற்றை மன்னார்குடி இளைவன் பார்த்துக் கொள்வான்'' என்று ஆகாயத்தைப் பார்த்துக் கும்பிட்டான் மன்னன்.

அனைத்துத் தளபதிகளுக்கும் அவர்களுக்குரிய பொறுப்புகளை ஒப்படைத்து அனுப்பினான் தளவாய். அமைச்சரும், மற்றவர்களும் அங்கிருந்து வெளியேறியவுடன் தளவாய் மட்டும் மன்னன் அருகில் வந்து பணிவுடன் பேசத் தொடங்கினான்.

''மன்னா, ஒன்று சொல்லேன். கோபித்துக் கொள்ளக் கூடாது.''

''என்ன ரங்கப்பா?''

''இப்படிப்பட்ட இக்கட்டான சமயத்தில் இளவரசன் மன்னார்தாசன் சிறையில் இருப்பது நல்லதல்ல.''

இதைக் கேட்டவுடன் மன்னனின் முகத்தில் சினம் தாண்டவமாடத் தொடங்கியது.

''எனக்கு ஒரு மகன் இருக்கிறான் என்பது மறந்து பலகாலம் ஆகிவிட்டது. அவனைப் பற்றிப் பேசாதே! எந்த இக்கட்டிலும் இருந்தும் என்னைக் காப்பாற்ற என் இறைவன் இருக்கிறான். நீ உன் வேலையை மட்டும் பார்'' என்று கோபத்துடன் சொன்னான்.

தளபதி இதைக் கேட்டுத் தலைகுனிந்தவாறு வெளியேற, விஜயராகவ நாயக்கன் வேகமாக நடந்து தன்னுடைய பூஜை அறைக்குள் சென்று வழிபடத் தொடங்கினான்.

ஆழிசூழ் உலகம் போல் அகழி சூழ் கோட்டையைச் சுற்றி வந்த சொக்கநாதனும், வெங்கட கிருஷ்ணனும் திரும்பவும் மன்னனுக்கு என்று அமைக்கப்பட்டிருந்த கூடாரத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

சொக்கநாதன் முகத்தில் இப்பொழுது ஒரு புதிய ஒளி பிறந்திருந்தது. போர் ஆலோசனைக் குழுவினை உடனடியாகக் கூட்டினான். தன்னுடைய திட்டத்தினை விளக்கத் தொடங்கினான்.

''கோட்டையின் நான்கு புறத்திலுள்ள அகழிகளில் இடது பக்கம் இருக்கும் அகழியை விட வெளிப்பக்கமுள்ள தரைப்பகுதி தாழ்வாக இருக்கிறது. அதனால் நமது

வீரர்களில் பலர் அந்தப் பகுதிக்குச் சென்று தரையில் இருந்து அகலமான பள்ளம் ஒன்றைத் தோண்டியவாறு அகழி வரை செல்லட்டும். 'அகழியை அந்த இடத்தில் வெட்டிவிட்டால், அகழி நீர் முழுவதும் அந்தப் பள்ளத்தின் வழியாகப் பாய்ந்து வெளியேறிவிடும். அந்த நீரும் நமது படைகள் இருக்கும் பக்கம் வராமல் காவிரி ஆற்றை நோக்கிச் செல்வதற்கும் வசதியாக இருக்கும்.''

''அது சரி சொக்கநாதா! அகழி அருகே நமது வீரர்கள் பள்ளம் தோண்டுகிற வரைக்கும், அரண் மீதுள்ள எதிரிப் படைகள் கையைக் கட்டிக் கொண்டா இருக்கும்?''

''அந்த இடத்திற்கு நேர்மேலுள்ள மதிலில் எதிர்வீரர்கள் நிற்க முடியாதபடி நமது பீரங்கிகள் சுட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அதற்கேற்றபடி நான்கு பீரங்கிகளை அந்த இடத்தில் ஏற்றி வையுங்கள். அவற்றின் குறி முழுதும் கோட்டையின் உச்சிலேதான் இருக்க வேண்டும்.''

''இது நல்ல யோசனைதான். அப்புறம்?''

''நம்மிடம் உள்ள மற்ற பீரங்கிகள் கோட்டையின் பிரதான வாயிலைத் தவிர்த்து மற்ற இடங்களில் நிறுத்தி வையுங்கள். அவற்றின் குறி முழுவதும் கோட்டையின் அடிச்சுவரில் இருந்து சுமார் பத்தடிக்கும் குறைவான உயரத்தில்தான் இருக்க வேண்டும். கோட்டையின் அடிப்பகுதி சேதம் அடைந்தால் அதன் மேலேயுள்ள சுவரும் பொலபொல என்று உதிர்ந்துவிடும்.''

''அப்படியே செய்கிறோம். வேறு?''

''மற்ற வீரர்கள் யாரும் கோட்டை மேல் உள்ள எதிரிகளின் மீது அம்பு வீசவோ, துப்பாக்கியால் சுடவோ வேண்டாம். உயரமான இலக்கை நமது ஆயுதங்கள் தாக்கு வது ஆயிரத்தில் ஒன்றுதான் இருக்கும். அதனால் மற்ற வீரர்களில் பெரும்பகுதியினரைப் பக்கத்தில் இருக்கும் காடுகளுக்குச் சென்று விறகுகளை வெட்டிவரச் சொல்லுங் கள்.''

அது எதற்கு என்பதனைப் புரிந்துகொண்ட வெங்கட கிருஷ்ணன் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு, சொக்கநாதன் கட்டளையிட்ட உத்தரவுகளைச் சுறுசுறுப்பா கச் செயல்படுத்தத் தொடங்கினான்.

கோட்டையைச் சுற்றிலும் சொக்கநாதன் சொன்ன இடங்களில் பீரங்கிகளை ஏற்றி வைப்பதற்காக அவசர அவசரமாக மண் மேடைகள் அமைக்கப்பட்டன. அவற் றின் மீது பீரங்கிகளை ஏற்றி, அசைய முடியாதபடி இறுக்க மாக வைத்தனர்.

இதனைப் பார்த்த தஞ்சைப் படைகள் மதில் மீது இருந்து அம்புகளாலும், துப்பாக்கிக் குண்டுகளினாலும் தாக்கத் தொடங்கினர். அவை தாக்க முடியாத தூரத்தில் மதுரை வீரர்கள் செயலாற்றிக் கொண்டிருந்ததால், அவை பயனற்றுப் போய் விழுந்து கொண்டிருந்தன.

சொக்கநாதன் எதிர்பார்த்த மாதிரியே கோட்டையின் இடதுபக்கம் இருந்த அகழி வெட்டப்பட்டுக் கொண்டிருந் தது. அதற்கு நேர் மேலேயுள்ள அரணில் ஆட்கள் நெருங்க முடியாதவாறு கீழே இருந்து உச்சியை நோக்கிப் பீரங்கிக ளால் சுட்டுக் கொண்டே இருந்தார்கள் மதுரைப் படையி னர்.

நீண்ட போராட்டத்தின் பிறகு அகழி நீர் உடைந்து வெள்ளமெனப் பள்ளத்தின் வழியாகப் பாயத் தொடங்கி யது. மதுரைப் படைகள் உற்சாகத்திலும், மகிழ்ச்சியிலும் விண்ணே அதிரும்படி கத்தத் தொடங்கினர்.

அகழி நீர் ஆறாக ஓடி, சொக்கநாதன் நினைத்தது போலவே தூரத்தில் இருக்கும் காவிரி ஆற்றை நோக்கிக் கடும் வேகத்தில் இரைச்சலாகச் சென்று கொண்டிருந்தது. அந்த வெள்ள நீருடன் விதவிதமான மீன்களும், நீர்வாழ் உயிர் இனங்களும், வாய் பிளந்த முதலைகளும் மதுரைப் படையினரை பார்த்து அச்சத்துடன் ஓடோடிக் கொண்டிருந் தன.

கோட்டையின் நாலாபுறங்களிலுமுள்ள அகழி நீர் முற்றிலுமாக வடியத் தொடங்கியது. அதே சமயம் கோட் டையின் மற்றப் பகுதிகளில் உள்ள பீரங்கிகள் இன்னும் அதிக வேகத்துடன் கோட்டைச் சுவர் மீது இடைவிடாமல் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தன.

இத்தனையையும் பார்த்துக் கொண்டிருந்த சொக்க நாதன் அகழி அருகே இருந்த பீரங்கிகளைக் கொண்டு வந்து கோட்டையின் பிரதான வாயிற் கதவுகளுக்கு நேர் எதிராக நிறுத்தி வைத்து, அந்தக் கதவுகளை இலக்காக வைத்துப் பீரங்கிகளைச் சுடுமாறு உத்தரவிட்டான்.

நீண்ட நேரம் கடந்ததும் கோட்டைச் சுவர்களில் ஆங்காங்கு விரிசல் ஏற்பட்டு விழத் தொடங்கின. கோட் டைக் கதவுகளின் மரப்பலகைகள் சிதற ஆரம்பித்தன.

இதைப் பார்த்து வெங்கடகிருஷ்ணன் வேகமாகத் தனது கட்டளைகளைப் பிறப்பித்தான்.

சுற்றிலுமுள்ள காடுகளில் இருந்து வெட்டி எடுத்து வந்த மரக்கட்டைகளைச் சுமந்தவாறு ஆயிரக்கணக்கான வீரர்கள் அகழியை நோக்கி ஓடி வந்தார்கள். நீர் முற்றிலுமாக வடிந்து, சேறும் சகதியுமாக இருந்த அகழிக்குள் மரக்கட்டைகளை எறிந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவை நிறைந்து, வீரர்கள் அதன்மீது நடந்து செல்லும் அளவுக்கு இறுக ஆரம்பித்தது.

மதுரைப் படைகள் உற்சாகத்துடன் ஆயுதங்களைச் சுழற்றியவாறு அகழிக்குள் இறங்கி, விரிசல் ஏற்பட்ட கோட்டைச் சுவர்களின் வழியாகப் புகுவதற்கு முயற்சி செய்தனர். மேலிருந்த தஞ்சைப் படைகளோ சரமாரியாக அவர்களைத் தாக்கத் தொடங்கின.

நேரம் ஆக ஆக மதுரைப் படைகளின் அளவையும் ஆற்றலையும் பார்த்து தஞ்சைப் படைகள் பின்வாங்கத் தொடங்கின. பெரும்பாலோர் சரணடைந்தனர். மற்றவர்கள் ஓடி ஒளிந்தனர்.

மாலை மறையும்பொழுது தஞ்சைக் கோட்டை முழுவதும் மதுரைப் படைகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

அதேநேரம் அந்தப்புரம் உள்ளிட்ட அரண்மனைக் கதவுகள் இறுக்கமாகப் பூட்டப்பட்டன. விசுவாசம் மிகுந்த மிச்சமிருந்த தஞ்சை வீரர்கள் அதற்குப் பாதுகாவலாக இருக்கத் தலைப்பட்டனர்.

# 64



முத்துநகைக்குத் தன் மனதில் இருந்த எண்ணங்களை ராணி வையாம்பிகாதேவியிடம் சொல்வதற்கு ஏராளமான பயமும் தயக்கமும் இருந்தது.

தன்னுடைய கருத்துக்களைச் சொல்லவே வேண்டாம் என்று சற்று நேரத்திற்கு முன்னால் அவள் முடிவு எடுத்திருந்த போதிலும், ராணி வையாம்பிகாதேவி திரும்பத் திரும்ப அதையே கேட்டபிறகு, இனி அத்தை வைதாலும் பரவாயில்லை என்ற முடிவுடன் சொல்ல ஆரம்பித்தாள்.

''தஞ்சை மன்னரைத் தங்கள் மைந்தர் வெற்றி கொண்டாலும் அவர் மனதிலுள்ள எண்ணம் நிறைவேறாது போய்விடுமோ என்ற நிலைமை நிச்சயம் ஏற்பட்டுவிடுமோ என்பதால், அதனை மாற்றுவதற்கான ஒரு வழி என் மனதில் தோன்றியது.''

''என்ன வழி? சீக்கிரம் சொல்!'' என்று அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தவாறு கேட்டாள் ராணி.

''அந்த வழி... அதற்கான அடிப்படை தங்களிடம் தான் உள்ளது.''

''என்னிடமா? புரியும்படியாகச் சொல் கண்ணே! என் மகனின் மகிழ்ச்சிக்காக நான் எது வேண்டுமானாலும் செய்கிறேன். சொல். நான் என்ன செய்ய வேண்டும்?''

''சொல்கிறேன். ஆனால் அதைக் கேட்டுத் தாங்கள் என்மீது கோபம் கொள்ளக் கூடாது'' முத்துநகை பயத்துடன் கூறினாள்.

''எதுவாக இருந்தாலும் சொல். நிச்சயம் உன்மீது கோபப்பட மாட்டேன்.''

இருப்பினும் முத்துநகை தயக்கத்துடனே கூறத் தொடங்கினாள்.

''தாங்கள் இப்பொழுதே தஞ்சைக்குச் செல்ல வேண்டும். தாங்கள் அனுமதித்தால் நானும் உங்களுடன் சேர்ந்து தஞ்சைக்கு வருகிறேன்.''

''தஞ்சைக்குச் சென்று'' புரியாமல் முத்துநகையின் முகத்தைக் கூர்ந்து பார்த்தவாறு கேட்டாள்.

''தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கரைத் தாங்கள் சந்தித்துப் பேச வேண்டும். பிடிவாதம் கொண்ட அவர் மனதைத் தாங்கள் எப்படியாவது மாற்றி அவர் மகளைத் தங்கள் மகனுக்கு மணமுடித்துக் கொடுக்க எப்படியாவது சம்மதிக்க வைப்பதற்கு நிச்சயமாக உங்களால் முடியும்.''

முத்துநகையின் இந்த வார்த்தைகளைக் கேட்டதற்குப் பின்னர்தான் ராணி வையாம்பிகாதேவியின் மனதில் எல்லையற்ற கோபம் எழுந்தது.

''என்ன வார்த்தைகள் சொல்லிவிட்டாய்!'' என்று முத்துநகையைப் பார்த்துச் சினம் பொங்க, கண்கள் சிவக்கக் கடுமையாகக் கேட்டாள்.

அத்தையின் கோபத்தையும், அவள் மனதில் படர்ந்து இருந்த சினத்தினால் அவள் முகம் சிவந்த கோலத்தையும் பார்த்த முத்துநகைக்குப் பயத்தில் உடல் நடுங்கியது.

ராணியோ கோபத்தில் அவளைப் பார்த்துச் சினந்து வெடித்துக் கொண்டிருந்தாள்.

''உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தால் இந்த வார்த்தைகளை என்னிடமே சொல்வாய்? என்னையே இகழ்ந்தவனை, அதிலும் எனது கற்பைப் பற்றியே தரக்குறைவாகப் பேசிய இழிதகையிடம் நான் சென்று அவன் காலடியில் விழுந்து மன்றாடச் சொல்கிறாயா?''

முத்துநகை பயத்துடன் தலை குனிந்து கொண்டாள். ராணியோ கோபத்துடன் கத்திக் கொண்டிருந்தாள்.

''மானம் ஒன்றே பெரிதென்று நினைத்து போர் செய்யத் துணிந்த என் மகனை, ஒரு கோழையைப் போல் ஒதுங்கி நிற்கச் சொல்லிவிட்டு, நான் மட்டும் விஜயராகவ நாயக்கனைத் தேடிப் போய் அவன் கால்களில் விழுந்து, கெஞ்சி, மன்றாடி அவன் மகளை என் மைந்தனுக்கு மணம் முடித்து வை என்று கண்ணீர் விட்டுக் கதற சொல்கிறாயா? இப்படி ஒரு வார்த்தையை நீ என்னிடம் சொன்னதற்குப் பதில் என் நெஞ்சில் கத்தியை நீ பாய்ச்சி இருக்கலாமே?''

''ஐயோ, அத்தை! நான் அந்த எண்ணத்தில் சொல்லவில்லை!'' என்று பதறிப் போய்ச் சொன்னாள் முத்துநகை.

''நீ சொன்ன இந்த வார்த்தைகளுக்கு வேறு எப்படிப் பொருள் கொள்ள முடியும்? என்னை நேரில் பார்க்காமலே, என் குணத்தைப் பற்றித் தெரியாமலே என்னைப் பற்றி எவ்வளவு கேவலமாகப் பேசி இருக்கிறான் அந்தத் தஞ்சை நாயக்கன்! சொக்கநாதனை நான் வேறு எவனுக்கோ பெற்று எடுத்து இந்த நாட்டிற்கு வாரிசு என்று பொய்யுரைத்து இருக்கிறேன் என்று வாய்கூசாமல் இழித்துப் பேசி இருக்கிறான் அந்த ஈனப்பிறவி! அதுவும் எந்த இடத்தில்?''

முத்துநகை பேசத் துணிவின்றி அமைதியாகத் தலை குனிந்து இருந்தாள்.

''சொல்லுடி! எந்த இடத்தில்? அவனுடைய அந்தப்புரத்திலோ இல்லை. அவனுடைய ஆசை மகளிருடனோ இல்லை அளவுக்கு மீறிய மயக்கத்திலோ அவன் என்னைப் பற்றி இப்படி வசைபாடி இருந்தால்கூட நான் அதனைப் பொருட்படுத்தி இருக்கமாட்டேன். ஆனால் அவன் எந்த இடத்தில் வைத்து என்னைக் கேவலப்படுத்தி இருக்கிறான் என்று சிந்தித்துப் பார்த்தாயா?''

முத்துநகை வாயை மூடிக் கொண்டிருந்தாள்.

''தர்பார் மண்டபத்தில், அரசப் பிரதானிகள் அனைவரின் முன்னிலையில் அந்த மாபெரும் சபையில் மணவினைத் தொடர்பின் நிமித்தம் நாம் அனுப்பி வைத்த தூதுவர்களிடம் என் கற்பைப் பற்றி, என் மைந்தனின் பிறப்பைப் பற்றி எவ்வளவு அவதூறான வார்த்தைகளை அள்ளி இறைத்து இருக்கிறான்! அந்த இழிபிறவியிடமா நான் நேரில் சென்று இறைஞ்ச வேண்டும் என்று சொல்கிறாய்?''

''அத்தை... நான் சொல்ல வந்தது...''

''இந்த வார்த்தைகளை வேறு யாராவது சொல்லி இருந்தால் அவர்கள் வாயிலுள்ள பற்கள் உடைந்து, நாவைத் துண்டித்து இருப்பேன்.''

''அத்தை... நான் என்ன சொல்ல...''

''நீ சொன்ன இந்தக் கேவலமான வார்த்தைகளை என் மகன் கேட்டிருந்தால் இந்நேரம் உன் தலை துண்டாகி இருக்கும். அத்தோடு விட்டிருப்பானா? உன் அங்கங்கள் அனைத்தையும் துண்டு துண்டாக வெட்டி எறிந்திருப்பான். எவ்வளவு கேவலமான வார்த்தைகளை என்னிடமே நீ சொல்லத் துணிந்துவிட்டாய்?''

''இல்லை அத்தை நான் எதற்காக அப்படிச் சொன்னேன் தெரியுமா?''

''தெரியும். சொக்கநாதனின் மகிழ்ச்சிக்காக என்று தானே சொல்ல வருகிறாய்! சரியாகச் சொல்வதானால் அது உன்னுடைய சுயநலத்திற்காக!''

''சுயநலமா?'' அதிர்ச்சியுடன் கேட்டாள் முத்துநகை.

''வேறு என்ன? உன்னுடைய சுயநலத்திற்காகத்தான். தஞ்சை இளவரசியை என் மகன் மணக்க முடியாது போய்விடுவான். இந்த உலகையே வெறுத்தாலும் வெறுத்து விடுவான். அதன்பிறகு உன்னை மணப்பதற்குக் கூடச் சம்மதிக்கமாட்டான் என்ற பயம் உனக்கு வந்திருக்கும்.''

இதைக் கேட்டவுடன் முத்துநகையின் இதயமே குத்துப்பட்டார்போல் இருந்தது. அவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு எழுந்தது.

''இல்லை அத்தை... இல்லவே இல்லை... அப்படி ஓர் எண்ணமே எனக்குள் இல்லை... என்னை அவர் திருமணம் செய்யாவிட்டால் கூடப் பரவாயில்லை. அவர் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் தான் நான் அப்படிக் கூறினேன். தங்கள் மனதில் இப்படி ஓர் அபிப்பிராயத்தை தோற்றுவித்த பிறகு அது தப்பு என்று இப்பொழுதே தங்களுக்கு நிரூபித்துக் காட்டுகிறேன்.''

முத்துநகை குலுங்கிக் குலுங்கி அழுதவாறு இதனைக் கூறிவிட்டு அவசரமாக எழுந்து, அருகில் இருந்த சுவரின் பக்கமாக ஓடினாள்.

சுவரில் அலங்காரமாக மாட்டி வைக்கப்பட்டிருந்தது இரு கத்திகளும் ஒரு கேடயமும்!

அந்தக் கத்தியைத் தனது வயிற்றுக்குள் பாய்ச்சுவதற்காக அவள் முயற்சிப்பதற்குள் ராணி வையாம்பிகாதேவி பதறிப் போய் வேகமாக ஓடிவந்து அவள் மேல் விழுந்து அந்தக் கத்தியைப் பிடுங்கி எறிந்தாள்.

''அசட்டுப் பெண்ணே! என்ன காரியமடி செய்யத் துணிந்தாய்?'' என்று அப்பொழுதும் தன் மனதிலுள்ள கோபம் மாறாமல் சொன்னாள் ராணி.

''என்னை ஏன் அத்தை தடுத்தீர்கள்? என் இறப்பிற்குப் பிறகாவது நான் என் சுயநலத்திற்காக அந்தக் கருத்தைத் தெரிவிக்கவில்லை என்று நீங்கள் அறிந்து கொள்வீர்களே! நான் உயிரோடு இருந்தால் தானே உங்கள் மகனின் எதிர்கால மகிழ்ச்சிக்கு இடையூறாக இருக்கும்? நான் இறந்துவிட்டால் அவர் சந்திரவதனாவை மணப்பதற்கு உங்கள் மனதில் வேறு எந்தச் சந்தேகமும் உதிக்காதே!''

இதைக் கேட்ட பிறகு ராணி வையாம்பிகாதேவி அவளை இறுக அணைத்து, உச்சி மீது தன் தலையைப் பதித்துக் கண்ணீர் பெருக்கினாள்.

பிறகு முத்துநகையை ஆதரவுடன் தோளைப் பற்றி அணைத்தவாறு திரும்பவும் மஞ்சத்தருகே கூட்டி வந்து உட்காரச் செய்து, தானும் அவளருகில் அமர்ந்தாள்.

''உன்னை நம்புகிறேன் கண்ணே! இருந்தாலும் என்னை இகழ்ந்தவன் காலடியில் சென்று விழுந்து கெஞ்சச் சொல்கிறாய் பார். அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை.''

''அத்தை, நான் சொல்ல வந்ததைத் தாங்கள் முற்றிலுமாகப் புரிந்து கொள்ளவில்லை. தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனிடம் சென்று, அவன் கால்களில் விழுந்து கெஞ்சும்படி நான் சொல்லவில்லை. அப்படிச் சொல்ல என் மனம் ஒருக்காலும் சம்மதிக்காது.''

''நீ சொன்னதற்கு வேறு என்னதான் பொருள் கொள்ள முடியும்.''

''அத்தானின் வீரத்திலும், நமது படைகளின் தோள் வலிமையிலும் எனக்குச் சந்தேகமே இல்லை. வெற்றி

நமது பக்கம்தான். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்ட பிறகு விஜயராகவ நாயக்கன் பிடிவாதம் கொள்ளத்தான் செய்வான். நாம் இருவரும் அந்தச் சமயத்தில் அரசின் தூதுவர்களாக அவனைச் சந்திப்போம். தாங்கள் மன்றாட வேண்டாம். தங்களை அவன் நேரில் பார்த்தாலே போதும். தாய் மீனாட்சியைப் போல சாந்த சொரூபம் கொண்டுள்ள தங்கள் முகத்தைப் பார்த்தாலே அவன் மனம் நிச்சயம் மாறும்.''

ராணி யோசிக்க ஆரம்பித்தாள்.

''தன் பேச்சு எவ்வளவு தவறு என்று உணர்ந்து கொள்வான். அவன் மனைவியையும், இளவரசி சந்திரவதனாவையும் நேரில் சந்திப்போம். பெண்ணுக்குப் பெண் பேசும்பொழுது எல்லா வேற்றுமைகளும் ஒழிந்து போகாதா? அவர்கள் மனங்களை மாற்றுவோம். இத்தனை பேரும் ஒன்று சேரும்பொழுது தஞ்சை மன்னன் மனம் மாறாதா?''

''நீ சொல்வது ஒருவகையில் சரிதான். ஆயிரக்கணக்கானோர் இரத்தம் சிந்துவதைத் தடுக்கலாம். ஆனால் அதற்கான தருணம்? இப்பொழுது அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரின் நிலைமை பற்றி இதுவரை நமக்கு ஒரு தகவலும் வரவில்லையே!''

சரியாக அதே நேரம் ராணியின் மெய்க்காப்பாளன் அருகில் வந்து வணங்கி நின்றான்.

''என்ன?'' என்றாள் ராணி அவனைப் பார்த்து.

''தஞ்சையில் இருந்து நமது தூதுவன் வந்திருக்கிறான். மன்னர் தங்களுக்கு ஓலை அனுப்பி இருக்கிறாராம்.''

''வரச்சொல்'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

அடுத்த சில நிமிடங்களில் அங்கு நுழைந்த தூதுவன் பணிவுடன் தன் கையில் இருந்த ஓலைக் குழலை மகாராணியிடம் நீட்டினான்.

பரபரப்புடன் குழலை வாங்கித் திறந்து அதற்குள் இருந்த ஓலையைப் படிக்க ஆரம்பித்த ராணி வையாம்பிகா தேவியின் முகத்தில் மகிழ்ச்சிக் கோடுகள் படர ஆரம்பித் தன.

ஓலை கொண்டு வந்த தூதுவனை அனுப்பிவிட்டுத் தன் அருகில் ஆவலோடு உட்கார்ந்திருந்த முத்துநகையின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டியவாறு ஆனந்தத்துடன் பேசத் தொடங்கினாள் ராணி வையாம்பிகாதேவி!

''நீ எதிர்பார்த்த தருணம் இப்பொழுது வந்துவிட்டது முத்துநகை! நமது படைகள் வல்லம் கோட்டையைக் கைப்பற்றி, அதன்பிறகு தாக்க வந்த தஞ்சைப் படைகளை யும் முறியடித்து விட்டார்களாம். இப்பொழுது தஞ்சைக் கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டு இருக்கிறார்களாம். விஜயராகவன் பயந்து போய்க் கதவுகளை அடைத்துக் கோட்டைக்குள்ளேயே பதுங்கிக் கிடக்கிறானாம்! உடனே தாக்குதல் தொடுக்காது, ஒரு வாய்ப்புக் கொடுப்பதற்காக விஜயராகவனுக்கு என் மகன் தூது அனுப்ப உத்தேசித்தி ருக்கிறானாம். நாம் இந்தச் சமயத்தில் அங்கு கிளம்பிப் போவது நல்லது என்று நினைக்கிறேன்.''

''ஆம் அத்தை'' என்றாள் முத்துநகை மகிழ்ச்சியுடன்.

''சொக்கநாதனின் தூதுவனிடம் விஜயராகவன் பிடி வாதம் பிடித்தாலும், நாம் சென்று அவன் மனதை மாற்ற முயற்சிக்கலாம். அதனால் இன்றே நாம் கிளம்பவதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யச் சொல்கிறேன்.''

அடுத்த சில நாழிகைகளில் ராணி வையாம்பிகாதேவி யையும், முத்துநகையையும் ஏற்றிக் கொண்ட ரதம் ஒன்று தகுந்த பாதுகாப்புடன் தஞ்சாவூரை நோக்கி விரையத் தொடங்கியது.

# 65



காரந்தி வேளை என்று சொல்லப்படும் இளங்காலைப் பொழுதில் எழுகதிர்ச் செல்வன் இருட்டுப் போர்வையினை விலக்கிய பொழுது, தஞ்சைக் கோட்டை பரிதாபகரமாகக் காட்சி அளித்தது.

பிரமாண்டமாக எழுந்திருந்த கோட்டை பல இடங்களில் பீரங்கிக் குண்டுகளால் தாக்கப்பட்டு இடிந்து விழுந்திருந்தது. கோட்டையின் நான்கு புறங்களிலும் சூழப்பட்டிருந்த அகழி நீர் முற்றிலும் வடிந்து, அதன் மீது காட்டு விறகுகள் போடப்பட்டு கண்றாவிக் காட்சி அளித்தது.

கிளிகள் கொஞ்சி விளையாடும் தஞ்சாவூர் இப்பொழுது கழுகு, பருந்து, காக்கைகள் போன்ற பறவைகளின் கர்ண கடூரமான ஓசைகளால் நிறைந்திருந்தது.

கோட்டையின் இடிபாடுகள் அகழி வழியாக மதுரைப் படைகள் முற்றிலுமாக உள்ளே நுழைந்து, தஞ்சை நகரிலுள்ள அத்தனை காவற் கூடங்களையும் கைப்பற்றின.

தஞ்சைப் படைகள் முற்றிலுமாக அவர்களிடம் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுச் சரணடைந்துவிட்டன. சரணடைந்த படை வீரர்களுக்கென்று தனி முகாம் ஒன்று அமைக்கப்பட்டுக் காவல் காக்கப்பட்டது.

கோட்டைக்குள் இருந்த தஞ்சை நகர் வீதிகள் வெறிச் சோடிப் போய்க் காணப்பட்டன. மதுரை வீரர்களின் நடமாட்டத்தைத் தவிர மக்கள் நடமாட்டம் அடியோடு அறுகிப் போய் இருந்தது.

தஞ்சை அந்தப்புர வளாகங்களை உள்ளடக்கிய அரண் மனையின் மாபெரும் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டு இருந்தன. அரண்மனையின் மதிற் சுவர்களில் கூட மிச்சம் இருந்த தஞ்சை வீரர்களின் காவல் மந்தமாகக் காணப்பட் டது.

அரண்மனையின் எதிரே மதுரைப் படைகள் குழுமி இருந்து தாக்குவதற்கான தயார் நிலையில் ஆயுதங்களுடன் காத்துக் கிடந்தனர்.

மதுரை மன்னன் சொக்கநாதனும் அவனது நண்பன் வெங்கடகிருஷ்ணனும் குதிரைகளில் அமர்ந்தவாறு அரண் மனைக் கட்டிடங்களின் வெளிப்புறமாக பார்வையிட்ட வாறு வந்து கொண்டிருந்தனர்.

சொக்கநாதனுக்கு வானுயர்ந்த அந்தப்புரக் கட்டிடத் தைப் பார்க்கும்பொழுது பழைய நினைவுகள் கிளர்ந்து எழுந்தன. இளவரசி சந்திரவதனாவைச் சந்திப்பதற்காக அவன் புரிந்த சாகசங்களும், கஷ்டங்களும் நினைவிற்கு வந்து அவன் மனதை இம்சைப்படுத்தின.

அந்தப்புரக் கட்டிடத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு நீண்ட பெருமூச்சு விட்டான்.

''சொக்கநாதா, அடைக்கப்பட்ட இந்த அரண்மனைக் குள் விரல்விட்டு எண்ணக்கூடிய வீரர்கள்தான் இருப் பார்கள். பொழுதும் புலர்ந்து விட்டது. இப்பொழுது நம்முடைய தாக்குதலைத் துவக்கினால் அடுத்த ஒரு ஜாமத் திற்குள் விஜயராகவ நாயக்கனையும் அவன் குடும்பத்தின ரையும் சிறைப்படுத்திவிடலாம்'' என்றான் வெங்கட கிருஷ்ணன்.

''கட்டளையிடு சொக்கநாதா! நம்முடைய வீரர்கள் காத்துக் கிடக்கிறார்கள் உன் ஆணைக்காக!''

''சற்றுப் பொறு கிருஷ்ணா! அதற்கு முன்னர் தஞ்சை மன்னனனுக்கு மற்றும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்ப் போம்.''

''சந்தர்ப்பமா? என்ன சொல்கிறாய் சொக்கநாதா?''

''விஜயராகவ நாயக்கனுக்கு மீண்டும் ஒரு முறை தூது அனுப்புவோம்.''

''ஏற்கனவே இரண்டு முறை தூது அனுப்பியும் மசி யாத மன்னன் இனி ஒப்புக் கொள்வான் என்று நினைக்கி றாயா?''

''மூன்றாவது முறையாகத் தூது அனுப்பித்தான் பார்ப் போமே! எல்லாம் இழந்த நிலையில் இனியாவது சரியாகா கச் சிந்திக்க மாட்டானா என்ற ஒரு சிறு ஆசை என் மனதில் நிழலாடுகிறது. இதுகூட விஜயராகவ நாயக்கனுக்காக இல்லை. சந்திரவதனாவின் மனம் நோகக் கூடாது என்ப தற்காகத்தான்!''

வெங்க'-கிருஷ்ணன் சற்று நேரம் அமைதியாக இருந் தான். இளவரசி சந்திரவதனாவின் மீது சொக்கநாதன் கொண்டுள்ள காதலின் ஆழத்தை நினைத்துப் பெருமிதம் எய்தினான்.

''சீக்கிரம் தூதுவனை அனுப்பு கிருஷ்ணா!''

''சரி சொக்கநாதா! உன் எண்ணம் இப்பொழுதாவது பலிக்கட்டும்.''

அடைக்கப்பட்ட தஞ்சை அரண்மனைக்குள் மன்னனின் தனிப்பட்ட வழிபாட்டு அறைக்குள் விஜயராகவ நாயக் கன் ஆண்டவனின் எதிரில் சம்மணமிட்டு அமர்ந்து இருந் தான்.

அவனது குலதெய்வமான ராசகோபால ஸ்வாமியின் திருவுருவச் சிலை மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, தீபங்கள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன. சாம்பிராணிப் புகை மெலிதாக எழுந்து, அசைந்து, இறைவனின் திருவுருவச் சிலை மீது படிந்து காற்றோடு கலந்து கொண்டிருந்தது.

நெற்றியிலும், உடலின் பாகங்களிலும் வைஷ்ணவர்களுக்குரிய திருமண் இடப்பட்டு, கண்கள் இரண்டையும் இறுக மூடியவாறு இறைவனைத் தியானித்துக் கொண்டிருந்தான்.

தஞ்சைப் படைகள் தோற்றுக் கொண்டிருக்கின்றன. எதிரிகள் என் கோட்டையை இடித்து உள்ளே புகப் பார்க்கின்றனர். குலகுருவோ நாட்டைவிட்டே அகன்று விட்டார்.

இறைவா, இந்த நிலையில் என்னை காப்பதற்கு உன்னைவிட்டால் வேறு யார் இருக்கிறார்கள். உனக்காக இன்று நான் மௌன விரதம் அனுஷ்டிக்கிறேன். யாரோடும் நான் பேசப் போவதில்லை.

இன்று நான் மௌன விரதம் முடித்து, நாளைக்காலை புலரும்பொழுது எனக்கு எல்லா வகையிலும் வெற்றி கிடைக்க நீதான் எனக்கு அருள் புரிய வேண்டும் என்று மனம் உருகிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது தளவாய் ரங்கப்ப நாயக்கனும், வேறு சில படை தளபதிகளும் பூஜை அறையின் முன் வந்து நின்றனர்.

*விஜயராகவ நாயக்கன் அவர்களைப் பார்த்த பிறகும் பூஜை அறையைவிட்டு எழுந்து வராமல், 'என்ன' என்று மௌனமாகச் சைகை செய்தான்.

''மதுரைப் படைகள் நமது கோட்டையைத் தகர்த்து உள்ளே புகுந்துவிட்டார்கள். நமது வீரர்கள் அவர்களிடம் சரணடைந்துவிட்டார்கள். அரண்மனைக் கதவுகளை இறுக அடைத்திருக்கிறோம். மதுரைப் படைகள் முழுவதும் நமது அரண்மனை வாசல் முன் கூடி இருக்கின்றார்கள்'' என்று தளவாய் கவலையுடன் சொன்னான்.

விஜயராகவ நாயக்கன் இதைக் கேட்ட பிறகும் வாய் திறந்து பேசாமல், 'அவர்கள் வரட்டும், பார்த்துவிடலாம்' என்று மௌனமாகச் சைகை செய்தான்.

தளவாயும் மற்றவர்களும் கவலையுடன் வெளியேறினார்கள்.

இதற்கடுத்த சில நாழிகைகளில் சொக்கநாதனின் கட்டளைக்கு இணங்க வெங்கட கிருஷ்ணன் தூதுவன் ஒருவனை அரண்மனை வாசல் அருகே அனுப்பி வைத்தான்.

வெள்ளைக்கொடி ஒன்றை வீசியவாறு அரண்மனை மதில் மேல் பதுங்கிப் பதுங்கிக் காவல்புரியும் தஞ்சை வீரனைப் பார்த்து அந்தத் தூதுவன் உரக்கக் கத்தினான். சற்று நேரம் கழித்துத் தலையை மட்டும் நீட்டிப் பயத்துடன் எட்டிப் பார்த்த வீரன், தூதுவன் கரத்தில் இருந்த வெள்ளைக் கொடியைப் பார்த்துச் சற்றுப் பயம் தெளிந்தாலும், கேடயத்தால் தன் மேனியைப் பாதுகாத்தவாறு, ''என்ன வேண்டும்?'' என்று தூதுவனைப் பார்த்துக் கேட்டான்.

''தங்கள் மன்னரை நேரில் சந்தித்துப் பேசுவதற்காக எங்கள் மன்னர் என்னைத் தூதனாக அனுப்பி இருக்கிறார். உமது மன்னர் சம்மதித்தால், நான் மட்டும் உள்ளே வரச் சித்தமாக இருக்கிறேன்'' என்று தூதுவன் உரத்த குரலில் சொன்னான்.

''அங்கேயே நில், எமது மன்னரிடம் உத்தரவு வாங்கி வருகிறேன்'' என்றவாறு தஞ்சை வீரன் அங்கிருந்து மறைந் தான்.

நீண்ட நேரம் கழித்து அரண்மனை மதிற்சுவரின் மீது அந்த வீரனின் தலை தெரிந்தது.

''இன்று எமது மன்னர் பேசா விரதம் பூண்டிருக்கிறார். இறைவன் காலடியில் அமர்ந்து மௌன விரதம் அனுஷ் டித்துக் கொண்டு இருக்கிறார். எவருடனும் பேசமாட்டார். அதனால் உன்னை அனுமதிக்க இயலாது'' என்றான் அந்த வீரன் கீழே நின்று கொண்டிருக்கும் தூதுவனைப் பார்த்து!

மதுரைத் தூதுவன் இதைக் கேட்டதும் மௌனமாகத் திரும்பி, தங்கள் தளவாய் வெங்கடகிருஷ்ணனின் முகா மிற்கு விரைந்து சென்று விஷயத்தைக் கூறினான்.

அடுத்த நாழிகைப் பொழுதில் வெங்கடகிருஷ்ண னும், சொக்கநாதனும் அவசரமாக அமைக்கப்பட்டிருந்த கூடாரம் ஒன்றில் தனியாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

''விஜயராகவ நாயக்கனின் கண்மூடித்தனமான பக்தி யைப் பார்த்தாயா சொக்கநாதா! இப்படிப்பட்ட இக்கட் டான நேரத்தில் பூஜை அறைக்குள் புகுந்து மௌன விரதம் காக்கிறானாம்! யாரோடும் பேசமாட்டானாம்!''

''தான் எடுத்த முடிவுகளை ஆராயாது விடுத்து, தவறான எண்ணத்தைக்கூட ஆண்டவன் தனக்குச் சாதகமாக்கித் தருவான் என்பது நினைப்பு.''

''நமது தூதுவனைப் பார்க்க முடியாது என்று சொல்லி விட்டார்களாம். இனி என்ன செய்வது?''

''தூதுவன் நேரில் சந்திக்காவிட்டாலும், தஞ்சை மன்னனின் மனநிலையைத் தெரிந்து கொள்ள வேறு ஒரு வழி இருக்கிறது.''

''என்ன வழி?''

''மௌன விரதம் பூண்டிருப்பவர்கள் மற்றவரோடு பேசத்தான் கூடாது. ஆனால் தனது மனதில் உள்ள எண்ணங்களை எழுத்துமூலம் தெரிவிக்கலாம் இல்லையா?''

''ஆமாம், அதை மறந்துவிட்டேன்.''

''விஜயராகவ நாயக்கனுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்து, அவன் மனம் நோகாமல், ஓலை ஒன்றை அவுனுக்கு அனுப்பிவிடு கிருஷ்ணா!''

''அப்படியே செய்கிறேன் சொக்கநாதா!''

சொக்கநாதன் சொற்படி ஓலை ஒன்றில் வரைந்து, தூதுவனை மறுபடியும் அரண்மனை வாயிலருகே அனுப்பி வைத்தான் வெங்கடகிருஷ்ணன்.

அரண்மனைத் திட்டி வாசல் வழியாக அந்த ஓலை, தஞ்சை வீரர்களால் பெறப்பட்டு, தளவாய் ரங்கப்ப நாயக்கன் மூலம், பூஜை அறைக்குள் அமர்ந்திருந்த மன்னன் காலடியில் வைக்கப்பட்டது.

விஜயராகவ நாயக்கன் மௌனமாக அந்த ஓலையை எடுத்துப் படித்துப் பார்த்தான்.

'மாமன்னர் விஜயராகவ நாயக்கனுக்கு மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கனின் தளவாய் வெங்கடகிருஷ்ணப்ப நாயக்கன் அடிபணிந்து தெரிவித்துக் கொள்வது. தங்களது கோட்டையைத் தகர்த்து விட்டோம். இப்பொழுது உங்கள் அரண்மனை எதிரில் அலை கடலெனத் திரண்டு நிற்கிறது எங்கள் படை. உங்கள் படை முழுவதும் எங்களிடம் சரணடைந்து விட்டார்கள். இனி என்ன பலம் உங்களிடம் இருக்கிறது? இனியும் தாங்கள் பிடிவாதம் செய்யாமல் எங்களுடன் சமாதானமாகப் போவது ஒன்று தான் நல்லது. தங்கள் முடிவைச் சீக்கிரம் தெரிவிப்பது நல்லது.

விஜயராகவ நாயக்கன் இதனைப் படித்துவிட்டு சிறிது நேரம் மௌனமாகப் பிரார்த்தித்தான்.

பின்னர் அருகில் இருந்த ஏடு ஒன்றை எடுத்து, எழுத்தாணியால் எழுதினான். எழுதியதை மீண்டும் ஒரு முறை படித்துப் பார்த்தான்.

இறைவன் காலடியில் அந்த ஓலையை வைத்துக் கண்களை மூடி வணங்கிவிட்டு, அந்த ஓலையை வெளியே இருக்கும் எதிரிகளிடம் சேர்க்குமாறு தளவாயிடம் சைகை செய்தான்.

தளவாய் அதனைப் பணிவாக வாங்கி வந்து, அரண்மனைத் திட்டி வாசல் வழியாக, வெளியேக் காத்துக் கிடக்கும் மதுரைத் தூதுவனிடம் சேர்ப்பிக்குமாறு உத்தரவிட்டான்.

சற்று நேரம் கழித்து அவ்வோலையை வெங்கடகிருஷ்ணனிடம் வாங்கிப் படித்தான் சொக்கநாதன். பிறகு மௌனமாக அதனைத் தன் நண்பனிடம் நீட்டினான்.

வெங்கடகிருஷ்ணன் ஓலையைப் படித்தான்.

'கோட்டையை இழந்தோம்; நாட்டையும் இழந் தோம். குடிபடைகளை இழந்தோம். இதன் பிறகும் எங் களை நீ தாக்குவதை நிறுத்திவிட்டு என் மகளைக் கொடுப் பது பற்றியும் சமாதானம் பற்றியும் மிரட்டத்தானே செய்கி றாய்! விஜயராகவ நாயக்கன் கோழை அல்ல.'

வேறு எதையும் அவன் எழுதவில்லை.

"இனி என்ன செய்வது சொக்கநாதா? போரை ஆரம் பிக்கலாமா?"

"பொறு கிருஷ்ணா! இன்று அவன் மௌன விரதம். ஓலைகூட அவசரமாக எழுதி இருக்கலாம். இன்று முழுக்க அவன் பூஜை அறையில் இருந்து சிந்தித்துப் பார்க்கட்டும். நாளை அவன் விரதம் முடிந்துவிடுமல்லவா? தூதுவனை மறுபடியும் அனுப்பி வைப்போம்."

"மன்னன் மனம் இனி மாறும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இன்றே தாக்குதலைத் தொடங்குவது நல்லது."

"இறைவனைப் பூஜித்து மௌனவிரதம் பூண்டிருந்த தஞ்சை மன்னனைச் சொக்கநாதன் தாக்கினான் என்ற பழி நமக்கு வரவேண்டாம். நாளை மறுபடியும் ஒரு வாய்ப்புக் கொடுப்போம். அதன் பிறகு முடிவு எடுக்கலாம்."

மறுநாள் விஜயராகவ நாயக்கனின் மௌன விரதம் கலையும் நேரத்தை எதிர்பார்த்து, அரண்மனைக்கு வெளியே மதுரைப் படைகள் ஆவலோடு காத்துக் கிடந் தார்கள்.

அதேநேரம் மதுரையில் இருந்து கிளம்பிய ராணி வையாம்பிகாதேவியும், முத்துநகையும் தஞ்சையை நோக்கி முக்கால்வாசி தூரத்திற்கு மேல் வந்துவிட்டனர்.



# 66

மலிபுனல் சூழ்சோணாடு தஞ்சையிற் காத்திருமரசர் முதியமைச்சர் னொலிமறைதேர் கோவிந்த தீட்சிதராயன் என்று திருவையாறு மகாத்மியத்தில் புகழ்ந்து கூறப்பட்ட தஞ்சை மன்னன் விஜய ராகவ நாயக்கனின் அமைச்சரான கோவிந்த தீட்சிதரின் மாளிகையைச் சுற்றிலும் கூட மதுரைப் படைகள் காவல் புரிந்து கொண்டிருந்தன.

அமைச்சர் வீட்டில் இருந்து எவரையும் வெளியே செல்வதற்கோ, அல்லது வெளியில் இருந்து எவரையும் உள்ளே செல்வதற்கோ அனுமதிக்கவில்லை.

தஞ்சை அரண் மனையை மட்டுமின்றி அரண்மனைக்கு வெளியே அமைந்திருக்கும் அரசப் பிரதானிகளின் மாளிகைகள் முழுவதையும் மதுரைப் படைகள் சுற்றிச் சூழ்ந்து கொண்டு பலத்த காவலுக்கு உட்படுத்திக் கொண்டிருந்தனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அமைச்சர் தன் குடும்பத்துடன் சிறை வைக்கப்பட்டதைப் போன்று வெளியில் எங்கும் செல்ல முடியாத நிலையில் கவலையே உருவாக மாளிகைக்குள் அமர்ந்து இருந்தார்.

அப்பொழுது அவரது மனைவி நாகாம்பாள் கையில் ஒரு குவளையை ஏந்தியவாறு அவரருகில் வந்து நின்றாள்.

''இந்தப் பானகத்தையாவது அருந்துங்கள். காலையில் இருந்து எதுவுமே சாப்பிடாமல் இருக்கிறீர்கள்'' என்றவாறு அவரிடம் நீட்டினாள்.

''நாடு இப்பொழுது இருக்கும் நிலையில் எனக்குப் பசி எப்படி ஏற்படும் நாகு? எதுவும் வேண்டாம்'' என்றார் சோகமாக.

'இதைக் கேட்ட, அவர் மனைவி பெருமூச்சு விட்டவாறு, 'இப்படி ஒரு நிலைமை வரும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இருந்தாலும் இந்த மதுரைக்காரனுக்கு இப்படி ஓர் ஆத்திரம் வரக்கூடாது. நாசமாகப் போறவன்! கோட்டையையும் அகழியையும் மண்ணோடு மண்ணாக்கி விட்டானாமே!'' என்றாள்.

''அவனைக் குற்றம் சொல்லி என்னடி பலன்? விஜயராகவ நாயக்கன் தூதுவனிடம் அவ்வளவு இழிவாகப் பேசி இருக்கக் கூடாது.''

''விநாசகாலே விபரீத புத்தி! அரண்மனையைச் சுற்றிலும் லட்சக்கணக்கில் எதிரிப் படைகள் சூழ்ந்திருக்கிறதாம். முடிவு என்னதான் ஆகும்?''

''ஒன்று விஜயராகவன் சமாதானமாகப் போகவேண்டும். இல்லாவிட்டால் சாவை நோக்கிச் செல்ல வேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லை. முடிவு மன்னன் கையில்தான் இருக்கிறது. அதுவரையில் நாமும் இப்படிச் சிறைக்குள் இருப்பதைப் போல்தான் இருக்க வேண்டும்.''

''எனக்கு மதுரவாணியை நினைத்தால்தான் கவலையாக இருக்கிறது. திருமணம் நிச்சயித்த பிறகு அவளுக்கு இப்படி ஒரு சோதனையா?''

''இந்த நாட்டின் தலைவிதி இன்னும் ஒருசில நாட்க ளில் தெரிந்துவிடும். அதுவரை நம்மை எதிரிப் படைகள் எந்தவிதத்திலும் இடைஞ்சல் செய்யாது. அதன் பிறகு வெகு சீக்கிரம் மதுரவாணியின் திருமணத்தை நடத்தி விட்டால் போயிற்று!''

''இருந்தாலும் எனக்கு ஒரு பக்கம் பயமாக இருக்கி றது. இங்கிருந்து நாம் மட்டும் தப்பித்துச் செல்வதற்கு ஏதாவது மார்க்கம் இருந்தால் சொல்லுங்கள். பட்டீஸ்வரத் திலுள்ள நமது வீட்டிற்குச் சென்று விடுவோம். அங்கேயே நமது பெண்ணின் திருமணத்தையும் நடத்தி விடலாம்.''

''எந்த நாட்டையும் எதிரிப் படைகள் முற்றுகை செய்யும் காலத்தில் அந்தணர், அறவோர், பெண்கள், குழந்தைகள், வயோதிகர், நோயாளிகள் போன்றவர்களை அங்கிருந்து வெளியேற அனுமதிப்பதும் வழக்கம்தான். அந்த முறையில் நாம் அனைவருமே இங்கிருந்து வெளி யேறி விட நல்ல வாய்ப்பு இருக்கிறது.''

''பிறகு என்ன? இன்றே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்களேன்!''

''நான் ஒரு சாதாரண மனிதனாக இருந்தால் அப்படிச் செய்திருப்பேன் நாகு! இந்த நாட்டின் அமைச்சர் மன்ன னுக்குச் சோதனை காலம் வந்தபொழுது அவனைக் கைவிட்டு விட்டுத் தான் மட்டும் தப்பித்து ஓடிவிட்டார் என்ற அவச்சொல் எனக்கு வரக்கூடாது என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அந்த நினைப்பை அடியோடு மறந்துவிட் டேன்.''

''விஜயராகவ நாயக்கன் வெல்வதற்கான வாய்ப்பே இல்லையா?''

''அடியோடும் இல்லை.''

''மன்னார்தாசன் இன்னமும் சிறையில் தான் இருக்கிறானா?''

''ஆமாம். தனக்கு ஒரு மகன் இருக்கிறான் என்ற எண்ணத்தையே மன்னனும் மறந்துவிட்டான். இனியும் அவனைச் சிறையில் இருந்து விடுவிப்பான் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.''

''பாவி! அந்த நாசக்காரனால் நம் குழந்தைக்கு எவ்வளவு அவப்பெயர் வரநேரிட்டது! நல்லவேளை ஈஸ்வரன் கிருபையால் அது நடக்காமல் தடுக்கப்பட்டது. மதுரைப் படைகள் ஜெயித்து விட்டால் மன்னார்தாசன் நிலைமை என்னவாகும்?''

''சொக்கநாத நாயக்கன் இந்த நாட்டைப் பிடித்து, தஞ்சைக்கு மன்னனாக முடி சூட்டிய பிறகு, இந்த நாட்டின் வாரிசை உயிரோடு விட்டு வைக்கமாட்டான். இல்லாவிட்டால் சாகும்வரை அவனை சித்திரவதைக்குள்ளாக்குவான்.''

''அவன் எப்படியும் நாசமாகப் போகட்டும். நமது மகள் மதுரவாணியின் திருமணம் சீக்கிரம் நடக்க வேண்டுமே என்று தான் எனக்குக் கவலையாக இருக்கிறது'' என்று பெருமூச்சு விட்டவாறு அங்கிருந்து நகர்ந்தாள் நாகாம்பாள்.

இவ்வளவு உரையாடல்களையும் பக்கத்து அறைக்குள் இருந்த மஞ்சத்தில் சாய்ந்து இருந்தவாறு கேட்டுக் கொண்டிருந்தாள் மதுரவாணி!

நாடு இப்பொழுது இருக்கும் நிலைமையை நினைத்து ஒரு பக்கம் அவளுக்கு கலக்கமாக இருந்தாலும், மன்னார் தாசனின் நிலைமை பற்றி நினைத்து மற்றொரு பக்கம் தன்னைத்தானே பாராட்டிக் கொண்டாள்.

நல்லவேளை! புத்திசாலித்தனமாக அன்று நடந்து கொண்டேன்! இல்லாவிட்டால் இளவரசனுக்கு முன்பே என்னுடைய நிலைமை கவலைக்கு இடமாகி இருக்கும்.

மன்னார்தாசனுக்கு இப்பொழுது நாடும் போயிற்று! எதிர்கால வாழ்வும் மண்ணோடு மண்ணாக ஆகப்போகிறது. இப்படிப்பட்ட ஆபத்தில் என் வாழ்க்கையும் சிக்கிச் சீரழிந்து போய்விடும் என்று தான் இறைவன் சரியான நேரத்தில் தப்பித்துக் கொள்ள வகை செய்து இருக்கிறான்!

மன்னார்தாசன் மனதிற்குள் என்னைத் திட்டிக் கொண்டு இருப்பார்! சபிப்பார்! அதற்காக என் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்ள முடியுமா?

எப்படியோ இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். நடக்கவில்லை. அப்படி நடக்காதது நல்லது என்று இப்பொழுது தானே தெரிகிறது என்று நினைத்தவாறு மதுரவாணி ஏதோ ஒரு பாடலை மெதுவாகப் பாட ஆரம்பித்தாள்.

**கா**லைப் பொழுது புலர்ந்த பின்னரும் படுத்திருந்த கட்டிலைவிட்டு எழுந்திருக்காமல் இளவரசி சந்திரவதனா குப்புறப்படுத்தபடியே இருந்தாள்.

இரவு முழுவதும் தூங்காமல் இருந்தது மட்டுமின்றி அவ்வப்பொழுது தன்னுடைய நிலைமையை நினைத்து நினைத்துக் கண்ணீர் சிந்தியதால் அவள் தலையணையின் பெரும்பகுதி நினைந்திருந்து மட்டுமின்றி, அவள் கண்கள் சிவந்து போய்க் காணப்பட்டன.

அவள் தாய் காந்திமதி தேவியாரின் நிலைமையும் கிட்டத்தட்ட அதே மாதிரி இருந்த போதிலும், பொழுது புலர்ந்ததுமே எழுந்து தன்னுடைய காலைக் கடன்களை முடித்துவிட்டு, மறுபடியும் அந்த அறைக்குள் நுழைந்த

வள் தன்னுடைய மகள் சந்திரவதனா இன்னமும் படுக்கை யில் படுத்தே கிடப்பதைப் பார்த்தான்.

சந்திரவதனா படுத்திருக்கும் கோலம் அவள் மனதை வாளால் அறுத்தது போல வேதனைப்படுத்தியது. கடந்த சில நாட்களாகச் சந்திரவதனா சரியாகச் சாப்பிடாமலும், தனது ஆடைகள் மீது நாட்டமின்றி, அலங்காரத்தைப் பற்றிய அக்கறையே இல்லாது இருந்ததாலும், அவளது அழகின் பெரும் பகுதி வற்றிப் போனது மாதிரி ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி இருந்தது.

காந்திமதி தேவியாருக்குக் கண்களில் நீர் கசிந்தது. மெதுவாக மஞ்சத்தினருகே சென்று, சந்திரவதனாவின் தோளைத் தொட்டு உசுப்பினாள்.

''சந்திரா... சந்திரா... எழுந்திரும்மா... விடிந்து எவ்வ ளவு நேரம் ஆகிவிட்டது என்று பார்....''

சந்திரவதனா மெதுவாகத் திரும்பிப் படுத்துத் தனது தாயைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

கண்கள் கலங்கியும், சிவந்தும், தலை கலைந்தும் கிடக்கும் அவள் கோலம் தாயின் மனதை மேலும் வாட்டி யது.

''சந்திரா இன்னும் எழுந்திருக்க மனம் வரவில் லையா? எழுந்திரும்மா! சீக்கிரம் குளித்துவிட்டு வா'' என்று கலங்கிய குரலைக் கட்டுப்படுத்தியவாறு சொன் னாள்.

''நான் குளித்துவிட்டு வருவதால் என்ன பலன் இருக் கப் போகிறது? நீங்கள் போங்கள்'' என்றவாறு திரும்பிப் படுத்தாள்.

''ஏன் கண்ணே அப்படிச் சொல்கிறாய்? உனக்காகத் தானே நான் காத்திருக்கிறேன். சீக்கிரம் எழுந்து குளித்து விட்டு வா.''

''எனக்காக நீங்கள் ஏனம்மா காத்துக் கிடக்க வேண்டும்? நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்.''

''என் வேலையை நான் பார்ப்பதற்கு உடலில் தெம்பு வேண்டாமா? அதற்காக நான் சாப்பிட வேண்டுமே! உன்னை விட்டுவிட்டு நான் மட்டும் தனியாக எப்பொழுது சாப்பிட்டிருக்கிறேன்? சீக்கிரம் எழுந்து செல் கண்ணே! எனக்குப் பசிக்கிறது'' என்றவாறு சந்திரவதனாவில் தோளைப் பிடித்துத் தூக்கி மஞ்சத்தில் உட்கார்த்தி வைத்தாள்.

சந்திரவதனா வேண்டா வெறுப்பாக எழுந்து அருகில் இருக்கும் குளியல் அறையை நோக்கிச் சென்றாள்.

அவள் பின்னால் தாதி ஒருத்தி இளவரசி குளிப்பதற்குத் தேவையான மஞ்சள், கஸ்தூரி போன்ற வாசனைப் பொருட்கள் கலந்து அரைக்கப்பட்ட பூசு பொடிகளையும், குளித்த பின்னர் உடுப்பதற்கான மாற்று உடைகளையும் சுமந்தவாறு சென்றாள்.

சந்திரவதனா உயிரற்ற பொம்மையைப் போலக் குளித்து முடித்துத் திரும்பத் தொடங்கினாள்.

சந்திரவதனா குளிக்கச் செல்லும் பொழுதும் சரி, குளித்து முடித்து வரும்பொழுது சரி கூட வந்த தாதியில் இருந்து, எதிரே வந்த சில அந்தப்புர மகளிர் வரை யாரும் எதுவும் பேசவில்லை. அங்கு நடமாடிய ஒவ்வொருவரின் முகத்திலும் சொல்ல முடியாச் சோகம் சூழ்ந்திருந்தது.

எந்த நேரமும் மகளிரது பாட்டும், ஓட்டமும், கேலிப் பேச்சுகளும் கலகலப்பாகக் கேட்டுக் கொண்டிருக்கும் அந்தப்புரம் இப்பொழுது மயான அமைதியில் தவழ்ந்து கொண்டிருந்தது.

அந்தப்புர மகளிர் ஆசையுடன் வளர்த்த செல்லப் பிராணிகள் மட்டும் சீந்துவாரற்று அவ்வப்பொழுது பரி

தாபமாகக் கத்திக் கொண்டிருந்தன. அவற்றுக்கு வேண்டா வெறுப்பாக உணவை வைத்துவிட்டு வேகமாகச் சிலர் சென்றனர்.

இத்தனையையும் கண்காளால் பார்த்து உணர்ந்த இளவரசி தனக்குள் மேலும் சித்திரவதையை அனுபவித்தாள்.

இவ்வளவற்றுக்கும் நான்தானே காரணம்? நான் பிறந்திராவிட்டால் இப்படி ஒரு நிலைமையே இந்த நாட்டுக்கு வந்திருக்காதே!

மனதில் சோகத்தைச் சுமந்தவாறு அன்னையின் அறைக்குள் நுழைந்தாள்.

அங்குள்ள ஆசனங்களில் விதவிதமான உணவு வகைகள் பரிமாறப்பட்டுத் தயார் நிலையில் இருந்தன. அவள் தாய், சந்திரவதனாவின் கரத்தைப் பற்றித் தன்னருகே உட்கார வைத்தாள்.

''சாப்பிடு சந்திரா'' என்றவாறு உணவுத் தட்டுக்களை இளவரசி அருகே நகர்த்தி வைத்தாள்.

இளவரசி அதைப் பற்றிய உணர்வே இல்லாததுபோல் உட்கார்ந்திருந்தாள். கண்கள் சாப்பாட்டுத் தட்டைப் பார்த்ததுபோல் இருந்தாலும் சிந்தனை எங்கோ இருந்தது.

''என்ன சந்திரா யோசிக்கிறாய்? சாப்பிடும்மா! என் கண்ணுல்ல'' என்றவாறு அவளது கையைப்பற்றி, உணவுக் கவளம் ஒன்றை அதில் திணித்து, வாயருகே கொண்டு சென்றாள்.

சந்திரவதனா கையிலுள்ள உணவுக் கவளத்தைக் கீழே போட்டு விட்டுக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

''என்ன சந்திரா, ஏன் அழுகிறாய்?'' என்று அவள் தாய் காந்திமதி தேவியார் அவளைக் கேட்டாலும் அவளது கண்களும் கண்ணீர் கசியத் தொடங்கி இருந்தன.

''வேண்டா.. வேண்டாம்... எனக்கு எதுவும் வேண்டாம்'' என்று அவள் கையை உதறிவிட்டு அழுதவாறு வேகமாக ஓடி மஞ்சத்தில் குப்புறப்படுத்துக் கொண்டாள்.

முகத்தை மஞ்சத்தில் புதைத்தவாறு ஓசையின்றி அவள் அழுதபோதிலும், அவள் உடல் குலுங்கும் காட்சியைப் பார்த்துச் செய்வதறியாமல் துடித்தாள் அவள் தாய்.

கடவுளே! இந்தப் பெண்ணின் மனமும் புரிகிறது. என் கணவரின் பிடிவாதத்திலும் அர்த்தம் இருக்கிறது. இதற்கு ஒரு விடிவு காலம் வராதா?

காந்திமதி தேவியார் இதை நினைத்து இப்பொழுது கண்ணீர் பெருக்கியவாறு, தானும் சாப்பிடாமல் எழுந்து செல்லத் தொடங்கினாள்.

இதே சமயம்தான் சொக்கநாத நாயக்கன் அனுப்பிய தூதுவன் தஞ்சை அரண்மனையின் திட்டி வாசற்கதவருகே வந்து நின்று, தன் வரவை முரசறைந்து அறிவித்தான்.



# 67

தூது முரசு ஒலிக்கப்பட்ட ஓலையைக் கேட்டுத் தஞ்சை அரண்மனையின் நெடிதுயர்ந்த கபாடத்தில் சிறிதாக அமைக்கப்பட்டிருந்த திட்டிவாசற் கதவு திறக்கப்பட்டது. காவல் வீரன் ஒருவன் அதன் வழியாக எட்டிப் பார்த்தான்.

''எமது மாமன்னர் தங்களது வேந்தரிடம் என்னைத் தூதுச் செல்லும்படி பணித்திருக்கிறார். தங்கள் அரசரின் மௌன விரதம் இனிதே முடிந்திருக்குமாயின், நான் அவருடன் எமது மன்னர் கூறிய விவரங்களைப் பற்றிப் பேச இயலுமா என்று அறிந்து வா காவலனே!'' என்று தூதுவன் பணிவுடன் பேசினான்.

இதைக் கேட்டபிறகு தஞ்சை வீரன் மறுபடியும் திட்டிவாசற் கதவை இறுக அடைத்துக் கொண்டான்.

சற்று நேரத்தில் இந்தச் செய்தி தளவாய் ரங்கப்ப நாயக்கனின் காதுகளுக்கு எட்டியது. தளவாய் வேகமாக மன்னரது பூஜை அறையை நோக்கிச் சென்றான்.

விஜயராகவ நாயக்கன் அதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பாகத்தான் தனது மௌன விரதத்தை முடித்துக் கொண்டு இறைவனது திருவுருவச் சிலையின் முன்பாக

நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கிவிட்டு எழுந்தான்.

தளவாய் மன்னன் அருகில் சென்று பணிவுடன் தலை வணங்கி நின்றான்.

''நமோ நாராயணா! எல்லாம் ஆண்டவன் சித்தப்படி நடக்கும்! எப்படி இருக்கிறது நிலைமை ரங்கப்பா?'' என்று மெதுவாக வினவினான் மன்னன்.

''நிலைமையில் எவ்வித மாற்றமும் இதுவரை ஏற்படவில்லை மன்னா! சொக்கநாதன் அனுப்பிய தூதுவன் ஒருவன் தங்களை நேரில் சந்திப்பதற்கான அனுமதி வேண்டி அரண்மனை வாயிலில் காத்து நிற்கிறானாம்!''

''நேற்றே என்னுடைய முடிவைப் பற்றி எழுத்து மூலம் தெளிவாகச் சொல்லிவிட்டேனே! இன்று எதற்காக மறுபடியும் தூது அனுப்பி இருககிறான் அந்த நாய்?''

''நேரில் பேசித் தங்கள் மனதை மாற்ற முடியும் என்ற நோக்கத்தில் அனுப்பி இருக்கலாம்.''

''அமைச்சர் எங்கே இருக்கிறார்? சீக்கிரம் வரச் சொல்.''

''அமைச்சரின் மாளிகையைச் சுற்றி மதுரைப் படைகள் சூழ்ந்து இருக்கின்றன. அமைச்சர் மட்டுமல்ல நமது அரசின் முக்கியப் பிரதானிகள் அனைவர் மாளிகைகளுக்கும் அதே நிலைதான். மாளிகைக்குள் சிறை வைக்கப்பட்ட நிலையில் கிடந்து வாடிக் கொண்டிருக்கிறார்கள். அரண்மனையைச் சுற்றிலும் அவர்கள் படை நம்மைத் தாக்குவதற்கான தயார் நிலையில் காத்து கிடக்கிறது'' என்றான் தளவாய் வருத்தம் கலந்து.

இதைக்கேட்ட விஜயராகவ நாயக்கன் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

''இப்படிப்பட்ட நிலையில் தூதுவனிடம் இனி என்ன பேச வேண்டி இருக்கிறது? அனுமதி மறுக்கப்பட்டது என்று சொல்லிவிடுவோமா?''

''வேண்டாம் ரங்கப்பா! தூதுவன் வரட்டும். நான் பேசிக் கொள்கிறேன்'' என்றான் அமைதியாக.

சற்று நேரத்தில் தளவாய் அரண்மனை வாசலுக்குச் சென்று தனது வீரர்களிடம் உத்தரவிட்டான்.

மதுரைத் தூதுவன் மட்டும் திட்டிவாசற் கதவு வழியாக உள்ளே அனுமதிக்கப்பட்டான். அவனைப் பாதுகாப்புடன் தர்பார் மண்டபத்திற்குள் கூட்டிச் சென்றான் தளவாய் ரங்கப்ப நாயக்கன்.

தர்பார் மண்டபத்தில் தனித்து உயர்ந்த ஆசனம் ஒன்றில் மன்னன் விஜயராகவ நாயக்கன் சோர்வுடன் அமர்ந்திருந்தான். அவனருகே விரல்விட்டு எண்ணைக் கூடிய அளவிற்கே வீரர்கள் ஆயுதங்களை ஏந்தியவாறு நின்று கொண்டு இருந்தனர்.

மதுரைத் தூதுவன் மன்னனைப் பார்த்துப் பணிவுடன் வணங்கிப் பேச்சை ஆரம்பித்தான்.

''தஞ்சை மன்னருக்கு என் தலைதாழ்ந்த வணக்கம். தங்களது மௌன விரதம் முடிந்து ஆண்டவன் திருவருள் பாலிக்க வேண்டும் என்பதே எமது வேந்தரின் விருப்பமாகும்.''

''என்ன விஷயமாக இங்கு மறுபடியும் தூது அனுப்பி இருக்கிறான் சொக்கநாதன்?''

''எப்பொழுதும் ஒரே விஷயம் குறித்துத்தான் எமது மன்னர் இதுவரை தூது அனுப்பிக் கொண்டிருக்கிறார்.

அதேபோன்று எப்பொழுதும் என் முடிவு ஒன்றுதான் என்று இன்னுமா உமது மன்னனுக்கு புரியவில்லை. இல்லை புரியக்கூடிய சக்தி இல்லையா?'' என்றான் கோப மாக.

''மன்னா தயவு யெது சற்றுப் பொறுமைக் காத்தரு ளுங்கள். வயதில் முதிர்ந்த தங்களது அறிவிற்கும், அனுப வத்திற்கும், சிந்தனைத் திறத்திற்கும் ஒப்பானவர் இம்மூவு லகிலும் தேடினாலும் கிடைக்காது. அப்படிப்பட்டத் தாங் கள் ஒரு சின்னஞ்சிறு விஷயத்திற்காக இத்தனை பிடிவா தம் பிடிப்பது வியப்புக்குரிய ஒன்று.''

''எதடா சின்னஞ்சிறு விஷயம்? எதிரியான எனக்கு எந்த விதத்திலும் ஈடு இல்லாத, வேலைக்காரப் பரம்பரை யில் வந்த, அதிலும் முறை தவறி வந்த ஒருவனுக்கு என் பெண்ணை மணம் முடித்துக் கொடுத்து, அவன் காலடியில் பணிவதா சின்னஞ்சிறு விஷயம்?''

''மன்னர் ஆத்திரப்பட்டால் அடியேன் தாங்கமாட் டேன். தாங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். இதனைச் சொன்னதற்கு மன்னிப்புக் கோருகிறேன் மன்னா! தங்கள் செல்வியை எமது மன்னருக்குத் திரும ணம் செய்து தந்தால் மாமனார் என்ற முறையில் எமது மன்னர்தான் தங்கள் காலடியில் விழுந்து வணங்கித் தங்கள் ஆசிப் பெறவேண்டும்.''

''இரண்டும் இரண்டும் நான்கு தான். மூன்றும் ஒன் றும் நான்குதான். நீ எப்படிச் சொன்னாலும் விஷயம் ஒன்றுதானே! திருமணம் என்ற எணணமே எனக்குத் தலைகுனிவான விஷயம் என்பது என் சிந்தனையில் மாறாத ஒன்று!''

''இரு குடும்பங்களுக்கான மணவினைத் தொடர்பு திருமலை மன்னர் காலத்திலேயே பாலும் நீரும்போல்

இரண்டறக் கலந்து விட்டதை மன்னர். மறந்துவிடக் கூடாது.''

''அந்தப் பால் திரிந்து, கெட்டுப் போய்த் துர்நாற்றம் ஏற்பட்டுத் தூரக் கொட்டியதையும் நான் மறந்துவிட வில்லை. அந்தப் பேச்சு வேண்டாம். வேறு ஏதாவது இருந்தால் சொல்.''

''இப்பொழுதுள்ள நிலைமையைச் சற்று யோசித்துப் பாருங்கள் மன்னா! இந்த நாடு முழுவதும் எங்கள் கைக்கு வந்துவிட்டது. அரண்மனைக்கு வெளியே அனைத்துத் திசைகளிலும் எமது மன்னரின் மாபெரும் படை கடலைப் போலக் கரைகாண முடியாமல் காட்சி அளிக்கிறது. நகருக் குள் இருக்கும் தங்கள் உயர் அதிகாரிகள் அனைவரும் வீட்டிற்குள் சிறை வைக்கப்பட்ட நிலையில் திண்டாடிக் கொண்டு இருக்கின்றார்கள். உங்கள் படை எங்களிடம் சரண் அடைந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. இப்படிப் பட்ட நிலையில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே உள்ள வீரர்களை மட்டும் வைத்துக் கொண்டு எங்களை வென்றுவிடலாம் என்று நீங்கள் நினைப்பது இயலாத ஒன்று!''

''அதற்காக நான் என்ன செய்ய வேண்டும் என்று உன் அரசன் நினைக்கிறான்? அதையும் சொல்.''

''தங்களைப் போன்ற மாமனிதரைச் சரணடையச் சொல்லி எமது மன்னர் உத்தரவிடவில்லை. எல்லாவற்றை யும் இழந்த நிலையில் தங்கள் நிலையைப் பரிசீலனை செய்யச் சொன்னார்.''

''யானை படுத்துவிட்டதே என்று கொக்கரிக்கிறானா? யானை படுத்தாலும் குதிரை உயரம் என்பதைப் புரிந்து கொள்ளச் சொல்.''

''தாங்கள் உயர்ந்தவர்தான் மன்னா! இருப்பினும் தாங்கள் எமது மன்னரின் விருப்பத்திற்கு இசைவதாக ஒரே ஒரு வார்த்தை கூறினால் போதும். தங்களின் அந்தஸ்திற்கு எந்தவிதக் குறையும் ஏற்படாது.''

''இந்த விஜயராகவ நாயக்கன் நேற்றைக்கு ஒரு பேச்சு இன்றைக்கு ஒரு பேச்சு என்று மாறிப் பேசுபவன் அல்லன்! இப்பொதுள்ள நிலையைப் பார்த்துப் பயந்து மாறிப் பேசும் அளவுக்குக் கோழையும் அல்லன்!''

''அந்தப் பொருளில் நான் பேசவில்லை மன்னா!''

★''நீ எந்தப் பொருளில் பேசினாலும் அதற்கு என் பதில் இதுதான். உயிர் முக்கியமா இல்லை மானம் முக்கியமா? எந்த நிலைமையிலும் எப்படிப்பட்ட ஆபத்து சூழ்ந்த போதிலும் எமது மானம் ஒன்றே பெரிதென நினைத்து வாழ்பவன் நான். அதனால் இதுவே உமது மன்னர் அனுப்பிய கடைசித் தூதாக இருக்கட்டும். இனி தூது அனுப்ப வேண்டாம் என்று உனது வேந்தனிடம் கூறிவிடு. பிடிவாதமாக அனுப்பினாலும் நான் அனுமதிக்க மாட்டேன். கூடிய சீக்கிரமே உன் மன்னனைப் போர்க் களத்தில் நேருக்கு நேர் சந்திக்கிறேன் என்று சொல்.''

தூதுவன் மறுபடியும் ஏதோ பேச முயன்றபொழுது விஜயராகவ நாயக்கன் கை உயர்த்தித் தடுத்தான்.

''நீ போகலாம்'' என்றான் அமைதியாக.

மறுவிநாடியே தளவாயும் சில வீரர்களும் அந்தத் தூதுவனைப் பாதுகாப்பாக அங்கிருந்து வெளியேறச் செய்தனர்.

மதுரைத் தூதுவனை மறுபடியும் அரண்மனைத் திட்டி வாசல் வழியாக வெளியே அனுப்பி வைத்த தளவாய், வேகமாக மன்னன் இருக்கும் தர்பார் மண்டபத்திற்கு ஓடோடி வந்தான்.

விஜயராகவ நாயக்கன் தன்னுடைய ஆசனத்தில் மிகவும் சோர்வுடன் அமர்ந்தவாறு, கண்கள் விதானத்தில் நிலைக்குத்தி இருக்க, நீண்ட சிந்தனையில் ஆழ்ந்து இருந்தான்.

தளவாய் மன்னன் அருகில் வந்து பணிவுடன் நின்று மெதுவாகப் பேசத் தொடங்கினான்.

''மன்னா, இப்பொழுது வந்த தூதுவன் சொல்லியதில் பெரும்பகுதி உண்மை என்பதைச் சொல்ல எனக்கு வருத்தமாக இருக்கிறது மன்னா?''

''எதைச் சொல்கிறாய் ரங்கப்பா?'' என்றான் கோபமாக.

''அரண்மனைக்கு வெளியே உள்ள எதிரிப் படைகளின் அளவு பெரியது. நம்மிடம் இருக்கும் வீரர்கள் நூறு கூடத்தேற மாட்டார்களோ என்று அச்சமாக இருக்கிறது.''

''உனக்குப் பயமாக இருந்தால், நீ தாராளமாக அவர்களிடம் சென்று சரணடைந்துவிடு! என் உயிர் இருக்கும் வரை நான் போராடப் போகிறேன்.''

''என்னைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள் மன்னா! என் மகனின் உயிரைக் குடித்த மாபாவியின் தலையை என் கையால் வெட்ட வேண்டும் என்று என் ஒவ்வோர் அணுவும் துடித்துக் கொண்டு இருக்கிறது. நானா அவனிடம் சரணடைவேன்? அதைவிடத் தங்கள் கையாலேயே மரணமடைவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.''

''பிறகு எதற்காகத் தயங்குகிறாய ரங்கப்பா?''

''இப்படிப்பட்ட இக்கட்டான சமயத்தில் இளவரசர் சிறையில் இருப்பது நல்லதல்ல. அவரை விடுவித்துத் தங்களுக்கு உதவியாக வைத்துக் கொள்வதே சிறந்தது என்று நினைக்கிறேன்.''

''அவனை என் மகன் என்று நினைப்பதை மறந்து பல காலம் ஆகிவிட்டது ரங்கப்பா!''

''அப்படிச் சொல்லாதீர்கள் மன்னா! தந்தைக்கு இடையூறு வரும் சமயம் தனயன் உதவிதான் மலை போன்றது.''

''அவன் செய்த காரியத்திற்கு மன்னிப்பு ஏது ரங்கப்பா?''

''ஏதோ அறியா வயது! இளமைத் துடிப்பில் செய்து விட்டார். இந்தச் சமயத்தில் அதனைப் பெரிதுபடுத்தாதீர்கள் மன்னா!''

''இந்த மாதிரி நிலையில் அவன் வந்து என்ன சாதித்து விடப் போகிறான்? எடுத்ததற்கெல்லாம் என்னைக் குற்றம் சொல்லி நாலு பேர் எதிரில் என்னை எடுத்தெறிந்து பேசியவன்! இப்பொழுது அவனை விடுவித்து வந்தாலும் என்னைத்தான் குற்றம் சொல்வான்.''

''நீங்கள் நினைப்பது போல் இருக்காது மன்னா! இத்தனை கால சிறைவாசம் அவரை நிச்சயம் மாற்றி இருக்கும். தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பார்கள். நமது நாடு இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் தங்களைக் காப்பாற்ற அவர் இரத்தம் துடிக்கத்தான் செய்யும்.''

''அப்படியே துடித்தாலும், நீ சொன்ன மாதிரி அளவிற் பெரிய படையுடன் அவன் மட்டும் மோதி ஜெயித்துவிட முடியுமா?''

''அப்படியானால் ஜெயிக்க முடியாது என்ற நம்பிக்கையில் சொக்கநாதனின் விருப்பத்திற்குச் சம்மதிக்கப் போகிறீர்களா?''

''என்ன வார்த்தைச் சொல்லிவிட்டாய் ரங்கப்பா? இதனை வேறு யாராவது சொல்லி இருந்தால் அவர் நாவைத் துண்டித்து இருப்பேன்.''

''என் நாவைத் துண்டிப்பதற்கு முன் நான் கேட்ட கேள்விக்குப் பதில் கூறுங்கள் மன்னா.''

''என் ஆவி அழிந்தாலும் அந்தப் பாவியின் விருப்பத் திற்கு அடிபணிய மாட்டேன்.''

''அதேபோன்று வாழ்ந்தால் அனைவரும் வாழ்வோம். மாண்டால் அனைவரும் மாள்வோம். இதில் மன்னார்தாச னும் அடங்கட்டும்.''

விஜயராகவ நாயக்கன் இந்த வார்த்தைகளைக் கேட்டு நெடிய சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு மெதுவாக நிமிர்ந்து தளவாய் ரங்கப்ப நாயக்கனைப் பார்த்துச் சொன் னான்.

''சரி ரங்கப்பா! மன்னார்தாசனை விடுதலை செய்து இங்கு கூட்டிவா!''

இதைக்கேட்டு மகிழ்ச்சியுடன் சிறைச்சாலையை நோக்கி ஓடினான் தளவாய்!

---

** We do not use double speech... is life the greatest, or is honor the greatest?... Hence cease consultations, and come and fight with us" - Oriental Historical Monsucripts - Vol.II - William Taylor - page no. 196-97.*

*... and the wish now occurred to the Dalavayi Rangappa Naicker to release Rim (Mannarudasan) taking advantage oif the present congucture. He in consequence spoke on this point to Achyta - Villia - Ragava Naickar, who consented, saying "it is well: let Manaru - sami be released and brought" - Oriental Historical Manuscripts - Vol.Ii - page no. 195.*

# 68



இளவரசன் மன்னார்தாசன் தனது தந்தையின் கால்களில் விழுந்து வணங்னான்.

விஜயராகவ நாயக்கன் தனது மைந்தனின் தோள்களைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினான்.

இருவரும் ஒருவர் முகத்தை மற்றொருவர் நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். இருவரது கண்களும் கலங்க ஆரம்பித்தன.

நீண்ட நாள் சிறைவாசம் மன்னார்தாசனின் உருவத்தை நிறையவே சிதைத்திருந்தது. தேகம் மெலிந்து வெளுத்துப் போய்க் காணப்பட்டது. முகத்தில் தாடி மயிர் செழித்து வளர்ந்திருந்தது. அங்கங்களும் ஆடைகளும் அழுக்கேறிப் போய்க் காணப்பட்டன.

இளமைத் துடிப்பில் செய்துவிட்ட தவறுக்காகத் தன்னுடைய மைந்தனை இந்த நிலைக்கு ஆளாகும்படி தண்டித்துவிட்டோமே என்று தஞ்சை மன்னன் மனதிற்குள் குமைந்தான்.

அதேநேரம் தந்தையின் நிலையைப் பார்த்துத் தனயன் கலங்கிக் கொண்டிருந்தான்.

இந்தத் தர்பார் மண்டபம் எத்தனை கோலாகலமாகக் காட்சி அளிக்கும்! அரசப் பிரதானிகளும், உயர் செல்வந்தர் களும் குடிமக்களும் சூழ்ந்த நிலையில் அரியனை மீது சிங்கம் என தந்தை அமர்ந்து ஆணை பிறப்பித்த காட்சிகள் அவன் மனதில் நிழலாடியது.

ஆனால் இன்றோ விசுவாசமிக்க ஒருசில வீரர்களை யும், தளவாய் ரங்கப்ப நாயக்கனையும் தவிர்த்தால் அத்த கைய தர்பார் மண்டபமே வெறிச்சோடிப் போய்க் காட்சி அளித்துக் கொண்டிருந்தது.

எண்பது வயதை எட்டிய நிலையிலும் எனக்கு நிகர் யாருமில்லை என்பதுபோல் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அடலேறுபோல் பார்வைசும் தன் தந்தை இன்று எதிரிப் படைகள் சூழ்ந்த நிலையில் சோர்வுடன் தளர்ந்துபோய் நிற்கும் காட்சி அவன் மனதைக் குலுக்கிவிட்டது.

இருவரும் தங்கள் கண்களில் நீர் வழிய ஒருவரை ஒருவர் பார்த்து உருகிக் கொண்டிருந்தனர்.

''எப்படி இருக்கிறாய் மன்னாரு? உன் உடல் நலம் நன்றாக இருக்கிறதா? விதி நம் வாழ்க்கையில் எப்படி எல்லாம் விளையாடிவிட்டது!''

''எனக்கு ஒரு குறையும் இல்லை தந்தையே! தாங்கள் எப்படி இருக்கிறீர்கள்? உடல் நலத்திற்கு ஒன்றும் குறை வில்லையே?'' கண்கள் கலங்கக் கேட்டான் இளவரசன்.

''நன்றாக இருக்கிறேனடா மகனே, நன்றாக இருக்கி றேன்! உன்னைச் சிறையில் தள்ளிவிட்டு நான் நன்றாகத் தான் இருக்கிறேன்!'' என்றவாறு மன்னார்தாசனைத் தன் தோளோடு இறுக அணைத்தவாறு கண்ணீர் விட்டான் மன்னன்.

இந்தக் காட்சிகளை அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த தளவாய் ரங்கப்ப நாயக்கனுக்கும் கண்கள் கலங்கின.

மன்னார்தாசனுடைய இந்த நிலைமைக்கு நான்தானே காரணம். என் மகன் அச்சுதப்பனுக்காக நான் என்னென்னவோ செய்தேனே! அத்தனையும் பாழாகி அச்சுதப்பனையும் இழந்து தவிக்கிறேனே! இப்படி ஒரு நிலைமை வந்துவிட்டதே என்று எண்ணி அவன் மனமும் கரைந்து கண்களில் நீர் வழிந்தது.

இளவரசனை அருகில் இருந்த ஆசனத்தில் அமரச் செய்து தானும் அவனருகில் அமர்ந்தான் விஜயராகவ நாயக்கன்.

''நீயும் உட்கார் ரங்கப்பா'' என்றதும் தளவாயும் தனது கண்களைத் துடைத்தவாறு அருகில் இருந்த மற்றோர் ஆசனத்தில் அமர்ந்தான்.

சற்று நேரம் யாரும் பேசாமல் மௌனமாக இருந்தனர்.

''நமது நாடு இப்பொழுது எந்த நிலைமையில் இருக்கிறது என்ற விவரம் உனக்குத் தெரியுமா மன்னாரு?'' என்று மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான் விஜயராகவ நாயக்கன்.

''தளவாய் மாமா சிறைச்சாலையில் இருந்து வரும் வழியில் எல்லா விவரங்களையும் கூறினார்'' என்றான் அமைதியாக மன்னார்தாசன்.

''நாடு, நகரங்கள் அத்தனையும் இழந்துவிட்டோம். வல்லம் கோட்டையையும், தஞ்சைக் கோட்டையையும் தவிடு பொடியாக்கி விட்டார்கள். இப்பொழுது நம் அரண்மனை வாசலில் எதிரிப் படைகள் குவிந்து கிடக்கின்றன. நம்மிடம் மிச்சம் இருப்பது என்ன தெரியுமா?''

இளவரசன் பதில் பேசாது தந்தையின் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். மன்னனோ சோகத்துடன் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான்.

''நமது உயிரும், விரல் விட்டு எண்ணக்கூடிய அள விற்கே உள்ள விசுவாசம் மிக்க சில வீரர்களும்தான் நம்முடைய இறுதி முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது மன்னாரு! நம் உயிரைவிட மானமே பெரிதென்று இந்த நாடு முழுவதும் தெரிந்து கொள்ளும் நேரம் வந்து விட்டது.''

''சொக்கநாதன் தூது அனுப்பியதாகத் தளவாய் மாமா வரும்போது கூறினார்'' என்று மெதுவாகக் கேட்டான் இளவரசன்.

''ஆம், அந்த நாய் தூது அனுப்பத்தான் செய்தான். ஒருமுறை அல்ல மூன்று முறை! விஜயராகவ நாயக்க னைப் பயமுறுத்தி எதையும் சாதித்து விடலாம் என்பது மட்டும் முடியவே முடியாத காரியம் என்று புரிந்து கொண்டிருப்பான்.''

''முடிவாக அந்தத் தூதுவனிடம் என்ன சொன் னீர்கள்?''

''இந்த விஜயராகவனைப் பொறுத்தமட்டில் ஒரே முடிவுதான்! என் உயிரே போனாலும் தகுதியற்ற உனக்குப் பெண் கொடுக்க ஒருக்காலும் ஒப்புக் கொள்ளமாட்டேன் என்று முகத்தில் அறைந்தாற்போல் சொல்லி அனுப்பி னேன்'' என்றான் மன்னனும் பெருமையாகத் தன்னுடைய மீசையைத் தடவி விட்டுக் கொண்டு!

''தந்தையே, தயவு செய்து எனக்காக இல்லாவிட்டா லும், என் தங்கை சந்திரவதனாவிற்காகச் சற்று நேரம் சிந்தித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட நிலைமையில் இவ் வளவு பிடிவாதம் காட்டுவதா சிறந்தது?''

இதைக் கேட்ட மன்னன் உடனே முகம் மாறித் தனது மகனை முறைத்துப் பார்த்தான்.

''எதையடா சிந்தித்துப் பார்க்கச் சொல்கிறாய்?''

''மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன் நம்மீது படையெடுத்து வந்து இத்தனை அழிவுகளை ஏற்படுத்திய தற்குக் காரணம் என்ன? நாடு பிடிக்கும் ஆசையா? இல்லை. நம்மிடம் இருக்கும் செல்வங்களைக் கொள்ளை யடிப்பதற்கா? இல்லவே இல்லை. நமது பெண் சந்திரவத னாவைத் திருமணம் செய்ய வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கத்திற்காகத்தானே?''

''அதுதானேயடா எல்லாவற்றையும்விடக் கொடுமை யான எண்ணம்!''

''எது தந்தையே கொடுமையானது? சந்திரவதனாவும் அவனும் உயிருக்குயிராக காதலித்தார்களே அதுவா கொடு மையானது? விருப்பமில்லாத பெண்ணைத் தூக்கி வருவ தற்காக அவன் படை கொண்டு வரவில்லையே? காதலித்த பெண்ணைக் கரம்பிடிக்க நீங்கள் அனுமதி மறுத்தீர்கள். முறைப்படி பெண் கேட்டு வந்த அவர்கள் தூதுவனை அவமதித்தீர்கள். சொக்காநதனின் பிறப்பையே பழித்து அவர்களிடமே பேசி அனுப்பினீர்கள். அதன் பிறகுதான் இத்தனை அவலமும் நமக்கு வந்து சேர்ந்து இருக்கிறது.''

''ஆம். அப்படித்தான்! அதற்காகப் பயந்து கொண்டு அவனுக்குப் பெண் தரவேண்டும் என்கிறாயா?'' கோபத்து டன் கேட்டான்.

''அதைத்தானே நான் ஆரம்பத்தில் இருந்தே சொல் லிக் கொண்டு வருகிறேனே! இப்பொழுதுகூட அந்த எண்ணத்தில் மாற்றமில்லை.''

இதைக் கேட்டவுடன் மன்னன் அருகில் இருந்த தனது தளவாயை முறைத்துப் பார்த்து 'சிறைச்சாலை இளவர சனை மாற்றி இருக்கும் என்றாயே! பார்த்தாயா இவன் பேசுவதை!' என்ற பொருள் அவன் முறைப்பில் தெரிந் தன. தளவாய் மௌனமாகத் தலைகுனிந்து கொண்டான்.

''தந்தையே, தயவு செய்து யோசித்துப் பாருங்கள்! தங்களால் இனி சாதிக்கப் போவது என்ன இருக்கிறது. தங்கையின் வாழ்க்கையைத் தங்களின் வீண் பிடிவாதத் தால் சிதைத்துக் கொண்டு இருக்கிறீர்கள்! உயிருக்கு உயிரா கக் காதலித்தும், உங்கள் வார்த்தைக்காகக் கட்டுப்பட்டு, சோகத்திற்குள் இதயத்தைப் புதைத்துப் புழுங்கிக் கொண் டிருக்கிறாளே சந்திரவதனா அத்தகைய நல்ல பெண்ணின் வாழ்வை வீணாக அழிக்கப் பார்க்கிறீர்களே இது நியாயமா?''

''எது நியாயம் என்று எடுத்துரைப்பதற்காக உன்னை நான் சிறையில் இருந்து விடுவித்து வரச் சொல்லவில்லை. ஒரு மகன் தந்தைக்கு செய்யும் கடமை பற்றிய உணர்வு கொஞ்சமாவது உனக்கு இருக்கிறதா என்று அறிவதற்காகத் தான்!''

''என் உடல், பொருள், ஆவி அனைத்திலும் அந்தக் கடமை உணர்வு எப்பொழுதும் நிறைந்து இருக்கிறது தந்தையே! அதேநேரம் ஒரு மகளுக்கு ஒரு தந்தை செய்து முடிக்க வேண்டிய கடமைகளை நீங்கள் மறுக்கிறீர்களே என்றுதான் கவலைப்படுகிறேன்.''

''அதற்காக என் எதிரியின் காலில் விழுந்து என் மகளை மணம் செய்து கொள் என்று கெஞ்ச என் மனம் ஒருநாளும் சம்மதிக்காது. எனக்கு மானம் ஒன்றுதான் பெரிது.''

''நீங்கள் கெஞ்ச வேண்டாம் தந்தையே! ஒரு வார்த்தை, ஒரே வார்த்தை சம்மதம் என்று மட்டும் சொல் லுங்கள். போதும், சொக்கநாதனை உங்கள் கால்களில் விழுந்து வணங்கச் சொல்கிறேன்.''

''எப்படிச் சொன்னாலும் என் மானம் போனது போனதுதானே!''

''மகளின் வாழ்க்கையைவிட உங்கள் மானம் பெரியதா?''

''எனக்கு மானக்கேடான நிலையை ஏற்படுத்திவிட்டு என் மகள் மகிழ்ச்சியுடன் வாழ்வதைவிட அவள் சாவதே மேல். எனக்கு மனைவி, மக்கள், நாடு எதுவும் பெரிதல்ல!''

''பிடிவாதம் செய்யாதீர்கள் தந்தையே...''

''டேய்! எதற்கடா, வீணான வாதம்? நான் உன் தந்தை என்பது உண்மையானால், நீ எனக்குப் பிறந்தவன் என்பது உண்மையானால், நீ என்னுடைய வார்த்தைக்குக் கட்டுப் பட்டு நடக்கப் போகிறாயா இல்லையா?''

''அந்த எண்ணத்தில்தான் நானும் தங்களைச் சந்திக்க இங்கு வந்திருக்கிறேன்.''

''என் முடிவு எப்பொழுதுமே மாறாது! நான் உயிரோடு இருக்கும்வரை மட்டுமல்ல என் உயிர் போய்விட்ட பின்னர்கூட, என் மகளை, என் ஆசைக் கண்மணி சந்திர வதனாவின் அங்கங்களைப் பார்ப்பதற்குக்கூட அந்த நாய், இழிபிறவி சொக்கநாத நாயக்கனை அனுமதிக்கவே மாட்டேன். இது ஆண்டவன் மீது சத்தியம்! இதோ, இப்பொழுதே என்னுடைய ஆவியைப் பறிக்க எதிரி தயார் நிலையில் காத்துக் கொண்டு இருக்கிறான். என் மானம் காக்க, என் மகன் என்ற உண்மையை நிலைநாட்ட, என்னைப் போலவே மானத்தை மதித்து என்னோடு தோள் சேர்ந்து எதிரிகளுடன் போர் புரிய உனக்கு விருப்பம் இருக்கிறதா என்று அறிந்து கொள்ளவே உன்னை நான் இங்கு கூட்டி வரச்சொன்னேன், சொல்.''

மன்னார்தாசன் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

''உனக்கு விருப்பம் இல்லாவிட்டால் நீ தாராளமாக இங்கிருந்து வெளியேறலாம். உன் இஷ்டப்படி எங்கு

வேண்டுமானாலும் போ. எதிரி சொக்கநாதனுடன் சேர்ந்து என்னையே கூட எதிர்க்கலாம். எது உன் எண்ணம் சொல்லடா?'' மன்னன் விரக்தியுடன் கேட்டான்.

''தாங்கள் செய்தது அத்தனையும தவறு தந்தையே! செய்யப்போவதும் முழுக்க முழுக்கத் தவறு! என் கடமை, சொல்ல வேண்டியதைச் சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை. இருந்தாலும் என் கடமையில் இருந்து வழுவ நானும் விரும்பவில்லை.''

மன்னன் அவனை ஏறிட்டுப் பார்த்தான் புரியமால்.

''பெற்று வளர்த்த காரணத்திற்காக, தந்தையின் கட்டளையை மீறக் கூடாது என்பதற்காக, தந்தைக்கு ஏற்படும் ஆபத்தில் தனயனும் தோள் கொடுக்க வேண்டும் என்ற கடமைக்காக, நீங்கள் செய்தது தவறாக இருந்தாலும், உங்கள் கட்டளைக்கு அடிபணிகிறேன் தந்தையே!'' என்றான் எழுந்து நின்று!

இதைக் கேட்டவுடன் விஜயராகவ நாயக்கனும் எழுந்து மகனை அணைத்துக் கொண்டான், கண்களில் நீர் மல்க.

''சொல்லுங்கள் தந்தையே! நான் இனி என்ன செய்ய வேண்டும். கட்டளை இடுங்கள். நிறைவேற்றுகிறேன்'' என்றான் தன் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்ட இளவரசன் மன்னார்தாசன்.

''பார்த்தாயா ரங்கப்பா! என் மகன் வேறு எப்படி இருப்பான்'' என்று தளவாயைப் பெருமைப் பொங்கப் பார்த்தான். பிறகு தனது கண்களைத் துடைத்தவாறு உறுதியான குரலில் தன் மைந்தனைப் பார்த்துக் கட்டளைகளைப் பிறப்பிக்கத் தொடங்கினான்.

''நீ முதலில் உனது அறைக்குச் சென்று, இளவரசனுக்குரிய சகல அலங்காரங்களும் பூண்டு, போர் புரிவதற்கான ஆயத்தங்களுடன் கிளம்பி வா, அதன் பிறகு நேரே அந்தப்புரத்திற்குச் சென்று...''

தொடர்ந்து மன்னன் கூறிய விஷயத்தைக் கேட்டதும் மன்னார்தாசன் எல்லையற்ற அதிர்ச்சிக்கு ஆளானான். தளவாயின் இதயம்கூட இதைக் கேட்டுத் தாளாத வேதனையில் ஆழ்ந்தது.

மன்னார்தாசன் மறுவிநாடியே தன்னுடைய தந்தையின் காலடியில் மண்டியிட்டு, அவர் கால்களைப் பிடித்துக் கெஞ்ச ஆரம்பித்தான்.

''இது மட்டும் வேண்டாம் தந்தையே! நீங்கள் என்ன சொன்னாலும் எதை செய்யச் சொன்னாலும் அப்படியே செய்கிறேன். ஆனால் இந்தக் காரியத்தை மட்டும் என்னால் செய்ய இயலாது. அதற்கான தெம்பு எனக்கு இல்லை'' என்று கண்ணீர்விட்டுக் கதறியவாறு கேட்டான்.

''இந்தக் காரியத்தை நீதான் செய்ய வேண்டும். அது உன்னால்தான் நிறைவேற வேண்டும் என்பதே என் கட்டளை'' என்று அமைதியான, தீர்க்கமான குரலில் சொன்னான் மன்னன் கண்கள் வெறிச்சோடியபடி!

இதைக் கேட்டபிறகு மன்னார்தாசன் ஓர் எந்திரத்தைப் போல் எழுந்து நின்றான்.

''அப்படியே செய்கிறேன் தந்தையே!'' என்று வணங்கியவாறு கூறிவிட்டுத் தனது அறையை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

வழியில் அவனுடைய நண்பன் அக்கிராஜுவும் சேர்ந்து கொண்டான். அவனிடம் நடந்த விவரங்களைக் கூறினான் இளவரசன். கேட்ட அக்கிராஜு அதிர்ச்சியுடன் வினவினான்.

''இதென்ன கொடுமை மன்னாரு? இந்தக் காரியத்தைச் செய்ய உனக்கு எப்படி மனம் வரும்?''

''விருப்பம் இல்லாவிட்டாலும் கடமை என்ற ஒரே ஒரு காரணத்திற்காகத் தந்தை சொல்லுக்குக் கட்டுப்பட்டான் மன்னார்தாசன் என்று காலம் சொல்லட்டும்'' என்றான் இளவரசன் விரக்தியுடன்.

# 69



தூசு படிந்த பளிங்குச் சிலை ஒன்று துவண்டு கிடப்பது போல் மஞ்சத்தில் சாய்ந்து படுத்திருந்த இளவரசி சந்திரவதனா, தன்னுடைய அண்ணன் மன்னார்தாசன் அங்கு வருவதைப் பார்த்தவுடன் தாங்க முடியாத வியப்பும், மகிழ்ச்சியும் துயரமும் சேர்ந்து அலைக்கழிக்க, அவசரமாக எழுந்து ஓடோடி வந்து அவனது கரங்களைப் பற்றிக் கொண்டு அழத் தொடங்கினாள்.

''எப்பொழுது அண்ணா சிறையில் இருந்து வந்தீர்கள்? இப்படி இளைத்து விட்டீர்களே! என்னால் இந்த நாட்டிற்கு ஏற்பட்ட நிலைமையைப் பார்த்தீர்களா அண்ணா!''

மன்னார்தாசன் அவளது கண்களைப் பரிவுடன் துடைத்துவிட்டு, அவள் தலையைப் பாசமுடன் வருடி, தனது தோள்மீது சாய்த்தவாறு, அவள் நிலையை நினைத்துக் கண்ணீர் பெருக்கினான்.

''சந்திரா, என் கண்ணே... உனக்காக.... உனக்காக... நான் எப்படி எல்லாம் தந்தையிடம்....'' அதற்குமேல் பேசமுடியாமல் குரல் கமறி அழுதான்.

''அழுது இனி என்ன பலன் அண்ணா? என் தலை விதி! தந்தை உங்களை இப்பொழுதாவது விடுதலை செய்தாரே என்று எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது அண்ணா! அழாதீர்கள்.''

''தலைவிதியா இது? நாமாக தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டது.... தந்தையின் பிடிவாதத் தால் இந்த நாட்டையே இழந்தது மட்டுமின்றி உன் வாழ்க்கையை நாசமாக்கிவிட முனைகிறாரே, அதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை சந்திரா!''

''பிறந்த உடனேயே என்னைக் கொன்று இருந்தால் உங்களுக்கு இத்தனை சோதனைகள் வந்திருக்காதே!'' என்றவாறு அவளும் அழுதாள்.

மன்னார்தாசன் ஒருகணம் அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். அவன் மனதில் புதிய வைராக்கியம் ஒன்று எழுந்தது.

''சந்திரா, இப்பொழுதாவது சொல். உன் வாழ்க்கை வளம் பெறுவதற்கு நான் எத்தகைய தியாகத்தையும் செய் யத் தயாராக இருக்கிறேன். இதனால் எனக்கு இழிச்சொல் ஏற்பட்டாலும் கவலை இல்லை.''

''என்ன சொல்லவேண்டும் அண்ணா?'' விரக்தியுடன் கேட்டாள்.

''தந்தைச் சொல்லைப் பற்றிக் கவலைப்படாமல் சொக்கநாதனைத் திருமணம் செய்யச் சம்மதம் என்று ஒரே ஒரு வார்த்தை சொல். உன்னை இப்பொழுதே இங்கிருந்து கூட்டிச் சென்று அவனுடன் இணைத்து வைக்கிறேன். இதற்காக நம் தந்தை கையால் சாகவும் நான் தயாராக இருக்கிறேன். உன் ஆசைக் காதலுனுடன் உன்னைச் சேர்த்து வைக்க நமது தந்தைக்கு எதிராக வாளேந்தவும் நான் தயாராக இருக்கிறேன். சொல் சந்திரா?''

சந்திரவதனா இதைக் கேட்டு விரக்தியுடன் சிரித்தாள்.

''இங்கு வருவதற்கு முன் தந்தையைச் சந்தித்துவிட்டு வந்தீர்களா?''

''ஆமாம்.''

''அப்பொழுது என் எதிர்காலத்தைப் பற்றி அவருடன் பேசி இருப்பீர்கள் இல்லையா?''

''ஆமாம் பேசினோம்.''

''தந்தை முடிவாக என்ன சொன்னார்?''

''மானத்தைக் காப்பதற்காக மதுரைப் படைகளுடன் நேருக்கு நேர் மோதி உயிர் பிரியும்வரை போராட முடிவெடுத்துவிட்டார். நாங்கள் அனைவரும் அழியப் போவது நிச்சயம். எங்களது சாவிற்குப் பின்னர் சொக்கநாதன் படைகளுடன் அந்தப்புரத்திற்குள் நுழைந்து உன்னை கவர்ந்து செல்லும் நினைப்புடன் வருவான். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. நீ இருந்த சுவடே தெரியாத அளவுக்கு...'' இதற்கு மேலும் சொல்லத் துணிச்சலின்றி தொண்டை நடுங்க குமுறிக் குமுறி அழுதான்.

''மீதியையும் சொல்லுங்கள் அண்ணா! நான் இருந்தே சுவடே தெரியாத அளவுக்கு....''

''அதைச் சொல்லத் துணிச்சல் வரவில்லை சந்திரா.''

''எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள் அண்ணா!''

மன்னார்தாசன் குமுறிக் குமுறி அழுதவாறு தந்தை செய்யச் சொன்ன காரியத்தைச் சொன்னான். சொல்லி முடித்துத் தங்கையின் தலையைத் தோளில் அணைத்தவாறு, கண்ணீர் பெருக்கினான்.

சந்திரவதனா நிமிர்ந்து அவனைப் பார்த்து உறுதியான குரலில் ''என்னைப் பெற்று வளர்த்த தந்தையே, நான் இப்படித்தான் சாகவேண்டும் என்று தீர்மானித்து விட்ட

பிறகு, இனி நான் வாழ்ந்து என்ன சாதிக்கப் போகிறேன் அண்ணா?'' நாட்டையும் நகரங்களையும் செல்வங்களையும், பெற்றோர்களையும் என் பொருட்டு நாசம் செய்து விட்டு நான் மட்டும் நிம்மதியாக வாழ முடியும் என்றா நினைக்கிறீர்கள்? அதைவிட தந்தை சொல்படி சாவதே பெரிது அண்ணா! சொக்கநாதரின் மீது நான் கொண்டுள்ள காதல் இப்பொழுதும் என் இதயம் முழுவதும் நிறைந்து தான் இருக்கிறது. அதேசமயம் தந்தையின் கட்டளையை மீறிச் செயல்படும் சக்தி எனக்கு இல்லை'' என்றாள்.

''அந்தச் சக்தியை நான் உனக்குத் தருகிறேன்.''

''தேவையில்லை அண்ணா! தந்தை வாழச் சொன்னால் வாழ்வேன். அவரோ மாளச் சொல்கிறார். அவர் இஷ்டப்படியே செத்துப் போகிறேன். அவரிட்ட கட்டளையை நீங்கள் நிறைவேற்றுங்கள் அண்ணா!''

அதேநேரம் மன்னன் விஜயராகவ நாயக்கனின் மனைவியரான இளவரசி சந்திரவதனாவின் தாயாரான காந்திமதி தேவியாரும், இளவரசன் மன்னார்தாசனைப் பெற்றவளான இராஜகோபால கஞ்சிகா தேவியாரும் சோகத்துடன் அங்கு நுழைந்தனர்.

மன்னார்தாசன் இருவரது கால்களிலும் விழுந்து வணங்கினான். இருவரும் அவன் உச்சந்தலையில் முத்தமிட்டுக் கண்ணீர் பெருக்கினார்கள்.

''ஒரு முக்கியமான கட்டளையை உன் மூலம் தெரிவிப்பதாக மன்னரிடம் இருந்து செய்தி வந்தது. அதன்படி நடக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார். என்ன கட்டளை மன்னாரு?'' என்றாள் அவன் தாய் கவலை தோய்ந்த முகத்துடன்.

மன்னார்தாசன் சோர்வு கலந்த பெருமூச்சு ஒன்றை விட்டவாறு விஜயராகவ நாயக்கன் கூறியவற்றை விவரமாகச் சொன்னான்.

கேட்டு முடித்தவுடன் தேவியர் இருவரும் சற்றுநேரம் திகைப்புடன் இருந்தனர். பின்னர் இருவரும் இளவரசி சந்திரவதனாவைக் கட்டிப் பிடித்துக் கண்ணீர் மல்கினர்.

கண்களைத் துடைத்தவாறு காந்திமதி தேவியார் மன்னார்தாசனைப் பார்த்து உறுதியான குரலில் சொன்னார்.

''மன்னர் இட்ட கட்டளையைச் சிரமேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம் மன்னாரு! நீ அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம்.''

மன்னார்தாசன் உடனே அங்கிருந்து நகர்ந்து தனது நண்பன் அக்கிராஜுவை அழைத்துக் கொண்டு தந்தை இட்ட கட்டளையை நிறைவேற்ற ஆயத்தம் செய்யத் தொடங்கினான்.

தஞ்சை அரண்மனைக்கு வெளியே சூழ்ந்திருந்த மதுரைப் படைகளின் மத்தியில் முகாமிட்டிருந்த சொக்கநாத நாயக்கன் முன், தஞ்சை மன்னனிடம் தூது சென்று திரும்பியவன் பணிவுடன் சகல விவரங்களையும் கூறிக் கொண்டு இருந்தான்.

பக்கத்தில் வெங்கடகிருஷ்ணனும், சின்னத்தம்பி முதலியாரும், சின்னக்கத்திரி நாயக்கனும் அமர்ந்திருந்தனர்.

தூதுவன் சொன்ன விவரங்களைக் கேட்கக் கேட்கச் சொக்கநாதன் முகம் இறுகத் தொடங்கியது.

''என்ன சொக்கநாதா, இதற்கு மேலும் பொறுமை காக்க வேண்டும் என்கிறாயா?'' என்றான் வெங்கடகிருஷ்ணன்.

''விஜயராகவ நாயக்கனுக்கு கொடுக்கப்பட்ட காலக்கெடு முடிந்துவிட்டது கிருஷ்ணா! இனி நாம் அரண்மனை வாயில்களை உடைத்துக் கொண்டு உள்ளே செல்ல வேண்டியதுதான்.''

''பீரங்கி கொண்டு வாசற் கதவுகளைத் தகர்ந்து விடுவோமா?''

''பீரங்கிகளுக்கான மண் மேடுகள் அமைக்க நீண்ட நேரம் ஆகிவிடும். யானைகளின் கரத்தில் உலக்கை கொடுத்து, அந்தக் கதவுகளைப் பிளந்து எறியுங்கள்.''

ராணி வையாம்பிகா தேவியும், முத்துநகையும் ஏறி இருந்த ரதம் தஞ்சாவூரின் எல்லையை நெருங்கி விட்டிருந்தது.

முத்துநகை வெகு தூரத்தில் தெரிந்த காட்சியைப் பார்த்துத் திடுக்கட்டுப் போனாள்.

''அத்தை கோட்டைச் சுவர்கள் உடைந்து கிடக்கின்றன. தூரத்தில் தெரிவது எல்லாம் நம் அரசின் கொடி ஏந்திய வீரர்கள். எனக்கு ஒரு பக்கம் பயமாக இருக்கிறது அத்தை'' என்று பதறினாள்.

அதே பதற்றத்தில் ராணி வையாம்பிகா தேவி ''சீக்கிரம் ஓட்டு'' என்று ரதமோட்டியிடம் பரபரத்தாள்.

* தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன், போருக்குப் புறப்படுவதற்கான அலங்காரங்களைச் செய்து கொள்ள ஆரம்பித்தான். மனதில் வைராக்கியம் மட்டுமே கிளரந்து எழுந்து கொண்டிருந்தது.

எண்பது வயதைத் தாண்டிய பொழுதிலும் அவன் மனதில் இளமை துள்ளிக் குதித்துக் கொண்டிருப்பது போன்ற வெறி ஏற்பட்டது.

அவன் நெற்றியில் நீணடு, வளர்ந்து, தொங்கிக் கொண்டிருந்த புருவ முடிகளைத் தங்ககம்பிகள் கொண்டு சேர்த்து இறுக்கி மேலே தூக்கிக் கட்டினான். வயதான காரணத்தால் உலர்ந்து ஒட்டிப் பேய் இருந்த இடைகளில் விலையுயர்ந்த பட்டாடைகளைத் தரித்துக் கொண்டான்.

ஆடைகளிலும், அங்கங்களிலும் விலை மதிக்க முடியாத நவமணிகள் பதித்த ஆபரணங்களை சூடிக் கொண்டான்.

தன் இரண்டு கைகளிலும் பளபளக்கும் இரண்டு பெரிய வாள்களை எடுத்து ஒரு முறை சுழற்றிப் பார்த்தான்.

அந்தப்புரம் முழுவதும் மயான அமைதியில் திகழ்ந்து கொண்டிருந்தது.

மன்னன் விஜயராகவநாயக்கன் அந்தப்புர மகளிருக்கு இட்ட கட்டளை பற்றிய விவரங்கள் மன்னார்தாசன் மூலம் தெரிவிக்கப்பட்டதால், அதனை நிறைவேற்றும் செயல்கள் அங்கு நடைபெறத் தொடங்கின.

தங்கள் தோல்வி நிச்சயம் என்று தெரிந்துவிட்டதால், மன்னரின் தோல்விக்குப் பின்னர் மதுரைப் படைகள் அந்தப்புர மகளிரைப் பாழ்படுத்தி விடுவார்கள் என்பது நிச்சயம் என்பதால் அதற்கு முன் அங்குள்ள மகளிர், குழந்தைகள் அனைவரும் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று தஞ்சை மன்னன் கட்டளை இட்டு இருந்தான்.

மன்னார்தாசனிடமிருந்து உத்தரவு வந்ததும் அந்தப் புர மகளிர் வாள்களையும், கட்டாரிகளையும் எடுத்துத் தங்கள் நெஞ்சில் குத்தி வீழத் தொடங்கினர். தற்கொலை செய்யப் பயந்த பெண்களையும், குழந்தைகளையும் தைரி யமுள்ள மற்ற பெண்கள் வாளால் வெட்டிக் கொன்றுவிட் டுத் தங்கள் உயிரையும் மாய்த்துக் கொண்டனர்.

அந்தப்புரம் முழுவதும் இரத்த ஆறு ஓட ஆரம்பித்தது.

விஜயராகவ நாயக்கனின் தேவியர் இருவரும், இளவ ரசி சந்திவதனாவும் அந்தப்புரத்தில் உள்ள தனியாக ஒதுங் கிக் கிடந்த கட்டிடத்திற்கு உள்ளே வந்து சேர்ந்தனர். மூவர் முகங்களும் சோகத்துடன் காட்சி அளித்தன.

மன்னார்தாசன் ஆணைப்படி அக்கிராஜுவும் இன்னும் சில வீரர்களும் சுறுசுறுப்புடன் செயல்படத் தொடங்கினர்.

அந்த கட்டிடத்தைச் சுற்றிலும் ஏராளமான மண் பானைகள் இடைவிடாமல் அடுக்கி வைக்கப்பட்டன.

ராணி காந்திமதி தேவியாரும், ராணி ராஜகோபால கஞ்சிகா தேவியாரும், இளவரசி சந்திரவதனாவும் சகல அலங்காரங்களும் பூண்டு அந்தக் கட்டிடத்திற்குள் அமர்ந்திருந்தனர்.

அம்மூவரைச் சுற்றிலும், அவர்களுக்கு மிகமிக அருகாமையில் இருந்து ஏராளமான மண் பானைகள் இடைவிடாமல், வரிசையாக வைக்கப்பட்டன.

★அதன்பின்னர் அப்பானைகளில் வெடி மருந்துகள் நிரப்பப்பட்டன. அத்தனை பானைகளிலும் வெடிமருந்து நிரப்பப்பட்ட பின்னர் அதனை வெடிப்பதற்கான திரிகளும் வைத்து ஒன்றாக இணைத்து, வெளியே கொண்டு வந்து வைத்தார்கள்.

மன்னார்தாசன் கலங்கிய கண்களுடன் கட்டிடத்திற்குள் நுழைந்து தன் தங்கையின் அருகில் சென்று, பாசமுடன் நெற்றியில் முத்தமிட்டான். தன் தாய்மார்களின் கால்களில் விழுந்து வணங்கினான். கண்ணீர் பெருக்கியவாறு சந்திரவதனாவைப் பார்த்துப் பார்த்து அழுதான்.

''அழாதீர்கள் அண்ணா! செத்துப் போவதில் எனக்கு எந்தவித வருத்தமும் இல்லை. அதிலும் உங்கள் கையால் இப்படி மரணம் அடையும் பாக்கியம் கிடைத்ததற்காக மகிழ்ச்சியே அடைகிறேன். தந்தை இட்ட கட்டளையைச் சீக்கிரம் நிறைவேற்றுங்கள் அண்ணா!'' என்றாள் சிரித்தவாறு சந்திரவதனா!

மன்னார்தான் அதற்கு மேலும் அங்கு நிற்க முடியாமல் அந்த இடத்தைவிட்டு வேகமாக வெளியே வந்தான்.

இளவரசன் நகர்ந்ததும் இரு ராணிகளும் இளவரசியின் இரு பக்கங்களிலும் உட்கார்ந்து கட்டிப் பிடித்துக் கொண்டனர். இளவரசி கண்களை மூடிச் சொக்கநாதனை நினைத்துப் பார்த்தாள்.

'அத்தான், இதோ இன்னும் சற்று நேரத்தில் என் உயிர் பிரியப் போகிறது. என் உடலின் ஒவ்வோர் அணுவும் சின்னாபின்னமாக வெடித்துச் சிதறப் போகிறது. இந்த நிமிடம் வரை உங்கள் மீது நான் கொண்டுள்ள காதல் மறையவே இல்லை. என்னை மன்னித்துவிடுங்கள். அடுத்த பிறவியிலாவது உங்களுடன் இணைபிரியாமல் வாழ்வதற்கு ஆண்டவன் அருள்பாலிக்கட்டும்!

இளவரசி கண்களை மூடித் தொழ, அவள் அன்னையர் இருவரும் அவளை அணைத்துக் கொள்ள மூன்று பெண்களின் உடலும் ஓர் உடலாக ஒட்டிக் கொண்டிருந்த அதே நேரத்தில்,

மன்னார்தாசன் கட்டிடத்திற்கு வெளியேயுள்ள பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட்டிருந்த திரியில் தீ மூட்டினான்.

அடுத்த சில நிமிடங்களில் மாபெரும் இடியோசை, தஞ்சை நகரையே உலுக்கியதுபோல அந்தக் கட்டிடம் வெடித்துச் சிதற ஆரம்பித்தது.

அதனுள் இருந்த தேவியர் இருவரும் மற்றும் இளவரசி சந்திரவதனா ஆகிய மூவரது உடல்களும் சிறு மயிரிழைகூட இனங்காண முடியாத அளவுக்குத் தூள் தூளாக வெடித்து மண்ணோடு மண்ணாகச் சிதறி விழுந்தன.

அந்தக் கட்டிடத்திற்கு வெளியே வெகுதூரம் இருந்த வீடுகளும் மாளிகைகளும், அந்த வெடியினால் ஆட்டம் கண்டன. தஞ்சாவூரே அந்தச் சத்தத்தைக் கேட்டு அதிர்ச்சியில் மூழ்கியது.

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன், தனயன் மன்னார்தாசனைப் பாசத்துடன் இழுத்து அணைத்துக் கொண்டான்.

''வெடிச் சத்தம் கேட்டேன் மன்னாரு! இப்பொழுது தான் என் நெஞ்சம் எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைக்கிறது. சொக்கநாதன் இனி என்ன முயன்றாலும் கிட்டாதபடி ஆக்கிவிட்டாய். உன்னை என் மகன் என்று சொல்லிக் கொள்வதில் இப்பொழுதுதான் நான் பெருமைப்படுகிறேன். என் மகன் என்பதை நிரூபித்துவிட்டாய் மன்னாரு, நிரூபித்துவிட்டாய்.''

''போருக்குப் புறப்படலாமா தந்தையே?'' என்று உயிரற்றவன்போல் கேட்டான் மன்னார்தாசன்

''இதோ தயாராக இருக்கிறேன் மகனே! கிளம்பலாம். ரங்கப்பா நம்முடன் விசுவாசமிக்க, உயிரை இழக்கத் தயாரான வீரர்கள் மட்டும் வரட்டும். மற்றவர்கள் அவர்கள் மனம் போல் செல்லலாம்.''

அடுத்த சில நிமிடங்களில் மன்னன் விஜயராகவ நாயக்கனுடன் இளவரசன் மன்னார்தாசன், அவனது நண்பன் அக்கிராஜு, தளவாய் ரங்கப்ப நாயக்கன், பட்டத்து யானைப் பாகனான திமமன், சொக்கநாதன் என்று பெயர் கொண்ட ஒரு சாதாரண வீரன், வீரபானு சினனராஜா என்ற மற்றொரு வீரன் இவர்கள் ஆறு பேர் மட்டும் சூழ்ந்திருக்க, அரண்மனைவாசல் அருகே ஆயுதங்களை ஏந்தியவாறு சென்றனர்.

மன்னன் உத்தரவிட அரண்மனைக் கதவுகள் அவசரமாகத் திறக்கப்பட்டன.

---

✱ போர் அலங்காரம் - பக்கம் 196

✱ வெடிமருந்தப் பானைகள் - பக்கம் 194, *Oriental Historical Manuscripts - Vol. II - William Taylor.*

# 70



அண்டமே இரண்டாகப் பிளந்ததுபோல் அனைவரும் அஞ்சும் படியாக அந்தப்புரத்திற்குள் ஏற்பட்ட வெடிச்சத்தத்தைக் கேட்டு, அரண்மனைக்கு வெளியே திரண்டிருந்த மதுரைப் படைகள் அதிர்ச்சி அடைந்தனர்.

கூடாரத்திற்குள்ளிருந்து போருக்கான திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்த சொக்கநாதன் இந்த வெடிச்சத்தத்தைக் கேட்டு திகைத்து போய்க் கூடாரத்திலிருந்து அவசரமாக வெளியே வந்து எட்டிப் பார்த்தான்.

அந்தப்புர வளாகத்தினுள் தீப்பிழம்பு தெரிந்ததையும், கரும்புகை வளையம் குவியல் குவியலாகக் கிளம்பி வானத்தை நோக்கி உயர்ந்து செல்லும் காட்சியையும் பார்த்து சொக்கநாதனின் இதயமே தீக்குள் அகப்பட்டதைப் போல் துடித்தது.

''வெங்கட கிருஷ்ணா, இந்தப் பாவி விஜயராகவ நாயக்கன் அந்தப்புரத்தையே வெடி வைத்துத் தகர்த்துவிட்

டான். என் சந்திரவதனாவிற்கு என்ன ஆயிற்றோ தெரிய வில்லையே?''

''மகாபாவி! சண்டாளன்! அந்தப்புர மகளிர் அனைவ ரையும் கொன்றிருப்பான் போல் தோன்றுகிறதே!'' என்று அதிர்ச்சியுடன் சொன்னான் வெங்கடகிருஷ்ணன்.

''விடக்கூடாது! அவர்களை விடக்கூடாது! அங்கு இருக்கும் ஒரு நாய்கூட உயிரோடு இருக்கக் கூடாது! என் சந்திரவதனாவைக் கொன்ற பாவிகள் ஒருவர்கூட இம்மண் ணில் வாழக்கூடாது! அரண்மனைக் கதவுகளை உடைத்து எறியுங்கள். எதிரில் வருபவர் எவராக இருந்தாலும் தலை வேறு உடல் வேறாக ஆக்குங்கள்!'' என்று சினம் தலைக் கேற சீற்றத்துடன் சொன்னான் சொக்கநாதன்.

அடுத்த விநாடியே யானைப் படைகளை அவசர அவசரமாக அரண்மனை வாசலுக்கு கொண்டு வந்தார்கள். இரும்பு உலக்கைகளையும், நீண்ட, தடித்த மரக்கம்புக ளையும் அவற்றின் தும்பிக்கையில் திணித்து, அரண்ம னைக் கதவுகளை உடைப்பதற்குத் தயாராக இருந்தார்கள்.

சரியாக அதேசமயம் தஞ்சை அரண்மனையின் பிர மாண்டமான கதவுகள் பெருத்த ஓசையுடன் உள்ளிருந்து திறக்கப்பட்டன.

மன்னன் விஜயராகவ நாயக்கனும், அவன் மகனான இளவரசன் மன்னார்தாசனும், தளவாய் ரங்கப்ப நாயக்க னும், மன்னார்தாசனின் நண்பனான அக்கிராஜுவும் தஞ் சையின் பட்டத்து யானைப் பாகனான திம்மனும், சொக்க

நாதன் என்று பெயர் கொண்ட ஒரு சாதாரண வீரனும், மற்றொரு மெய்க்காப்பாளனான வீரபானு சின்னராஜா என்பவனும் ஆகிய ஏழு பேர் மட்டும் கைகளில் இருந்த ஆயுதங்களைச் சுழற்றியவாறு மதுரைப் படைகளுடன் புகுந்து சூறாவளியைப் போலத் தாக்கத் தொடங்கினர்.

இந்தக் காட்சியைத் தூரத்தில் இருந்து பார்த்த வெங்கட கிருஷ்ணன் அவசர அவசரமாகச் சொக்கநாதன் அருகில் ஓடோடி வந்தான்.

''சொக்கநாதா, தஞ்சை மன்னனைச் சேர்த்து மொத்தம் ஏழு பேர்தான் வந்திருக்கிறார்கள். நமது படை வீரர்கள் அவர்களைச் சுற்றி நின்று தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றான் படபடப்போடு.

''நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன் கிருஷ்ணா! நமது படைகள் அவர்கள் அனைவரையும் கொன்று கிழித்து நார் நாராகச் சிதைத்து எறியட்டும்'' என்று ஆத்திரத்தில் பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான் சொக்கநாதன்.

''நிஜமாகவே அவர்கள் அனைவரையும் கொல்லச் சொல்கிறாயா?'' என்று பரிதவிப்புடன் கேட்டான்.

''அவர்கள் ஏழு பேர் மட்டும் தனியாக வந்திருப்பதில் இருந்து உனக்கு உண்மை புரியவில்லையா? சாகும்வரை போராடலாம் என்ற ஒரே எண்ணம்தான். அதற்கு முன் அந்தப்புர மகளிர் அனைவரையும் கொன்று போட்டிருப்பார்கள். அவர்கள் செத்த பிறகும் சந்திரவதனாவை நான்

பார்க்க முடியாதபடி, அந்தப்புரத்தையே வெடி வைத்துச் சிதற அடித்துவிட்டார்கள். இந்தப் பாவிகளுக்கு மன்னிப்பே கிடையாது. வெட்டி எறியட்டும் நமது வீரர்கள் அவர்களது உடல்களை!''

''மன்னார்தாசனையாவது உயிரோடு பிடிக்கச் சொல்வோமா?''

''அவனும் சேர்ந்துதானே நம்மை எதிர்த்துச் சண்டையிட வந்திருக்கிறான்? அந்தப்புரத்தப் பெண்களைப் படுகொலை செய்ததில் அவனுக்கும் பங்கு இல்லாமல் இருக்குமா? அதனால் யாருக்கும் தயவுதாட்சண்யம் காட்ட வேண்டாம். மன்னார்தாசனையும் சேர்த்தே வெட்டி எறியுங்கள்.''

அதேநேரம் மதுரைப் படைகளுக்கு மத்தியில் புகுந்த தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனும் மற்றவர்களும் வாட்களைச் சுழற்றிக் கடுமையாகப் போரிட்டுக் கொண்டிருந்தனர்.

எண்ணிக்கையில் அடங்காத மதுரைப் படைகளை ஏழு பேர் மட்டும் எதிர்த்து நின்று எப்படி வெற்றி காண முடியும்?

ஒவ்வொருவராக வெட்டுப்பட்டுத் தரையில் வீழத் தொடங்கினர்.

தளவாய் ரங்கப்ப நாயக்கனைப் பத்துப் பேர் சூழ்ந்து கொண்டு அவன் உடலின் ஒவ்வோர் அங்கத்தையும் தனித் தனியாக வெட்டி எறிந்தனர்.

கடைசியாகத் தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனும் இளவரசன் மன்னார்தாசனும் மிகக் கடுமையாகப் போரிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

எண்பது வயதைக் கடந்த போதிலும் விஜயராகவ நாயக்கன் தனது இரண்டு கரங்களையும் வாளை ஏந்திச் சுழற்றிய விதம், மதுரை வீரர்களையே மலைக்க வைத்தது. இருப்பினும் வயதின் தளர்ச்சி காரணமாக அவன் எவ்வளவு நேரம்தான் போராட முடியும்?

சற்றுநேரத்தில் தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் தலை வெட்டுப்பட்டுத் தனியாக விழுந்தது.

தந்தையின் கோர மரணத்தைக் கண்ணுற்ற இளவரசன் மன்னார்தாசன் முன்னிலும் அதிக ஆத்திரத்துடனும், ஆவேசத்துடனும் மதுரைப் படைகளைத் தாக்கத் தொடங்கினான்.

அவனுக்கு எதிரே இருந்த பத்துக்கும் மேற்பட்ட வீரர்களைச் சுழன்று சுழன்று தாக்கிக் கொண்டிருந்தான் சளைக்காமல்!

முடிவில் ஒரு வீரனின் வாள் அவன் கழுத்தில் இடிவீச்சைப் போல் பாய்ந்து வீசியது!

தவறு என்று அறிவுறுத்தியும் கேளாத தந்தையின் கட்டளை ஒன்றிற்காகவே போர்புரிய வந்த கடமை வீரன் மன்னார்தாசனின் தலை மட்டும் தனியாக அறுபட்டுச் சுழன்று தரையில் வீழ, உடல் ஒரு பக்கம் விழுந்துத் துடிக்கத் தொடங்கியது.

மதுரை வீரர்கள் தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனின் தலையையும், அவன் மைந்தனான இளவரசன் மன்னார்தாசனின் தலையையும் தங்கள் வேந்தனான சொக்க நாதன் காலடியில் கொண்டு வந்து போட்டனர்.

இரண்டு தலைகளையும் வெறுப்புடன் பார்த்தான் சொக்கநாதன்.

''இவர்கள் எக்கேடு கெட்டால் என்ன? என் ஆசைக் காதலி சந்திரவதனாவிற்கு என்ன ஆயிற்றோ?'' என்றவாறு அரண்மனையை நோக்கி வேகமாக ஓட ஆரம்பித்தான் சொக்கநாதன்.

ராணி வையாம்பிகாதேவியும், முத்துநகையும் அமர்ந்து இருந்த ரதம் தஞ்சைக் கோட்டையைத் தாண்டி நகருக்குள் நுழைந்த பொழுதுதான், அந்தப்புரத்தில் வெடிச்சத்தம் எழுந்தது.

இந்தச் சத்தத்தைக் கேட்டு இருவரும் எல்லையற்ற அதிர்ச்சிக்கு ஆளானார்கள். இருவரது இதயங்களுக்குள்ளும் வேதனை சூழத் தொடங்கியது.

''அத்தை, அந்தப்புரத்திற்குள்ளிருந்து தீப்பிழம்பு தோன்றுகிறது! அங்குள்ள அனைவரும் மாண்டு இருப்பார்களோ என்று அச்சமாக இருக்கிறது'' என்று தன் உடல் நடுங்கியவாறு தன் அத்தையின் தோளைப் பயத்துடன் பற்றினாள் முத்துநகை.

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது முத்துநகை! அரண்மனைக்குள் நமது வீரர்கள் புகுந்து ஓடிக் கொண்டி

ருப்பதைப் பார்த்தால், ஏதோ அசம்பாவிதம் ஏற்பட்டிருக் கிறது என்று நன்றாகப் புரிகிறது.''

''அத்தை, சீக்கிரம் நாம் அந்த இடத்தருகே போக லாம்.''

அவர்களது இரதம் அரண்மனைக்குள் புகுந்தது. அந் தப்புரக் கட்டிட வளாகத்தை நோக்கி விரைந்து செல்ல ஆரம்பித்தது.

**வெ**டிச்சத்தம் கேட்டவுடன் அமைச்சர் கோவிந்த தீட்சி தர் மாளிகையின் முன்பு இருந்த மதுரை வீரர்களின் காவல் சற்று மந்தப்பட்டிருந்தது.

அமைச்சர் அதிர்ச்சியுடன் வாசலுக்கு ஓடிவந்து காவல் வீரர்களிடம் விசாரித்துப் பார்த்தார். யாருக்கும் எதுவும் தெரியவில்லை.

வெடிச்சத்தத்தினால் அவரது மாளிகை கூட ஒருமுறை அதிர்ந்து இருந்தது. வெடி வைக்கப்பட்ட அந்தப்புரக் கட்டிடமும், அமைச்சர் மாளிகையும் அருகருகாக இருந்த தால், வெடி மருந்தின் வீரியம், அவரது மாளிகையைக்கூ' - லேசாக உலுக்கி, தரை ஒருமுறை குலுங்கியது.

அந்தப்புரக் கட்டிடம் தீப்பிடித்து எரிந்து கொண்டிருப் பது தெரிந்தது. இனந்தெரியாத சோகத்தில் அவர் வாசல ருகே உட்கார்ந்தார். சற்று நேரம் கழித்து, மதுரவாணிக்கு நிச்சயித்த மாப்பிள்ளையும் அவனைச் சேர்ந்தவர்க்ளும் அங்கு வந்தனர்.

காவலர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி அவர்களை வீட்டுக்குள் அனுமதிக்க இறைஞ்சினார். ஒரு வழியாக அவர்களும் உள்ளே வந்தார்கள்.

நாகாம்பாளும், மதுரவாணியும் அவர்களை வர வேற்று ஓர் அறையில் உட்கார்த்தி வைத்தனர். நகருக்குள் நடந்த சங்கதிகள் பற்றி அமைச்சர் அவர்களிடம் விசாரிக்கத் தொடங்கினார்.

''இனி சாவதைத் தவிர வேறு வழியில்லை என்று நினைத்த மன்னர் அந்தப்புரத்து பெண்களைச் சுற்றி வெடி மருந்து வைத்து வெடித்துக் கொன்றுவிட்டாராம். அதன் பிறகு கதவுகளைத் திறந்து வெளியே வந்து சண்டை போட்டிருக்கிறார்கள். கடைசியில் அவர்கள் அனைவரையும் கொன்று போட்டுவிட்டார்களாம்'' என்றார் அவரது வருங்கால சம்பந்தி.

''மன்னர் இறந்துவிட்டாரா?'' கவலையுடன் வினவினார் அமைச்சர்.

''மன்னரையும், இளவரசரையும் கொன்று தலைகளை வெட்டி எடுத்து மதுரை மன்னனின் காலடியில் போட்டார்களாம்.''

''உம். விஜயராகவ நாயக்கனின் நிலைமை கடைசியில் இப்படி ஆகும் என்று நான் எதிர்பார்க்கவில்லையே!''

''இனி நாம் இங்கிருப்பது நல்லதல்ல! சீக்கிரமே பட்டீஸ்வரம் போய்விடுவோம். ஒரு நல்ல நாள் பார்த்து

மதுரவாணியின் திருமணத்தை முடித்துவிடலாம்'' என்றாள் நாகாம்பாள்.

''பொறு நாகு. நிலைமை இங்கு சீரடையாமல் நாம் வெளியேற அனுமதிக்க மாட்டார்கள்'' என்றார் அமைச்சர்.

மதுரவாணி எழுந்து தோட்டத்தின் பக்கமாகச் செல்ல ஆரம்பித்தாள்.

மன்னார்தாசனின் சாவு அவள் மனதை எந்தவித்திலும் அசைக்கவில்லை. தன் முடிவு எவ்வளவு புத்திசாலித்தனமானது என்று தன்னைத் தானே மெச்சிக் கொண்டாள்.

நல்லவேளை! மன்னார்தாசனின் காதல் நிறைவேறி, அந்தப்புரத்தில் அவர் மனைவியாக நான் இருந்திருந்தால், இந்நேரம் சந்திரவதனா போல் நானும் அல்லவா வெடித்துச் சிதறி இருப்பேன். ஆண்டவன்தான் அந்த நேரத்தில் பழியை இளவரசன் மீது போடச் சொல்லி, என்னை இவ்வளவு பெரிய ஆபத்தில் இருந்து காத்தது!

இந்த நாட்டுக்கு ராணியாக வேண்டும் என்று கனவு கண்டேன்! பரவாயில்லை! அது நடக்காவிட்டாலும் அப்படிப்பட்ட பரிதாபகரமான சாவு எனக்கு நேராமல் இருந்ததே அது ஒன்று போதும்!

மன்னார்தாசனுக்கு இளவரசன் என்ற பெரிய நினைப்பு! அவனை என் மீது காதல் கொள்ளச் செய்ய நான் எவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருந்தது! அந்த

மமதைக்காகத்தான் மன்னார்தாசன் இப்படி பரிதாபமாகச் செத்துத் தொலைத்திருக்கிறான்!

தந்தை எனக்குப் பார்த்த மாப்பிள்ளை நன்றாகத்தான் இருக்கிறார். நான்கு வேதங்களும் சகல சாஸ்திரங்களும் கற்றவராம்! செல்வம் வளம் கொழிக்கும் இடம் என்று சொன்னார்கள்! அங்கேயும நான் ராணி போல்தான் இருப் பேன்.

மனதில் மகிழ்ச்சி பெருக ஆனந்தமாக நடந்தபடி, வாயில் பாட்டு ஒன்றை முனகியபடி தோட்டத்திற்குள் நுழைந்தாள். அவள் வளர்த்த கிளி ஒன்று மரக்கிளையில் அமர்ந்தபடி 'வாணி வாணி' என்று அழைத்தது.

அதைப்பிடித்துக் கையில் வைத்துக் கொஞ்ச வேண் டும் என்ற ஆசையுடன் மரத்தினருகே சென்றாள். அந்தக் கிளி பறந்து, அருகில் இருந்த கிணற்று விளிம்பில் உட் கார்ந்து கொண்டு 'வாணி வாணி' என்று அவளைப் பார்த்துக் கத்தியது.

''என்னிடமே உன் வேலையைக் காட்டுகிறாயா? இப் பொழுதுபார். உன்னைப் பிடித்து தலையில் ஓங்கிக் குட்டு கிறேன். அப்பொழுதுதான் உனக்கு புத்தி வரும்'' என்று சொல்லியவாறு கிணற்றின் அருகே ஓடி வந்தாள்.

அந்தப்புரத்தில் வெடித்த வெடிமருந்து ஏற்படுத்திய அதிர்ச்சியால் தரைவரை ஆட்டம் கண்டு அடியில் விரிசல் விட்டு இருந்த கிணறு, மதுரவாணி அதன் கீழுள்ள மேடைப் பகுதியில் வந்து நின்றதுமே, பொலபொல என்று சரிய ஆரம்பித்தது.

தரை பிளந்து மதுரவாணியும், கிணற்றுக் கட்டிடங்களும் ஓசையுடன் சரிந்து பாதாளத்திற்குள் விழ, அந்தக் கிளி பயந்துபோய் 'வாணி வாணி' என்றவாறு பறந்து ஓடியது.

'அம்மா' என்று அலறிய மதுரவாணியின் குரலும், கிணறு இடிந்து விழுந்த ஓசையையும் கேட்டு வீட்டிலுள்ளோர் அலறி ஓடோடி வந்தனர்.

கிணறு முற்றிலுமாக இடிந்து நொறுங்கிப்போய் பள்ளமாகக் காட்சி அளித்தது. மதுரவாணியின் கதியை நினைத்து அரற்ற ஆரம்பித்தாள் நாகாம்பாள்.

அமைச்சர் கலங்கியவாறு ஆட்களைத் திரட்டி கிணற்றின் இடிபாடுகளை அகற்றச் சொன்னார்.

நீண்ட நேர உழைப்பிற்குப் பிறகு, மண்ணையும், கற்களையும் அகற்றி ஆழத்தில் புதைந்து கிடந்த மதுரவாணியின் உடலைத் தேடிக் கண்டுபிடித்து வெளியே கொண்டு வந்தனர்.

மதுரவாணியின் முகம் முற்றிலும் சிதைந்து சதைப் பிண்டமாக, எலும்பு துருத்திப் போய் அவருவருப்பாகக் காட்சி அளித்தது. அங்கங்கள் பலவும் சிதைந்து போயிருந்தன.

''இப்பொழுதுத்தானே உன் திருமணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தோம். இப்படி எங்களைத் தவிக்க

விட்டுவிட்டுச் செத்துப் போய்விட்டாயே மதுரவாணி'' என்று அவள் தாய் பெருங்குரல் எடுத்து அழ ஆரம்பித்தார்.

அமைச்சர் கண்களில் நீர் அருவியாகப் பெருகியது.

இளவரசி சந்திரவதனாவின் உடல் வெடித்துச் சிதறிய கட்டிடத்தின் தீயை மதுரை வீரர்கள் அவசர அவசரமாகத் தண்ணீர் ஊற்றி அணைத்திருந்தார்கள். கட்டிடம் சுக்கல் சுக்கலாக வெடித்துச் சிதறி இருந்தது.

சொக்கநாதன் அதனைப் பார்த்துத் தனது இதயத்தில் இடி விழுந்ததைப்போல் கண்களில் நீர் வழிய, பொம்மை போல அசையாமல் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான்.

வெங்கடகிருஷ்ணன் ஆறுதலுடன் அவன் தோளைப் பற்றிய உணர்ச்சிகூட அவனுக்கு இல்லை.

சற்று நேரத்தில் அந்த இடத்தருகே இரதத்தில் வந்திறங்கிய அவன் தாயும், முத்துநகையும், எல்லையற்ற சோகத்தில் நிற்கும் சொக்கநாதன் அருகே ஓடி வந்தார்கள்.

ராணி வையாம்பிகாதேவி, அவனை ஆறுதலுடன் தொட்டு, ''வருந்தாதே சொக்கநாதா! சந்திரவதனாவின் முடிவு இப்படித்தான் ஆகவேண்டும் என்று ஆண்டவன் எழுதி வைத்த பிறகு, நம்மால் என்ன செய்ய முடியும்?'' என்றாள்.

''எப்படி எல்லாம் கற்பனை செய்தேன் அம்மா! சந்திரவதனாவைத் திருமணம் செய்து உங்கள் முன் கூட்டி வரவேண்டும். பாட்டனார் திருமலையின் மனைவிபோல என் சந்திரவதனா திமிர் பிடித்தவள் அல்லள் என்று உங்கள் முன் நிரூபிக்க வேண்டும் என்று ஆசை கொண்டிருந்தேன்! இப்படி மண்ணோடு மண்ணாக்கி விட்டானே தஞ்சை மன்னன்!

''சந்திரவதனா எவ்வளவு சிறந்த அழகி என்று உங்களி டம் காட்டி பெருமை கொள்ள நினைத்தேன் அம்மா, சந்திரவதனாவிற்கு இணையான அழகி, இந்த உலகத்தி லேயே இல்லை என்று உங்கள் வாயாலேயே சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டேன் அம்மா! கடைசியில் அவள் அங்கத்தில் ஓர் அணுவைக்கூட என்னால் அடையா ளம் கண்டுகொள்ள முடியாதபடி சிதைத்துவிட்டானே விஜயராகவ நாயக்கன்'' கண்களில் நீர் வழியக் கமறினான்.

''வருந்தாதீர்கள் மன்னா! எல்லாம் தெய்வச் செயல்'' என்றாள் முத்துநகை அவன் கையை ஆறுதலுடன் பற்றிய வாறு.

''முத்துநகை உனக்கு நன்றாகத் தெரியுமே, சந்திரவத னாவை எப்படி எல்லாம் காதலித்தேன் என்று! என்மீது அவள் எவ்வளவு காதல் கொண்டிருக்கிறாள் என்று உன்னி டம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தேனே! இப்படி அநியாய மாகச் சாகடிக்கப்படுவாள் என்று நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லையே முத்துநகை!

சந்திரவதனாவைக் கைப்பிடித்து உன்னிடம் கூட்டி வரவேண்டும்! உன்னைப் போலவே என்னைக் காதலிக்கும் உயர்ந்த பெண் என்று உன்னை அவளிடம் அறிமுகப்படுத்த வேண்டும். நீங்கள் இருவரும் ஒற்றுமையாக இருந்து, உங்களுடன் காலம் காலமாகச் சந்தோஷத்துடன் வாழ வேண்டும் என்று கனவு கண்டேனே! அத்தனையும் நாசமாக்கிவிட்டுப் போய்விட்டாளே!''

''நான் இருக்கிறேன் அத்தான். சந்திரவதனா உயிரோடு இருந்தால் காட்டும் அன்பையும், காதலையும் சேர்த்து, காலம் முழுவதும் உங்களைவிட்டுப் பிரியாமல் உங்களைக் களிப்படையச் செய்ய நான் இருக்கிறேன் அத்தான். வருந்தாதீர்கள்!'' என்று கண்கள் கசிய, அவன் கண்களைத் துடைத்துவிட்டாள் முத்துநகை!

பிற்காலத்தில் சொக்கநாதனுக்கு மனைவியாகி, ராணி மங்கம்மாள் என்ற பெரும்புகழுடன் வாழ இருக்கும் முத்துநகையின் தோள்களின் மீது, தலை சாய்த்துக் கண்ணீர் பெருக்கினான் மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன்.

(முற்றும்)